# கைவல்ய நவநீதம்

(மூலமும் - உரையும்)




ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | கைவல்ய நவநீதம் |
| **ஆசிரியர்** | : | ப்ரக்ஞுன் |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **வகை** | : | உபதேசம் |
| **முதற்பதிப்பு** | : | 2018 |
| **இரண்டாம் பதிப்பு** | : | 2023 |
| **பக்கங்கள்** | : | 478 |
| **கணினி அச்சு** | : | ஓம் கிராபிக்ஸ் |
| **விலை** | : | அக விழிப்பு |

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 06 |
| 2. | பாயிரங்கள் | 11 |
| 3. | தத்துவ விளக்கப்படலம் | 19 |
| 4. | சந்தேகம் தெளிதல் படலம் | 151 |
| 5. | நிறைவுரை | 469 |

# கைவல்ய நவநீதம்

**(மூலமும் உரையும்)**

**இயற்றியவர்**

**ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள்**

**தெளிவுரை**

**ப்ரக்ஞன்**

# கைவல்ய நவநீதம்

## (ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள்)

கைவல்ய நவநீதம் என்பது ஒரு வேதாந்த மெய்யியல் தமிழ் நூல் ஆகும். தமிழ் அத்வைத வேதாந்த நூல்களில் தலை சிறந்தது "**கைவல்ய நவநீதம்**" எனப்படுகிறது.

இந்த நூல் 1500 - களில் எழுதப்பட்டது. இந்த நூலை நன்னிலம் **ஸ்ரீ நாராயண தேசிகரின்** மாணவர் **ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள்** அவர்களால் இயற்றப்பட்டது.

இந்நூலில் ஆசிரியருக்கும், மாணவனுக்கும் இடையே நிகழுகின்ற உரையாடல் போலவும், ஒரு தந்தை தன் மகனுக்கு கூறும் அறிவுரைகள் போல, இந்த நூலில் **தத்துவ விளக்கப்படலம்**, **சந்தேகம் தெளிதல் படலம்** என்ற இரு பெரும் பகுதிகள் உள்ளன.

முதலில், தத்துவங்களை விளக்கி, அதன்பிறகு, அதில் உண்டாகும் சந்தேகங்களுக்கு விடையளிப்பது போன்று இந்த நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# 1. முகவுரை

**கைவல்ய நவநீதம்** என்ற இந்நூலில் முதலாவதாக, கவித்துவம் நிறைந்த பாயிரம் என்ற 7 பாடல்களும், தத்துவ விளக்கப்படலம் என்ற தலைப்பில் 101 பாடல்களும், சந்தேகம் தெளிதல் படலம் என்ற தலைப்பில் 185 பாடல்களும் கொண்டதாக, மொத்தம் 293 பாடல்கள் உள்ள ஒரு அருமையான நூலாக, இது காணப்படுகின்றது.

இந்நூலில் எழுசீர் ஆசிரியவிருத்தம் பத்து பாடல்கள் (231 - 240), எண்சீர் ஆசிரியவிருத்தம் பதினொன்று பாடல்கள் (123 - 133), அறுசீர் ஆசிரியவிருத்தம் 172 பாடல்கள் உள்ளன.

கைவல்ய நவநீதத்திற்கு தமிழில் பலர் விரிவுரைகள் எழுதி இருந்தாலும், **பிறையாறு ஸ்ரீ அருணாசல சுவாமிகள், ஈசூர் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள்** மற்றும் சிதம்பரம் **ஸ்ரீ பொன்னம்பல ஞானதேசிகர்** (தத்துவார்த்த தீபம்) ஆகியோரது உரைகளே மிக பழமையானது, காலத்தால் முற்பட்டது, கருத்தாழத்தால் மேம்பட்டது எனலாம்.

கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் **மஹாவித்வான் வடிவேலு செட்டியார்**, வினா விடை அமைப்பில், கைவல்ய நவநீதத்திற்கு விளக்க உரை எழுதிப் பதிப்பித்தார்.

1933 - ல், **பிருஹ்மஸ்ரீ திருமாநிலையூர் கோவிந்தய்யர்** அவர்கள் '**தாத்பர்ய தீபிகை**' என்னும் உரையை எழுதி, தமிழ் மூலத்துடன், **சங்குகவிகளின்** சமஸ்கிருத மொழிப் பெயர்ப்பை கொண்ட, தன் உரையையும் ஒருங்கே பதிப்பித்தார்.

இந்த நூல் தமிழ் மொழியில் உள்ள திருக்குறளுக்கு அடுத்தபடியாக, தமிழ் மொழியிலிருந்து, மற்ற பல்வேறு மொழிகளில் மொழிப் பெயர்க்கப்பட்டுள்ளது.

1855 - இல் டாக்டர் **கார்ல்க்ரோல்** என்ற ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவரால், ஜெர்மனியிலும், அதன்பிறகு, ஆங்கிலத்திலும் மொழிப் பெயர்க்கப்பட்டு வெளிவந்தது.

கைவல்ய நவநீதத்திற்கான ஆங்கில உரைகளில், சுவாமி **ஸ்ரீ ரமணானந்த சரஸ்வதி** அவர்களின் ஆங்கில உரை மிகவும் மேலானதாகக் கருதப்படுகின்றது.

கைவல்ய நவநீதம், பகவான் **ஸ்ரீ ரமண மகரிஷி**யால் சாதகர்களுக்குப் பரிந்துரைக்கப்பட்டது.

பாராயணத்துக்கான கைவல்ய நவநீதம் மூலமும், **சிவ. தீனநாதனால்** செய்யப்பட்ட உரைச்சுருக்கம், ஸ்ரீரமணாஸ்ரமம் வெளியீடாகப் பதிப்பிடப்பட்டுள்ளது.

**ஸ்ரீ முனகல வெங்கடராமையா**வின் ஆங்கில மொழிப் பெயர்ப்பும், அதிலிருந்து செய்யப்பட்ட தெலுங்கு மொழிப் பெயர்ப்பும் பதிப்பிடப்பட்டுள்ளன.

இத்துடன், கைவல்ய நவநீதத்தை படிக்கும் யாவரும் எளிதில் புரிந்துக்கொள்வதற்காக, வித்வான் **எம். நாராயண வேலுப்பிள்ளை** அவர்கள் தமிழில் **தத்துவக்கோட்பாடு** என்ற விளக்கக்கட்டுரையை எழுதியுள்ளார்.

இந்த கைவல்ய நவநீதம் என்ற நூல் தரும் சில செய்திகள் என்னவெனில், பாயிரப்பகுதியிலுள்ள 7 பாடல்களில் இந்த நூலாசிரியர் இறைவனை **ஏகநாயகன்**, **பூன்றமுத்தன்**, **இன்பப்புணரியாதவன்**, **விமலபோத சொரூபம்**, என்றெல்லாம் குறிப்பிடுகிறார்.

அவர் அருளால்தான், பிரமமாகவே தன் சுபாவம் ஆனதாகக் குறிப்பிடுகிறார். என்மனம், புத்தி, புலன் ஆகியவற்றை, என் அறிவினால் இயக்கும்போது, ஈசன் என் குருவாய்த் தோன்றுகின்றான் என்கின்றார்.

வேதாந்தப்பாற்கடலைக் குரவர்கள் (ஆசிரியர்கள்) குடத்தில் நிறைத்து வைத்ததைக் காய்ச்சிக் கடைந்தெடுத்து, வெண்ணெய் ஆக்கித் தருகின்றேன். எளிதில் வெண்ணெயை உறுக்கி, நெய் ஊற்றிப் பசித்தோர் உண்ணுக! என அறிவுப் பசிக்கு ஆகாரமாக, இந்த “**கைவல்ய நவநீதம்**” நூல் உதவும் என்று **ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள்** கூறியுள்ளார்.

சமஸ்கிருத மொழியில் உள்ள ஆழமான வேதாந்தக் கருத்துக்களை, எளிய தமிழ் மொழியில் கற்று, அனைவரும் ஆத்ம ஞானத்தை பெறவேண்டும் என்று பெரும் பணி ஆற்றியுள்ளார் **ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள்.**

"**புதுமையாம் கதை கேள்**" (தத்துவ விளக்கப்படலம் பாடல்களில் 54 இலிருந்து 56 வரை) என்று பத்து நபர்கள் ஒரு ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்து அனைவரும் ஆற்றைக்கடந்ததை உறுதி செய்துக்கொள்ள ஒவ்வொருவராக எண்ணினர்.

அவ்வாறு எண்ணும்போது, தன்னைச் சேர்க்காமல் ஒன்பது பேர் மட்டுமே உள்ளதாக நினைத்து துன்பமடைவது, தன்னை அறியாத மதிமயக்கத்தினால் உண்டாகின்ற '**அஞ்ஞானம்**' எனவும், அந்த வழியே வந்த வழிப்போக்கன் இவர்களை ஒவ்வொருவராக எண்ணி பத்து என்பதை, நேரடி அனுபவமாக அறிந்துக் கொள்வது '**அபரோக்ஷஞானம்**' எனவும், பல்வேறு அருமையான கருத்துக்களை அருளியுள்ளார் நூலாசிரியர்.

இந்த நூலுக்கு கோவை மாவட்டத்தைச் சேர்ந்த **ப்ரக்ஞன் (சுவாமி பிரபஞ்சநாதன்)** அவர்கள் எளிய தமிழில் தெளிவான விளக்க உரை எழுதியுள்ளார்.



நன்னிலம் ஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் ஜீவ சமாதி

# தத்துவ விளக்கப்படலம்

**ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்**
**பாயிரம் இல்லது பனுவல் அன்றே.**

என்ற நூல் எழுதும் மரபு விதியின்படி, இந்த நூலின் ஆசிரியர் பாயிரம் கூறுகின்றார்.

# 2. பாயிரங்கள்

பொன் நிலம்மாதர் ஆசை பொருந்தினர் பொருந்தார் உள்ளந்
தன்னில் அந்தரத்தில் சீவசாட்சி மாத்திரமாய் நிற்கும்
எந்நிலங்களினும் மிக்க எழுநிலம் அவற்றின் மேலாம்
நன்னிலம் மருவும் ஏக நாயகன் பதங்கள் போற்றி. (1)

## தெளிவுரை:-

பொன் ஆசை, மண் ஆசை, பெண் ஆசைகள் கொண்ட சாதாரண மக்களாக இருந்தாலும், ஆசைகள் ஏதுமற்ற, முற்றும் துறந்த ஞானிகளாக இருந்தாலும், இவர்களிடம் ஒரே தலைவனாக, அனைவருக்கும் பொதுவாக, அனைத்து உடல்களுக்கும் உள்ளே, உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற எந்தவிதமான ஏற்றத்தாழ்வுகளும் இன்றி, சீவ சாட்சியாக (அறிவாக) பிரகாசிக்கின்றது.

அத்தகைய சீவன் உடலின் உள்ளே உள்ள உள்ளத்தில் '**வெளி**' என்ற இருதயக் குகையில் எந்தவித செயல்களையும் செய்யாமல் சாட்சியாக மட்டுமே இருந்துக் கொண்டு, ஏழு ஞான பூமிகளில் மேலான பூமியாகிய, மேன்மைப் பொருந்திய துரியாதீதத்தில் பேரறிவாகத் திகழ்கின்ற பரமாத்மாவின் திருவடிகளைப் போற்றிப் பணிகின்றேன்.

**ஞானபூமிகள் ஏழு:**

**சுபேச்சை,**
**விசாரணை,**
**தனுமாநசி,**
**சத்துவாபத்தி,**
**அசம்பத்தி,**
**பதார்த்தாபாவனை,**
**துரியம்** என்பனவாகும்.

ஈன்று அளித்து அழிக்கும் செய்கைக்கு ஏதுவாம் அயனாய் மாலாய்
ஆன்ற ஈசனுமாய்த்தானே அனந்த மூர்த்தியுமாய் நிற்கும்
பூன்ற முத்தனுமாய் இன்பப் புணரி ஆதவனாய் நாளுந்
தோன்றிய விமலபோத சொரூபத்தைப் பணிகின்றேனே. (2)

## <u>தெளிவுரை:-</u>

ஒன்றேயாகிய பரப்பிரம்மம் **படைத்தல்**, **காத்தல்**, **அழித்தல்** என்ற மூன்று செயல்களுக்கு காரணமான நான்முக பிரம்மாவாகவும் (அயனாய்), விஷ்ணுவாகவும் (மாலாய்), ருத்திரனாகவும் (ஈசன்), தானே பலவாறாகப் பல மூர்த்தி களாக வெளிப்பட்டு அருளுகின்ற சகுண பிரம்மத்தையும், என்றும் குறையாத மகிழ்ச்சியை உடைய முழுமையான முக்தனாகவும், ஆனந்த சமுத்திரத்தில் தினந்தோறும் உதிக்கின்ற சூரியனைப் போன்ற பிரகாசத்தைக் கொண்ட அறிவு சொரூபமான நிர்குண பிரம்மத்தை பணிகின்றேனே.

**சகுண பிரம்மம்** = உருவக் கடவுள்.
**நிர்குண பிரம்மம்** = அருவக் கடவுள்.

உருவமும், உருவமற்ற இரண்டு நிலைகளிலும், அந்த பரப்பிரம்மத்தை இந்த பாடலின் மூலமாகப் பணிகின்றார்.

எவருடை அருளால் யானே எங்குமாம் பிரமமென்பால்
கவருடைப் புவனமெல்லாம் கற்பிதம் என்றறிந்து
சுவரிடை வெளிபோல் யான் என் சொரூப சுபாவமானேன்
அவருடைப் பதுமபாதம் அனுதினம் பணிகின்றேனே. (3)

## <u>தெளிவுரை:-</u>

என்னை வசீகரித்து, மயக்குகின்ற இந்த உலகம் பொய்யானது, கற்பிக்கப்பட்டது என்பதை எவர் மூலமாக அறிந்தேனோ? அப்படிப்பட்ட என் சத்குருநாதனின் அருளாலே, நானே எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்துள்ள வெட்டவெளி போன்று பரவிய பரப்பிரம்மம் என்றும், அதுவே என் உண்மை சொரூபம் என்றும் அறிந்து, இந்த ஞானத்தை உபதேசித்த என் சத்குருநாதரின் தாமரைப் பாதத்தை தினந்தோறும் பணிகின்றேனே.

என்னுடை மனது புத்தி இந்திரிய சரீரமெல்லாம்
என்னுடை அறிவினாலே இரவி முன் இமமேயாக்கி
என்னுடை நீயும் நானும் ஏகமென்று ஐக்கியம் செய்ய
என்னுடை குருவாய்த்தோன்றும் ஈசனை இறைஞ்சினேனே. (4)

## தெளிவுரை:-

என்னுடைய **மனது**, **புத்தி**, **சித்தம்**, **அகங்காரம்** போன்ற அந்தக்கரணங்களைக் கொண்ட கண்ணிற்குத் தெரியாத **சூக்ஷ்ம சரீரமும்**, இத்துடன் கண்ணிற்குத்தெரிகின்ற **கண்**, **காது**, **மூக்கு**, **நாக்கு**, **தோல்** என்ற ஐம்புலன்களான இந்திரியங்களை உடைய **ஸ்தூல சாரீரமும்** ஆகிய இந்த அழியக்கூடிய சரீரங்கள் எல்லாம், சூரியனைக் கண்ட பனிக்கட்டிகள் எவ்வாறு கரைந்து நீருடன் நீராக ஒன்றாகி விடுகின்றதோ? அதுப்போன்று, என்னுடைய சத்குருநாதனின் ஞான ஒளியின் முன்னால், அப்படியே கரைந்து அறிவுடன் (ஆத்மாவுடன்) ஒன்றாகிப் போனது.

இவ்வாறு, ஒன்றேயாகிய தன்னையும், என்னையும் ஒன்றெென உபதேசிக்க வந்த என்னுடைய குருவாய்த் தோன்றுகின்ற ஈசனை பணிகின்றேனே.

அந்தமும் நடுவும் இன்றி ஆதியும் இன்றி வான்போல்
சந்ததம் ஒளிரும் ஞான சற்குரு பாதம் போற்றிப்
பந்தமும் வீடும் காட்டப் பரந்தநூல் பார்க்கமாட்டா
மந்தரும் உணருமாறு வஸ்து தத்துவம் சொல்வேனே (5)

## <u>தெளிவுரை:-</u>

தொடக்கமும், நடுவும், முடிவும் இல்லாத, பரந்த ஆகாயத்தைப்போன்று, எப்பொழுதும் ஒளிருகின்ற, பரந்த ஞானத்தை உடைய சத்குருநாதனின் பாதங்களைப் போற்றிப் பணிகின்றேன்.

பந்தமும், முக்தியும் எதுவென்று விசாரித்து தெரிந்துக் கொள்ளக்கூடிய, விரிவான வேத சாஸ்திரங்களைப் பார்த்ததே இல்லை என்ற, பாமரரும் படித்து உணருமாறு பரம தத்துவங்களை கூறப்போகின்றேன்.

படர்ந்த வேதாந்தம் என்னும் பாற்கடல் மொண்டு முன்னூற்
குடங்களில் நிறைத்து வைத்தார் குரவர்கள் எல்லாம் காய்ச்சிக்
கடைந்து எடுத்து அளித்தேன் இந்தக் கைவல்ய நவநீதத்தை
அடைந்தவர் விடயமண் தின்று அலைவரோ பசியிலாரே (6)

## தெளிவுரை:-

விரிவான வேதாந்தம் என்னும் மிகப்பெரிய சாஸ்திரக் கடலிலே இருந்து, உபநிஷதங்கள் என்ற பாத்திரங்களைக் கொண்டு, சாஸ்திரம் என்ற நீரை மொண்டு, அதில் பல நூல்களை உண்டாக்கி, உபதேசித்து அருளிய ஆச்சாரியர்கள் பலர் உள்ளனர்.

நானும் அவர்களைப் போன்றே, வேதாந்தம் என்ற பாலைக்காய்ச்சி, தயிராக்கி, மோராக மாற்றி, அதிலிருந்து கடைந்து எடுத்த வெண்ணையைக் கொண்டு, உண்பதற்கு ஏதுவான, எளிதான நெய் வருவதுப்போன்று, வேதாந்தத்தை எளிதாக்கி, ‘**கைவல்ய நவநீதம்**’ என்ற இந்த நூலாக்கி, அறிவுப்பசியாற அள்ளிக் கொடுத்திருக்கிறேன்.

இந்த நூலைப் படித்து அறிவுப் பசியாறி, ஞானத்தில் நிறைந்தவர்கள், இனி பயனற்ற மற்ற விசயங்களைத்தேடி வீணாக அலைவார்களோ?

முத்தனை வேங்கடேச முகுந்தனை யெனையாட் கொண்ட
கர்த்தனை வணங்கிச் சொல்லுங் கைவல்ய நவநீதத்தைத்
தத்துவ விளக்கமென்றும் சந்தேகம் தெளிதலென்றும்
வைத்திரு படலமாக வகுத்துரை செய்கின்றேனே. (7)

## தெளிவுரை:-

என்றும் நிலையான ஆனந்தத்தைக் கொடுக்கின்ற வெங்கடேச முகுந்தனை, என்னை ஆட்கொண்ட என் ஐயனை சத்குருநாதனை பணிந்து வணங்கி, அனைவரும் பிறவிப்பயன் பெற, '**கைவல்ய நவநீதம்**' என்ற இந்த நூலை எழுதுகின்றேன்.

இதில் '**தத்துவ விளக்கப்படலம்**', '**சந்தேகம் தெளிதல் படலம்**' என்று இரண்டு படலங்களை வகுத்து, அதற்கு உரை செய்கின்றேன்.

ஆகவே, மேலே கூறியுள்ள ஏழு பாயிரங்களுக்கும் விளக்கம் எவ்வாறெனில், முதல் பாயிரத்தில் கடவுள் வாழ்த்தும், இரண்டாவது பாயிரத்தில் ஆத்ம சொரூபத்தைத் துதித்தும், மூன்றாவது பாயிரத்தில் குரு வணக்கமும், நான்காவது பாயிரத்தில் குருவின் வல்லமையையும், ஐந்தாவது பாயிரத்தில் நூலை படிக்கின்ற தகுதியை உடைய அதிகாரியையும், ஆறாவது பாயிரத்தில் நூலின் பயனையும், ஏழாவது பாயிரத்தில் நூலின் இரண்டு படலப் பகுதிகளையும் கூறி, இந்த நூலைப்பற்றிய அறிமுகத்தை பாயிரங்களிலேயே விவரித்துள்ளேன் என்கின்றார்.

மேலும், கொடுக்கப்பட்ட ஏழு பாயிரங்களும் சேர்ந்து "**அனுபந்த சதுஷ்டயம்**" என்பதுவும் விளக்கப்பட்டது.

அதாவது, இந்த நூலைப் படிக்கின்றவர்களுக்கு அனுபந்த சதுஷ்டயம் என்ற நான்கு வகை தொடர்புகளை இங்கு கூறிவிடுகின்றார். ஒரு நூலை புதியதாகப் படிக்கத் துவங்குபவர்கள் இந்த நான்கு தொடர்புகளை அறிந்துக்கொள்வது மிகவும் அவசியம்.

அவையாவன,

**1. அதிகாரி, 2. விசயம், 3. சம்பந்தம், 4. பயன்** என்ற இந்த நான்கு தொடர்புகளையும் "**அநுபந்த சதுஷ்டயம்**" என்று இந்த ஏழு பாயிரங்களின் மூலமாக விளக்கப்பட்டது.

அதாவது, இந்த நூலைப்படிக்கின்ற தகுதியானவர் யார் என்றும், இந்த நூலில் உள்ள விசயம் இன்னது என்றும், இந்த நூலில் உள்ள விசயத்தினாலும், இதைப் படிப்பதி னாலும், என்ன சம்பந்தம் உண்டாகும் என்றும், இறுதியில், இந்த நூலைப்படிக்கின்றவர்களுக்கு உண்டாகும் பயனையும், இங்கு '**அநுபந்த சதுஷ்டயம்**' என கூறப்படுகின்றது.

## 3. தத்துவ விளக்கப்படலம்

நித்திய அநித்தியங்கள் நிண்ணயம் தெரி விவேகம்
மத்திய இகபரங்கள் வரும் போகங்களில் நிராசை
சத்தியம் உரைக்க வேண்டும் சமாதி என்று ஆறு கூட்டம்
முத்தியை விரும்பும் இச்சை மொழிவர் சாதனம் இந்நான்கே (1)

**தெளிவுரை:-**

இந்த உலக வாழ்க்கையில் எது நிலையானது, எது நிலையற்றது என்பதனை சிந்தித்து, அதனைப் பற்றிய புரிதல் உண்டாவதே "**விவேகம்**" எனப்படும்.

மேலும், இந்த உலக சுகத்தின் மீதும், மறு உலகங்களான சொர்க்க லோகம், பித்ரு லோகம், பிரம்ம லோகம் போன்ற லோகங்களை அடைய வேண்டும், அங்கு சென்று சுகமாக இருக்க வேண்டும் என்ற அறியாமை ஆசையை விடுவதே "**வைராக்கியம்**" ஆகும்.

எப்பொழுதும் உண்மை மட்டுமே பேச வேண்டும். பிறகு மனவடக்கம், புலனடக்கம், தியாகம், பொறுமை, நம்பிக்கை, ஒருமுகப்படுதல் போன்ற ஆறு நல்ல குண நலன்களை அடைவதே "**சமாதி சட்க சம்பத்தி**" எனப்படும்.

இறுதியில் முக்தியை விரும்புகின்ற சாதகனுக்கு உண்டாகும் ஆசையே "**முமுக்ஷீத்வம்**" எனப்படும்.

இதுவே, "**சாதன சதுஷ்டய சம்பத்தி**" என்ற விவேகம், வைராக்கியம், சமாதி சட்க சம்பத்தி, முமுக்ஷுத்வம் என்ற நான்கு சாதனைகளாகும்.

சமம் தமம் விடல் சகித்தல் சமாதானம் சிரத்தை ஆறாம்
சமம் அகக்கரண தண்டம் தமம் புறக்கரண தண்டம்
அமர்தரு கருமம் பற்றாது அறுத்தலே விடல் என்றாகும்
மமர் செயும் காமமாதிவரின் அடக்குதல் சகித்தல் (2)

## தெளிவுரை:-

**சமம்** - மன அடக்கம், **தமம்** - புலன் அடக்கம், **விடல்** - தியாகம், **சகித்தல்** - துயரங்களைப் பொருத்துக் கொள்ளுதல், **சமாதனம்** - ஒருமுகப்படுதல், **சிரத்தை** - நம்பிக்கை என்ற இந்த ஆறு தகுதிகளும் ஒரு சாதகனுக்கு மிகவும் அவசியம்.

மனதைக் கட்டுப்படுத்துவது "**சமம்**" எனப்படும். இந்திரியங்களைக் கட்டுப்படுத்துவது "**தமம்**" எனப்படும்.

தேவர்களுக்கு யாக யஞ்ஞங்கள் செய்வது, அதன் வாயிலாக கிடைக்கின்ற பலன்களை விரும்புவது, சொர்க லோகம், பித்ரு லோகம் போன்ற லோகங்களின் மீது பற்று

வைப்பது, போன்ற அனைத்தையும் விரும்பாமல் விடுவதே “**விடல்**” எனப்படும்.

மற்றவர்கள் செய்கின்ற செயல்களினால் வருகின்ற துன்பங்களையும், நம்முடைய செயல்களினால் உண்டாகின்ற கஷ்டங்களை பொறுத்துக் கொள்வதே “**சகித்தல்**” எனப்படும்.

சிரவணப் பொருளைத்தானே சித்தம் சிந்திக்குமாறு
சரதமாய் வைக்கும் இத்தைச் சமாதானம் என்பர் மேலோர்
பரமசற்குரு நூல் அன்பு பற்றுதலே சிரத்தையாகும்
வரமிகு சமாதி ஆறு வகையின் சொற்பொருள் இதாமே (3)

## <u>தெளிவுரை:-</u>

வேதாந்த சாஸ்திரப் பாடங்களைக் கேட்டு, அதன் பொருளை மனம் எப்பொழுதும் ஒருமுகப்பட்டு சிந்தித்த வாறு இருப்பதும், சிந்தித்த அந்த சத்தியத்தில் நிலைத்து நிற்பதும் “**சமாதானம்**” என்கின்றனர் மேலானவர்கள்.

இவ்வாறு கேட்ட சாஸ்திர விசயங்களையும், அதனை உபதேசிக்கும் சத்குருவின் மீதும் நம்பிக்கை வைப்பதே “**சிரத்தை**” எனப்படும்.

மேற்கூறிய, மேன்மை மிக்க இந்த ஆறு வகைப் பண்புகளையும் கொண்ட, நான்கு வகை சாதனங்களின் பொருள் விளக்கம் இதுவேயாகும்.

சாதனம் இன்றி ஒன்றைச் சாதிப்பார் உலகில் இல்லை
ஆதலால் இந்த நான்கும் அடைந்தவர்க்கு அறிவுண்டாகும்
நூதன விவேகி உள்ளம் நுழையாது நுழையுமாகில்
பூதசென்மங்கள் கோடி புனிதனாம் புருடனாமே (4)

## தெளிவுரை:-

வழிமுறைகள் தெரியாமல் யாரும், எந்த ஒன்றையும் இந்த உலகத்தில் சாதிக்க முடியாது. ஆதலால், இந்த நான்கு வழிமுறைகளையும் சாதனங்களாகக் கொண்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு பரம[தன்]னைப் பற்றிய '**ஞானம்**' சாத்தியமாகும்.

புதியதாக இது போன்ற வேதாந்த சாஸ்திரங்களை தன்னுடைய தாய் மொழியிலேயே கற்கின்ற சாதகனுக்குக் கூட, அவ்வளவு எளிதில் இந்த சாஸ்திரவிசயங்கள் புரிந்து விடாது. அப்படி ஒருக்கால், இவைகள் புரிந்து, அவன் உள்ளத்தில் நுழைந்து விடுமானால், அவன் பல கோடி சென்மங்களிலே செய்த புண்ணியத்தின் பலனாக, இந்த புனிதமான பலன் கிடைத்துள்ளது என்று அறிய வேண்டும்.

(முன் கூறிய சாதன சம்பத்துக்கள் நிறைந்த, அதி தீவிர பக்குவத்தை அடைந்தவன், சத்குருவை நாடி உபதேசம் பெறுவதுப் போன்று, இந்த நூல் அமைக்கப் பட்டிருக்கின்றது.)

இவன் அதிகாரியானோன் இந்திரியங்களாலும்
புவன தெய்வங்களாலும் பூத பௌதிகங்களாலும்
தவனம் மூன்றடைந்து வெய்யில் சகித்திடாப் புழுப்போல்
வெம்பிப் பவமறும் ஞானதீர்த்தம் படிந்திடப் பதறினானே (5)

## <u>தெளிவுரை:-</u>

**'சமாதி சட்க சம்பத்தி'** என்கின்ற இந்த நான்கு சாதனங்களை அடைந்தவனே ஆத்ம ஞானத்தை அடையத் தகுதியான **'அதிகாரி'** ஆவான்.

அவனே தனக்குத் தானே தடைகளாக இருக்கின்ற தன்னுடைய இந்திரியங்கள், மற்றும் உடல் சம்பந்தமாக உண்டான நோய்கள் போன்ற, எத்தகைய துன்பங்களாக இருந்தாலும் (ஆதியாத்மிகம்), அத்துடன், இயற்கையின் பஞ்ச பூதங்களாகிய, மனிதன் தெய்வங்களாக வழிபடுகின்ற வருணன், வாயு, அக்னி போன்றவர்களால் மழை, புயல், கடற்சீற்றம், பூகம்பம், வீட்டுச் சுவர் இடிந்து விழுதல், மரம் முறிந்து விழுதல், முதலான இயற்கைப் பேரிடர் மூலம் உண்டாகின்ற துன்பங்களாக இருந்தாலும் (ஆதிதெய்விகம்), மேலும், மற்ற

உயிரினங்களாகிய புழு, பூச்சிகள் மற்றும் மிருகங்கள் என மற்றவைகளாலும், அல்லது மற்ற மனிதர்களாலும் வருகின்ற தாங்க முடியாத துன்பங்களாக இருந்தாலும் (ஆதிபௌதிகம்), அவைகளையும் கடந்து முன்னேற வேண்டும் என்று முயற்சி செய்வான்.

இவ்வாறு, இந்த மூன்று விதமான துன்பங்களையும் தவிர்த்திட விரும்பிய சாதகன், வெயிலின் வெப்பம் சகித்திட முடியாமல், துடி துடிக்கின்ற புழுவைப் போன்று, தானும், தன் துன்பத்திற்குக் காரணமான பிறப்பு - இறப்பு என்ற பிறவிப் பிணியாகிய சம்சார நோயை நீக்கும் பொருட்டு, பதறியபடி தத்துவ ஞானத்தை மருந்தாகத் (உபதேசமாக) தருகின்ற மகாத்மாவைத் தேடி, வேகமாக அடைகின்றானே.

(**ஆதியாத்மிகம், ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம்** என துன்பத்தைக் கொடுக்கின்ற இந்த மூன்றும் **ஆத்ம ஞான சாதனைகளுக்கு தடைகளை** உண்டாக்குபவைகள் எனலாம்).

ஆனபின் மனைவி மக்கள் அர்த்த எடணைகள் மூன்றில்
கானவர் வலையிறல் பட்டுக் கைதப்பி ஓடும் மான்போல்
போனவன் வெறுங்கையோடே போகாத வண்ணம் சென்று
ஞான சற்குருவைக் கண்டு நன்றாக வணங்கினானே. (6)

## தெளிவுரை:-

இவ்வாறு, பக்குவப்பட்ட சாதகன் தன் மனைவி, மக்கள், போகப் பொருட்கள், நிலபுலன்கள் என்று, நிலையற்ற அனைத்தின்மீதும் உள்ள அளவிட முடியாத ஆசைகளை விட்டுவிடுவது என்பது, எப்படி இருக்குமெனில், வேடன் விரித்த வலையில் சிக்கி, அதிலிருந்து விடுவித்துக் கொண்ட மான் எவ்வாறு, தலைத்தெறிக்க அவ்விடத்தை விட்டு ஓடிப் பிழைக்குமோ? அவ்வாறு, இந்த சஸ்சாரம் என்ற பந்தத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முயல்வான்.

மேலும், இந்த பொன், மண், பெண் என்ற மூன்று ஆசைகளையும் உண்டாக்குகின்ற இந்த பௌதீக உலகத்தை சத்தியமாகப் பார்க்காமல், அது மனதின் ஆசைகளினால், இந்த புலன்கள் மூலம் அறியப்படுகின்றது என்பதினால், மித்யாவாகப் பார்த்து, அவைகளை ஒதுக்கிவிட்டு, தக்க சத்குருவைத் தேடி, வெறும் கையுடன் போகாமல், ஏதாவது மலரையோ, பழங்களையோ கொண்டு சென்று, அவரைக் கண்டு, விழுந்து வணங்கி, உபதேசிக்க வேண்டினானே.

குறிப்பு:–

{மித்யா எனில், இருப்பது போலக் காணப்படுகின்றது. ஆனால், அது உண்மையில் இல்லை. உதாரணமாக, **கானல் நீர்** எவ்வாறு தோற்றத்திற்கு இருப்பதாகத் தெரிகின்றது. ஆனால், உண்மையில் அதுப்போன்று நீர் அங்கு இல்லை.}

(தெய்வம், ராஜா, குரு, குழந்தை முதலானவர்களைப் பார்க்கச் செல்லும்போது, வெறும் கையோடு போகக்கூடாது. அவர்கள் உண்பதற்காக ஏதேனும், பழங்களைக் கொண்டு சென்று கொடுப்பது நமது மரபு.)

வணங்கி நின்று அழுது சொல்வான் மாய வாழ்வு எனும் சோகத்தால்
உணங்கினேன் ஐயனே என்னுள்ளமே குளிரும் வண்ணம்
பிணங்கிய கோசபாசப் பின்னலைச் சின்னமாக்கி
இணங்கிய குருவே என்னை இரட்சித்தல் வேண்டுமென்றான்.

(7)

## தெளிவுரை:-

சத்குருவை அடைந்து, அவரை வணங்கி நின்றவன், அவரிடம் அழுதுக் கொண்டே கூறுகின்றான். ஐயனே! தோன்றி, மறையும் மாய வாழ்க்கை இது என்பதை அறிந்து, அதனால் உண்டாகின்ற சோகத்தால் மனம் வாடுகின்றேன். மனதின் துயரங்கள் ஒன்றின்மீது ஒன்றாகப் பின்னிக்கொண்டு, சிக்கல்களை உண்டாக்கிக் கொண்டுள்ளது.

அவைகள், **உடல், மனம், புத்தி, பிராணன்** மற்றும் பிறப்பு, இறப்புக்குக் காரணமான **கர்மா** என உறைப்போன்று என்னை மூடியுள்ள பாசப் பின்னலை சிதைத்து, என்னுள்ளம் குளிரும் படியான உயரிய ஆத்ம ஞான உபதேசங்களை அருளி, என்னை இரட்சிக்க வேண்டும் என்றான்.

அன்னை தன்சிசுவை ஐயன் ஆமைமீன் பறவை போலத்
தன்னகம் கருதி நோக்கித் தடவிச் சந்நிதி இருத்தி
உன்னது பிறவி மாற்றும் உபாயம் ஒன்று உண்டு சொல்வேன்
சொன்னது கேட்பாயாகில் தொடர்பவம் தொலையும் என்றார். (8)

## தெளிவுரை:-

தாய் தன் குழந்தையை அரவணைப்பது போன்றும், ஆமை தன்னுடைய முட்டைகளை மணலினுள் புதைத்து பாதுகாப்பது போன்றும், மீன்கள் தன் குஞ்சுகளை மற்ற மீன்கள் விழுங்கி விடாதபடி, பாறை இடுக்குகளில் மறைத்து வைத்து, பாதுகாத்து வளர்ப்பது போன்றும், பறவைகள் தன் முட்டைகளைக் குஞ்சு பொறிக்க, தன் சிறகுகளால் தழுவுவது போன்றும், தன்னை நாடி வந்த சீடனை நோக்கித் தடவிக் கொடுத்து, அவனை அவரது எதிரில் அமர்த்தினார்.

உன்னுடைய பிறவி மாற்றும் உபாயம் ஒன்று உண்டு. அதைக்கூறுகின்றேன். கேட்பாயாக! அதாவது, நீண்ட நெடுங்

காலமாக உன்னைத் தொடர்ந்து வருகின்ற, தீராப்பிணியாகிய **பிறப்பு** – **இறப்பு** என்ற சம்சாரம் என்ற நோயைத் தொலைக்க முடியும் என்றார்.

தொடர்பவம் தொலையும் என்று சொன்னதைக் கேட்டபோதே
தடமடு மூழ்கினான் போல் சரீரமும் குளிர்ந்து உள் ஆறி
அடரும் அன்பு ஒழுகுமாபோல் ஆனந்த பாஷ்பம் காட்டி
மடல் மலர்ப்பாதம் மீண்டும் வணங்கி நின்று ஈது சொல்வான். (9)

## <u>தெளிவுரை:-</u>

தன்னுடைய தீராத பிறப்பு - இறப்பு நோய்த் துன்பம் தீரும் என்று சொன்னதைக் கேட்டவுடனேயே, வெயிலில் துடி, துடித்துக் கொண்டிருந்த புழு போல அவரை நாடி வந்த சீடனின் உடலானது குளிர்ந்த நதி நீரில் மூழ்கியவுடன், வெப்பம் தணிந்து, சுகமான குளிர்ச்சியை அனுபவமாக்கியது போன்று, அவனது உடல் குளிர்ந்து விட்டது.

மேலும், அவனது மனமும் அமைதியை அடைந்தது. அதனால், அவனுக்கு அவர்மீது அளவற்ற அன்பு உண்டாகி, ஆனந்தக் களிப்பில் சத்குருவின் மலர்ப்பாதங்களை, மீண்டும் வணங்கி நின்று, பின்வருமாறு கூறத்தொடங்கினான்.

சொன்னது கேட்க மாட்டாத் தொண்டனானாலும் சுவாமி
நின்னது கருணையாலே நீர் என்னை ஆளலாமே
உன்னது பிறவி மாற்றும் உபாயம் ஒன்று உண்டென்றீரே
இன்னதென்று அதைநீர் காட்டி ஈடேற்றல் வேண்டுமென்றான் (10)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! தாங்கள் கூறுவதை புரிந்துக் கொள்ளும் சக்தியற்று, தங்களுக்கு தொண்டு செய்ய வந்தவனை, இவன் கேட்க மாட்டான் எனக் கருதாமல், தங்களது கருணை யினாலே, நீங்கள் என்னை ஆட்சி செய்து, கட்டளை இடுங்கள் சுவாமி.

உன்னுடைய பிறவி மாற்றும் உபாயம் ஒன்று உண்டு என்று கூறினீரே? அத்தகைய உன்னதமான வழி இன்னது என்பதை, தாங்கள் இவனுக்கு காட்டிக் கொடுத்து, இவனைக் கடைத்தேற்ற வேண்டும் என்றான்.

அடங்கிய விருத்தியான் என்று அறிந்தபின் செறிந்த மண்ணின்
குடம்பையுள் புழுமுன் ஊதும் குளவியின் கொள்கை போலத்
தொடங்கிய குருவும் ஆன்ம சொரூபமே மருவவேண்டி
உடம்பினுள் சீவனைப்பார்த்து உபதேசம் ஓதுவாரே. (11)

## தெளிவுரை:-

மனதில் எப்பொழுதும் உண்டாகுகின்ற பல்வேறு எண்ணப்பதிவுகளாகிய, மனோ விருத்திகள் தோன்றாதவாறு, அவைகளை தவிர்த்து, தற்பொழுது இவன் வந்திருக்கின்றான் என்பதை அறிந்துக்கொண்ட சத்குருவும், எவ்வாறு ஒரு குளவியானது தான் கட்டும் மண் கூட்டில், ஒரு புழுவை கொண்டு வந்து வைத்துவிட்டு, அதன்பிறகு, அடிக்கடி அந்த புழுவின் முன் சென்று, ஊதி ஒரு விதமான சப்தம் செய்துக் கொண்டே இருக்கும்.

குளவி அந்தப் புழுவை எவ்வாறு, தினந்தோறும் அணுகி அரவணைத்து, அதை தன் இனமான குளவி இனம் என்பதைக் காட்டிக் கொடுத்து விடுகின்றதோ? அதன் கொள்கையைப் போன்று, தன் சொரூபத்தை உணர்ந்த சற்குருவான இவரும், தன்னைப் போன்ற அவனும் ஆத்ம சொரூபமே என்பதைக் கூற விரும்பினார்.

அதனால், அந்த சத்குருவும் தன்னை நாடி வந்த சீடனிடம், நம் இருவருக்குள்ளும் இருக்கின்ற அந்தர் யாமியாகிய சீவனைப் போன்றே, அனைத்து ஜீவர்களுக்கும்

ஆதாரமாக அந்த ஈஸ்வரனே அந்தர்யாமியாக இருக்கிறான் என்பதை அறிவிக்கும் பொருட்டு, நீயும், அவனும் வேறு, வேறல்ல! என்று ஜீவ, ஈஸ்வர உபதேசத்தை செய்யத் தொடங்குகின்றார்.

குறிப்பு:–

(பல வகையான மணிகளைக் கோர்த்து மாலையாக கட்டுவதற்கு, சரடு என்ற நூல் எப்படி ஆதாரமாக இருக்கின்றதோ? அதுப்போல, எல்லா சேதன, அசேதன உடல்களிலும் ஊடுருவி, அவைகளுக்கு ஆதாரமாகத் தொடர்ந்து விளங்கும், ஒன்றேயாகிய ஆத்மாதான் '**அந்தர்யாமி**' எனப்படுகின்றது.)

வாராய் என்மகனே தன்னை மறந்தவன் பிறந்து இறந்து
தீராத சுழற்காற்று உற்ற செத்தை போல் சுற்றிச் சுற்றிப்
பேராத கால நேமிப் பிரமையில் திரிவன் போதம்
ஆராயும் தன்னைத் தானென்று அறியும் அவ்வளவுந்தானே. (12)

## <u>தெளிவுரை:-</u>

வாராய் என் மகனே என்று தன் சிஷ்யனை நோக்கி, அழைத்து உபதேசிக்கத் தொடங்கினார்.

மகனே! சுழற்காற்றில் சிக்கிய சருகானது எவ்வாறு இங்கும், அங்கும் சுற்றிச்சுற்றி அலைக்கழிக்கப்பட்டு தத்தளிக்

கின்றதோ, அதுப்போன்று, தன் உண்மை சொரூபத்தை மறந்தவன் **பிறப்பு** – **இறப்பு** என்ற காலச் சக்கரத்தில் சிக்கிக் கொண்டு இங்கும், அங்கும் அலைக்கழிக்கப்படுகின்றான்.

ஆகவே, அவன் தனது ஆத்ம சொரூபத்தை அறிவினால் விசாரித்து தன்னைத்தான் (பிரம்மம்) என்று அறியும்வரை, இந்த **பிறப்பு** – **இறப்பு** என்ற சம்சாரச் சக்கரத்தில் சுற்றுகின்ற அலைச்சல் இருக்கத்தான் செய்யும் என்பதை அறிவாயாக.

தன்னையும் தனக்கு ஆதாரத் தலைவனையும் கண்டானேல்
பின்னை அத்தலைவன் தானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்
உன்னை நீ அறிவாயாகில் உனக்கு ஒரு கேடும் இல்லை
என்னை நீ கேட்கையாலே ஈது உபதேசித்தேனே. (13)

## தெளிவுரை:-

சீவனாகிய (மனம்) தன்னையும், ஈஸ்வரன் (அறிவு) ஆகிய தனக்கு ஆதாரத் தலைவனையும் மெய்யறிவு கொண்டு விசாரித்துப் பார்த்தானேயானால், அதன்பிறகு, அந்தத் தலைவன் தானாகவே (பிரம்மமாய்) இருப்பதை உணர்ந்து, பிறவாப் பெருநிலையை அடைகிறான்.

அப்படிப்பட்ட உன்னை நீ, அந்த அறிவாக, ஆத்மாவாக அறிந்துக் கொண்டாயானால், உனக்கொரு கேடும்

இனி வராது. என்னை நீ கேட்டதினாலே, உனக்கு இதை உபதேசித்தேன்.

**குறிப்பு:–**

(பல பிறவிகளாகச் சேர்த்து வைத்துக் கொண்டுள்ள எண்ணத் தொகுப்புகளுக்கு ஆதாரமான சூக்கும மனம் தன்னுடைய ஆசா, பாசங்களை (பாவ - புண்ணியங்களை) சுக, துக்கங்களாக அனுபவமாக்க ஸ்தூல உடலைக் கையாளுகின்றது. அத்துடன், அறிவாகிய ஆத்மா இருப்பதினால்தான், மனம் என்ற "**நான்**" இருக்க முடியும் என்பதை அறியாமல், தன் மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ள ஏராளமான எண்ணங்களைக் கொண்டு, தன்னை அறிவாகிய "**பரமாத்தா**"விலிருந்து, பிரித்து வைத்துக்கொண்டு, மனமாகிய தன்னை "**ஜீவாத்மா**" எனக் கருதுகின்றது.

**க்ஷேத்திரம்** என்ற ஸ்தூல உடலின்மீது, ஒட்டாமல் ஏற்றி வைக்கப்பட்டுள்ள சூக்கும மனதை (ஜீவனை), எந்த மெய்யறிவு உள்ளிருந்து விளங்க வைக்கிறதோ? அந்த மெய்யறிவை (அ) ஆத்மாவை "**க்ஷேத்திரஞ்ஞன்**" என்று கூறப்படுகிறது.

**காண்பவன், காட்சி, காணப்படும் பொருள்** என்ற திரிபுடி ஆகிய இவைகளின் தோற்றத்தையும், மறைவையும் அறிகின்ற அறிவாகவும், அதேசமயம் தோற்றமும், மறைவும் இல்லாதவனாகவும் இருக்கின்ற, ஒன்றேயாகிய இருப்பை "**சாட்சி**" எனப்படுகின்றது.

பிரம்மா முதல் எறும்பு வரை உள்ள எல்லாப் பிராணிகளின் புத்திகளிலும், ஏற்றத்தாழ்வின்றி, காணக் கூடியவனாய், அவைகளின் புத்திகளிலும் உறைகின்ற அந்த அறிவை “**கூடஸ்தன்**” எனப்படுகிறது.

இவ்வாறு, **ஜீவன், க்ஷேத்திரஞ்ஞன், சாட்சி,** மற்றும் **கூடஸ்தன்** என்று பலவாறு ‘**ஆத்மா**’ விளக்கப்படுகின்றது.)

என்னைத்தான் சடனா உள்ளத்து எண்ணியோ சொன்னீர் ஐயா
தன்னைத்தான் அறியா மாந்தர் தரணியில் ஒருவருண்டோ
பின்னைத்தான் அவர்களெல்லாம் பிறந்து இறந்து உழலுவானேன்
நின்னைத்தான் நம்பினோற்கு நிண்ணயம் அருளுவீரே. (14)

## தெளிவுரை:-

ஐயா, என்னையே நான் அறிந்துக் கொள்ள முடியாத அளவிற்கு மூடனாக இருப்பேன் எனக்கருதியா இதை எனக்குக் கூறினீர்கள்?

தன்னைத்தான் யார் என்று அறிந்துக் கொள்ள முடியாத அளவிற்கு ஒரு மனிதன் மூடனாக இந்த உலகத்தில் இருப்பானா?

அவ்வாறு, தன்னைப்பற்றி அறிந்துக் கொண்ட இவர்களெல்லாம் பின்னர் ஏன்? பிறப்பதும், இறப்பதுமாக இருக்கின்றார்கள்? உம்மை நம்பி வந்த இவனுக்கு உண்மையைக் கூறி அருளுங்கள் என்றான்.

இன்னது தேகம் தேகி இவன் என உணர்வன் யாவன்
அன்னவன் தன்னைத்தான் என்று அறிந்தவனாகும் என்றார்
சொன்னபின் தேகியார் இத்தூலம் அல்லாமல் என்றான்
பின்னது கேட்ட ஐயன் பீடையும் நகையும் கொண்டார். (15)

## <u>தெளிவுரை:-</u>

இந்த தேகம் என்று அழைக்கப்படுகின்ற உடல் என்பது அழியக்கூடியது என்றும், அந்த அழியக் கூடிய உடலில் அழியாத தேகி என்ற ஆத்மா இருக்கின்றது என்பதையும் எவன் உணர்கின்றானோ? அப்படிப்பட்ட அவனே தன்னை அறிந்தவன் ஆகிறான் என்றார்.

இவ்வாறு, சத்குருநாதர் கூறியதைக்கேட்ட பிறகு, சிஷ்யன் அவரைப் பார்த்து, ஐயனே! இந்த கண்ணிற்குத் தெரிகின்ற ஸ்தூல உடல் (பரு உடல்) '**நான்**' இல்லாமல் வேறு யார் நானாக இருக்க முடியும்? என்றான்.

இதைக் கேட்ட சத்குருநாதரும் அவனைக்கண்டு வருத்தமும், சிரிப்புமாக, பின்வருமாறு கூறத் தொடங்கினார்.

**குறிப்பு:–**

(உடல் என்பதை **தேகம், சரீரம், சேத்திரம்** எனப் பல பெயர்களில் அழைக்கப்படும். இங்கு **தேகி** என்று குறிப்பிடுவது **ஆத்மாவை** என்பதை அறியவும். இந்த தேகி என்பதையே **க்ஷேத்திரக்ஞன்** என்றும் அழைக்கப்படும்.)

[உதாரணம்:- அர்ஜுனா நீ எல்லா க்ஷேத்திரங்களிலும் (உடல்களிலும்) என்னை க்ஷேத்திரக்ஞன் (எல்லா உடலையும் அறிபவன்) என்று அறிந்துகொள். மேலும், க்ஷேத்திரமாகிய உடலைப் பற்றியும், க்ஷேத்திரக்ஞனான ஆத்மாவைப் பற்றியும் அறிவது என்பது, இந்த விகாரத்தோடு கூடிய பிரக்ருதியை உடலாகவும், இந்த பிரக்ருதிக்கு காரணமான புருஷனை ஆத்மாவாகவும் தத்துவரீதியாக அறியும் அறிவே ஞானம் என்பது என்னுடைய கருத்து. - **பகவத்கீதை 13.2**]

தேகம் அல்லாமல் வேறே தேகியார் காணேன் என்றாய்
மோகமாம் கனவில் வந்து முளைத்திடும் அவன் யார் சொல்வாய்
சோகமாம் கனவு தோன்றாச் சுழுத்தி கண்டவன் யார் சொல்வாய்
ஆகநீ நனவில் எண்ணும் அறிவுதான் ஏது சொல்வாய். (16)

## தெளிவுரை:-

இந்த **தேகம்** நான் இல்லாமல், எனக்கு வேறாக **தேகி** என்பவன் யார்? அவனைக் காண முடியவில்லை என்கிறாய். அப்படியானால், உறங்கிக் கொண்டிருக்கின்ற நீ, உன்னுடைய கனவில் உனக்கு அன்னியமாக தோன்றுகின்ற உருவங்கள் எல்லாம், உன் ஒருவனால் படைத்துக் கொள்ளப்பட்டவைகள் எனும்போது, அப்படிப்பட்ட பலவாறான உருவங்களைப் படைத்த நீ யார் என சொல்வாய்?

அவ்வாறே, கனவுகள் தோன்றாத ஆழ்ந்த உறக்க நிலையிலும்கூட, ஒன்றுமறியாத சூன்ய நிலையைக் கண்டவன் யாராக இருக்க முடியும்?

அவ்வாறே, விழிப்பு நிலையில் தன்னைத்தான் "**நான்**" என்று அறியும் அந்த பிரக்ஞையை என்னவென்று சொல்வாய்?

குறிப்பு:–

(கனவு, கனவில்லா ஆழ்ந்தஉறக்கம், நனவு என்ற இந்த மூன்றையும் ஸ்வப்னம், சுழுத்தி, சாக்கிரம் என்று அழைக்கப்படுகின்ற "**அவஸ்தாத்ரயம்**" எனப்படும். இந்த மூன்று அவஸ்தைகளுக்கும் ஆதாரமாக ஒருவன் இருந்துக் கொண்டு, இவைகளை அனுபவமாக்குகின்றான். அவனே **ஆத்மா** அல்லது **பிரஞ்ஞை** அல்லது **அறிவு** ஆகும்).

நனவு கண்டது நான் கண்ட நனவுள நினைவு நீங்கிக்
கனவு கண்டதும் சுழுத்தி கண்டதும் வேறொன்றேபோல்
தினம் அனுபவித்தது ஒக்கும் தெரியவுமில்லை சற்றே
மனதினில் உதிக்கும் பின்னை மறைக்கும் அது அருளுவீரே. (17)

## தெளிவுரை:-

தற்போதைய இந்த விழிப்பு நிலையை அனுபவித்துக் கொண்டிருப்பவன் "**நான்**"தான், அதுப்போல, கனவு நிலையில் கனவு கண்டதும் நினைவில் இருக்க, ஆழ்ந்த உறக்க நிலையில் நன்றாக உறங்கினேன் என்பதைக் கூறக் கூடியவனாகவும் நான்தான் இருக்கின்றேன். இவ்வாறு ஒவ்வொரு நாளும், இந்த மூன்று அவஸ்தைகளிலும் பொருந்திய **விழிப்பு, கனவு, உறக்கம்** போன்ற அனுபவத்தை அனுபவிப்பவனாகிய உண்மையான "**நான்**" எனும், என்னை மறைக்கின்ற, மனதில் உதிக்கும் அறியாமையில் இருந்து விடுபட உபதேசம் அருளுவீரே.

தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டுவார்போல்
ஆலத்தின் உடுக்கள் காட்டி அருந்ததி காட்டுவார்போல்
தூலத்தை முன்பு காட்டிச் சூக்கும சொரூபமான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர் தொடங்கினாரே. (18)

## தெளிவுரை:-

வானத்தில் சரியாகப் பார்க்க முடியாத மூன்றாம்பிறை நிலவை, அது இருக்குமிடம் சுட்டிக் காட்ட, அதற்காக, பூமியிலுள்ள ஒரு மரத்தின் கிளை நுனியை சுட்டிக் காட்டி, அதிலுள்ள ஒரு இலையைக் காட்டி, அந்த இலைக்கு அருகிலே பார் மூன்றாம்பிறை தெரிகின்றது என்பார்கள்.

அதுப்போலவே, வானத்திலுள்ள பல்வேறு நக்ஷத்திரங் களுக்கு நடுவிலே, பெரியதாகத் தெரியும் மற்ற சில நக்ஷத்திரங்களை சுட்டிக் காட்டி, அதன் மூலமாக சரியாகத் தெரியாத நக்ஷத்திரமான அருந்ததி நட்சத்திரத்தைச் சுட்டிக் காட்டுவதுப் போன்று, நம் கண்ணுக்குத் தெரியும் இந்த உடல், மனம், உலகம் போன்ற அநித்தியங்களைச் சுட்டிக் காட்டி, நம் கண்ணிற்குத் தெரியாத நுண்ணியதாக இருக்கும், அனைத்துக்கும் மூலமான நித்தியத்தை (பிரமத்தை) காட்டிக் கொடுக்க முனிவர் உபதேசிக்கத் தொடங்கினாரே.

அத்தியாரோபம் என்றும் அபவாதம் என்றும் சொல்லும்
உத்தியால் பந்தம் வீடு என்று உரைக்கும் வேதாந்தம் எல்லாம்
மித்தையாம் ஆரோபத்தால் பந்தமாம் அபவாதத்தால்
முத்தியாம் இவ்விரண்டில் முந்தி ஆரோபம் கேளாய். (19)

## தெளிவுரை:-

பொதுவாக வெயில் காலங்களில் நாம் பாதையில் நடந்து செல்லும்போது தூரத்தில் நீரோட்டம் சாலையைக் கடந்து ஓடுவதுப் போன்று, நம் அனைவரின் பார்வைக்கும் தோன்றும். இதனை உண்மையான நீர் என்று நம்பி, அதன் அருகே சென்று பார்த்தால், அது பொய்யான **கானல் நீர்** என்பது புரியும்.

இவ்வாறு, கற்பனையாக, இல்லாத ஒன்றை இருப்பது போலக் காட்டும் தோற்றத்தை "**அத்தியாரோபம்**" என்று கூறப்படுகின்றது. இதையே, மற்றொரு பெயரில் "**ஆரோபம்**" என்றும் அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு, இல்லாததை இருப்பதாகக் காட்டும் நம்மிடம் உள்ள ஐம்புலன்கள் மற்றும் மனதின் அறியாமை நிலையைப் புரிந்துக்கொண்டு, அதன் உண்மைத் தன்மையை உறுதி செய்து, அறிந்து கொள்வதே "**அபவாதம்**" என்று கூறப்படுகின்றது.

அதாவது, இல்லாத ஒன்றை இருப்பதாக நம்பிக்கைக் கொள்வதும், பிறகு விசாரித்து, அதன் உண்மைத் தன்மையை அறிந்துக் கொள்வதுமாகிய, இந்த இரண்டின் தன்மையை யுக்தியால் எடுத்துக் கூறும் வேதாந்த சாஸ்திரம், ஆரோபத்தால் பந்தமும், அபவாதத்தால் மோக்ஷமும் உண்டாகின்றது என்று எடுத்துக்கூறி, முதலில் **ஆரோபம்** என்பதைப்பற்றி விளக்க இருக்கின்றது.

ஆரோபம் அத்தியாசம் கற்பனையாக எல்லாம்
ஓரோர் வஸ்துவினில் வேறே ஓர் வஸ்துவினை ஓர்தல்
நாரூடு பணியாத் தோன்றல் நரனாகித் தறியில் தோன்றல்
நீரூடு கானல் தோன்றல் நிறம் தலம் வெளியில் தோன்றல். (20)

## <u>தெளிவுரை:-</u>

ஆரோபம், அத்தியாசம் என்பதை ஒரு பொருளின் மீது மற்றொன்றை ஏற்றிப் பார்க்கின்ற கற்பனை எனலாம்.

இது எவ்வாறெனில், ஒரு மாலைப் பொழுதில் மங்கிய வெளிச்சத்தில் சாலையில் சென்று கொண்டிருக்கும் போது, அங்கே கிடக்கும் கயிற்றினை பாம்பாக எண்ணி பயப்படுவதும், மற்றொரு சூழ்நிலையில் மங்கிய வெளிச்சம் இருக்கின்றபோது, தூரத்தில் உள்ள கைகாட்டிக் கட்டையைப் பார்த்து, அங்கே யாரோ ஒரு மனிதன் நிற்கின்றான் என்று

எண்ணி ஏமாந்துப் போவதும், அவ்வாறே, தூரத்தில் தெரிகின்ற கானல் நீரை, உண்மையான நீர் என்று எண்ணிக் கொள்வதும், அத்துடன், நிறமற்ற ஆகாயத்தை நீல நிறம் கொண்டது என்று நம்பிக் கொள்வதும் ஆகிய இவைகள் அனைத்துமே "**ஆரோபம்**" அல்லது "**அத்தியாசம்**" என்று கூறப்படுகின்றது.

இப்படிப் போல நாம ரூபங்கள் இரண்டும் இன்றி
ஒப்பமாய் இரண்டற்று ஒன்றாய் உணர்வொளி நிறைவாய் நிற்கும்
அப்பிரமத்தில் தோன்றும் ஐம்பூத விகாரமெல்லாம்
செப்பு கற்பனையாலே செனித்ததென்று அறிந்து கொள்ளே. (21)

## தெளிவுரை:-

இப்படிப் பலவாறாக மனம் கற்பித்துக் கொண்ட பெயர்களும், உருவங்களும் ஆகிய இரண்டும் இல்லாமல், ஒன்றேயான எங்கும் நிறைந்த, உணர்வு ஒளியானது, அனைத்தையும் அறிகின்ற அறிவுப்பிரகாசமாய், நிறைவாய் நிற்கும், பரப்பிரம்மத்தின்மீது, அறியாமையின் காரணமாக, இல்லாத ஒன்றையும் இருப்பதாகக் காட்டும், புலன்களும், மனமும் ஆரோபமாக ஏற்றிப் பார்க்கின்ற, இந்த பிரக்ருதி முதலான பஞ்சபூதங்களும், அதன் காரியங்களாக இந்த உலகமும், உடலும் பிறந்தன என்பதை அறிந்துக் கொள்ள வேண்டும்.

அதுதான் எப்படி என்றக்கால் அநாதியாம் சீவரெல்லாம்
பொதுவான சுழுத்தி போலப் பொருந்தும் அவ்வியத்தம் தன்னில்
இது கால தத்துவப் பேரீசன் உட்பார்வையாலே
முதுமூல சுபாவம் விட்டு முக்குணம் வியத்தமாமே. (22)

## <u>தெளிவுரை:-</u>

அதுதான் எப்படி உண்டாயிற்று? என்றால், ஜீவனின் சாதாரண அனுபவமான தினசரி ஆழ்ந்த உறக்கத்தில் (சுழுத்தி அவஸ்தையில்) மனமும், புத்தியும் இன்றி, ஒன்றும் அறிய முடியாமல், ஆனந்தமாக, ஒன்றுமற்ற சூன்யத்தில் அடங்கியிருந்தவன், ஆழ்ந்த உறக்கத்திற்குப்பிறகு, விழிப்பு நிலைக்கு வெளிப்படுகின்றானோ? அதுப்போல, ஆதியில் இருந்தே அநாதிகாலமாக சித் ஸ்வரூபமான ஜீவர்கள் அனைவரும் மூலப்பிரக்ருதியில், காரண தேகத்தில், கரும வாசனையுடன் அடங்கியிருந்து, கால தத்துவமான ஈஸ்வரனுடைய பார்வையால் (கருணையால்) மூலசுபாவமான காரண அவஸ்தையை விட்டு, முக்குணமாக வெளிப்பட்டது.

உத்தம வெளுப்புச் செம்மை உரைத்திடு கறுப்புமாகும்
சத்துவ குணத்தினோடு ரசோகுணம் தமோகுணம்தான்
சுத்தமோடு அழுக்கு இருட்டாச் சொல்லும் முக்குணமும் மூன்றாய்
ஒத்துளவேனும் தம்முள் ஒருகுணம் அதிகமாமே. (23)

## <u>தெளிவுரை:-</u>

இவ்வாறாக வெளிப்பட்ட முக்குணமானது, குண பேதங்களினால் **உத்தம குணம், மத்திம குணம், அதம குணம்** என்று மூன்றாக இருக்கும்.

இதில், உத்தம குணத்திற்கு வெண்மை நிறமும், மத்திம குணத்திற்கு செம்மைநிறமும், அதம குணத்திற்கு கருப்பு நிறமும் உண்டாகி, வெண்மை நிறத்திற்கு சுத்தம் என்றும், செம்மை நிறத்திற்கு அழுக்கு என்றும், கருப்பு நிறத்திற்கு இருட்டு என்றும் கொண்டு, அதன்முறையே **சத்துவகுணம், ரஜோகுணம், தமோகுணம்** என்ற மூன்று குணங்களில் ஏதேனும் ஒரு குணம் மேலோங்கி நிற்கும்.

ஒருவழி இதுவாம் இத்தை ஒருவழி வேறாச் சொல்வர்
மருவும் அவ்வியத்தந்தானே மகத் தத்துவமாகும் அந்த
அருள் மகதத்துவந்தான் அகங்காரமாகும் என்றும்
கரு அகங்காரம் மூன்றாக் காட்டிய குணமாம் என்றும். (24)

## தெளிவுரை:-

ஒரு வழி இதுவாகும். இதையே இன்னொரு வழியில் வேறு விதமாகச் சொல்வார்கள்.

அதாவது, பரப்பிரம்மத்திடம் இருந்து உண்டான மூலப்பிரக்ருதியான இந்த பிரபஞ்ச சிருஷ்டி முதலில் மூன்று குணங்களாக வெளிப்பட்டது.

இந்த மூன்று குணங்களே சகல தோற்றத்திற்கும் காரணமாக இருப்பதால், வேத உபநிஷத்துக்கள் மூன்று விதமாக இந்த சிருஷ்டியை வர்ணிக்கின்றது.

அவைகள், '**அஜாதவாதம்**', '**திருஷ்டி சிருஷ்டி**', '**கிரம சிருஷ்டி**' என்பனவாகும்.

பரப்பிரம்மம் தன்னை சுத்த சைதன்யமான வெளிப் படுத்திக் கொண்ட அறிவுக்கு முன்பு இருந்த மறதியே அவ்வியக்தப் பிரக்ருதி (மூலப்பிரக்ருதி) எனவும், அதுவே உலகத்தில் காரிய - காரண வடிவங்களை ஏற்று நடத்துகிறது

என்றும், அத்தகைய இந்த பிரக்ருதியிடமிருந்து **சத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம்** என்ற மூன்று குணங்கள் தோன்றின.

இந்த மூன்று குணங்களும் அனைத்திற்கும் ஆதாரமாக இருப்பதால், அவற்றில் கிரியா சக்தி அதிகமாக உள்ள சூத்ரமும், ஞானசக்தி அதிகமாக உள்ள மஹத்தும் உண்டாயின. **மஹத் தத்துவம்** மாற்றமடைந்து '**அகங்காரம்**' வெளிப்பட்டது.

இந்த அகங்காரம்தான் சீவர்களை மாயையில் (உடலை ஆன்மா எனும் அறியாமை மயக்கத்தில்) தள்ளுகிறது. இந்த அகங்காரத்திலும் **சத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம்** என்ற மூன்று குணங்கள் வெளிப்படுகின்றது.

அதுவே, **ஐந்து தன்மாத்திரைகள், இந்திரியங்கள், மனம்** ஆகியவற்றிற்கும் காரணமாகின்றது. எனவே அது சடம், அறிவு வடிவம் என்ற இரு தன்மைகளும் உடையதாகவும் உள்ளது.

# மூன்று சிருஷ்டிகள் விளக்கம்

## 1. அஜாத வாதம்

பிரபஞ்சம் என்று ஒன்று படைக்கப்படவேயில்லை. பிரபஞ்சம் என்பது மனித மனதின் சிருஷ்டியே. அதாவது, அவைகள் நமது சங்கல்பங்களே ஆகும். அத்துடன், காலம், தேசம், காரண, காரியங்களெல்லாம் நம் மனதில் தோன்று பவைகள்தான். ஆத்மா ஒன்று தான் உண்மையாக உள்ளது.

ஆன்மாவின் உண்மை சொரூபத்தை அறியாத நிலையில் நமது மனம் அவித்யையில் (அறியாமையில்) மூழ்கி ***நீ, நான், இது,* அது** என்ற வேறுபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டு, ஒரு மாயா உலகத்தை சிருஷ்டிக்கின்றது. இது நாம் கனவுகளில் காணுகின்ற உலகத்திலிருந்து மாறுபட்டது அல்ல.

விழித்தெழுந்திருக்கும் பொழுது, அந்த கனவு உலகம் காணாமல் போய் விடும். நமது விழிப்பு நிலை வாழ்விற்கும், நாம் காணுகின்ற கனவுகளுக்குமுள்ள வித்தியாசம் முன்னது சில நிமிடங்கள் காணப்படும். பின்னது சில வருடங்கள் காணப்படும் என்பது தான் "**அஜாதவாதம்**" எனப்படும்.

## 2. த்ரிஷ்டி சிருஷ்டி வாதம்

முன்பு கூறிய அஜாதவாத சிருஷ்டியை ஜீரணிப்பது என்பது பலருக்கும் கடினமாக இருக்கும்.

இதை மற்றொருவிதத்தில் கூறுவதுதான் இரண்டாவது தத்துவமான **திருஷ்டி சிருஷ்டி வாதம்** எனப்படும். அதையே சிறிது எளிமைப்படுத்தி இங்கு கூறப்படுகிறது.

எப்பொழுது, **நான்** என்ற முதல் எண்ணம் உதிக்கின்றதோ? அப்பொழுது, மட்டுமே இந்த உலகம் உருவாகின்றது **நான் காண்கின்றேன் நான் செய்கின்றேன், நான் இங்கிருக்கின்றேன், நான் சுகமாக இருக்கின்றேன், நான் துக்கமாக இருக்கின்றேன்** என்பது, எல்லாமே, இந்த "**நான்**" என்று முதன்முதலாக உண்டாகும் எண்ணத்தின் தொடர்பு உடையது.

இது, **உடலே நான்** என்ற நினைப்பை உடைய '**நான்**'.

நான் இங்கிருக்கின்றேன் என்றால், இந்த உடலாகிய நான் இங்கிருக்கிறேன் எனப்பொருள் கொள்கிறோம். எனக்கு வலிக்கின்றது என்றால், இந்த உடலுக்கு வலிக்கின்றது என்று நினைக்கிறோம்.

இந்த உடல் அபிமானம் மறைந்து, உண்மையான "**நான்**" உதயமாகும் போதுதான், இந்த **தேச, கால** வித்தியாசங்கள் எல்லாம் மறைகின்றன.

வலியும் தெரிவதில்லை, ருசியும் தெரிவதில்லை, அந்த உண்மையான '**நானுக்கு**' என்பதைத்தான் "**திருஷ்டி - சிருஷ்டி வாதம்**" என்று கூறுகின்றார்கள்.

இந்த உலகம் நம் திருஷ்டியில்தான் நிலை கொள்கின்றது. "**நான்**" முதலில் தோன்றுகிறது, பிறகு உலகம் தோன்றுகிறது. உலகத்தை நம் மனம் சிருஷ்டிக்கின்றது. இந்த '**நான்**' மறைந்தால், இந்த உலகமும் மறைகின்றது.

இதுவும் அஜாதவாதமேதான். இது, வேறு விதமாக விளக்கப்பட்டிருக்கிறது.

## 3. கிரம சிருஷ்டி வாதம்

மேலே கூறப்பட்ட இரண்டு தத்துவங்களினாலும் தெளிவடையாதவர்களுக்காக, இந்த மூன்றாவது வாதம் கூறப்பட்டுள்ளது.

ஈஸ்வரன் முதலில் தோன்றினான். அவன் தனது மாயா சக்தியினால், இந்த பிரபஞ்சத்தை படைத்தான். அதன்பிறகு, இந்த பிரபஞ்சத்திலுள்ள எல்லா **சேதன - அசேதனா** (அசையும் - அசையா) பொருள்களையும் படைத்தான்.

நாம் காணும் அனைத்தும், அந்த பரமேஸ்வரனின் படைப்புக்கள்தான். அவனிலிருந்து உருவானதுதான் இந்த உலகமனைத்தும். ஆகவே, எல்லாம் அவனின் அம்சம்தான்.

இதிலிருந்து, நாம் அறியவேண்டி உண்மையான விசயம் என்னவெனில், "பிரம்மம் அல்லது பரமாத்மா பல ரூபங்களிலு,ம் பல நாமங்களிலுமாகத் தென்படுகிறது. அதுவே பிரபஞ்சம் ஆகும். அதனை, "**சகுண ப்ரஹ்மம்**" என்கிறோம்.

காண்பதெல்லாம் காண்பவனின் பார்வையில் இருக்கிறது. ஒருவனுக்கு கயிறாகத் தோன்றுவது, மற்றொருவனுக்கு பாம்பாகத் தோன்றுகிறது.

மல்லிகை சிலருக்கு சுகந்தமாகவும் மற்ற சிலருக்கு தலை வலியை உண்டு பண்ணுவதாகவும் உள்ளது. ஆகவே, இவைகள் அனைத்தும் காண்பவனின் தகுதிக்கு ஏற்றவாறு காணப் படுகின்றது. எனவே, எல்லாமே உண்மைதான். சொல்லுகின்ற விதம்தான் மாறுகின்றது.

இக்குணங்களிலே விண்போன்று இருக்கும் சிற்சாயை தோன்றும்
முக்குணங்களினும் தூயதாம் முதற்குணம் மாயை ஆகும்
அக்குணப் பிரமச் சாயை அந்தரியாமி மாயை
எக்குணங்களும் பற்றாதோன் நிமித்த காரணனாம் ஈசன். (25)

## தெளிவுரை:-

இந்த மூன்று குணங்களிலே ஆகாயம் போன்று எங்கும் நிறைந்துள்ள பரப்பிரம்மத்தின் பிரதி பிம்பம் முதற் குணமான சத்துவ குணத்தில் நிழல் போன்று பிரதி பிம்பிக்கின்றது.

இவ்வாறு, பிரம்மத்தின் சாயையில் தோன்றியது "**மாயை**" எனப்படுகின்றது.

தூய்மையான சத்துவ குணத்தில் பிரதி பிம்பிக்கின்ற மாயையில் தோன்றியதே சேதனம் என்றும், ஈஸ்வரன் என்றும், அந்தர்யாமி என்றும் அழைக்கப்படுகின்றது.

மற்ற குணங்களான ரஜோகுணம், தமோகுணம் இந்த ஈஸ்வரனைப் பற்றாததால் நிமித்த காரணமான ஈஸ்வரனுக்கு அகங்கார, மமகார ரூப அபிமானம் கிடையாது.

ஈசனுக்குஇது சுழுத்தி இதுவே காரண சரீரம்
கோசம் ஆனந்தமாகும் குணம் இராசதம் அவித்தை
தேசறும் அவித்தை தோறும் சிற்சாயை சீவகோடி
நாசமாம் உயிர்க்கு அப்போது நாமமும் பிராஞ்ஞனாமே. (26)

## <u>தெளிவுரை:-</u>

இவ்வாறு தோன்றிய ஈஸ்வரனுக்கு மாயையே சுழுத்தி அவஸ்தை. இதுவே காரண சரீரமும், ஆனந்தமய கோசமும் ஆகும். ஈஸ்வரனின் ரஜோ குணம் '**அவித்தை**' (அறியாமை) எனப்படும்.

அடுத்து ஈஸ்வரனின் ரஜோ குணத்தில் பிரதி பிம்பிக்கின்ற அவித்தைகள் (அறியாமைகள்) அனைத்திலும் பிரதிபலித்த சித்தின் நிழல்களே கோடிக்கணக்கான "**சீவர்கள்**" ஆகும்.

இந்த சீவர்களுக்கு சூக்ஷும, ஸ்தூல சரீரங்கள் உண்டகுவதற்கு முன்பாக இருக்கின்ற காரண சரீரத்தின் பெயரே "**பிராக்ஞன்**" என்று கூறப்படும்.

இதே ஜீவன் சூக்ஷும, ஸ்தூல உடல்கள் எடுத்து நாசமாகும்போது, உயிர் (ஆத்மா) மீண்டும் சுழுத்திநிலையில் காரண சரீரத்துடன் சம்பந்தம் வைக்கும்போதும் அதன் பெயர் ப்ராக்ஞனே.

அழுக்கொடு பற்றும் சீவர்க்கு அதுவே ஆனந்தகோசம்
சுழுத்தி காரணசரீரம் சொன்னது இம்மட்டும் மோக
முழுக்குணத்து இரண்டால் வந்த மூல ஆரோபம் சொன்னோம்
வழுத்து சூக்கும ஆரோப வழியும் நீ மொழியக் கேளாய். (27)

## <u>தெளிவுரை:-</u>

அவித்தையை (அறியாமையை) பற்றும் சீவர்களுக்கு அதுவே ஆனந்தமய கோசம். சீவர்களுக்கு இந்த அறியாமையே சுழுத்தி (ஆழ்ந்த உறக்க நிலை) அவஸ்தையாகவும், காரண சரீரமாகவும் உள்ளது.

இதுவரைக்கும் கூறியது, மாயையின் மூன்று குணங்களில், முதல் இரண்டு குணங்களான சத்துவ குணம், ரஜோ குணம் என்பது பற்றி கூறப்பட்டது.

அதாவது, இல்லாத ஒன்றை இருப்பதாக ஏற்றி வைக்கப்பட்ட காரண சரீரக் கற்பனை கூறப்பட்டது. இனி **சூக்ஷும சரீரம்** உண்டான கற்பனையையும் நீ கேட்பாயாக.

ஏம மாயா வினோத ஈசனார் அருளினாலே
பூமலி உயிர்கட் கெல்லாம் போக சாதனம் உண்டாகத்
தாமதகுணம் இரண்டு சத்தியாய்ப் பிரிந்து தோன்றும்
வீமமாம் மூடல் என்றும் விவிதமாம் தோற்றம் என்றும். (28)

## தெளிவுரை:-

மேற்கூறிய மாயா சக்தியாகிய ஈஸ்வரன் அருளினாலே, பொலிவு மிகுந்த உயிர்களுக்கு எல்லாம் சூக்ஷூம தேகம் உண்டாகத் தேவையான மாயையின் மூன்றாவது குணமான தமோ குணம் இரண்டு சக்திகளாகப் பிரிந்து, அதில் ஒன்று '**ஆவரணம்**' (மறைப்பு) என்றும், மற்றொன்று '**விக்ஷேபம்**' (பலவாகத் தோன்றுவது) என்றும் ஆகின.

ஆவரணம் என்பது மறைக்கும்சக்தி எனவும், விக்ஷேபம் என்பது தோன்றும்சக்தி எனவும் அறியவும்.

அதாவது, சித்தின் நிழல்தங்கிய தமோ குணமானது, அறிவு விளங்காத (பிரகாசிக்காத) ஆவரணசக்தியாகவும், அறிவு விளங்குகின்றவிட்சேப சக்தியாகவும் தோன்றியது.

தோற்றமாம் சத்தி தன்னில் சொல்லிய விண்ணாம் விண்ணில்
காற்றதாம் காற்றில் தீயாம் கனலில் நீர் நீரில் மண்ணாம்
போற்று இவ்வைந்தும் நொய்ய பூதங்கள் என்று பேராம்
சாற்றும் மற்றிவற்றில் போக சாதன தனுவுண்டாகும். (29)

## **<u>தெளிவுரை:-</u>**

தோன்றிய விக்ஷேப சக்தியிலிருந்து சப்த அம்சமான ஆகாசம் தோன்றியது. பிறகு இந்த ஆகாசத்திலிருந்து பரிச அம்சமான காற்றும், காற்றில் இருந்து ரூப அம்சமான அக்னியும், அக்னியிலிருந்து இரச அம்சமான நீரும், நீரிலிருந்து வாசனை அம்சமான மண் தோன்றியது.

இவ்வாறு, போற்றப்பட்ட இந்த ஐந்தும், “**சூக்ஷ்ம பஞ்சபூதங்கள்**” என்று பெயர். இந்த அபஞ்சீகிரத சூக்ஷ்ம பஞ்ச பூதங்களின், தன்மாத்திரைகளில் இருந்து சகல ஜீவர்களுக்கும் சூக்ஷ்ம சரீரங்கள் (கண்ணிற்குத் தெரியாத உடல்கள்) உண்டாயின.

ஆதி முக்குண இப்பூதம் அடங்கலும் தொடர்ந்து நிற்கும்
கோதில் வெண் குணத்தில் ஐந்துகூறு உணர் கருவியாகும்
ஓதிய பின்னை ஐந்தும் உளம் புத்தி இரண்டாம் ஞான
சாதனமாம் இவ்வேழும் சற்குணப் பிரிவினாலே. (30)

## தெளிவுரை:-

முன்பு உண்டான சத்துவகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்ற மூன்று குணங்களில் பஞ்ச பூதங்கள் அடங்கலும் தொடர்ந்து நிற்கும். இந்தச் சூக்ஷ்ம பஞ்சபூதங்களின் சத்துவ அம்சத்திலே, பூதத்துக்கு ஒவ்வொரு மாத்திரையாக எடுத்து தனித்தனியே வைத்தது முறையே, **காது, தோல், கண்கள், நாக்கு, மூக்கு** என ஐந்து "**ஞானேந்திரியங்கள்**" என்ற கருவிகள் ஆயின.

அடுத்து, அந்த பஞ்ச பூதங்களின் சத்துவ அம்சத்திலே பூதத்துக்கு ஒவ்வொரு மாத்திரையாக எடுத்து, அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் மற்றும் உள்ளம் என்ற "**அந்தக் கரணங்கள்**" ஆயிற்று.

ஐந்து அந்தக்கரணங்களில் உள்ளம், சித்தம், அகங்காரம் ஆகிய மூன்று தத்துவங்களையும் மனதில் அடக்கி, மனம் மற்றும் புத்தி என அந்தக்கரணத்தை இரண்டு தத்துவங்களாகக் கொண்டு ஞானேந்திரியங்கள் ஐந்தும், சத்துவகுண அம்சமான அந்தக்கரணங்கள் இரண்டும் ஆக **ஏழு தத்துவங்கள்** உண்டாயின.

இராசத குணத்தில் வேறிட்டெடுத்த கூறு ஐந்து மைந்தும்
பிராண வாயுக்கள் என்றும் பெருந்தொழில் கருவி என்றும்
பராவிய பெயராம் இந்தப் பதினேழும்இலிங்க தேகம்
சுராசுரர் நரர் விலங்காய்த் தோன்றிய உயிர்கட்கெல்லாம். (31)

## தெளிவுரை:-

பஞ்சபூதங்களின் ராஜஸ அம்சத்திலே பூதத்துக்கு ஒவ்வொரு மாத்திரையாக எடுத்துத் தனித்தனியே வைத்தது, முறையே **வாய்** (பேசும் சக்தி), **கை** (கொடுக்கல், வாங்கல் சக்தி), **கால்** (நடக்கும் சக்தி), **எருவாய்** (மலம் கழிக்கும் சக்தி), **கருவாய்** (இன்பம் கொடுக்கும் சக்தி) என ஐந்து செயல்களைச் செய்யக்கூடிய "**கர்மேந்திரியங்கள்**" ஆயின.

அடுத்ததாக, பஞ்ச பூதங்களின் ராஜஸ அம்சத்திலே பூதத்திற்கு தலா ஒவ்வொரு மாத்திரை எடுத்து ஒன்றாகச் சேர்த்து பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என "**ஐந்து வாயுக்கள்**" ஆயின.

அதாவது, ரஜோகுணத்தில் சமஸ்டி பாகத்தில் (அனைத்தும் ஒன்றாக) உண்டானவைகள் பிராணன்கள் என்றும், ரஜோகுணத்தில் வியஸ்டி பாகத்தில் (தனித்தனியாக) உண்டானவைகள் **கர்மேந்தியங்கள்** என்றும் ஆயின.

முதலில் கூறிய ஏழும், இப்பொழுது கூறப்பட்ட ஐந்து கர்மேந்திரியங்கள் மற்றும் ஐந்து வாயுக்களும் ஆக

பதினேழும் சேர்ந்து அனைத்து ஜீவராசிகளுக்கும் "**லிங்க சரீரம்**" எனப்படுகின்றது. லிங்க சரீரம் என்றால், '**சூக்ஷ்ம சரீரம்**' என்று பொருள்.

இதிலேயே அந்தக்கரணம் ஐந்தையும் சேர்த்து மொத்தம் இருபது தத்துவங்களையும் சிலர் சூக்ஷ்ம சரீர தத்துவமாகக் கொள்வர்.

இவ்வுடல் மருவும் சீவன் இலங்கு தைசதன் என்றாவன்
இவ்வுடல் மருவும் ஈசன் இரணியகர்ப்பனாவன்
இவ்வுடல் இரண்டு பேர்க்கும் இலிங்க சூக்கும சரீரம்
இவ்வுடல் கோசம் மூன்றாம் இது கனா அவத்தையாமே. (32)

## <u>தெளிவுரை:-</u>

தனியாக ஒரு சூக்ஷ்ம சரீரத்தை எனது என்று அபிமானிக்கின்ற ஜீவனுக்கு "**தைஜஸன்**" என்று பெயர்.

அனைத்து சூக்ஷ்ம சரீரங்களையும் எனது என்று அபிமானிக்கின்ற ஈஸ்வரனுக்கு "**ஹிரண்யகர்பன்**" என்று பெயர். இதுவே இவர்கள் இருவருக்கும் **சூக்ஷ்ம சரீரம்** ஆகும்.

இந்த சூக்ஷும சரிரத்திற்கு பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம் என கோசங்கள் மூன்று உள்ளது.

பிராண வாயுவும், கர்மேந்திரியங்களும் சேர்ந்து "**பிராணமயகோசம்**" என்றும், மனமும், ஞானேந்திரியங்களும் சேர்ந்து "**மனோமயகோசம்**" என்றும், புத்தியும் ஞானேந்திரி யங்களும் சேர்ந்து "**விஞ்ஞானமய கோசம்**" என்றும் அழைக்கப்படும்

பிறகு **விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம்** என்ற மூன்று அவஸ்தைகளில் சூக்ஷும சரீரத்திற்கு இதுவே "**கனவு நிலை**" ஆகும்.

சூக்கும சடம் இம்மட்டும் சொல்லினோம் இப்பால் தூலம்
ஆக்கு மாரோபந்தானு மடைவினின் மொழியக் கேளாய்
தாக்கு மிவ்வுயிர்க்குத் தூல தநுவும் போகமு முண்டாகக்
காக்குமவ் வீசன் பஞ்சீகரணங்கள் செய்தான்றானே. (33)

## தெளிவுரை:-

சூக்ஷும சரீரம் (கண்ணிற்குத் தெரியாத உடல்) தோன்றிய கற்பனையை இதுவரை கூறப்பட்டது. இனி ஸ்தூல சரீரம் (கண்ணிற்குத் தெரிகின்ற உடல்) தோன்றும் கற்பனையை கூறுகின்றேன் கேட்பாயாக.

தாங்கள் செய்கின்ற கர்மத்திற்கு ஏற்றவாறு, அந்த கர்ம பலன்களை அனுபவித்து, தீர்க்க ஜீவர்களுக்குத் ஸ்தூல தேகமும் (பரு உடல்), போகமும் உண்டாகும் பொருட்டு மாயா சகித ஈஸ்வரன் பஞ்சீகரிக்கப்பட்ட ஸ்தூல பஞ்சபூதங்களைக் கற்பித்தான். இதையே "**பஞ்சீகரணம்**" என்று அழைக்கப்படுகின்றது.

ஐந்து பூதமும் பத்தாக்கி அவை பாதி நன்னான்கு ஆக்கி
நந்து தன்பாதி விட்டு நான்கொடு நான்கும் கூட்ட
வந்தன தூலபூதம் மகாபூதம் இவற்றினின்றும்
தந்தன நான்காம் தூல தனு அண்ட புவன போகம். (34)

## <u>தெளிவுரை:-</u>

சத்துவகுணம், ராஜஸகுணம் அம்சங்கள் போக மீதமுள்ள தாமஸகுண அம்சமான ஐந்து பூதங்களில் ஒவ்வொன்றையும் இரண்டாகப் பகுத்து, முற்பாதி ஐந்தில் ஒவ்வொரு பூதத்தையும் தனித்தனியாக எடுத்து வைத்துக் கொண்டு, இரண்டாம் பாதிஐந்தில் தனது அம்சத்துடன் சேர்க்காமல், மற்ற நான்கு பூதங்களுடன் அரைக்கால் அரைக்கால் மாத்திரையாகக் கொடுக்க பஞ்சீகரணமாகும்.

அதாவது, ஒவ்வொரு பூதத்திலும் மற்ற நான்கு பூதங்கள் சேர்ந்து, ஒவ்வொன்றும் ஐந்தைந்தாயிற்று என்பதாம்.

இப்படிப் பஞ்சீகரித்ததினால் ஸ்தூல ஆகாயமும், ஸ்தூல வாயுவும், ஸ்தூல அக்னியும், ஸ்தூல நீரும், ஸ்தூலப் பூமியும் உண்டாயின.

இப்படிப்பட்ட இந்த ஸ்தூல மகா பஞ்ச பூதங்களின் வாயிலாகவே அனைத்து ஜீவர்களின் ஸ்தூல சரீரங்களும், அண்ட சராசங்களும், பல புவனங்களும், அவற்றுள் ஒன்றாகிய இந்த பூமியும், இந்த பூமியில் போகங்களும் உண்டாயின.

(**புவனங்கள்:-** பூ, புவ, சுவ, சன, தபோ, மகா, சத்திய ஆகிய ஏழு மேல் உலகங்கள் மற்றும், அதல, விதல, சுதல, தராதல, இரசாதல, மகாதல, பாதால ஆகிய ஏழு கீழ் உலகங்கள் என்பனவாகும்.)

தூலமே மருவும் சீவன் சொல்லிய விசுவனாகும்
தூலமே மருவும் ஈசன் சொலும் விராட் புருடனாகும்
தூலமே அன்னகோசம் துன்னும் சாக்கிர அவத்தை
தூல கற்பனை ஈதென்று தொகுத்தது மனதிற்கொள்வாய். (35)

## <u>தெளிவுரை:-</u>

இந்த தூல தேகத்தை "**நான்**" என்று அபிமானிக்கும் ஜீவனுக்கு "**விஸ்வன்**" என்றும், ஈஸ்வரனுக்கு "**விராட்புருஷன்**" என்றும் கூறப்படும்.

இந்த ஸ்தூல தேகமே இவ்விருவருக்கும் ஜாக்ரதா அவஸ்தையும், அன்னமய கோசமும் ஆகும்.

(உண்ணும் உணவு, மற்றும் நீர் ஆகாரங்களால் தோலும், இரத்தமும், சதையும், நரம்பும், எலும்பும், கொழுப்புமாக விருத்தி அடைந்து இருக்கின்ற இந்த ஆறு தத்துவங்களாகிய ஸ்தூல தேகமே "**அன்னமய கோசம்**" எனப்படுகின்றது)

இவ்வாறு ஸ்தூல சரீரம் கற்பிதம் இதுவரைக் கூறப்பட்டது.

சீரிய ஈசனார்க்கும் சீவர்க்கும் உபாதி ஒன்றேல்
ஆரிய குருவே பேதம் அறிவதெப்படி என்றக்கால்
காரிய உபாதி சீவன் காரண உபாதி ஈசன்
வீரியமிகு சமட்டி வியட்டியால் பேதமாமே. (36)

## <u>தெளிவுரை:-</u>

குருதேவா, ஜீவர்களுக்கும், ஈஸ்வரனுக்கும் சரீர உபாதி ஒன்றானால், இனி ஜீவனுக்கு எப்படி மூன்று சரீரங்கள், மூன்று அவஸ்தைகள், மூன்று அபிமானங்கள் போன்ற உபாதி உண்டானதோ, அவ்வாறே ஈஸ்வரனுக்கும் மூன்று சரீரங்கள், மூன்று அவஸ்தைகள், மூன்று அபிமானங்கள் என உபாதி இருக்க, ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் உள்ள பேதம் என்ன?

என்றால், **ஜீவன்** காரிய உபாதி, **ஈஸ்வரன்** காரண உபாதி ஆகும்.

ஜீவன் தன் தேகத்தில் மாத்திரம் கலந்து நிற்கிற "**வியஷ்டி சரீரம்**" உடையவன். அதாவது, தனித்த சரீரத்தை உடையவன்.

ஈஸ்வரன் எல்லா ஸ்தூல தேகங்களையும் சேர்த்து, சமஸ்டி என்ற ஒன்றேயான தன்னுடைய ஸ்தூல தேகமாகவும், எல்லா சூக்ஷும தேகங்களையும் சேர்த்து, ஒன்றேயான தன்னுடைய சூக்ஷும தேகமாகவும், எல்லாக் காரண தேகங்களையும் சேர்த்து, தன்னுடைய ஒரே காரண தேகமாகவும் கொண்டு, அனைத்து பிரபஞ்சங்களிலும் கலந்து நிற்கின்ற **"சமஸ்டி சரீரம்"** (ஒன்றேயான உடல்) உடையவன்.

ஜீவன் சிற்றறிவுள்ள கிஞ்சிக்ஞன். ஈசன் பேரறிவுள்ள சர்வக்ஞன். இன்னும் இவை போன்ற பல விசயங்களில் ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் பெருத்த பேதம் உண்டென்று அறிக.

மரங்கள் போல் வியட்டி பேதம் வனம் எனல் சமட்டி பேதம்
சரங்கள் தாவரங்கள் பேதத் தனியுடல் வியட்டி என்பார்
பரம்பிய எல்லாம் கூட்டிப் பார்ப்பதே சமட்டி என்பார்
இரங்கிய பல சீவர்க்கும் ஈசர்க்கும் பேதம் ஈதே (37)

## <u>தெளிவுரை:-</u>

தனியாக ஒரு மரம் மட்டும் இருப்பதாகக் கருதுவது வியட்டி (வியஷ்டி) எனவும். அனேக மரங்கள் நிறைந்த காடுகளை சமட்டி (சமஸ்டி)எனவும் பேதங்கள் கூறப்படுகின்றன.

இவ்வாறு பஞ்ச பூதங்களினால் உண்டான பரு உடல் ஒன்றை ஜீவர்களுக்கும், அனைத்து பரு உடல் முதலான இந்த அண்ட சராசரம் ஈஸ்வரனின் ஒரு உடல் என்றும் பேதங்கள் கூறப்படுகின்றன.

கற்பனை வந்தவாறு காட்டினோம் காண்பவெல்லாம்
சொற்பனம் போலும் என்றே துணிந்தவன் ஞானியாவன்
செல்புதை மழைக்காலம் போய்த் தெளிந்த ஆகாசம் போல
அற்புத முத்தி சேரும் அபவாத வழியும் கேளாய். (38)

## <u>தெளிவுரை:-</u>

இதுவரை கூறிவந்த இந்த கற்பிதக் கற்பனைக் காட்சிகள் எல்லாம் ஒருவனது கனவில் காணும் காட்சிகள் போன்று பொய்யென்று சிந்தித்துத் தெளிந்தவன் எவனோ அவனே ஞானியாவான்.

மழைக்காலத்தில் தெளிந்த ஆகாயத்தை மறைத்துக் கொண்டிருந்த கரு மேகங்கள் நீங்கியவுடன் அந்த தெளிந்த ஆகாயம் எவ்வாறு தெள்ளத் தெளிவாக காட்சிபடுகின்றதோ, அதைப்போன்று **ஜீவ - ஈஸ்வர** பேதத்தைக் கொண்டிருந்த கற்பனை ஒழிந்து தெளிவைக் கொடுக்கும் முக்தியடையக் கூடிய ஆத்ம ஞான வழியைக் கூறுகின்றேன் கேட்பாயாக.

இதனை ஒரு உதாரணத்தின் வாயிலாக காணலாம்.

ஒரு நதிக்கரை ஓரத்தில் மங்கலான நீரில் வெள்ளி நாணயங்கள் சிதறிக்கிடப்பதாக நினைத்து, அதன் அருகே சென்று அதனை கையில் எடுத்துப் பார்த்தால், அது வெள்ளி நாணயம் போன்று ஒளிரும் தன்மை பெற்றுள்ள முத்துச் சிப்பிக்கள் என்று தெரியவருகின்றது.

இவ்வாறு, முத்துச்சிப்பியின்மீது வெள்ளி ஏற்றி வைக்கப்பட்டு (அத்யாஸம்) பார்க்கப்படுகின்றது. இதனையே உள்ள வஸ்துவில் இல்லாத ஒன்றை ஏற்றிப்பார்த்தல் என்கின்றோம்.

இதனையே வேதாந்தத்தில் பிரம்மத்தின் மீது இந்த உலகத்தை உண்மை என்று ஏற்றிப் பார்க்கிறோம். இதனை "**அத்யாரோபம்**" என்று குறிப்பிடுகின்றார்.

(இதுவரை ஒன்றின் மீது மற்றொன்றை பொய்யாக ஏற்றிப்பார்க்கின்ற "**அத்தியாரோப யுக்தி**" முடிந்தது. இனி **அபவாத யுக்தி** என்ன என்பதை அறியலாம்.)

அரவு அன்று கயிறு என்றாற்போல் ஆள் அன்று தறி என்றாற்போல்
குரவன் தன்உபதேசத்தால் கூறுநூல் ஒளியைக்கொண்டு
புரம் அன்று புவனம் அன்று பூதங்கள் அன்று ஞானத்
திரம் என்னும் பிரமம் என்று தெளிவதே அபவாதம் காண். (39)

## <u>தெளிவுரை:-</u>

கயிற்றினை பாம்பாகவும், கட்டையை கள்வனாகவும் கண்டு மயங்கிய ஒருவனது மயக்கத்தைத் தெளிவிக்கும் பொருட்டு, மற்றொருவன் அது பாம்பல்ல கயிறு என்றும், அவன் கள்வனல்ல கட்டையென்றும், உண்மையை உணர்த்தி, அவன் மயக்கத்தை தெளிவித்தல்.

இத்துடன், பரிபூரண ஞான சொரூபியாக விளங்கும் பிரம்மத்தினிடத்தில் (கயிற்றில் பாம்புபோல்) ஏற்றி வைக்கப்பட்ட (ஆரோபித்த) இந்த ஸ்தூல தேகத்தை "**நான்**" என்றும், இந்த ஸ்தூல பிரபஞ்சங்களை உண்மை என்றும் கருதி, மனம் மயங்கி இருக்கின்றவனுக்கு ஞானாசிரியரின் உபதேசத்தினாலும், ஞானநூல்களை கற்று விளங்கிக் கொள்வதினாலும், அவனது மன இருள் அகன்று, ஞான வெளிச்சம் உண்டாகி, "**நான்**" எனப்படுவது, தேகாதி பிரபஞ்சங்கள் அல்ல, அவற்றிற்கு ஆதாரமான பஞ்ச பூதங்களும் அல்ல, மேலும், ஞான சொரூபியான "**பிரம்மமேநான்**" என சந்தேகம் இல்லாமல் தெளிந்து, அறிந்துக் கொள்வதே "**அபவாதம்**" எனப்படும்.

படமும் நூலும்போல் செய்த பணியும் பொன்னும்போல் பார்க்கில்
கடமும் மண்ணும்போல் ஒன்றாம் காரிய காரணங்கள்
உடல் முதல் சுபாவம் ஈறாய் ஒன்றில் ஒன்று உதித்தவாறே
அடைவினில் ஒடுக்கிக் காண்பது அபவாத உபாயமாமே. (40)

## <u>தெளிவுரை:-</u>

மண்குடம், பொன்நகை, நூலாடை என்பவைகளில் பானையும், நகையும், ஆடையும் முறையே மண், பொன், நூல் போன்ற காரணங்களில் இருந்து உண்டான காரியங்கள் ஆகும்.

காரணமான மண், பொன், நூல் போன்றவைகளில் இருந்து உண்டாகின்ற காரியங்களுக்கு எப்படி புதியதாக பெயரும், உருவமும் கற்பிக்கப்படுகின்றதோ? அதுப் போலவே காரணமான ஈஸ்வரனிடமிருந்து தோன்றிய காரியமான இந்த பிரபஞ்சத்திற்கும் புதிய பெயரையும், உருவத்தையும் கற்பித்துக் கொள்ளப்படுகின்றது.

காரணத்தையன்றி காரியத்துக்கு கற்பித நாம ரூபங்களே தவிர பொருளில்லை. ஆதலால், காரண காரியங்கள் இரண்டும் ஒன்றேயாகும்.

காரியத்தைக் காரணத்தில் அடக்கி குடத்தை மண் என்றும், நகையை பொன் என்றும், ஆடையை நூல் என்றும் பார்ப்பதுப்போல, கற்பிதமான காரண காரியங்களாய் தேகாதிப் பிரபஞ்சம் முதல் பிரம்ம சக்தியான மூலப்பிரகிருதி வரை, இரண்டாக தோன்றுமாறு ஒன்றில் ஒன்று உதித்து வெளிப்பட்ட, அதே முறைப்படியே அவைகளை மீண்டும் பழையபடி திருப்பி, அவற்றின் காரணங்களில் ஒடுக்கிக் கொண்டு போனால், கடைசியாக மிஞ்சுவது, சத்தாகிய **பரப்பிரம்ம சைதன்யமே** ஆகும்.

அதுவே, மெய்ப் பொருளானமூலக்காரணமென்றும், பிரம்மத்தையன்றி "**நான்**" என்ற தனியாக ஒன்றுமே இல்லை என்றும், அதுவே நானாயிருக்கிறேன் என்றும் சந்தேகம் இல்லாமல் தெளிவதே "**அபவாதம்**" என்றும் கூறப்படும்.

தூடண தமத்தில் வந்த தோற்றமாஞ் சத்தி செய்யும்
ஏடணை விகாரஞ் சொன்னீ ரிரண்டு சத்திகளென்றீரே
மூடலாஞ் சத்தி செய்யு மோகமுஞ் சொல்லுமையா
கேடறக் குருவே யென்னக் கிருபையோடருள் செய்வாரே. (41)

## தெளிவுரை:-

தூற்றத்தக்க சோம்பல் குணமான தமத்தில் தோன்றிய மூல பிரக்கிருதியில் வந்த பலவாறகத் தோன்றுகின்ற சத்தியான விட்சேப சக்தியின் வாயிலாக, இச்சா ரூபமான பிரபஞ்ச விகாரம் கூறப்பட்டது. இதில் இரண்டு சத்திகள் என்றீரே, அவற்றில் மறைக்கும் சத்தியான ஆவரண சக்தி செய்யும் மயக்கத்தையும் கூறுங்கள் ஐயா, என்று சிஷ்யன் கருணையுடன் குருவை வேண்ட, அவரும் கிருபையோடு அருள் செய்வாரே.

தானிகர் தனக்கா மீசன்றனையுந் தங்களைத் தாங்கண்ட
ஞானி கடமையு மன்றி நாஸ்தி நபாதி யென்னும்
ஊனிடையுயிர் களுக்குள்ளத் துணர்விழி குருடாம் வண்ணம்
வானிலந் திசைகண் மூடு மழை நிசியிருள் போன் மூடும். (42)

## தெளிவுரை:-

சுத்த சத்துவ குணங்களின் அம்சத்தால் தனக்கு நிகர் தானே என்ற ஈஸ்வரனையும், உண்மையான தங்களை அந்த பிரம்மமாகவே கண்ட ஞானிகளையும் தவிர, இறைவன் என்ற ஒன்று இல்லை என்று கூறுகின்ற நாஸ்திகர்களையும், இந்த ஸ்தூல உடல் **நான்** என்று கருதுகின்ற ஜீவர்களுக்கும், அந்தக்கரணமான உள்ளத்து உணர்விழியான ஞானவிழி குருடாகும்படி, ஆகாயம், பூமி என அனைத்து திசைகளிலும் மூடும் மழைக்கால இருள்போல் மூடும். இதுவே, ஆவரண சக்தியான மறைக்கும் சக்தியாகும்.

அதாவது, ஆவரண சக்தியான மறைக்கும் சக்தி ஈஸ்வரனையும், தத்துவ ஞானிகளையும் தவிர, மற்ற அனைத்து சீவர்களின் ஞான திருஷ்டியையும் மறைக்கும் என்பது இதன் பொருள்.

பூன்றமாம் பிரமத்துக்கும் புறத்துள விகாரங்கட்கும்
ஆன்ற கூடஸ்தனுக்கு மகத்துள விகாரங்கட்கும்
தோன்றிய பேதஞ்சற்றுந் தோன்றாமல் மறைத்து மூடும்
ஊன்றிய பவ வியாதியுண்டாகு முபாதியீதே. (43)

## **தெளிவுரை:-**

பரிபூரணமான நித்திய பிரமத்துக்கும், வெளியில் உள்ள அநித்தியங்களான விகாரங்களுக்கும், 35 தத்துவங்களுக்கும், எல்லாப் பிராணிகளின் புத்திகளிலும் உறைகின்ற கூடஸ்தனுக்கும் மனதின் உள்ளே தேகமே நான் என்ற அகங்காரத்தின் ஜடத் தன்மையும், 28 தத்துவங் களுக்குமாகிய, இவைகளின் ஒன்றுக்கொன்று உள்ள பேதம் தெரியக்கூடிய அறிவை மறைக்கும்படி செய்து, ஜீவர்களுக்கு பிறவித்துன்பத்தைக் கொடுக்கும் பெரிய நோய் இந்த ஆவரண சக்தியாகும்.

ஆதாரம் மறைந்து போனால் ஆரோப மெங்கே தோன்றும்
ஆதாரம் மறையாதாகில் ஆரோபமிலையே யென்றால்
ஆதாரஞ் சமம் விசேட மாமென விரண்டு கூறாம்
ஆதாரஞ் சமமா மெங்கும் ஆரோபம் விசேடமாமே. (44)

## தெளிவுரை:-

கயிறு இல்லையென்றால், பாம்பு தோன்ற வாய்ப்பில்லை. அதுப்போல, பிரம்மம் இல்லை என்றால், இந்த உலகம் தோன்றாதல்லவா?

கயிறும், பாம்பும் ஒரே சமயத்தில் தோன்றாது. கயிறு என்று தெரிந்துக் கொண்டவனுக்கு, பாம்பு பற்றிய பயம் இல்லை. அதுவே, பாம்பு என்று பயந்தவனுக்கு கயிறு அங்கே தெரிவதில்லை. அதுப்போல, எல்லாம் பிரம்மமாகத் தோன்றும்போது, இந்த பிரபஞ்சம் தெரிவதில்லை. இந்த உலகத்தை உண்மையென்று நம்பி காணும்போது, பிரம்மம் அங்கு தெரிவதில்லை. இதற்கு "**சாமான்யம்**" மற்றும் "**விஷேசம்**" என்று இரு பிரிவுகள் உள்ளன. அதில், இந்த இரண்டில் ஏதேனும் ஒன்று மட்டுமே விஷேசமாக விளங்கும்.

(அதாவது, ஆதாரம் மறைக்கப்படும்போதும், மறைக்கப்படாதபோதும் "**ஆரோபம்**" தோன்ற வாய்ப்பு இல்லையே என்ற சீடனின் சந்தேகத்திற்கு, ஆசிரியர் அந்த ஆதாரத்தை, ஆதாரம் மற்றும் அதிர்ஷ்டானம் என இரண்டாகப்பிரித்து ஆதாரம் **சாமன்யம்** எனவும், அதிஷ்ட்டானத்தை **விஷேசம்** எனவும் விளக்கினார்.)

சகமதி லிதுவென் சுட்டாஞ் சமானந்தான் மறைந்திடாது
மிகவிது கயிறா மென்னும் விசேடந்தான் மறைந்து போகும்
அகமெனுஞ் சமானந் தன்னை அஞ்ஞானம் மறைத்திடாது
பகர் விசேடமதாஞ் சீவன் பரமெனு மதனை மூடும். (45)

## தெளிவுரை:-

இந்த உலக வழக்கத்தில் **சாமான்யம், விஷேசம்**, கற்பித்துக்கொண்ட **கற்பனை** என இந்த மூன்று விதம் நடை முறையில் உள்ளது.

இது கயிறு என்று அறிவது **சாமன்யம்**, அதுவே அதைப்பார்த்து பாம்பு என்று பயப்படுவது கற்பிதமான **கற்பனை**. இதில் விசாரித்து உண்மையை அறிவது **விஷேசம்** எனப்படுகின்றது.

எப்பொழுது, இது பாம்பு அல்ல! கயிறு என்று உண்மை புலப்படுகின்றதோ? அப்பொழுது, சாமன்யமாகத் தெரிகின்ற கயிறு மறைந்திடாது. ஆனால், கற்பனையில் தோன்றிய பாம்பு மட்டுமே மறைந்து விடும்.

அது பாம்பல்ல கயிறு என்ற விஷேசத்தைத்தான் **ஆவரணசக்தி** மறைக்கின்றது.

அதுப்போல, இந்த உடலை நான் என்று நம்பிக் கொண்டிருக்கின்ற கற்பனை நீங்கும்போது, தன்னை இந்த

உடலாக நினைத்துக் கொண்டிருக்கின்ற சாமான்யம் மறைந்திடாது. இந்த ஜீவன்தான் ஈஸ்வரன் என்று அறிந்துக் கொள்ளக்கூடிய விஷேசத்தைத்தான் ஆவரண சக்தியானது மறைக்கின்றது.

கேவல நிலை தோன்றாமற் கெடுத்தது பஞ்சகோசம்
சீவனுஞ் சகத்துமாகிச் செனித்த விட்சேப மன்றோ
ஆவரணந்தானே பாழ் அனர்த மென்றுரைத்த தேதோ
மேவருங் குருவே யென்று வினா விடின் மகனே கேளாய். (46)

## <u>தெளிவுரை:-</u>

தனித்த பிரம்ம நிலை தோன்றாமல், பலவாறாகத் தோன்றுகின்ற விக்ஷேப சக்தியின் காரியமான பஞ்ச பூதங்களும், அதன் காரியமான **ஸ்தூல, சூக்ஷும** சரீரங்களும், பஞ்ச கோசங்களும் மறைக்க, எவ்வாறு ஆவரண சக்தி மறைக்கும்?

இத்தனை விதமாக விக்ஷேப சக்தியானது பிரம்ம ஐக்கிய ஞானத்தை அறிய விடாமல் மறைக்கின்ற பொழுது, ஆவரணசக்திதான் பிறவித் துன்பத்திற்கு வியாதி போன்றது என்று தாங்கள் உரைத்ததின் காரணம் தெரியவில்லை, அதை விளக்கமாகக் கூறுவீரே.

தோற்றாமாஞ் சத்திதானுந் துன்பமாம் பவமானாலும்
ஆற்றலான் முத்தி சேர்வார்க் அநுகூலமாகும் காண் நீ
ஊற்றமாம் பகற்காலம்போ லுபகார நிசியினுண்டோ
மாற்றமென்றுரைப்பேன் மைந்தா மறைப்பது மிகப்பொல்லாதே. (47)

## தெளிவுரை:-

பலவாறாகத் தோன்றுகின்ற விக்ஷேப சக்தி துன்பமயமான பிறப்பிற்கு காரணமாக இருந்தாலும், அதுவே, முக்தியை விரும்பும் முமுக்ஷுக்களுக்கு சாஸ்திரங்களை காதுகளால் கேட்டும், மனதில் சிந்தித்தும் தெளிவு பெறக்கூடிய நன்மையையும் செய்வதைக் காண முடிகின்றது.

ஆகவே, கற்பதற்கு அனுகூலமான பகல் காலம் போல, விக்ஷேப சக்தியையும், எதையும் செய்ய முடியாத இரவுக் காலம் போன்று, ஆவரண சக்தியையும் கருத வேண்டும். ஆகவே, கடும் இருளைப் போன்ற மறைக்கும் சக்தியான ஆவரண சக்தி மிகவும் பொல்லாதது.

சுழுத்தியிற் பிரளயத்திற் றோற்றமாஞ் சகங்கண் மாண்டும்
அழுத்திய பவம் போய் முத்தியடைவரொரு வருண்டோ
முழுத்த விட்சேபமெல்லா முத்தியிற் கூட்டுகிற்கும்
கொழுத்த வாவரணமுத்தி கூடாமற் கெடுத்தகேடே. (48)

## <u>தெளிவுரை:-</u>

சுழுத்தி என்ற ஆழ்ந்த உறக்க நிலையை தினமும் நடக்கின்ற பிரளயம் (அழிவு) என்பார்கள். ஏனெனில், பிரளய காலத்தில் எப்படி அனைத்து உடல்களும், உலகங்களும் தத்தமது காரணத்தில் லயம் அடைந்து, ஒன்றுமே இல்லாத வெறுமையான சூன்யம் மட்டுமே இருக்குமோ? அதுப்போல, ஆழ்ந்த உறக்கத்தில் அந்தக் கரணம் இன்றி, ஒன்றுமில்லாத சூன்யத்தில் மனம் ஒடுங்கி இருக்கும். அதனால், ஒன்றுமில்லாமல் ஒடுங்கும் பிரளயம் கூட அறியாமை நிலைதானே தவிர, முக்தி நிலை என்று கூற முடியாது.

காரணம் ஆழ்ந்த உறக்க நிலையில் தூங்கும்போது, இந்த உடலும், உடலின் புறக்கரணங்களும், அந்தக் கரணங்களும் இன்றி, இந்த உடலும், உலகமும், உறவுகளும் தெரியாத ஆழ் உறக்கத்தில் மனம் இலயமாகி ஒன்றுமே இல்லாத **சூன்யம்** மட்டுமே இருக்கும்.

ஒன்றுமில்லாத சூன்யத்தை அறிவு சொரூபமான **ஆத்மா** என்று கூற முடியாது. அதனால், இந்த தூக்கமான தினசரிப்பிரளயம் கூட முக்தியைக் கொடுக்காது.

ஆகவே, பலவிதமான தோற்றத்திற்குக் காரணமான விக்ஷேப சக்தியில் உண்டான, புறக்கரணங்களையும், அந்தக்கரணங்களையும் பயன்படுத்தி சாஸ்திரங்களை கற்றும், கேட்டும் அறிந்து, சிந்தித்தும், அறிவில் தெளிந்து பரம சுகமான முக்தியை அடைய வேண்டும்.

ஆகவே, ஆழ்ந்த இருளாக இருக்கின்ற ஆவரண சக்தியானது அறிவை மறைத்து, முக்தியைக் கெடுத்து விடும். எனவே, முக்திக்கு சாதனமாக புறக்கரணமும், அந்தக்கரணமும் அவசியம் தேவை என்பதை இங்கு வலியுறுத்தப்படுகின்றது.

இதையே திருமூலரும் கீழ்க்கண்ட பாடலின் வாயிலாக தெளிவு படுத்துகின்றார்.

“உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே.” - திருமந்திரம்.

உடல் இருக்கின்றவரை அதன் போக்கில் அவைகள் இருந்து விட்டுப் போகட்டும், அதனை தேவையற்றதாக கருதாமல், அந்த உடம்மை வழி நடத்துகின்ற உத்தமனாகிய அறிவு சொரூபமான அந்தர்யாமியைக் கண்டுக் கொள்ள அந்த

உடம்பினை உபயோகித்துக் கொள்! என்று இங்கு திருமூலரும் திருமந்திரத்தில் அறிவுறுத்துகின்றார்.

சுத்தியில் வெள்ளி போலத் தோன்றிய தோற்றமான
சத்தியும் பொய்யேயென்றாற் சத்தி சாதனமா வந்த
முத்தியும் பொய்யேமென்னின் மோக நித்திரை விலங்கால்
நித்திரை தெளியுமாபோள் நிருவாண நிலை மெய்யாமே. (49)

## தெளிவுரை:-

சிப்பியில் மீது ஏற்றி வைத்துப் பார்க்கின்றவெள்ளி எப்படி பார்ப்பதற்கு உண்மையான வெள்ளிப்போல இருந்தாலும், அந்த பொய்யான வெள்ளியினால், எந்த பயனும் இல்லாததுப்போல, பிரம்மத்தின்மீது ஏற்றி வைத்துப் பார்க்கின்ற விக்ஷேப சக்தியின் வாயிலாகத் தோன்றிய சாஸ்திரங்களும், குருவும், கேட்கின்ற விசயங்களும் பொய்யாகுமல்லவா?

ஒருவனது கனவில் அவன் அனுபவித்த பல துன்பங்களுக்கு இடையில், ஒரு மிருகம் அந்தக் கனவில் தோன்றியதும், பயத்தால் கனவு கலைந்து, விழிப்பு வந்ததும், அவனது அனைத்து துன்பங்களும் பொய் எனத் தெளிந்து நீங்கியது போன்று, விக்ஷேப சக்தியினால் தோன்றிய சாஸ்திரமும், குருவும் மாயையின் நிமித்தம் பொய்யாகவே இருந்தாலும், அதன் வாயிலாக அறிவு தோன்றியதும், அடைந்த ஞான நிர்வாண நிலை உண்மையே.

இம்பரி நஞ்சை நஞ்சால் இரும்பினை இரும்பா லெய்யும்
அம்பினை அம்பாற் பற்றும் அழுக்கினை அழுக்கால் மாய்ப்பர்
வம்பியல் மாயை தன்னை மாயையால் மாய்ப்பர் பின்னைத்
தம்பமா மதுவுங்கூடச் சவஞ்சுடுதடி போற்போமே. (50)

## தெளிவுரை:-

இந்த உலகத்தில் பாம்பு போன்ற விச ஜந்துக்கள் தீண்டிய விச நஞ்சை, அதே பாம்பின் விசத்தை மருந்தாகக் கொடுத்து நஞ்சை எடுப்பதுப்போலவும், இரும்பை அறுக்க, மற்றொரு இரும்பால் செய்யப்பட்ட அரத்தைப் பயன் படுத்துவது போன்றும், விட்ட அம்பை மற்றொரு அம்பு பற்றுவதுப் போலவும், துணியில் ஒட்டிக்கொண்ட அழுக்கை நீக்க, உவர்மண் என்ற மற்றொரு அழுக்கினால் நீக்குவது போன்று ஞானிகள் மாயையை வெல்வர்.

அது எவ்வாறு எனில், தன்னுடைய நழுவும் சுபாவமான மாயையை கண்டு மயங்காமல், ஞானிகள் பிணத்தை சுடுவதற்குப் பயன்படுத்துகின்ற தடியை இறுதியில் அந்த பிணத்துடன் சேர்த்து தீயில் இட்டு அழிப்பதைப் போன்று, இந்த **அஞ்ஞானம்** என்ற மாயா சக்தியை அழிப்பர்.

இந்த மாயையினாற் சீவர்க்கு ஏழு அவத்தைகள் உண்டாகும்
அந்த ஏழு அவத்தை தம்மை அடைவினில் மொழியக்கேளாய்
முந்த அஞ்ஞானம் மூடன் முளைத்தல் காணாத ஞானம்
சந்ததம் கண்ட ஞானந் தழல்கெடல் குளிர்மையாதல். (51)

## தெளிவுரை:-

இந்த மாயையினால் சீவர்க்கு ஏழு அவஸ்தைகள் உண்டாகின்றன. அந்த ஏழு அவத்தைகளையும் முறையாக ஒன்றின்பின் ஒன்றாக கூறப்படுவதைக் கேட்பாயாக.

### ஏழு அவஸ்தைகள்:–

அஞ்ஞானம் (அறியாமை).
ஆவரணம் (மறைப்பு).
விக்ஷேபம் (தோற்றம்).
பரோக்ஷம் (கேள்வி ஞானம்.)
அபரோக்ஷம் (அறிந்த ஞானம்).
துக்க நிவர்த்தி.
தடையற்ற ஆனந்தம்.போன்ற ஏழும் ஆகும்.

பிரம்மாந்தனை மறந்த பேதமையே அஞ்ஞானம்
பரனிலை காணோமென்று பகர்த லாவரண மூடல்
நரனொரு கருத்தாற் சீவன் நானென முளைத்தல் தோற்றம்
குரவன் வாக்கியத்தால் தன்னைக் குறிக்கொளல் பரோட்சஞானம். (52)

## தெளிவுரை:-

பிரம்ம சொரூபமான தன்னை ஜீவன் என்று எண்ணுவது அஞ்ஞானம் என்ற "**அறியாமை**" ஆகும். தான் பிரம்மம் என்ற அறிவு சொரூபனாக இருக்கின்றேன் என்பது விளங்காமல் இருப்பது, ஆவரணம் என்ற "**மறைத்தல்**" ஆகும்.

ஜீவன் தன்னை செயல் செய்பவனாகவும், செய்த செயல்களை அனுபவிப்பவனாகவும், எண்ணிக் கொள்வது விக்ஷேபம் என்ற "**தோற்றம்**" ஆகும்.

சத்குருவின் உபதேசத்தால், தான் அந்த பிரம்ம சொரூபமாகவே இருக்கின்றேன் என்று அறிந்துக் கொள்வது, பரோக்ஷம் என்ற "**கேள்வி ஞானம்**" ஆகும்.

இதுவரை **நான்கு** **அவஸ்தைகள்** இந்த பாடலில் விளக்கப்பட்டது.

தத்துவ விசாரஞ் செய்து சகல சந்தேகமும் போய்
அத்துவிதம் தானாதல் அபரோட்ச ஞானமாகும்
கர்த்தனாம் சீவபேதங் கழிவதே துக்கம் போதல்
முத்தனாய் எல்லாம் செய்து முடிந்தது ஆனந்தமாமே. (53)

## தெளிவுரை:-

தத்துவ விசாரம் செய்து, சகல சந்தேகங்களும் போய், அத்வைதம் என்ற இரண்டற்ற பிரம்ம சொரூபம் ஒன்றே, தான் என்பதை அறிவதே **அபரோட்சம்** என்ற "**அறிந்த ஞானம்**" ஆகும்.

தான் செய்கின்றேன் என்ற கர்த்ருத்துவ புத்தியும், தனக்கு வேறாக ஈஸ்வரன் ஒருவன் இருக்கின்றான் என்ற பேத புத்தியும் கொண்ட, அறியாமை நீங்குவதே "**துக்க நிவர்த்தி**" எனப்படும்.

அறியாமை நீங்கி நானே அனைத்துமாக இருக்கின்றேன் என்று, சகல பந்தங்களில் இருந்தும் விடுபட்ட நிலையே, "**தடையற்ற ஆனந்தம்**" ஆகும். இவைகளே இந்த ஏழு அவஸ்தைகள் எனப்படும்.

இது நினக்கறியும் வண்ண மிப்படியொரு திட்டாந்தம்
புதுமையாம் கதை கேள் பத்துப்புருடர் ஓர்ராற்றை நீந்தி
உதக தீரத்திலேறி யொருவனொன்பது பேரெண்ணி
அதனொடு தசமன் றானென்றறியாமல் மயங்கி நின்றான். (54)

**<u>தெளிவுரை:-</u>**

இந்த ஏழு அவஸ்தைகளையும் ஒரு புதுமையான கதையின் மூலமாக உனக்கு விளக்கமாகக் கூறுகின்றேன் கேள்.

பத்து நபர்கள் ஒரு ஆற்றைக் கடந்து நீந்தி மறு கரையை அடைந்தவுடன், அதில் ஒருவன் அனைவரும் ஆற்றைக் கடந்து வந்து விட்டோமா? என்று அறிய அவர்களை எண்ணிப் பார்த்தான். அவ்வாறு எண்ணியவன் தன்னை விட்டு விட்டு, மற்ற ஒன்பது நபர்களை மட்டும் எண்ணிவிட்டு ஒருவனைக் காணவில்லை என்று மயங்கி நின்றான்.

அறியாத மயலஞ்ஞான மவனில்லை காணோ மென்றல்
பிறியா வாவரணமாகும் பீழை கொண்டழல் விட்சேபம்
நெறியாளன் றசமணுடு நிற்கின்றா னென்ற சொல்லைக்
குறியாக வெண்ணி நெஞ்சிற் கொள்வது பரோட்ச ஞானம். (55)

## <u>தெளிவுரை:-</u>

பத்தாவது நபர், நான்தான் என்பதை அறியாமல், மயங்கி நிற்பது முதல் அவஸ்தையான “**அஞ்ஞானம்**” ஆகும்.

பத்தவதாக ஒருவன் இல்லை, அவன் ஆற்றோடு போய் விட்டான் என்று கருதுவது, அவனுடைய அறிவை மறைக்கும் இரண்டாவது அவஸ்தையான மறைத்தல் என்ற “**ஆவரணம்**” ஆகும்.

அந்த பத்தாவது நபர் ஆற்றோடு போய் விட்டான் என்று வருந்தி, அழுதுப் புலம்புவது போன்ற அறியாமை தோன்றுவது, மூன்றாவது அவஸ்தையான “**விக்ஷேபம்**” ஆகும்.

அடுத்து, அந்த வழியாக அந்த வழிப்போக்கன் இவர்களது நிலையை கண்டு, உங்களுக்கு என்ன பிரச்சனை? என்று விசாரித்து அறிந்துக் கொண்டு, அவர்கள் பத்து நபர்களும் உள்ளனர் என்று மற்றவர்களின் வாயிலாக நிச்சயித்துக் கொள்ளுதல் நான்காவது அவஸ்தையான கேள்வி ஞானம் என்ற, “**பரோக்ஷம்**” ஆகும்.

புண்ணிய பதிகன் பின்னும் புருட ரொன்பதின்மர் தம்மை
எண்ணு நீ தசமனாவை யென்னவே தன்னைக் காணல்
கண்ணினில் கண்ட ஞானங் கரைதல் போவது நோய்போதல்
திண்ணிய மனதில் ஐயந்தெளிதல் ஆனந்தமாமே. (56)

## <u>தெளிவுரை:-</u>

அந்த வழியாக வந்த வழிப்போக்கன் அவர்களில் ஒருவனிடம் அந்த ஒன்பது நபர்களையும் எண்ணுக என்றான். முடிவில் எண்ணியவனைப் பார்த்து, நீயே அந்த பத்தாவது நபர் என்று அவனுக்கு உணர்த்தினான்.

அவனும், தன்னை அந்த பத்தாவது நபர் நான்தான் என்பதை நிச்சயித்துக் கொண்டதினால், அவன் அறிந்த அறிவானது, ஐந்தாவது அவஸ்தையான "**அபரோக்ஷம்**" ஆகும்.

இவ்வாறு, அறிந்த அறிவினால் பத்தாவது நபர் ஆற்றோடு போய் விட்டான் என்ற துக்கம் அவர்களுக்கு நீங்கியது ஆறாவது அவஸ்தையான "**துக்க நிவர்த்தி**" ஆகும்.

துக்கம் நீங்கியவுடன் அவர்களுக்கு உண்டான ஆனந்தம் ஏழாவது அவஸ்தையான "**தடையற்ற ஆனந்தம்**" ஆகும். இவ்வாறு ஏழு அவஸ்தைகளை ஒரு கதையின் வாயிலாக இந்த நூலாசிரியர் விவரித்தார்.

தசபுமான் தனைக்கண்டாற் போல் சற்குரு மூர்த்தியே யென்
நிச வடிவினை யான் காண நீர்காட்டல் வேண்டுமென்றான்
சுசி பெறு இலட்சியார்த்தம் துவம்பதம் தற்பதம் கட்கு
அசிபத ஐக்கியம் செய்யும் அது செய்யு முண்மை கேளாய். (57)

## தெளிவுரை:-

சத்குருநாதா, பத்தாவது நபர் தன்னை அந்த பத்தாவது நபர் நான்தான் என்று அறிந்துக் கொண்டதுப் போல, என்னுடைய உண்மையான சொரூபத்தை நான் அறிந்துக் கொள்ள தாங்கள் எனக்கு அதைக் காட்டிக் கொடுக்க வேண்டும்.

“**துவம்**” பதம் “**தத்**” பதம் ஆகிய ‘**தத் துவம் அஸி**’ (சாம வேத மஹாவாக்கியமான **நீ அதுவாகவே இருக்கிறாய்**) என்ற இலட்சிய அர்த்தத்தை பிரம்மா முதல் எறும்பு வரை உள்ள, அனைத்து பிராணிகளின் புத்திகளிலும் ஏற்றத் தாழ்வுகள் ஏதுமின்றி, உறைகின்ற “**கூடஸ்தன்**” என்ற பிரம்மத்திற்கு, ‘**அசிபதம்**’ என்ற வாக்கியத்திற்கு, “**இருக்கிறாய்**” என்ற, ஐக்கிய சொரூபத்தை, விட்டுவிடாத இலட்சணையால் போதிக்கும் உண்மையைக் கேளாய்.

விண்ணொன்றை மகா விண்ணென்று மேக விண்ணென்றும் பாரில்
மண்ணொன்று கட விண்ணென்று மருவிய சல விண்ணென்றும்
எண்ணும் கற்பனை போலொன்றே எங்குமாம் பிரமமீசன்
நண்ணும் கூடஸ்தன் சீவன் நான்கு சைதன்யமாமே. (58)

## தெளிவுரை:-

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஒன்றேயான ஆகாசத்தை "**மகா ஆகாசம்**" என்றும், மேகத்தில் உள்ள நீரில் பிரதிபிம்பித்த ஆகாசத்தை "**மேக ஆகாசம்**" எனவும், ஒரு குடத்தில் தோன்றும் ஆகாசத்தை "**கட ஆகாசம்**" எனவும், அதே குடத்தில் நீர் நிறைந்தவுடன், அந்த நீரில் பிரதி பிம்பிக்கின்ற ஆகாசத்தை "**கடஜல ஆகாசம்**" எனவும், பலவாறாக கற்பனையாக எண்ணுகின்றோம்.

அதுப்போல, ஒன்றேயான எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரப்பிரம்மத்தை "**பிரம்மம்**" என்றும், அந்த பிரம்மம் ஐந்து தொழில்களை (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) செய்வதினால் "**ஈஸ்வரன்**" என்றும், எல்லாப் பிராணிகளின் புத்திகளிலும் உறைகின்ற தினால் "**கூடஸ்தன்**" என்றும், இந்த உடலை **நான்** என்று அபிமானிப்பதைனால் "**ஜீவன்**" என்றும், அந்த பரப்பிரம்ம சேதன சொரூபத்தை நான்காகக் கூறுவதும் கற்பனையே என அறிவாயாக.

பூச்சிய வீசன் சீவன் புகல்பத மிரண்டினுக்கும்
வாச்சியம் இலட்சியம்தான் மலமிலாப் பிரமம் ஆன்மா
காச்சிய பாலில் நெய்போல் கலந்தொன்றாம் கடைந்தெடுக்கும்
ஆச்சிய மென்ன உன்னையறிந்து நீ பிரித்துக் கொள்ளே. (59)

## தெளிவுரை:-

பூசிக்கத்தக்க ஈசன், பூசிக்கின்ற சீவன் ஆகிய இரண்டினுக்கும் மகா வாக்கியம் கூறும் "**தத்**", "**த்வம்**" என்ற இரண்டு பதத்திற்கும் வாச்சியம் என்ற முக்கிய அர்த்தமாகக்கூறி அதை "**வாட்சியார்த்தம்**" எனவும், இலட்சியம் என்ற இலக்கிய அர்த்தமாகக்கூறி, அதை "**இலட்சியார்த்தம்**" எனவும் கூறப்படுகின்றது.

இதில் "**தத்**" பதத்திற்கு சமஸ்டி உபாதியுடைய '**ஈஸ்வரன்**' என்பது, "**வாட்சியார்த்தம்**" எனவும், எங்கும் வியாபித்து இருக்கின்ற சேதனமான '**பிரம்மம்**' என்பது, "**இலட்சியார்த்தம்**" எனவும் கூறப்படுகின்றது.

அடுத்து, இரண்டாவது பதமான "**த்வம்**" பதத்திற்கு மூன்று சரீரத்தையும் '**நான்**', '**எனது**' என்று அபிமானிக்கின்ற ஜீவனும், சரீரமும் "**வாட்சியார்த்தம்**" என்றும், ஜீவசாட்சியான கூடஸ்தன் என்ற '**ஆத்மா**' "**இலட்சியார்த்தம்**" என்றும் கூறப்படுகின்றது.

காய்ச்சிய பாலில் நெய் கலந்து இருப்பதைக் கடைந்து எடுத்து, அந்த நெய்யைப் பிரித்து அறிவது போன்று, விசாரத்தின் வாயிலாக விவேகத்தை அடைந்து, '**வாட்சியார்த்தமான ஜீவன்**' என்பதிலிருந்து, '**இலட்சியார்த்தமான ஆத்மா**' என்று, உன்னை நீ அறிந்து பிரித்துக் கொள்வாயாக.

{பாலில் இருந்து நேரடியாகப்பிரித்து எடுக்க முடியாத நெய்யை அதிலிருந்து எடுக்க வேண்டுமானால், பாலைக் காய்ச்சி, தயிராக்கி, அந்த தயிரை மத்தால் கடைந்து, இலட்சியார்த்தமான வெண்ணையைக் கண்டவுடன், அதில் இருந்து வாட்சியார்த்த நெய்யைப் பிரித்து எடுப்பதுப் போன்று, கர்ம பந்தத்தினால் பிரித்து எடுக்க முடியாத ஜீவனை சாஸ்திரங்களை கேட்கும் (சிரவணம்) பழக்கமாக்கி, அதைப்பற்றி நித்தம் சிந்தனை (மனனம்) செய்து, அதை தினசரி நடைமுறையில் (நிதித்யாஸனம்) கொண்டு வந்து, விசாரம் செய்து, இலட்சியார்த்தமான ஆத்மாவைக் கண்டவுடன், அதிலிருந்து வாட்சியார்த்த ஜீவனைப் பிரித்து எடுக்க வேண்டும்.}

பிறிவதெப்படி யென்றக்காற் பிணமாகு முடனானென்னும்
அறிவினைக் கொல்லல் வேண்டு மைம்பூத விகாரமன்றோ
வெறியதோர் துருத்தி மூக்கில் விடுவது போலுன் மூக்கால்
எறிபிராணனு நீ யல்லை இராசதகுண விகாரம். (60)

## தெளிவுரை:-

பிரிப்பது எப்படியெனில், பிணமாகப்போகும் இந்த பரு உடலான ஸ்தூல உடலை "**நான்**" எனக்கருதி, அதன்மீது அபிமானம் கொண்டுள்ள மூடத்தனத்தை விவேகத்தினால் விசாரித்து அறிந்து, அந்த அறியாமையை நீக்கி, அது, ஐந்து பூதங்களின் விகாரத்தினால் உண்டான இந்த "**அன்னமய கோசம்**" என்ற உடல் ஜடம் என்பதை அறிந்துக் கொள்.

மூக்கினால் வெறுமையாக வந்து போகும் மூச்சையும் ஜடம் என்று கருதி, அந்த பிராணனும் நீ அல்ல. காரணம், இந்த "**பிராணமய கோசம்**" பஞ்சீகரணம் செய்யப்பட்ட ரஜோகுண விகாரம் என்பதையும் அறிவாயாக.

கரணமா மனது புத்தி கருத்தா வாமவை யான்மாவோ
தரமுள விரண்டு கோசம் சத்துவகுண விகாரம்
வரமறு துயில் ஆனந்தமயனையும் நானென்னாதே
விரவிய தம அஞ்ஞான விருத்தியின் விகாரமாமே. (61)

## <u>தெளிவுரை:-</u>

அந்தக்கரணமாகிய மனது எப்போதும், எதைப்பற்றி யாவது சிந்தனை செய்துக்கொண்டும், புத்தி சிந்தித்தவற்றை செயல் படுத்தக்கூடிய கர்த்தாவாகவும் இருப்பதினால், மனம் ஆன்மாவாகுமா?

அடுத்து, சங்கற்ப ரூபம் கொண்ட "**மனோமய கோசம்**" என்பதும், நிச்சய ரூபம் கொண்ட "**விஞ்ஞானமய கோசம்**" என்பதும், சத்துவகுண விகாரம் கொண்டதினால், இந்த இரண்டு கோசங்களும் ஆன்மாவாகிய நீ அல்ல!.

உயர்வில்லாத ஆழ் உறக்க நிலையில் உண்டாகும் "**ஆனந்தமய கோசம்**" என்பதையும், "**நான்**" என்று கருதாதே. இதுவும், தமோகுணம் பொருந்திய அஞ்ஞான விருத்தியின் விகாரமாமே ஆகும் என்கின்றார்.

(ஆக 5 கோசங்களையும் ஆன்மா அல்ல! எனக்கூறி நிராகரித்தார்.)

சத்தொடு சித்து ஆனந்தம் சமம் திரம் சாட்சி ஏகம்
நித்தியம் வியாபி ஆன்மா நீ அதுவாய் அறிந்து
பொத்தொடு சடம் துக்காதி பொருந்து பேதங்களான
குத்திர பஞ்சகோசக் குகைவிட்டு வெளியிலாவாய். (62)

## <u>தெளிவுரை:-</u>

**சத், சித், ஆனந்தம்** என்ற சச்சிதானந்தமாய் எல்லாவற்றிலும் சமமாக, பூரணமாக, மூன்று தேகங்களுக்கும் சாட்சியாக, நித்தியமாக, எங்கும் வியாபித்துள்ள ஒன்றேயான ஆன்மா மட்டுமே உள்ளது.

அதுவே நீ! என்று அறிந்துக்கொண்டு, அசத்தாகவும், ஜடமாகவும், துக்கங்களை உடையதுமான, பேதங்களான ஐந்துகோசங்களைக் கொண்ட இந்த உடலை, உண்மை என்று கருதும் மன மயக்கத்தை விட்டு வெளியே வருவாயாக என்றார் குரு.

பஞ்ச கோசமும் விட்டப்பாற் பார்க்கின்ற பொழுது பாழே
விஞ்சியத துவல்லாமல் வேறொன்றும் தெரியக் காணேன்
அஞ்சன இருளையோ நான் அகமென அநுபவிப்பேன்
வஞ்சமில் குருவேயென்ற மகன் மதிதெளியச் சொல்வார். (63)

## தெளிவுரை:-

இந்த பஞ்ச கோசங்களையும் விட்டு, அதற்கப்பால் பார்க்கின்றபொழுது, சூன்யம் என்ற **வெட்டவெளி** மட்டுமே மீதி இருந்தது. அதைத்தவிர வேறொன்றும் தெரியவில்லை. அதில் மைப்போல கருமையான இருளைக்கண்டு, "**நான்**" என அனுபவிப்பதா? இது எனக்குப் புரியவில்லை! மாயையைக் கடந்த மகத்தான குருவே! இந்த மகன் புத்தி தெளியும்படி, இன்னும் சற்று விளக்கமாகச் சொல்லுங்கள் என்றான் சிஷ்யன்.

முன்புகல் தசமன் புத்தி மோகத்தா எண்ணியெண்ணி
ஒன்பது பேரைக்கண்ட ஒருவனாம் தனைக்காணாத
பின்பு அவனிடையில் கண்ட பெரிய பாழவனோ பாராய்
அன்புள மகனே காண்பதடங்கலும் காண்பான் நீயே. (64)

## தெளிவுரை:-

முன்பு கூறிய பத்து நபர்களைப் பற்றிய விளக்கத்தில், அந்த பத்தாம் நபர், ஒன்பது நபர்களை மன மயக்கத்தால் எண்ணி, எண்ணிப் பார்த்துவிட்டு, ஒன்பது நபர்களை மட்டும்

கண்டு, ஒருவனைக் காணாத சூன்யமான நிலையில், அந்த பத்தாவது நபர் நான்தான் என்று அந்த சூன்யத்தைக் காட்டிக் கொடுத்தவர் வாயிலாக அறிந்துக் கொண்டதைப் போல, அன்பு மகனே, இந்த பிரபஞ்சத்தில் அனைத்து அறியப்படுகின்ற பொருளுக்கும், அறிவாக நீ மட்டுமே காண்பவனாக அடங்கி இருக்கின்றாய் என்றார் குரு.

தூல சூக்கும அஞ்ஞானம் தோன்றும் மூன்றவத்தை தாமும்
காலமோர் மூன்றும் சன்மக் கடலெழுங் கல்லோலங்கள்
போலவே வந்து வந்து போனதெத்தனை என்பேன் நான்
ஆலமர் கடவுள் ஆணை அவைக்கெலாம் சாட்சி நீயே. (65)

## தெளிவுரை:-

கண்ணிற்குத் தெரிகின்ற பரு உடலான ஸ்தூல உடலும், கண்ணிற்குத் தெரியாத மனம் என்ற சூக்ஷும உடலும் தோன்றக் காரணமாக, காரண உடலும் உள்ளது என்பதினால், இந்த மூன்று உடல்களும் அறியாமையினால் வெளிப்பட்டது.

அதுப்போலவே, விழிப்பு நிலை, கனவு நிலை, மற்றும் ஆழ்ந்த உறக்க நிலை என்று மூன்று அவஸ்தைகளும் உண்டாகின்றது.

மேலும், மூன்று காலங்களான இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்ற இவைகளும் சேர்ந்து இதுவரை

எத்தனைப் பிறவிகள் பிறந்தும், இறந்தும் வந்து, வந்து போய் உள்ளன என்பதை எப்படிக் கூறுவேன் நான்?

ஆலமரத்தின் அருகே அமர்ந்துள்ள அந்த தக்ஷிணாமூர்த்தி கடவுள் மீது ஆணை அவைகளுக்கெல்லாம் சாட்சியாக இருக்கின்ற ஆன்மா நீயே.

எல்லாம் கண்டறியு மென்னை ஏது கொண்டறிவே னென்று
சொல்லாதே சுயமாம் சோதிச் சுடருக்கு சுடர் வேறுண்டோ
பல்லார் முன் தசமன் தன்னைப் பார்ப்பதும் தனைக் கொண்டேதான்
அல்லாமற் பதினொன்றானு மவனிடத்துண்டோ பாராய். (66)

## <u>தெளிவுரை:-</u>

எல்லாவற்றையும் அறிகின்ற அறிவாகிய (பிரஞ்ஞை) என்னை அறிவதற்கு, மற்ற எதைக்கொண்டு அறிவது என்று கேட்காதே, ஏனெனில், சுயமாக பிரகாசிக்கின்ற ஒளியைப் பார்க்க, மற்ற ஏதாவது ஒன்றின் ஒளி தேவைப்படுகின்றதா என்ன?

ஒன்பது நபர்களைக் கண்ட பத்தாவது நபர், அந்த பத்தாவது நபர் நான்தான் என்று அறிவதற்கு, அவனுக்கு அந்நியமாக பதினொன்றாவது நபர் ஒருவர் தேவையா என்ன?

அதாவது, இந்த சடமான பிரபஞ்சம் அனைத்தையும் அறியக்கூடிய அறிவாக (சித்தாக) நானே இருக்கும் பொழுது, சித் ரூபமானதன்னை அறிய இனி ஒரு அந்நியமான அறிவு தேவையில்லை.

தன்னைத் தானே அறிய வேண்டும் என்பதே இதன் சாரம் ஆகும்.

அறிவுக்கு அறிவு செய்யும் அறிவு வேறுண்டென் றெண்ணும்
அறிவற்ற குதர்க்க மூடர்க்கு அனவஸ்தை பலமாய்த் தீரும்
அறிபடும் பொருள் நீ அல்லை அறிபடாப் பொருள் நீ அல்லை
அறிபொருளாகும் உன்னை அநுபவித்தறிவாய் நீயே. (67)

## தெளிவுரை:–

அனைத்தையும் அறியக்கூடிய அறிவை அறிவதற்கு அதற்கு வேறாக மற்றொரு அறிவு உண்டு என்று எண்ணுகின்றவர்கள் மூடர்கள். இப்படிப்பட்ட குதர்க்கமான மூடர்களுக்கு ‘**அனவஸ்தா தோஷம்**’ வந்து விடுகின்றது.

அனவஸ்தா தோஷம் என்பது, முட்டையிலிருந்து கோழி வந்ததா? கோழியிடமிருந்து முட்டை வந்ததா? என்பதுப்போல, எதிலிருந்து எது பிறந்தது? என்று குதர்க்கமாக கேட்டால், அது, வேறொன்றிலிருந்து பிறந்தது என்று

இப்படியே முடிவில்லாமல் போய்க்கொண்டிருக்கும். இதற்கு முடிவு என்றுமே கிடையாது.

ஆகையால், உன்னால் அறியப்படுகின்ற பொருள்கள் நீ இல்லை. அதுப்போலவே, உன்னால் அறியப்படாத பொருள்கள் இருப்பினும் அதுவும் நீ இல்லை.

இந்த அனைத்தையும் அறிகின்ற அறிவாகவே விளங்கும் உன்னை அனுபவித்து அறிவாய் நீயே.

அதாவது, சுத்த அறிவான அந்த **சித்** சொரூபமே உன்னுடைய நிஜசொரூபம் என்று இங்கு விளக்கப் படுகின்றது.

**"எல்லாம் அறியும் அறிவுதனை விட்டு**
**எல்லாம் அறிந்தும் இலாபமங்கில்லை**
**எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்**
**எல்லாம் அறிந்த இறை யெனலாமே."**- திருமந்திரம்.

மேற்கண்ட திருமந்திரம் பாடலும் அனைத்தையும் அறிகின்ற அறிவை விட்டு, மற்ற எல்லாம் அறிந்தும் ஒரு இலாபமும் அங்கு இல்லை. எல்லாம் அறிந்த அறிவே நானாக இருக்கின்றேன் என்று அறிவதே அறிவு (இறைவன்) என்கின்றார் திருமூலர்.

மதுரமாங் கட்டி சுட்ட மாப்பணி யார மெல்லாம்
மதுரமாக்கியவதற்கு மதுரந்தான் சுபாவ மன்றோ
அதுவிது வெனுஞ் சடங்க ளறிவாக அறிவைத் தந்தே
அதுவிது விரண்டுமாகா அகம் பொருளறிவாய் நீயே.(68)

## தெளிவுரை:-

இனிப்பான வெல்லத்தைக்கொண்டு, சுட்ட அரிசி மாவுப் பணியாரங்களுக்கு இனிப்புதான் அதன் சுபாவமாக இருக்கும். அதுப்போல, அது, இது என்று அறியப்படுகின்ற ஜட வஸ்துக்கள் அனைத்தையும் அறிவிக்கின்ற அறிவாகவே இருப்பது உன் சுபாவம். ஆகவே, அது, இது என்ற இரண்டும் அல்லாத சுத்த அறிவாகவே நீ இருக்கின்றாய் என்ற உட்பொருள் அறிவாய் நீயே.

இங்கு கூறப்படுகின்ற கருத்து என்னவெனில், இனிப்புத் தன்மையை சுபாவமாகக் கொண்ட வெல்லத்திற்கு, அதற்கு வேறாக, இனியொரு புற இனிப்பு அனுபவம் பயனற்றது.

அதுப்போல, சுத்த அறிவுத்தன்மையாக விளங்கும் ஆத்மாவிற்கு புறத்தில் உள்ள புலன்களினால் உண்டாகும் அனுப அறிவு பயனற்றது. ஆகவே, அனுபவ வடிவாகவே உள்ள ஆத்மாவை, அறியப்படுகின்ற பொருளாக்கி அனுபவிக்க முடியாது.

இந்த நீ த்வம் பதத்தின் இலட்சியப் பொருளா மென்றும்
பந்தமில் பிரமமே தத் பதம்தனின் இலட்சியார்த்தம்
அந்தமாம் சீவன் ஈசனவர்களே வாச்சியார்த்தம்
சந்ததம் பேதமாவார் தமக்கு அயிக்கியங் கூடாதே. (69)

## தெளிவுரை:-

ஞானமே சுபாவமாகவும், சொரூபமாகவும் உள்ள நீ '**த்வம்**' பதத்தின் இலட்சியார்த்தம் ஆகும் என்றும், பந்தமில்லாத பிரம்மமே '**தத்**' பதத்தின் இலட்சியார்த்தம் ஆகும்.

ஆத்ம ஞானத்தினால் தள்ளப்படுகின்ற ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் "**தத்**", "**த்வம்**" என்ற இரண்டு பதத்திற்கும் **வாட்சியார்த்தம்** ஆகும்.

இந்த ஜீவன், ஈஸ்வரன் என்ற இரண்டிற்கும் பேதம் இருப்பினும், அதை ஐக்கியம் செய்யப்படவில்லை. காரணம், பிரம்ம வித்தையினால் இந்த இருவரும் நாசமாகின்றனர் என்று கூறப்படுகின்றது. அதாவது, ஒன்றேயான பரப்பிரம்மத்தை தவிர, மற்றொன்றில்லை என்பது இதன் பொருள்.

பேதமானதுவும் கேளாய் பெயராலும் இடங்களாலும்
ஓதரும் உபாதியாலும் உடலாலும் உணர்வினாலும்
பாதலம் விசும்பு போலப் பலதூரம் அகன்று நிற்பர்
ஆதலால் இவர்க்கு எந்நாளும் அயிக்கிய மென்பது கூடாதே. (70)

## <u>தெளிவுரை:-</u>

ஜீவன், ஈஸ்வரன் என்ற வித்தியாசத்தை கூறுகின்றேன் கேட்பாயாக. ஜீவன், ஈஸ்வரன் என்று பெயராலும், பிண்டம், அண்டம் என்று இடங்களாலும், காரிய, காரண உபாதியாலும், வியஸ்டி, சமஸ்டி சரீரத்தினாலும், கிஞ்சிக்ஞன், சர்வக்ஞன் என்ற உணர்வினாலும், இவர்கள் இருவரும் எட்ட முடியாத பாதாள லோகத்திற்கும் விண்ணிற்குமாக பல மடங்கு தூரம் விலகி நிற்பார்கள். ஆதலால், இவர்கள் இருவருக்கும் உடலின் மூலம் ஐக்கியம் என்பது உண்டாகாது.

அதாவது, உடல், பிராணன், இந்திரியங்கள், இத்துடன் மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற அந்தக்கரணங்கள் ஆகிய ஏழும் சேர்ந்து ஜீவனுக்கு "**காரிய உபாதி**" எனப்படும்.

சர்வேஸ்வரத்வம், சர்வக்ஞத்வம், சர்வேந்திரியா மித்வம், சர்வ காரணத்வம், சர்வஸ்திதித்வம், சர்வ சம்ஹாரத்வம், சர்வ சிருஷ்டித்வம் ஆகிய ஏழும் ஈஸ்வரனுக்கு "**காரண உபாதி**" எனப்படும்.

(உபாதி என்பது இருக்கின்ற ஒன்றை இல்லாத ஒன்றின்மீது ஏற்றிவைத்தல் என்று பொருள். **உதாரணம்:-** ஸ்படிகத்தின் அருகே வைக்கப்பட்ட சிகப்பு நிற மலரின் நிறம், ஸ்படிகத்தில் ஏற்றிவைத்து ஸ்படிகம் சிகப்பு நிறமாகத் தோன்றுவது.)

இந்த உடல்களாகிய உபாதிகளின் அடிப்படையில் பார்த்தோம் என்றால், ஜீவ - ஈஸ்வர ஐக்கியம் உண்டாகாது.

வடநூல் வல்லவர்கள் சொல்லும் வாசகப்பொருள் சேராமல்
இடராகிற் பொருளாம் வண்ணமிலக்கணை உரையாற் கொள்வார்
திடமான வதுவு மூன்றாச் செப்புவார் விட்டதென்றும்
விடவிலா தென்றும் விட்டுவிடாதென்றும் பேராமே. (71)

## <u>தெளிவுரை:-</u>

வட நூல் வல்லுனர்கள் கூறுகின்ற ஜீவன், ஈஸ்வரன் என்ற வாக்கியத்தில் வாக்கிய அர்த்தம் பொருந்தாமல் விரோதமானால், அதன் உண்மைப் பொருள் அறியும் வண்ணம், இலக்கண விதிப்படி இலட்சணா வாக்கியத்தில் பொருள் கூறுகின்றேன்.

அது எப்படியெனில், **“விட்ட இலட்சணை”**, **“விடாத இலட்சணை”**, **“விட்டுவிடாத இலட்சணை”** என மூன்று பெயர்களாம்.

இதில் இலக்கணம் என்றாலும் இலட்சணம் என்றாலும் ஒன்றே. அதுப்போலவே, இலக்கியம் என்றாலும், இலட்சியம் என்றாலும் ஒன்றேயாகும்.

கங்கையில் கோஷமென்றுங் கறுப்புச் சேப்போடு தென்றும்
தங்கிய சோயம் தேவதத்தனென்றும் சொல்வார்கள்
இங்கு உதாரணங்களாக்கி இந்த மூன்றுரைகளாலே
துங்கநூல் விரோதமான சொல்லெல்லாம் பொருளாந்தானே. (72)

## <u>தெளிவுரை:-</u>

கங்கையில் கிராமம் உள்ளது என்றும், அங்கு கருப்பு தங்கியிருக்கின்றது, சிகப்பு ஓடுது என்றும், அவன் தேவதத்தன் என்றும் கூறப்படுகின்றது.

மேற்படி மூன்று வாக்கியங்களை இங்கு உதாரணமாகக் கொண்டு, பெருமை மிக்க சாஸ்திரத்திற்கு விரோதமான வாக்கியங்கள் எல்லாம் இந்த மூன்று இலட்சணைகளைக் கொண்டு ஆராய்ந்தால், அதன் பொருள் விளங்கும்.

அதாவது, மேற்கூறப்பட்ட இலக்கண விதியின் வாயிலாக, நாம் சாதாரணமாக ஒரு வார்த்தையை பேசும் பொழுது, அந்த வார்த்தையின் பொருளைக் கேட்டவுடன் அதன் நேரடியான பொருளைத்தான் முதலில் எடுத்துக் கொள்ள முயல்வோம்.

அந்த வார்த்தையினுடைய முழு அர்த்தத்தையே விட்டு விட்டு புதியதாக வேறு ஒரு பொருளை எடுத்துக் கொண்டால் அது **“விட்ட இலட்சணை”** எனப்படும்.

கங்கையில் கிராமம் உள்ளது என்ற வாக்கிய அர்த்தத்தில் பார்க்கும்போது, ஓடுகின்ற கங்கை நதியின்மீது கிராமம் இருக்க முடியாது. இதன் நேரடிப்பொருள் அதன் வாக்கியார்த்தமான கரை என்பதை விட்டு கூறப்பட்டுள்ளது. அதாவது, **கங்கைக் கரையில் கிராமம் உள்ளது** என்பது, இதன் உண்மைப் பொருள். இதையே **“விட்ட இலட்சணை”** என்கின்றோம்.

ஒரு வார்த்தையின் வாக்கிய அர்த்தத்தை விடாமல், வாக்கியார்த்தத்தை அவ்விதமே வைத்துக்கொண்டு, அந்த வாக்கியார்த்தத்துடன் இன்னும் சில வாக்கியங்களையும் சேர்த்துக் கொள்கின்றோம். இது **“விடாத இலட்சணை”** எனப்படும்.

"**கறுப்பு தங்கிய சேப்பு ஓடுது**" என்பதன் வாக்கிய அர்த்தம், கறுப்பு நிறம் தங்கி இருக்க, சிவப்பு நிறம் ஓடுகிறது என்ற வாக்கியத்தில் முழுமையான பொருள் இல்லை.

இதில், கறுப்பு சிவப்பு என்ற நிறங்களின் பதங்களுடன் அவற்றின் சம்பந்தமான கருப்பு நிற பசுவையும், சிவப்பு நிற பசுவையும் உணர்த்துவதாக பொருள் கொள்ள வேண்டும்.

அதாவது, கருப்பு நிற பசு நின்றுக் கொண்டிருக்க, சிவப்பு நிற பசு ஓடுகின்றது என்பது இதன் பொருள்.

அதாவது, வாக்கியார்த்தத்துடன் இனியொன்றை சேர்த்துக் கொள்வது "**விடாத இலட்சணை**" என்கின்றோம்.

அடுத்து, வாக்கியார்த்தத்தை விடாமல், வேறு ஒரு அர்த்தம் வாக்கியார்த்தத்துடன் சேர்த்துக் கொள்ளப் படுகின்றது அதை, "**விட்டு விடாத இலட்சணை**" என்கிறோம்.

(**சோயம்** = சஹ + அயம்.)

இதனை **அவன், இவன்** என்று பொருள் கொள்ளலாம்.

அவன், இவன் என்பதில் தேவதத்தன் என்பவனை முன்பு ஒரு முறை வேறு இடத்தில், வேறு காலத்தில் பார்த்த தேவதத்தனான அவனும், இப்போது இங்கு பார்க்கும் தேவதத்தனான இவனும் ஒன்றே என்பது பொருந்தாது.

{இருபது வருஷங்களுக்கு முன் அவர் சொந்த கிராமத்தில் பார்த்த தேவத்தனான அவனை இப்போது சென்னையில் பார்க்கிறோம். அவனேதான் இவன் என்கிறோம். உண்மையில் அவன்தானா? இல்லை. இவனுக்கு 20 வயது அதிகம் ஆகிவிட்டது. முன்புபோல, சுறுசுறுப்பாக அவன் இல்லை. ஆனால், அவன் இன்னும் புத்திசாலியாகி விட்டான். இருந்தாலும் **அவனே இவன்** என்பதை ஏற்கின்றோம்.}

இதில் பாதியை விட்டு விட்டு, பாதியை வைத்துக் கொள்கின்றோம். அது "**விட்டு விடாத லட்சணை**" எனப்படும். அதாவது, விட்டும் விடுகின்றோம், விடாமல் வைத்தும் கொள்கின்றோம்.

சரி! இப்பொழுது விஷயத்திற்கு வருவோம். தற்பொழுது, நம்மிடம் **ஜீவன், ஈஸ்வரன்** என்ற இரண்டு தத்துவங்கள் இருக்கின்றன.

இந்த இரண்டு தத்துவங்களின் வாக்கிய அர்த்தத்தை விட்டு விட்டு, இலட்சிய அர்த்தத்திற்கு போக வேண்டும்.

இதி,ல் இந்த மூன்று விதமான இலட்சிய அர்த்தத்தில் ஒவ்வொரு இலட்சணையாகக் காணலாம்.

எப்படியென்றால், ஒவ்வொரு ஜீவனையும் நாம் **ஆத்மா, அனாத்மா** என்று இரண்டாக பிரித்துள்ளோம். ஆத்மா என்றால் அறிகின்ற அறிவு ஸ்வரூபம்.

அனாத்மா என்றால், பஞ்ச கோஷங்கள் கொண்ட ஜீவனை இரண்டு கூறாக மனதிற்குள் பிரித்து வைத்துள்ளோம்.

அதுப்போல, ஈஸ்வரனையும் இரண்டாகப் பிரித்து வைத்துள்ளோம். **சத்தியம், ஞானம், அனந்தம்** என்ற பிரம்மமாகவும், பிறகு இந்த ஜகத்திற்கே காரணமாக இருக்கின்ற **மாயை** என்ற ஈஸ்வரனாகவும் இரண்டாகப் பிரித்து வைத்துள்ளோம்.

இங்கு ஜீவனையும், ஈஸ்வரனையும் இணைக்க வேண்டுமென்றால், இங்கு “**விட்ட இலட்சணை**” சரிவராது. காரணம், ஜீவனிடத்திலுள்ள அனைத்தையும் விட்டுவிட முடியாது. ஏனெனில், ஜீவனிடத்தில் என்றும் அழியாத நித்தியமான ஒரு சைதன்யம் இருக்கின்றது. அதனால், விட்ட இலட்சணை சரியாக இருக்காது.

பிறகு “**விடாத இலட்சணை**” - யை எடுத்துக் கொள்ளலாமா? என்றால், ஜீவனிடம் ஏற்கனவே சம்ஸாரத்தைக் கொடுக்கின்ற பஞ்ச கோஷங்கள் இருக்கின்றன.

அந்த பஞ்ச கோஷங்கள் இருக்கின்ற வரைக்கும் ஈஸ்வரனுடன் இணையமுடியாது. ஆகவே, ஜீவனிடம் இருக்கின்ற எல்லா தன்மைகளையும் விட்டு விட்டு, புதியதாக எதை ஒன்றையும் சேர்க்க முடியாது. எனவே, “**விடாத இலட்சணை**” **-** யும் சரியாக இருக்க முடியாது.

தற்பொழுது, “**விட்டும், விடாத இலட்சணை**”- யை மட்டும் எடுத்துக்கொண்டால் சரியாக வரும். எப்படியெனில், ஜீவனிடம் ஒரு பகுதியை வைத்துக்கொள்கின்றோம், ஒரு பகுதியை விட்டு விடுகின்றோம். இதில், ஆத்மாவாகிய சைதன்ய அம்ஸத்தை மட்டும் வைத்துக்கொண்டு, அனாத்மாவான பஞ்சகோஷங்களை விட்டுவிடுகின்றோம்.

இங்கு ஒன்றை விட்டு, ஒன்றை விடாமல் வைத்துக் கொள்வதால் “**விட்டும், விடாத இலட்சணை**” என்பது சரியாக இருக்கும்.

அதுப்போல, ஈஸ்வரனிடத்தில் **மாயை** - யை (ஜகத்தை) விட்டு விடுகின்றோம். அந்த சைதன்யத்தை மட்டும் வைத்துக்கொள்கின்றோம்.

இவ்வாறு, ஜீவனிடமும், ஈஸ்வரனிடமும் விட்டும் விடாத இலட்சணையைக் கையாண்டால்தான் ஜீவனிடம் உள்ள சைதன்யம் நமக்கு கிடைக்கும், ஈஸ்வரனிடத்திலும் உள்ள சைதன்யம் நமக்கு கிடைக்கும்.

ஆதலால், ஜீவனிடமும், ஈஸ்வரனிடமும் உபாதியானது நீக்கப்பட வேண்டி இருப்பதினால், இந்த “**விட்டும், விடாத இலட்சணை**” - யின் மூலமாகத்தான் ஜீவனிடமும், ஈஸ்வரனிடமும் நாம் அணுகவேண்டும்.

அந்த இருவருக்கும் இடையில் அத்வைதத்தை நிலையை நிலை நாட்ட வேண்டுமென்றால், பிளவுபடாத ஒன்றாக இருக்கின்ற சித்திக்காக நாம் இலக்ஷசணையினால் அணுகவேண்டும்.

அது "**விட்டஇலட்சணை**" யினால் முடியாது. அதுபோல, "**விடாதஇலட்சணை**" யினாலும் முடியாது. ஆனால், "**விட்டும், விடாத இலட்சணை**" யினால் மட்டும்தான் நாம் செய்ய முடியும்.

இப்பொழுது, **ஜீவன் - ஈஸ்வரன்** இரண்டும் ஐக்கியம் உண்டாகும் என்று நாம் கூற இயலும்.

பன்னிய சோய மென்னும் பதங்களின் வாச்சியார்த்தம்
அன்னிய தேசங்கால அவனிவன் என்பவெல்லாம்
சொன்ன இவ்விரோதம் விட்டுத் தொடர் இலக்கியம் விடாமல்
உன்னிடில் தேவதத்த னொருவனை வெளியாக் காட்டும். (73)

## தெளிவுரை:-

முன் கூறிய சோயம் என்பதில் **ஸஹ, அயம்** (அவன், இவன்) என்னும் பதங்களின் வாக்கியார்த்தம் தூர தேசம், சமீப தேசம், கடந்த காலம், நிகழ்காலம். இத்துடன், அன்று பார்த்த தேவதத்தனான அவனும், இன்று பார்க்கின்ற தேவதத்தனான

இவனும் என்பன எல்லாம் விரோதமான வாக்கியார்த்தத்தை விட்டு, அவற்றை அநுசரித்த இலட்சிய அர்த்தமான தேகம் என்பதை விடாமல், விசாரிக்கையில் தேவதத்தன் என்ற ஒருவனை தெளிவாகக் காட்டுகின்றது.

அதுப்போலவே, **ஜீவ - ஈஸ்வர** விசயத்திலும் இருவருக்கும் உள்ள காரிய, காரண பேதங்களைக் கொண்ட வாக்கிய அர்த்தங்களை விட்டு, விட்டு, இருவருக்கும் பொதுவாக உள்ள, சேதன அம்சத்தை இலட்சிய அர்த்தமாக வைத்துக் கொண்டு விசாரித்தோமானால் ஒன்றேயான அந்த பரப்பிரம்மத்தை தெளிவாகக் காட்டும்.

தத்துவ மெனும் பதங்கள் பிரமமாய்ச் சாட்சியான
வத்துவை விடாமற் பேத வாச்சியார்த்தத்தை விட்டு
நித்தமும் அது நீயாகும் நீ அதுவாகும் என்னும்
அர்த்தமும் அகண்டமென்றே அசி பத ஐக்கியங் காட்டும். (74)

## <u>தெளிவுரை:-</u>

“**தத்**”**,** “**துவம்**” எனும் சாம வேத மகா வாக்கியத்தில், **அது,** **நீ** என்ற இரண்டுக்கும் உள்ள பேதத்தை உண்டாக்குகின்ற வாக்கிய அர்த்தத்தை விட்டும், “**தத்**” பதம் பிரம்மத்தையும், “**த்வம்**” பதம் சாட்சியான கூடஸ்தனையும் இலட்சிய அர்த்தத்தில் விடாமலும், “**விட்டுவிடாத**

**இலட்சணையால்**" **பிரம்மமே நீ, நீயே பிரம்மம்** என்ற அகண்டமான சேதன தர்மத்தின்படி "**அசி**" பதம் வாயிலாக ஐக்கியத்தை உண்டாக்கும் என சாம வேத மகா வாக்கியம் தெரிவிக்கின்றது.

(“**தத் த்வம் அசி**” = “அதுவாகவே நீ இருக்கிறாய்”)

(கண்டம் என்றால் துண்டு. அகண்டம் என்றால் துண்டாகாதது.)

அதாவது, மாயை, மாயையில் பிரதிபலித்த ஆபாசம், மாயைக்கு அதிஷ்டான சேதனம் ஆகிய மூன்றும் கூடி “**ஈஸ்வரன்**” ஆயிற்று.

ஈஸ்வரனின் சர்வ சக்தி முதலிய தர்மங்கள், மாயா காரியம் போன்றவைகளினால், இந்த ஈஸ்வரனையே “**தத்**” பதத்தின் வாக்கியார்த்தமாய் கொள்க.

வியஸ்டி அவஸ்தை, அதில் பிரதிபலித்த ஆபாசம், அதன் அதிஷ்டான சேதனம் மூன்றும் சேர்ந்து “**ஜீவன்**” ஆயிற்று.

ஜீவனிடம் உள்ள அற்ப சக்தி முதலிய தர்மங்கள், அவித்யா காரியம் போன்றவைகளினால் இந்த ஜீவனையே “**த்வம்**” பதத்தின் பொருளாய் கொள்க.

இதன் அடிப்படையில், ஈஸ்வரனுக்கும், ஜீவனுக்கும் உள்ள வித்தியாசம் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம் போன்ற பேதம் இருப்பதினால் ஏகத்துவம் (இணைப்பு) உண்டாகாது.

ஆகவே, ஆபாச சகித மாயை, மாயா காரிய சக்தி, "**சர்வ சக்தி தர்மம்**" (அனைத்தும் அறியும் அறிவு) ஆகிய இந்த சிறப்பு அம்சங்கள் கொண்ட "**தத்**" பத வாக்கிய பாகங்களை விடுத்து, "**சேதன**" பாகத்தை (சைதன்யத்தை) மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதுப்போலவே, ஆபாச சகித அவித்தை, அவித்தையால் உண்டான "**அல்ப சக்தி தர்மம்**" (சிறிதே அறியும் அறிவு) ஆகிய இந்த சாதாரண அம்சம் கொண்ட "**த்வம்**" பத வாக்கிய பாகங்களை விடுத்து, "**சேதன**" பாகத்தை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த சேதனத்தின் அடிப்படையிலேயே **ஜீவ - ஈஸ்வர ஐக்கியம்** உண்டாகின்றது.

கடநீரின் மேக நீரிற் கண்டவான் இரண்டும் பொய்யே
குடவானும் பெரியவானும் கூடியொன்றாம் எப்போதும்
இடமான பிரமம் சாட்சி இரண்டும் எப்போதும் ஏகம்
திடமாகச் சுவாநுபூதி சிவோகமென்று இருந்திடாயே. (75)

## தெளிவுரை:-

குடத்து நீரில் பிரதி பிம்பிக்கின்ற ஆகாயத்தையும், மேக நீரில் பிரதி பிம்பிக்கின்ற ஆகாயத்தையும் தனித் தனியாகக் கருதுவது பொய்யே.

பேதம் எல்லாம் உபாதியான குடத்தில் உள்ள நீரினாலும், மேகத்தில் உள்ள நீரினாலும் மட்டுமே ஆகும்.

குடத்தில் உள்ள ஆகாயமும், எங்கும் நிறைந்துள்ள பரவெளி ஆகாயமும் எப்போதும் ஒன்றாயாகும்.

அதுப்போல, உடல் என்ற உபாதிக்குள் இருக்கின்ற ஜீவ சாட்சியான கூடஸ்தனும், எங்கும் வியாபித்து இருக்கின்ற ஈஸ்வர சாட்சியான பிரம்மமும் எப்பொழுதும் ஒன்றே என்ற திடமான உன் சுய அனுபவத்தில் "**சிவம் நான்**" என்று இருப்பாயாக.

தஞ்சமாம் குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப்பாமல்
பஞ்சகோசமும் கடந்து பாழையும் தள்ளி யுள்ளில்
கொஞ்சமா மிருப்பும் விட்டுக் கூடஸ்தன் பிரம மென்னும்
நெஞ்சமும் நழுவி ஒன்றாய் நின்ற பூரணத்தைக் கண்டான். (76)

## <u>தெளிவுரை:-</u>

தஞ்சமடைந்த தனக்கு பெருந்துணையாக இருந்த சத்குருநாதன் கூறிய உபதேசங்களான தத்துவங்கள் வழி தவறாமல் நின்று, ஐந்துகோசங்களையும் நான் அல்ல! என்பதைக்கடந்து, உள்ளே சிறிது தங்கியுள்ள ஆஹங்காரம் என்பதையும் விட்டு, எல்லாப் பிராணிகளின் புத்திகளிலும் உறைகின்ற, ஜீவ சாட்சியான "**கூடஸ்தன்**" என்கின்ற தானே, எல்லையில்லா ஆகாயம் போன்று எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்திருக்கின்ற பரிபூரணமான "**பிரம்மம்**" என்பதை அறிந்துக் கொண்டான்.

ஆழ்ந்து நன்றாக உறங்கியவனின் கையில் உள்ள பொருள் அவனை அறியாமல், எவ்வாறு நழுவி கீழே விழுகின்றதோ, அதுப்போல, இவனுக்கு அந்நியமான இந்த உடலையும் துறந்து, ஒன்றேயான, பூரண அறிவு சொரூபமே "**நான்**" என்பதை உறுதிப்படுத்திக் கொண்டான்.

அனுபவாநந்த வெள்ளத் தழுந்தியே அகண்டமாகித்
தனு கரணங்களாதிச் சகலமு மிறந்து சித்தாய்
மனது பூரணமாய்த் தேகமான சற்குருவுங் காண
நனவினிற் சுழுத்தியாகி நன்மகன் சுபாவமானான். (77)

## தெளிவுரை:-

ஆனந்தமான சொரூப அனுபவ வெள்ளத்தில் மூழ்கிய சிஷ்யன் தன்னுடைய வெளி உறுப்புக்களான (புறக்கரணங்கள்) கண், காது, மூக்கு, நாக்கு, தோலினால் போர்த்தப்பட்ட ஸ்தூல உடலாகிய, பரு உடலையும், தன்னுடைய சூக்ஷும உடலாகிய உள்ளுறுப்புக்களான (அந்தக்கரணங்கள்) மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் மற்றும் உள்ளத்தையும், இத்துடன் ஐந்து கோசங்களையும், அத்துடன், ஐந்து வாயுக்கள் முதலான 20 தத்துவங்களான அனைத்தையும் நீக்கி விடுகின்றான்.

சூக்ஷும மனம் எவ்வாறு உறக்கத்தில் காணுகின்ற கனவை உண்மை என்று நம்பி, அதில் மயங்குகின்றதோ? அதுப்போல, ஸ்தூல தேகத்தில் விழிப்பு நிலையில் காணுகின்ற இந்த நிலையும் கனவு நிலை போன்ற மயக்க நிலைதான் என்பதை நன்கு தெளிந்து, அறிந்துக் கொண்டு, பூரணமான அறிவு சொரூபமாய் தன் சுபாவத்தில் நிற்கின்ற சிஷ்யனை சத் குருவும் கண்டார்.

அளிமக நெடும் போதிவ்வாறான பின் மனது மெள்ள
வெளியில் வந்திட உணர்ந்தான் விமல தேசிகனைக் கண்டான்
துளிவிழி சொரியப் பாதந்தொழுது வீழ்ந்தெழுந்து சூழ்ந்தான்
குளிர்முகச் சுவாமி கேட்கக் கும்பிட்டு நின்று சொல்வான். (78)

## தெளிவுரை:-

பிரம்மானந்த சுய சொரூப அனுபவம் அடைந்த சிஷ்யன் வெகு நேரமாக அந்த ஆனந்த அனுபவத்தில் மூழ்கி இருந்துவிட்டு, பிறகு சமாதி கலைந்து மனது மெதுவாக வெளியில் வந்திட உணர்ந்தான். இவ்வாறு சொரூப நிஷ்டைக் கலைந்து வெளியில் வந்தவன் மாயா அழுக்கு நீங்கிய ஆச்சாரியரான தன் சத்குருவைக் கண்டான்.

கண்டவன் ஆனந்தக் கண்ணீர் சொரிய அவரது பாதத்தில் விழுந்து வணங்கித் தொழுது, எழுந்து அவரை வலம் வந்து நின்றான்.

அதன்பிறகு, மனம் குளிர்ந்து, சந்தோச முகத்துடன் நிற்கின்ற தன் சத்குருநாதனைக் கும்பிட்டு நின்று பின்வருமாறு கூறலானான்.

ஐயனே எனதுள்ளே நின்று அனந்த சென்மங்களாண்ட
மெய்யனே உபதேசிக்க வெளிவந்த குருவே போற்றி
உய்யவே முத்தி நல்கும் உதவிக்கோர் உதவி நாயேன்
செய்யுமாறு ஒன்றுங் காணேன் திருவடி போற்றி போற்றி. (79)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே, சைதன்யமாக இருக்கும் தாங்களே பல ஜென்மங்களாக எனது உள்ளே நின்று என்னை ஆண்டு வந்துள்ளீர்கள்.

இவ்வாறு, நான் எடுத்த பல பிறவிகளில் நிஷ்காமிய கர்மத்தின் வாயிலாக அடைந்த புண்ணியத்தின் பலனாக இந்த பிறவியில் தாங்கள் எனக்கு குருவாக வெளியே இருந்துஉபதேசிக்க வந்துள்ளீர்கள். இது எனது பாக்கியம். சத்குரு நாதரே! தங்களது திருவடியை போற்றுகின்றேன்.

(ஒரு செயல் செய்தால், அதன் வாயிலாக நமக்கு ஏதேனும் ஆதாயம் கிடைக்குமா? என்று எதிர்ப்பார்த்து செய்வது "**காமிய கர்மம்**" எனப்படும்.

அதுவே, எந்த பிரதி பலனையும் எதிர்ப்பார்க்காமல் செய்கின்ற செயலை "**நிஷ்காமிய கர்மம்**" எனப்படும்.)

என்னுடைய அறியாமையை நீக்கி, இந்த பிறப்பு, இறப்பு என்ற சம்சார துன்பத்திலிருந்து விடுவித்து, என்னை கடைத்தேறச்செய்து, முக்தி கொடுத்து உதவி செய்துள்ளீர்கள்.

இவ்வாறு தாங்கள் செய்த இந்த பேருதவிக்கு அடியேன் என்ன கைம்மாறு (பிரதி உபகாரம்) செய்ய முடியும்? இதற்கு ஒன்றுமே ஈடாகாது. குரு நாதா! தங்கள் திருவடியை போற்றி, போற்றி வணங்குகின்றேன்.

சிட்டன் இவ்வாறு கூறத் தேசிகர் மகிழ்ந்து நோக்கிக்
கிட்ட வாவென இருத்திக் கிருபையோடு அருளிச்செய்வார்
துட்டமாம் தடைகள் மூன்றும் தொடராமல் சொரூபஞான
நிட்டனாய் இருக்கின்ற ஈதே நீ செய்யும் உதவியாமே. (80)

## <u>தெளிவுரை:-</u>

சிஷ்யன் இவ்வாறு கூறியதைக் கேட்ட சத்குருவானவர் மனம் மகிழ்ந்து, அவனை அருகே வா! என அழைத்து, அவரது அருகில் அமர்த்திக் கொண்டு, கருணையோடு அவனுக்கு தன் அன்பைப் பொழிந்தார்.

ஆத்ம ஞானத்தை மறைக்கும் மிக மோசமான மூன்று தடைகள் இருக்கின்றன. அவைகள் தொடராமல், எப்பொழுதும்

சொரூபத்தில் நிற்கின்ற ஞான நிஷ்டனாக இருப்பது ஒன்றே, நீ எனக்குச் செய்கின்ற மிகப்பெரிய உபகாரமாகும் என்றார்.

காரணம், இந்த பிரதிபந்தங்களான மூன்று தடைகளும் ஒவ்வொரு மனிதனிடமும் இருப்பதினாலேயே, அவன் தன் சுய சொரூபத்தை அறியாமல் இருக்கின்றான்.

நீ நானென் றிரண்டிலாமல் நிறைந்த பூரணமா யெங்கும்
நானாகத் தெளிந்த ஞானம் நழுவுமோ குருவே யென்றான்
தானாகும் பிரம ரூபஞ் சற்குரு நூலால் தோன்றும்
ஆனாலும் தடைகளுண்டேல் அநுபவ முறைத்திடாதே. (81)

## <u>தெளிவுரை:-</u>

நீ என்றும், நான் என்றும் இரண்டாகக் கருதாமல், பிரம்மமும், ஜீவனும் ஒன்றே என்பதை நிருபிக்கும் பொருட்டு, இதுவரை தத்துவ விசாரம் செய்து ஒன்றேயான பூரணமாக நானே இருக்கின்றேன் என்பதை அறிந்த ஞானமான மெய்யறிவு இந்த தடைகளால் நழுவி விடுமோ குருவே? என்றான்.

நானே அந்த பரப்பிரம்மம் என்பதை சத்குருவின் உபதேசத்தாலும், வேத சாஸ்திரத்தினாலும் அறிந்துக் கொண்டாலும், சொரூபத்தில் நிற்பதற்குத் தடைகளாக இந்த மூன்றும் இருந்தால், அந்த சொரூப அனுபவம் திடமாகாது.

தடைகள் ஏதெனில் அஞ்ஞான சந்தேக விபரீதங்கள்
படர் செயுமிந்த மூன்றும் பல சன்மப் பழக்கத்தாலே
உடனுடன் வரும் வந்தக்கால் உயர்ஞானம் கெடும் இவற்றைத்
திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்தல் தெளிதலாலே. (82)

## தெளிவுரை:-

அப்படிப்பட்ட தடைகள் எதுவென்றால் **அஞ்ஞானம், சந்தேகம், விபரீதங்கள்** என்ற மூன்றுமாகும். துன்பம் தருகின்ற இந்த மூன்று தடைகளையும் பல ஜென்மங்களினால் உண்டான சம்ஸ்காரங்களான வாசனைக ளினாலே அடிக்கடி வரும்.

அவ்வாறு வருகின்ற இந்த மூன்று தடைகளான அறியாமை, சந்தேக புத்தி, விபரீத மயக்கம் போன்றவைகள் உயர்ந்த ஞானத்தை திடமாக்க விடாமல் கெடுக்கக் கூடியவைகள்.

(உயந்த ஞானம் என்பது துவைத, விசிட்டாத்வைத ஞானத்திற்கு மேலான அத்வைத ஞானம் என்பதாகும்)

மேற்கண்ட, இந்த மூன்று தடைகளை நீக்க வேண்டுமானால், சாஸ்திர விசயங்களை சத்குருவின் வாயிலாகக் கேட்டல், அவர் கூறிய கருத்துக்களைப் பற்றி ஆழமாகச் சிந்தித்தல், அதன்பிறகு, அதில் தெளிவை அடைதல் என இந்த மூன்றையும் கடைப்பிடித்து அந்த மூன்று தடைகளையும் திடமாகக் கெடுக்க வேண்டும்.

அக்கினி கட்டுப்பட்டால் அற்பமும் சுடமாட்டாது
மக்கின ஞானத்தாலே வந்த பந்தமும் வேவாது
சிக்கெனப் பழகிக் கேட்டல் சிந்தித்தல் தெளிதலாலே
விக்கின மடம் சந்தேகம் விபரீதம் போக்குவாயே. (83)

## தெளிவுரை:-

அணைந்து போன நெருப்பினாலே எந்த ஒன்றையும் எரிக்க வைக்க முடியாது. அதுப்போல, பிரதி பந்தங்களுடன் கூடிய ஞானத்தாலே, பல்வேறு பிறவிகளாகத் தொடருகின்ற சம்சார பந்தத்தை எரித்து நாசமாக்க முடியாது.

வேதாந்த சாஸ்திர விசயங்களைக் கற்பதை தினமும் பழக்கமாக வைத்துக் கொண்டு, சத்குரு நாதரின் வாக்கால் அவர் போதிக்கின்ற ஆத்ம ஞான விசயங்களைக் கேட்பதை விடாமல் பிடித்துக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு, அன்றாடம் கேட்பதினாலே, அன்றாடம் உதிக்கின்ற சூரியனின் சுயப் பிரகாசத்தை மேகங்கள் அவ்வப்பொழுது மறைத்து விடுவதைப் போன்று, தன்னுடைய சுய அறிவுப் பிரகாசத்தை இந்த மூன்று தடைகள் அவ்வப்பொழுது மறைத்துக் கொள்வதை அறிந்துக் கொள்ள முடியும்.

மேகங்களை காற்று எவ்வாறு கலைந்து போகச் செய்து, சூரியப் பிரகாசத்தை வெளிப்படுத்துகின்றதோ? அதுப்போல, தடைகளை கலைந்து போகச் செய்து, சுய அறிவுப்பிரகாசத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் சத்குரு நாதருக்கு உண்டு.

ஆகவே, சத்குருநாதர் கூறுகின்ற உபதேசத்தை கேட்பதினால், அனைத்து அறியாமைகள் நீங்கி, சந்தேகம் தெளிந்து, அதன் வாயிலாகக் கிடைத்த ஞானத் தெளிவினாலே, விபரீத மன மயக்கமும் விலகி விடுகின்றது.

ஆகவே, உபதேசத்தை **கேட்டல், சிந்தித்தல், தெளிதல்** என்ற மூன்றைக் கொண்டு **அறியாமை, சந்தேகம், விபரீதம்** என்ற இந்த மூன்று தடைகளையும் போக்குவாயாக.

பிரம பாவனையை மூடிப் பேதங்காட்டுவது அஞ்ஞானம்
குரவன் வாக்கியம் நம்பாமற் குழம்புவதாம் சந்தேகம்
திரமறு சகம் மெய்யென்றும் தேகம் நானென்றும் உள்ளே
விரவிய மோகந்தானே விபரீதமென்பர் மேலோர். (84)

## <u>தெளிவுரை:-</u>

எங்கும், எதிலும் நிறைந்துள்ள ஒன்றேயான அந்த பிரம்ம சொரூபமே தன்னுடைய சொரூபம் என்பதை மூடி மறைத்த இந்த உடல்களை உண்மை என்று கருதி, அல்பமான

இந்த பிண்டத்திற்கு (உடலுக்கு) வேறாக, சர்வ சக்தி பொருந்திய இறைவன் அண்டத்தில் (மேல் உலகத்தில்) மட்டுமே இருக்கின்றான் என்ற பேதமை புத்தி கொண்டு இருப்பது "**அறியாமை**" எனப்படும்.

அடுத்து, சத்குருவின் அத்வைத உபதேச வாக்கியத்தை நம்பாமல், அவர் மீதும், அவர் கற்றுக் கொடுக்கின்ற சாஸ்திரத்தின் மீதும் நம்பிக்கை இல்லாமல், பல்வேறு துவைத, விசிட்டாத்வைத சாஸ்திரங்களைக் கற்று, அந்த எல்லாம் வல்ல பரமனும், இந்த ஒன்றுமறியாத பாமரமும் எப்படி ஒன்றாக முடியும்? என்று குழப்பம் அடைந்து, எதையும் நம்பாமல் இருப்பதே "**சந்தேகம்**" எனப்படும்.

இல்லாத இந்த உலகத்தை உண்மை என்று நம்புவதும், அழியக்கூடிய உடலை **நான்** என்று கருதுவதும் உள்ளே உள்ள கருவியான மனதினால் கற்பித்துக் கொண்டு மயங்குவதே "**விபரீதம்**" என்கின்றனர் மேலோர்.

தத்துவ அநுபோகந்தான் சாதித்தல் கேட்டல் என்பார்
ஒத்துள பொருளூகத்தால் உசாவல் சிந்தித்தல் என்பார்
சித்தம் ஏகாந்தமான தெரிசனம் தெளிதல் என்பார்
நித்தமிப்படிச் செய்தக்கால் நிர்வாணம் பெறுவாய் நீயே. (85)

## தெளிவுரை:-

தத்துவ விசாரம் செய்யதன் அந்தக்கரணங்களான மனம், புத்தி, சித்தம் மற்றும் அஹங்காரம் என்பவைகளை விசாரித்து, இவைகளைக் கொண்டே இவைகளை முழுமையாகத் தள்ளி, அந்த பிரம்ம சொரூபமே நான் என்று அறிவதே **ஆத்ம ஞானம்** எனப்படுகின்றது.

எனவே, மனதைக் கொண்டு விசாரித்து, புத்தியினால் தெளிவைப் பெற்று, சித்தத்தில் "**நான் பிரமம்**" என்ற ஞானத்தை பதித்து, அஹங்காரத்தை முழுவதுமாக நீக்கி, அந்த சொரூபத்தில் கலந்து விடுவதே '**சாதித்தல்**' எனப்படுகின்றது.

இவ்வாறு சாதிப்பதற்கு சாதனமாக வேதாந்த சாஸ்திரங்களை அடிக்கடி சத்குருநாதரின் வாக்கினால் உபதேசமாக கேட்பதை "**கேட்டல்**" என்பார்.

இவ்வாறு கேட்ட சாஸ்திர விசயங்களை மனதினால் ஊகித்து, அதன் அர்த்தத்தை விசாரித்து வருவதையே "**சிந்தித்தல்**" என்பார்.

ஒன்றேயான அந்த பிரம்ம சொரூபத்தில் ‘சித்தம்’ நிலைப் பெற்று இருப்பதையே “**தெளிதல்**” என்பார்.

தினமும் இதுபோன்று செய்துவந்தால், ஆத்ம ஞானம் உண்டாகி, தடைகள் அனைத்தும் நீங்கி ‘பரமோக்ஷம்’ என்ற நிர்வாண நிலை பெறுவாய் நீயே.

எத்தனை நாள் ஞாதாவும் ஞானமும்இருக்கு முன்பால்
அத்தனை நாளும் வேண்டும் அப்பால் ஓர் செயலும் வேண்டாம்
நித்தமும் வெளிபோல் பற்றா ஞேய மாத்திரமாய்ச் சீவன்
முத்தர் ஆனவர் விதேக முத்தி பெற்றிருப்பார் என்றும். (86)

**<u>தெளிவுரை:-</u>**

அறிபவனும், அறிந்த ஞானமும், அறிவும் ஒன்றே என்ற அந்த சொரூப நிஷ்டை உண்டாக எத்தனை நாட்கள் உனக்கு தேவைப்படுகின்றதோ? அத்தனை நாட்களும் தொடர்ந்து பயிற்சி செய்து வர வேண்டும். அதற்குப் பிறகு ஒரு செயலும் செய்ய வேண்டாம்.

எங்கும், எப்பொழுதும், நீக்கமற நிறைந்திருக்கின்ற ஆகாயம் எவ்வாறு எதையும் தன்னிடத்தில் ஒட்ட வைத்துக் கொள்ளாமல் (பற்றாமல்) இருக்கின்றதோ? அதுப்போல, எங்கு

இருந்தாலும், எதைச் செய்தாலும் பற்றாத ஞானத்தில் ஜீவன் முக்தர்களானவர்கள் இந்த பரு உடலை விட்ட பின்பு உடல் இல்லாத “**விதேக முக்தி**” பெற்றிருப்பார்கள்.

ஞானமார் சீவன் முத்தர் நால்வகையாவர் கேளாய்
வானிகர் பிரம வித்து வரன் வரியான் வரிட்டன்
ஆனவர் நாமமாகும் அவர்களில் பிரம வித்தின்
தானமுமற்றை மூவர் தார தம்மியமுஞ் சொல்வேன். (87)

## <u>தெளிவுரை:-</u>

பரிபூரண ஞானம் பெற்ற ஜீவன் முத்தர்கள் நான்கு வகைகளில் உள்ளனர். அவர்களைப் பற்றி கூறுகின்றேன் கேட்பாயாக.

எங்கும் நிறைந்த ஆகாசம் இந்த பிரபஞ்சத்தையே தன்னிடம் கொண்டு இருந்தாலும், அதில் ஒட்டாமல் தனித்து இருக்கும். அதுப்போல, இந்த உலக விவகாரங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இருந்தாலும், அவைகளில் எதிலும் ஒட்டாமல் தனித்து இருப்பார்கள் ஜீவன் முக்தர்கள்.

இப்படிப்பட்ட ஜீவன் முக்தர்களை **பிரம வித்து (பிரம) வரன், (பிரம) வரியான்** மற்றும் **(பிரம) வரிட்டன்** என்ற நான்கு பெயர்களில்அழைக்கப்படுகின்றது.

அவர்களில் பிரம வித்தின் அனுபவத்தையும், மற்ற மூவரின் ஏற்ற, இறக்கமான வித்தியாசங்களையும் கூறுகின்றேன். இவர்களின் ஞானத்தில் வித்தியாசம் ஏதும் இல்லை. ஆனால், இவர்கள் நடத்தையில் வேறுபாடுகள் உள்ளது.

(இவர்களது இந்த பெயர்களுக்குண்டான விளக்கங்கள் பின்வரும் பாடலில் கூறப்படுகின்றது.)

தீரராய்ப் பிரம வித்தாய் தெளிந்தவர் தெளியு முன்னம்
வாரமாயிருந்த தங்கள் வருணமாச் சிரமஞ் சொன்ன
பார காரியமானாலும் பலர்க்கு உபகாரமாக
நேரதாச் செய்வார் தீர்ந்த நிலைவிடார் சீவன் முத்தர். (88)

## <u>தெளிவுரை:-</u>

ஆற்றுநீரை தேக்கி வைத்து பயிர் செய்தல் போல, ஈஸ்வரனால் வெளி முகத்துக்கு சிருஷ்டிக்கப்பட்ட இந்திரியங்களை தன் வசப்படுத்தி, ஆத்மானந்தம் அனுபவிக்கும் வல்லவர்களாக திறமை பெற்ற பிரம வித்தாய் உயர்ந்தவர்கள், தமோகுண, ரஜோகுண விருத்திகளால் உண்டான அறியாமையால் இந்த உலகத்தை உண்மை என்ற எண்ணிக் கொண்டிருந்த நிலை மாறி, சத்துவகுண

விருத்தியால், எப்பொழுதும் ஆத்ம சொரூபத்தில் நிலைத்து இருப்பர்.

மண் சேர்ந்து கலங்கியிருந்த நீர் எவ்வாறு, தேற்றாம் கொட்டையால் தெளிந்தநீர் ஆகின்றதோ? அதுப்போல, மனம் சேர்ந்து கலங்கியிருந்த புத்தி, தக்க சத்குருவின் வாயிலாக தெளிவை அடைந்து விடுகின்றது.

இவ்வாறு, தெளிவடைந்தவர் இந்த தெளிவிற்கு வரமுடியாத பலருக்கும் பற்பல கர்ம காரியங்களை உபகாரமாகவும், நேர்த்தியாகவும் செய்ய முற்படுவார்கள். காரணம், இவரைப் பார்த்தாவது அவர்களும் முக்தி அடையும் பொருட்டு இதைச் செய்வார்கள் என்பதினால் இவரும் செய்வார்.

அதேசமயம், நான் பிரம்மம் என்ற நிச்சய புத்தியில் நீங்காது இருப்பார்கள் இந்த ஜீவன் முக்தர்கள்.

காமமாதிகள் வந்தாலும் கணத்திற்போம் மனத்திற் பற்றார்
தாமரை இலைத்தண்ணீர் போல் சகத்தொடுங் கூடிவாழ்வார்
பாமரர் எனக்காண்பிப்பார் பண்டிதத் திறமை காட்டார்
ஊமரும்ஆவார் உள்ளத்து உவகையாஞ் சீவன்முத்தர். (89)

**<u>தெளிவுரை:-</u>**

ஆசைகள் என்பது, பழைய சம்ஸ்காரங்களினால் வெளிப்பட்டாலும், வந்த வேகத்தில் இவர்களுக்குச் சென்று விடும். அவைகளை மற்ற அறியாமையில் உள்ளவர்கள் போன்று மனதில் பற்ற மாட்டார்கள்.

தாமரை இலைத்தண்ணீர் போல, இலையில் ஒட்டியும், ஒட்டாமலும் அந்த நீர் இருப்பதுப் போன்று, இந்த உலகத்தோடு இவர்கள் இருந்தாலும், அதில் ஒட்டியும் ஒட்டாமலும் இருப்பார்கள்.

ஒன்றுமறியாத பாமரர் போன்று காணப்படுவார்கள். கற்ற சாஸ்திரங்களைக் கொண்டு, தன்னுடைய பண்டிதத் திறமையை வெளிப்படுத்தவும் மாட்டார்கள். பெரும்பாலான நேரங்களில் மௌனமாக இருப்பார்கள் .உள்ளத்தில் எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் காணப்படுவர்களே சீவன் முக்தர்கள்.

பேதகர் மத்தால் வந்த பிராரத்த நாநாவாகும்
ஆதலால் விவகாரங்கள் அவரவர்க் ஆவவாகும்
மாதவஞ் செயினும் செய்வார் வாணிபம் செயினும் செய்வார்
பூதலம் புரப்பார் ஐயம் புகுந்து உண்பார் சீவன்முத்தர். (90)

## தெளிவுரை:-

ஜீவன் முக்தர்கள் பலவாறாக இருப்பார்கள். காரணம், தன்னை பிரம்ம சொரூபம் என்று உணர்வதற்கு முன்பாக பிராரப்த வசத்தினால் கர்மாவிற்கு ஏற்றவாறு அவர்களது வாழ்க்கைச் சூழ்நிலைகள் அமைந்து, அதற்கேற்ற முறையில் காணப்படுவார்கள். அதனால், அவர்களது உலக விவகாரங்கள் ஒருவரைப் போன்று மற்றொருவரிடம் காண முடியாது.

ஒருவர் சதா பிரம்ம நிஷ்டையில் ஆழ்ந்து இருப்பார். மற்றொருவர் வியாபாரம் செய்துக் கொண்டே ஆத்ம நிஷ்டையில் இருப்பார்.

இனியொருவரோ அரசனைப் போன்று ஆட்சி செய்துக் கொண்டும் இருப்பார். சிலர் பிச்சை எடுத்து உண்டு, தன்னுடைய பசி தணித்துக் கொள்வார்.

இவ்வாறு, இவர்கள் பல விதங்களில், பலவாறான வித்தியாசத்துடன் காணப்பட்டாலும், இவர்களும் ஜீவன் முக்தர்களே.

சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன்
நின்றது புசிப்பார் வெய்யில் நிலவாய் விண் விழுது வீழ்ந்து
பொன்றின சவம் வாழ்ந்தாலும் புதுமையா ஒன்றும் பாரார்
நன்று தீது என்னார் சாட்சி நடுவான சீவன்முத்தர். (91)

## தெளிவுரை:-

தன் உடலையே தானாக கருதாத நிலையில் உள்ள ஜீவன் முக்தர்கள் இந்த உலக விவகாரங்களில் இருக்கின்ற பொழுது, தன்னை விட்டு எது பிரிந்தாலும், சென்றதை நினைத்து சிறிதும் வருந்த மாட்டார்கள்.

எதிர்காலத்திற்கு என எதையாவது சேர்த்து வைக்கலாம் என்ற எண்ணமும் அவர்களுக்கு கிடையாது. நாளைக்கு வர இருக்கின்ற ஒன்றை நினைத்து, இன்றே அதை எதிர்ப்பார்த்து ஏங்கிக் கொண்டு இருப்பவர்களும் அல்ல.

ஆனால், அதேசமயம் கண்முன்னே நிற்கின்ற நிகழ் காலத்தில் செய்கின்ற எந்த செயலாக இருந்தாலும், அந்த செயலில் முழுவதுமாக தன்னை ஒன்றுபடுத்தி, அந்த விநாடியில் இருந்து சிறிதும் விலகாமல், தன் சொரூப உணர்வில் இணைந்து அந்த போகங்களை புசித்துக் (அனுபவித்துக்) கொண்டு இருப்பார்கள்.

இவர்கள், சூரியனுடைய கடும் வெப்பம் கொண்ட பகல் பொழுது, திடீர் என இருள் சூழ்ந்து நிலவு வெளிச்சம் கொண்ட இரவாக மாறி, இதமான குளிர்ச்சியை அடைந்து விட்டாலும், இறந்து போன உடல் திடீர் என உயிர் பெற்று எழுந்து வாழ்ந்தாலும் இந்த புதுமைகளைக் கண்டு மயங்குவதோ? ஆச்சரியம் அடைவதோ? இவர்களிடத்தில் பார்க்க முடியாது.

மேலும், இது நல்லது, இது தீயது என்ற பேதமை புத்தி கொண்டு எதையும் பார்க்காமல், நடு நிலையான சாட்சி பாவனையில் எப்பொழுதும் இருமைகள் இன்றி இருப்பார்கள் இந்த ஜீவன் முக்தர்கள்.

பின்னைமூவரில் இரண்டு பேர்களும் சமாதி யோகம்
தன்னை உற்றிருப்பார் தேக சஞ்சார நிமித்தந் தானாய்
உன்னுவோன் வரன் வேற்றோரால் உணர்பவன் வரியானாகும்
அன்னியர் தம்மாற்றன்னா அறியாதோன் வரிட்டனாமே. (92)

## <u>தெளிவுரை:-</u>

முன்பு கூறப்பட்ட பிரமவித்து தவிர, மற்ற மூன்று பிரம ஞானிகளுக்கும் மூன்று பெயர்கள் கொடுக்கப்பட்டன.

அதில், **வரன்** மற்றும் **வரியான்** ஆகிய இரண்டு பிரம ஞானிகளும் ஆத்ம சொரூபத்தில், சமாதி நிலையில் எப்பொழுதும் நிலைத்து இருப்பார்கள்.

இதில் தன்னுடைய பரு உடல் ஜீவிப்பதற்காக மட்டுமே, அவ்வப்பொழுது சமாதி கலைந்து, உணவை உண்டு, மற்ற நேரங்களில் பிரம்ம நிஷ்டையில் இருக்கின்ற இவர்களை "**வரன்**" என்று அழைக்கப்படுகின்றது.

மற்றொருவரும் தனது பிராரப்தம் தீர்ந்து இந்த பரு உடல் கீழே விழும் வரை, அது ஜீவித்து இருக்க அவ்வப் பொழுது தன்னுடைய சிஷ்யர்கள் மற்றும் பக்தர்கள் கொடுக்கின்ற உணவை மட்டுமே உண்டு, மற்ற நேரங்களில் எப்பொழுதும் பிரம்ம நிஷ்டையில் இருக்கும் இவர்களை "**வரியான்**" என்று அழைக்கப்படுகின்றது.

தன்னுடைய தேகத்தைக் காப்பாற்றும் பொருட்டு, மற்றவர்களை எதிர்ப்பார்க்காமல், தானும் உடலுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், உணவு கிடைத்தால் உண்பது, இல்லாவிட்டால் அதைப் பற்றி அதிகமாக சிந்திக்காமல், சதா அந்த பிரம்ம நிஷ்டையில் இருப்பவன் "**வரிட்டன்**" என்று அழைக்கப்படுகின்றது.

இந்த வரிட்டனுக்கும் அந்தக்கரணம் உள்ளதால், இவன் உணவு உண்ணாமல் நீண்ட நாட்கள் அவனது தேகத்தைதக்க வைத்துக் கொள்ள முடியாது என்பதினால், உணவை உண்ண வேண்டும் என்ற எண்ணம் உதிக்கும் பொழுது மட்டும் உண்ணுவார்கள்.

உலக விவகாரத்திற்காக அவ்வப்பொழுது வெளியேயும் வருவார்கள். இவர்களது செயலை அந்தக் கரணமே தூண்டுகின்றது என்பதினால், அவனுக்கும் உண்ண வேண்டும், உரையாட வேண்டும், உதவ வேண்டும் என்று தோன்றும். ஆனால், மற்றவர்களைப் போன்று அன்றாடம் இல்லாமல் விரும்பும்பொழுது மட்டுமே உணவை உண்பதும், உலக விவகாரங்களை கவனிப்பதும் நடக்கும்.

காரணம், அந்தக்கரணமான மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் அனைத்தும் ஒன்றாக ஒன்றிய, ஒன்றேயான அந்த அறிவாகவே வெளிப்பட்ட ஆத்ம நிலைதான் "**முக்தி நிலை**" எனப்படுகின்றது.

அதனால்தான், அந்தக்கரணம் செயல்படாத ஆழ்ந்த உறக்க நிலையை முக்தி நிலை என்று கூறுவதில்லை. அதனை ஒன்றுமில்லாத **சூன்யம்** என்றே அழைக்கப் படுகின்றது.

அதனால், ஆத்மாவை அறிய ஆரம்பத்தில் அந்தக்கரணம் அவசியம் என்பதையும் இங்கு வலியுறுத்தப் படுகின்றது.

அறிந்த பின்பு நீக்கப்பட்ட அனைத்தும் அதில் தானாகவே அடங்கி விடும்.

## குறிப்பு:—

வேதாந்த சாஸ்திரங்களில் 20 தத்துவங்களை அறிமுகப்படுத்தி, இறுதியில் அந்த அனைத்து தத்துவங் களையும் நீக்கம் செய்து (நேதி செய்து) ஆத்மாவை அறிமுகப்படுத்து வழக்கம்.

அதாவது, ஆகாயத்தில் இருக்கின்ற மூன்றாம் பிறை நிலவை சுட்டிக்காட்ட நேரடியாக முயற்சிப்பது கால விரையத்தையும், மிகுந்த குழப்பத்தையும் கொடுக்கும் என்பதினால், பெரியவர்கள் நேரடியாக கண்ணிற்குப் புலப்படாத மூன்றாம் பிறை நிலவை சுட்டிக்காட்ட, அருகே உள்ள ஒரு மரத்தைக் காட்டி, அந்த மரத்தின் ஒரு கிளைப் பகுதியைக் காட்டி, அந்தக் கிளையில் உள்ள ஒரு இலையைக் காட்டி, அந்த இலைக்கு அருகே கவனி! அந்த மூன்றாம் பிறை நிலவு தெரியும் என்பதை விளக்கினார்கள்.

இதில், மூன்றாம் பிறை நிலவைக் கண்டு பிடிப்பதற்கு எவ்வாறு இந்த மரமும், மரத்தைச் சார்ந்த கிளைகளும், இலைகளும் உதவி புரிந்தனவோ? அதுப்போல, மனித தேகத்தின் கரணங்கள் உதவி இன்றி அந்தர்யாமியான ஆத்மாவை அறிய முடியாது.

மூன்றாம் பிறை தெரிந்து விட்டதினால், இனி, அந்த மரத்தை அங்கிருந்து அகற்றி விட வேண்டிய அவசியம் இல்லை. அது, அதன் போக்கில் இருந்து விட்டுப் போகட்டும்.

அதுப்போல, ஆத்மாவை நேரடியாக அறிமுகப் படுத்த வேண்டி, இருபது (20) தத்துவங்களையும் அறிமுகப்படுத்தி, அவைகளை ஒவ்வொன்றாக நீக்கி, இறுதியில் ஆத்மாவைக் காட்டிக் கொடுக்கின்றனர்.

(இதே நூலாசிரியர் இந்த நூலில் 48 - வது பாடலில் கூறப்பட்ட விளக்கத்தை மீண்டும் படித்து தெளிவு பெறவும்.)

அரிதாகும் இவர்களிவ்வாறு அநேகரானாலும் முத்தி
சரியாகும் பாடுபட்ட சமாதிக்குப் பலன் ஏதென்றால்
பெரிதான திருஷ்ட துக்கம் பிரமவித்து அநுபவிப்பன்
வரியானும் வரனும் மற்றை வரிட்டனும் சுகமாய் வாழ்வார். (93)

## தெளிவுரை:-

எத்தனையோ கோடானு கோடி பிறவிகள் எடுத்து, கிடைத்தற்கரிய இந்த மனிதப் பிறவியை சரியாகப் பயன் படுத்திக் கொண்ட மிகவும் அரிதான **வரன், வரியான்** மற்றும் **வரிட்டன்** என்ற இந்த ஜீவன் முக்தர்கள் மற்றவர்களில் இருந்து வேறுபட்டு காணப்பட்டாலும், அவர்கள் அறிந்துக் கொண்ட சாஸ்திர விசயங்களினால் உண்டான ஆத்ம ஞானத்தில் (முக்தியில்) வித்தியாசம் இருக்காது.

இவர்கள் மூவரும் சாஸ்திர விசயங்களை **கேட்டல், சிந்தித்தல்** வாயிலாக, ஆத்ம விசயங்களை நன்கு அறிந்துக் கொண்டு, அதில் தெளிவை அடைந்து விட்டதின் வாயிலாக சரியான புரிதலில் இருப்பார்கள்.

இதன் காரணமாக, அனைத்தையும் ஈஸ்வர காரியமாக செய்துக் கொண்டு, ஈஸ்வரனோடு இணைந்து அதன் அனுபவத்தில் சுகமாக வாழ்வார்கள்.

இதில், பிரம்மத்தை அறிய வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட பிரம்மவித்து என்பவர்கள் தாங்கள் கேட்ட சாஸ்திர சிரவணத்தினால், சிந்தித்து தெளிவடைந்து விட்டார்களா? என்றால் இல்லை என்றே கூற வேண்டும்.

காரணம், சர்க்கரையைப் பற்றி என்னதான் ஆராய்ச்சி செய்து அறிந்துக் கொண்டாலும், விஞ்ஞான ரீதியாக தெரிந்துக் கொண்டாலும், அந்த சர்க்கரையை சுவைத்துப் பார்த்தால்தானே அதன் இனிப்பை அறிய முடியும்?!

அதுப்போல, பிரம்மத்தைப் பற்றி என்னதான் கேட்டு அறிந்து கொண்டிருந்தாலும், உள்ளம் பிரம்மத்திலேயே நிலைத்து நிற்கும் அனுபவ நிலையை அடைவது மிகவும் முக்கியம். இதுவே, '**தெளிதல்**' எனப்படும்.

இவர்கள் சாஸ்திர விசயங்களை கேட்டும், சிந்தித்தும் வந்தாலும், அதில் சரியான தெளிவை அடைந்திருக்க

மாட்டார்கள். அதன் காரணமாக அவர்களது மனம் உலக விவகாரங்களில் ஈடுபட்டு துன்பத்தை அனுபவிப்பர்.

பொதுவாக இந்த உலகத்தில் மனிதனாக பிறந்த ஜீவர்களுக்கு மற்ற ஆசைகள் நீங்கி, மோட்சத்தைப் பற்றிய விருப்பம் வருவது என்பது மிகவும் அரிதானது.

அப்படி ஒரு விருப்பம் வந்தாலும், வேத சாஸ்திரங்களை கற்று அறிந்துக் கொள்ள வேண்டும் என்பது அதைவிட மிகவும் அரிதானது.

அதையும் மீறி, வேத சாஸ்திரங்களை கற்று அறிந்துக் கொண்டாலும், அதன் இறுதிப் பகுதியான வேதாந்தத்தை கற்றுக் கொள்வது என்பது அதையும்விட மிகவும் அரிதானது.

அப்படியே, மிகுந்த பாடுபட்டு, சரியான சத்குருவின் வாயிலாக, வேதாந்த சாஸ்திரத்தை கற்றுக் கொண்டாலும், அவ்வாறு, கற்றவைகளையும், கேட்டவைகளையும் எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருப்பது என்பது மிக, மிக அரிதானது.

இந்த அரிதான விசார சிந்தனை உண்டாகி விட்டாலும், அதில் தெளிவை அடைவது என்பது அரிதிலும், அரிது.

பிரம ஞானிகளும் கன்மப் பேதையர் போலே வாழ்ந்தால்
திரமுறும் அஞ்ஞானம் போய்ச் செனியாத வழியே தென்றால்
பரவுமாகாச மொன்றிற் பற்றாது மற்றை நாலும்
விரவின தோடுங் கூடும் விதமிரு வோருமாவார். (94)

## <u>தெளிவுரை:-</u>

பிரம்ம ஞானிகளும் சாதாரணமான மக்களைப் போன்றே பல கர்மங்களை செய்துக் கொண்டு வாழ்ந்தால், அவர்களுடைய அறியாமை நீங்கி விட்டது என்பதை எப்படி அறிவது? மேலும், இவர்கள் அடைந்த ஞானத்தினால் பிறவித் துன்பத்தை தீர்த்துக் கொண்டு, இனி பிறக்க மாட்டார்கள் என்பதற்கு உறுதி ஏதேனும் உள்ளதா? என்று சிஷ்யன் தன் சத்குருநாதரிடம் விசாரித்தான்.

அன்பனே! எவ்வாறு ஆகாயமானது மற்ற நான்கு பூதங்களோடும் கலக்காமல் தனித்து இருந்துக் கொண்டு, இந்த பிரபஞ்சத்தில் கோடானு கோடி விண்மீன்களும், பல அண்ட சராசரங்களை கொண்டு வியாபித்து காணப் பட்டாலும், அதில் ஒட்டாமல் தனித்து இருப்பது போன்று, ஞானிகளும் இந்த உலக விவகாரங்களில் தங்கள் அந்தக்கரணங்களான மனம், புத்தி, சித்தம் மற்றும் அஹங்காரத்தைக் கொண்டு செய்யும் அனைத்து கர்மங்களிலும் ஈடுபட்டாலும், அது அவர்களுக்கு என்று, விருப்பம் இன்மையால், அவைகள் அவர்களைப் பற்றுவதில்லை. இவர்கள் எதனோடும் சங்கமிக்காத **அசங்கன்** ஆவார்கள்.

அதுவே, ஆகாயம் தவிர மற்ற நான்கு பூதங்களும் எப்படி ஒன்றை ஒன்று கலந்து காணப்படுகின்றதோ? அதுப்போல, அஞ்ஞானிகள் இந்த உலக விவகாரங்களோடு கலந்து பிறவித்துன்பத்திற்கு ஆளாகின்றார்கள். மீண்டும், மீண்டும் பிறப்பு, இறப்பை அடைகின்றார்கள்.

இதுவே ஞானிகளுக்கும், அஞ்ஞானிகளுக்கும் உள்ள வேறுபாடு என அறியவும்.

சீவன் முத்தரைச் சேவித்தோர் சிவன் அயனெடு மாலான
மூவரு மகிழ நோன்பு முழுவதுஞ் செய்து சன்ம
பாவன மானாரென்று பழமறை முழங்கும் இப்பால்
மேவருஞ் சீவன் முத்தர் விதேக முத்தியும் நீ கேளாய். (95)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! இந்த உன்னதமான ஜீவன் முக்தர்களை கண்டு, அவர்களுக்கு சேவை செய்கின்றவர்கள் அடையும் பலன் யாது?

அன்பனே! சிவன், பிரம்மா, மற்றும் திருமால் என மும்மூர்த்திகளை மகிழ்விப்பதற்காக பல விரதங்களை முழுமையாகக் கடைப்பிடித்து, பரிசுத்தமான பலன்கள் பல கிடைத்து, இந்த மனிதப்பிறவி் பெற்ற பயனை அடைகின்றார்கள் என்று அனேக சாஸ்திரங்கள் கூறுகின்றதோ?

அதைவிட உன்னதமான பலன்கள் பல பெற்று, பிறவாப் பெரு நிலையான விதேக முக்தி என்பது இந்த ஜீவன் முக்தர்களுக்கு சேவை செய்வதினால் உண்டாகின்றது என அதே சாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றது.

அது எப்படியெனில், ஈஸ்வர சேவையினால் மறு ஜென்மத்தில்தான் பலன் கிடைக்கும். அதுவே, இந்த ஜீவன் முக்தர்கள் போன்ற சாதுக்களுக்கு செய்த சேவையில் இந்த பிறவியிலும், மறுபிறவியிலும் கூட ஆத்ம ஞானத்திற்கு தடைகளாக இருந்த அறியாமை, சந்தேகம், மற்றும் விபரீத புத்தி போன்ற தடைகள் அனைத்தும் நீங்கி, சாஸ்திரங்களை **கேட்டல், சிந்தித்தல், தெளிதல்** என்ற பல பலன்கள் உண்டாகின்றது.

இவ்வாறு, இவர்களுக்கு செய்த மகத்தான சேவை களின் வாயிலாக கிடைத்தற்கரிய **ஆத்ம ஞானம்** உண்டாகும். அந்த ஆத்ம ஞானத்தின் வாயிலாக மோக்ஷம் சித்தியாகி, என்றும் ஆனந்த நிலையில் வாழ முடியும். இவர்களும் நாளடைவில் ஜீவன் முக்தர்களாக உயர்ந்து, இறுதியில் விதேக முக்தியை அடையமுடியும்.

இப்படிப்பட்ட ஜீவன் முக்தர்களின் விதேக முக்தி (உடல் நீங்கிய முத்தி) யைப் பற்றியும் நீ கேட்பாயாக.

பஞ்சினை யூழித்தீப்போற் பல சன்ம விவித வித்தாஞ்
சஞ்சித மெல்லா ஞானத் தழல்சுட்டு வெண்ணீறாக்கும்
கிஞ்சித் ஆகாமியந்தான் கிட்டாமல் விட்டுப்போகும்
விஞ்சின பிராரத்தத்தின் வினை அநுபவித்துத் தீரும். (96)

## <u>தெளிவுரை:-</u>

சேமிப்புக் கிடங்கில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பஞ்சு மூட்டைகளை எவ்வாறு ஒரு தீப்பொறி முழுவதுமாக எரித்து சாம்பல் ஆக்கி விடுகின்றதோ? அதுப்போல, பல ஜென்மங்களாக சேர்த்து வைத்துள்ள பிறவித் துன்பத்திற்கு காரணமான **சஞ்சித கர்மா** என்ற பாவ, புண்ணிய மூட்டைகளை எல்லாம், இந்த ஜீவன் முக்தர்கள் அடைந்த ஆத்ம ஞானத் தீயினாலே எரிந்து சாம்பல் ஆகிவிடுகின்றது.

அதுப்போலவே, இந்த ஜீவன் முக்தர்கள் இப்பிறவியில் செய்கின்ற பற்றில்லாத நிஷ்காமிய கர்ம காரியங்களினாலே உண்டான புண்ணிய பலன்கள் அவர்களுக்கு சிறிது ஆகாமிய கர்மாவாக உண்டானாலும், அதுவும் அருகே வராமல் அழிந்து போகும்.

அதுப்போலவே, பிறவிக்கு வரும் பொழுது இவர்கள் கொண்டுவந்த பிராரப்தக் கர்மாவும் உடல் இருக்கின்றவரை அனுபவித்துத் தீரும்.

இங்கு அனுபவித்து தீரும் என்பது என்னவென்றால், புலி என நினைத்து வில்லிருந்து விடப்பட்ட அம்பு, பசு என அறிந்த பிறகும் எப்படி நிறுத்த முடியாதோ? அதுப்போல, பிறக்கும் பொழுது அஞ்ஞானியாக இருந்ததினால், அவர்களிடம் இருந்து வெளி வந்த பிராரப்த கர்மம், பலன் தர தொடங்கியப் பிறகு, அவர்கள் ஆத்ம ஞானத்தை அடைந்து ஞானியானாலும் நிறுத்த முடியாமல், அவர்கள் அனுபவத்திற்கு வந்துவிடும். இதைத் தடுக்க முடியாது.

பொறுமையாற் பிராரத்தத்தைப் புசிக்கும் நாள் செய்த கர்மம்
மறுமையில் தொடர்ந்திடாமல் மாண்டுபோம் வழியேதென்றால்
சிறியவர் இகழ்ந்து ஞானி செய்த பாவத்தைக் கொள்வார்
அறிவுளோர் அறிந்து பூசித்து அறமெலாம் கைக்கொள்வாரே. (97)

**தெளிவுரை:-**

ஆத்ம ஞானத்தை அடைந்த ஜீவன் முக்தர்களின் அனுபவத்திற்கு வந்த பிராரப்தக் கர்மாவுடன், இப்பிறவியில் இவர்கள் செய்யும் பல்வேறு காரியங்களினால் உண்டாகின்ற ஆகாமியக் கர்மாவும் எவ்வாறு அவர்களது சஞ்சித கர்மாவாக மாறாமல் அழிகின்றது என்றால், அந்த ஜீவன் முக்தரான ஞானியை தூற்றுவோருக்கு அவரது பாவங்களும், அந்த ஞானியை அறிந்துக் கொண்டு, அவருக்கு சேவைகள் பல செய்து பூசிக்கின்றவர்களுக்கு, அவரது புண்ணியங்களும் சென்றடையும்.

அரிய மெஞ்ஞானத்தீயால் அவித்தையாம் உடல் நீறாகும்
பெரிய தூலமும் காலத்தாற் பிணமாகி விழுமந் நேரம்
உரிய சூக்கும சரீரமும் உலை இரும்புண்ட நீர் போல்
துரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தில் இறந்து போமே. (98)

## தெளிவுரை:-

ஜீவன் முக்தர்கள் அடைந்த மிக உயர் ஞானமான மெய்ஞ் ஞானத் தீயால், பல ஜென்மங்களாகப் பல உடல்கள் எடுக்கக் காரணமாக இருந்த, அறியாமையின் ஒட்டு மொத்த தொகுப்பான **காரண உடல்** எரிந்து சாம்பலாகிவிடும்.

அதுப்போலவே, இந்தப் பிறவியில் குழந்தையாக பிறக்கின்றபோது, சிறியதாக கொண்டு வந்த பரு உடல், இவர் உண்ட உணவினால் சிறிது, சிறிதாக வளர்ந்து பெரிய, பரு உடலாக மாற்றம் அடைந்து காலப்போக்கில் பிராரப்த கர்மா முடிந்ததும் பிணமாகி விழும்.

அந்த பரு உடல் பிணமான நேரத்தில், இதுவரை அந்த பரு உடலைப் பற்றிக் கொண்டு, தன்னை அறிவதற்கு சாதனமாக இருந்த மனம் என்ற சூக்ஷும உடல் கொல்லன் உலையில் பழுக்க காய்ச்சிய இரும்பு மீது ஊற்றிய நீர் உடனடியாக ஆவியாகி விடுவது போன்று, அந்த விநாடியே துரியமாகவும், பரந்த உலகமாகவும் நின்ற பிரம்மத்தில் லயமடைந்துவிடும்.

கடமெனும் உபாதி போனால் ககன ஒன்றானார் போல
உடலெனும் உபாதி போன உத்தரம் சீவன்முத்தர்
அடிமுடி நடுவுமின்றி அகம் புறம் இன்றி நின்ற
படிதிகழ் விதேகமுத்திப் பதமடைந் திருப்பரென்றும். (99)

## தெளிவுரை:-

எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்துள்ள ஆகாயம் ஒரு மண் பானையின் உள்ளேயும் இருப்பதினால், அதை **கடாகாசம்** என்று அழைக்கின்றோம்.

அந்த கடமான பானை உடைந்து விட்டால், அதன் உள்ளேயும் வெளியேயும் இருந்த ஆகாசம், ஒன்றாகவே வெளி ஆகாசத்துடன் கலந்து, ஒன்றேயான மகாகாசம் ஆகின்றதோ? அதுப்போல, இந்த **ஸ்தூல, சூக்ஷும, காரண** உடல்கள் என்ற மூன்று சரீரங்களும் இல்லாமல் போன ஜீவன் முக்தர்கள் ஒன்றேயான பரப்பிரம்மத்துடன் கலந்து விடுகின்றனர்.

இனி, அவர்களுக்கு மூன்று சரீரங்களுக்கு காரணமான தோற்றமும், நடுவும், அதன் முடிவும் இன்றி, உள்ளே, வெளியே என்ற பாகுபாடுகள் இன்றி, ஒன்றாய் நின்ற அந்த பிரம்ம சொரூபமாக நிலைப்பெற்று எந்த உடலும் இல்லாத விதேக முக்தியை அடைந்து கால, தேசங்களுக்கு அப்பாற்பட்ட எங்கும், எப்பொழுதும் நிறைந்த பிரம்மமாகவே இருப்பார்கள்.

## குறிப்பு:–

(இங்கு ஜீவன் முக்தி என்பது ஞானிகள் உடலுடன் வாழும் போது அடைவது என்றும், ஞானிகள் உடலை விட்ட பிறகு உண்டாவது விதேக முக்தி என்றும் பொதுவாக கூறப்பட்டாலும், ஞானிகள் அடைந்த உயர் ஞானமான ஆத்மஞானம் என்பது தன்னை இந்த ஸ்தூல, சூக்ஷும, காரண உடலாகக் கருத முடியாமல், சாக்ஷாத் அந்த பரப்பிரம்மமாகவே மாறி விடுகின்ற அனுபவ நிலை.

இந்நிலையில் இவர்கள் உடலுடன் இருந்தாலும், உடலற்றவர்களாகவே காணப்படுவதால் இந்த நிலைக்கு ஜீவன் முக்தி என்றாலும், விதேக முக்தி என்றாலும் ஒன்றேயாகும். இரண்டிற்கும் இவர்களைப் பொருத்தவரை பேதமில்லை. ஆனால், மற்றவர்கள் இதை அறிந்து கொள்வதற்காக அதன் வித்தியாசத்தை விளக்கி இவ்வாறு கூறப்படுகின்றது என்பதை அறியவும்.)

சொல்லிய மகனேயெங்கும் சூழ்வெளியிருக்க மண்ணைக்
கெல்லிய பின்பு தோன்றும் கிணற்றின் ஆகாசம் போலே
ஒல்லையாம் பிரம நூலாலுற்றது போலே தோன்றும்
எல்லையில் நாமெப்போதும் ஏகமென்றிருந்து வாழ்வாய். (100)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! முன்பே கூறியபடி, எங்கும், எதிலும் நிறைந்திருக்கின்ற ஆகாயத்தை, ஒரு உபாதியைக் கொண்டு பிரித்துப் பார்க்கின்ற அறியாமையைப் போன்றே, ஒருவன் கிணறு வெட்ட மண்ணை தோண்டி எடுத்த பின்பு, அதன் உள்ளே ஆகாயம் புதியதாக வந்தது போன்று கருதிக் கொள்கின்றான்.

அதுப்போல, அனாதியாக (தோற்றம் அறியாத) இந்த ஆத்ம சொரூபம் வேதாந்த சாஸ்திரங்களில் கூறப்படுவது போன்று, எங்கும், எல்லாக் காலத்திலும் நிறைந்திருக்கின்றது.

அப்படிப்பட்ட இந்த ஆத்மாவானது எப்பொழுதும் எங்கும் நிறைந்திருந்தாலும், இந்த உடல் என்ற உபாதியின் காரணமாக, அது புதிதாக உள்ளே வந்தது போன்றும், உடல் பிணமான பிறகு, அது உடலில் இருந்து வெளியே கலந்து விடுவது போன்றும் கருதுவது அனைத்தும் மனதின் அறியாமையே ஆகும்.

ஆகவே, நீ சரியான புரிதலுடன், ஒன்றேயான அந்த ஆத்ம சொரூபமாகவே நான் எங்கும், எதிலும் ஆகாயம் போன்று பரந்து, எல்லையில்லா அகண்டமாக வியாபித்து இருக்கின்றேன் என்று நிச்சயித்தவாறு அந்த ஆத்ம சொரூபத்தை அனுபவித்து வாழ்வாயாக.

கானல்நீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர் கனாவூர்
வானமை கயிற்றில் பாம்பு மலடி சேய் முயலின் கோடு
பீனமாம் தறி புமானில் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே
ஞானமெய் மகனே உன்னை நம் ஆணை மறந்திடாதே. (101)

## <u>தெளிவுரை:-</u>

அன்பனே! கானல் நீரை உண்மையான நீர் என்று கருதுவதும், ஆற்றங்கரையில் கிடக்கின்ற கிளிஞ்சல்களைக் கண்டு வெள்ளி என்று ஏமாறுவதும், கந்தர்வர்கள் நகரம் என்ற ஒரு நகரம் இருப்பது போன்று நம்புவதும், கற்பனைக்கனவிலே ஒரு ஊரைப் பார்ப்பதும், நிறமற்ற ஆகாயத்தில் நீல நிறம் இருப்பது போன்று எண்ணுவதும், கயிற்றினைக் கண்டு, பாம்பு என்று பயப்படுவதும், குழந்தைப் பெற முடியாத மலடிக்கு மகன் இருப்பது உண்மை என்று என்னுவதும், முயலுக்கு கொம்பு இருக்கின்றது என்று நம்புவதும், இரவிலே வழிகாட்டி கட்டையைக் கண்டு திருடன்

என்று பயப்படுவதும், இவ்வளவும் இந்த மனம் கற்பனையாக கற்பித்துக் கொண்ட எவ்வளவு அறியாமைகளோ? அதுப்போன்றே, இந்த பிரபஞ்சத்தை உண்மை என்று இந்த மனம் நம்புவதும் அறியாமையாகும்.

மேற்கூறிய அனைத்தையும் தன் அந்தக்கரணமான புத்தியினால் ஒருவன் விசாரித்து, அதன் உண்மைத் தன்மைகளை அறிந்துக்கொண்டு, அவைகளை பொய் என்று தெரிந்துக் கொள்கின்றானோ?

அதுப்போல, இந்த தேகாதி பிரபஞ்சத்தை புத்தியினால் விசாரித்து, அதன் உண்மைத் தன்மைகளை அறிந்துக் கொண்டு, அவைகளை பொய் என்று அடைந்த தெளிவினால் உண்டான ஞானம் மட்டுமே உண்மை மகனே.

இந்த ஆத்ம ஞானத்தினால் உண்டான ஆத்ம அனுபவம் உன்னை பிரம்மம் என்பதை உணர்த்திடும். இதை மறந்திடாதே, இதுவே நம் ஆணை.

## குறிப்பு:–

(மேற்கண்ட அனைத்தையும் விசாரித்து அறிய முற்படும்போது, கீழ்க்கண்ட அனுபவம் உண்டாகின்றது. உதாரணமாக, மங்கிய வெளிச்சத்தில் ஒருவன் கயிற்றை பாம்பு என்று எண்ணி பயப்படுகின்றான். மற்றொருவன் ஒரு விளக்கைக் கொண்டு வந்து காட்டி, அதை பாம்பு அல்ல, கயிறு என்று நிருபிக்கின்றான்.

அந்த நிரூபணத்தை இவன் நம்புவதற்குக் காரணம் இவன் ஏற்கனவே கயிற்றை அனுபவமாகப் பார்த்து உள்ளான். ஆகவே, அந்த கயிற்றை பாம்பு அல்ல என்று இவனது மனம் தீர்மானமாக ஒப்புக்கொள்கின்றது.

இதுவே, இந்த பிரபஞ்சம் உண்மையல்ல, இது மாயாத் தோற்றம் என்றும், அந்த மாயையே ஈஸ்வரன் என்றும் கூறினால், இவனது மனம் ஒப்புக்கொள்வதில்லை. கயிற்றைக்கண்ட நேரடி அனுபவம் போன்று, ஈஸ்வரனை நேரடியாக கண்ட அனுபவம் இவனுக்கு வேண்டும் என்று நினைக்கின்றான்.

இதற்குக் காரணம், நேரடியாக இவனது கண்ணினால் காணுகின்ற இந்த பிரபஞ்சம் பிரத்யக்ஷ அனுபவமாக இருக்கின்றது. அதனால், இதை நம்புகின்றவன், இதே பிரபஞ்சத்தை ஈஸ்வரனாக நேரில் இவன் பார்த்து அனுபவப் படவில்லை. அதனால், இவன் மனம் நம்ப மறுக்கின்றது.

இதில் என்ன பிரச்சனை என்றால், இவன் மனதினால் ஈஸ்வரனை எப்படி கற்பனை செய்து உருவகப்படுத்திக் கொண்டானோ, அதுப்போன்றே ஈஸ்வனைக் காண வேண்டும் என்று கருதுகின்றான்.

உருவமற்ற நிர்குண பிரம்மமான ஈஸ்வரனை, இவன் கற்பனை செய்துக் கொண்ட உருவத்தில், சகுண பிரம்மமாக காண முயன்றால், அது முடியாது. இந்த பிரபஞ்சத்தைத் தவிர வேறாக ஈஸ்வரனை உருவத்தில் பார்க்க முடியாது. இதை

சுட்டிக் காட்டவே வேதாந்த சாஸ்திரம் **ஜீவன், ஈஸ்வரன்**, இந்த **உலகம்** என்ற மூன்றையும் விசாரித்துப் பார்த்து, அதன் உண்மைத் தன்மைகளை அவன் மனதுக்கு புரிய வைக்க முயற்சிக்கின்றது.

இந்த பிரபஞ்சம் மாயையாகிய ஈஸ்வரன் என்றும், இதை காணுகின்ற இவனும் ஈஸ்வரன் என்றும், இருப்பது ஒன்றே. அது அந்த ஈஸ்வரனைத் தவிர மற்றொன்றில்லை என்றும் மனதிற்கு அறிவுறுத்தப்படுகின்றது. இதனால்தான், சத்குருநாதரும் ஆணை இட்டு இவனுக்கு நிருபிக்க வேண்டியுள்ளது.

இதிலும் சிலருக்கு குழப்பம் வருகின்றது. அது, ஈஸ்வரன் வேறு, பிரம்மம் வேறு என்று நினைத்துக் கொள்கின்றார்கள். ஈஸ்வரன் என்பது, மும்மூர்த்திகளில் ஒருவராக கருதிக் கொள்வது போன்று, சிலர் ருத்ரனை சிவன் என்று கருதிக்கொள்கின்றார்கள்.

அந்த ருத்ரனை சிவன் என்றும் ஈஸ்வரன் என்றும் குழப்பிக் கொள்வதைப் போன்றே, பரப்பிரம்மத்தை ஈஸ்வரன் என்று குறிப்பிடும் பகுதிகளை சிவன் என்று கருதிக்கொண்டு, மாயை எப்படி ஈஸ்வரன் ஆக முடியும் என்று குழம்புகின்றார்கள். எனவே, விசாரித்து தெளியாமல், குழப்பம் நீங்காது. குழப்பம் நீங்காமல் ஞானம் உண்டாகாது. ஞானம் உண்டாகாமல், ஆத்ம அனுபவம் கிடையாது.)

# 4. சந்தேகம் தெளிதல் படலம்

நரர்குழி பறித்து மெள்ள நாட்டிய நெடிய கம்பம்
உரமுறக் குத்திக்குத்தி உறைப்பிக்கும் உபாயம் போலே
பரமமாம் சொரூபம் தன்னில் பற்றிய மனோவிருத்தி
திரநிலை பெறச் சந்தேகம் தெளிதலை மொழிகின்றேனே. (1)

**<u>தெளிவுரை:-</u>**

மானிடர்கள் ஒரு கம்பத்தை நடுவதற்காக குழி பறித்து, அதில் ஒரு உயரமான கம்பத்தை நட்ட பிறகு, அந்த கம்பம் பலமாக வீசுகின்ற காற்றினாலோ, அல்லது மற்றவர்களினாலோ அசைக்கப்பட்டு நிலை தடுமாறி விழுந்து விடாமல் இருக்க, அந்தக் கம்பத்தை நட்ட குழியில் சிறிய கற்களையும், மண்ணையும் போட்டு குத்தி, குத்தி அந்த கம்பத்தைஅசையாமல் நிலையாக திடப்படுத்துவார்கள்.

இந்த உபாயத்தைப் போல, தன்னுடைய சொரூபம் அந்த பரப்பிரம்மம் என்று புரிந்துக் கொண்ட மனம், மற்ற மனோ விருத்திகளான உலக விவகாரங்களினால் அசைக்கபட்டு, நிலை தடுமாறி மீண்டும் சந்தேகத்தில் வீழ்ந்து விடாமல் இருக்க, அந்த மனதை திரமாக பிரம்ம சொரூபத்தில் நிலையாக நிற்கச் செய்ய மீண்டும், மீண்டும் விசாரித்து

தெளிவை அடைய வேண்டும் என்பதினால், இந்த சந்தேகம் தெளிதல் படலம் கூறுகின்றேனே என்று இந்த நூலாசிரியர் ஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் அருள்கின்றார்.

நற்கருத்து உடையோனாகி ஞானவானாகி நின்றோன்
மர்க்கட நியாயம் போலே மகாபூத விகாரந்தொட்டு
நிர்க்குண விதேகமுத்தி நிலைபரியந்தம் சொன்ன
சற்குரு வினைவிடாமற் சந்ததம் அநுசரித்தான்.(2)

## <u>தெளிவுரை:-</u>

தன்னுடைய சற்குருநாதர் இதுவரை கூறிய ஆத்ம ஞான தத்துவங்களான நற்கருத்துக்களை நன்றாக உள் வாங்கிக் கொண்டு, ஞானவானாகி நின்ற சிஷ்யன், எவ்வாறு ஒரு குட்டிக் குரங்கானது, தன்னுடைய தாய் குரங்கை எப்பொழுதும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, கீழே விழுந்து விடாமல்இருக்குமோ, அதுப்போல இவனும் தன் குருநாதரை விடாமல் பிடித்துக் கொண்டான்.

விக்ஷேப சக்தி என்ற, தோன்றும் சக்தியில்ஒலி (சப்தம்) அம்சமாக வெளிப்பட்ட ஆகாயம் என்ற முதல் பூதம் உண்டானது முதற்கொண்டு, இறுதியில் விதேக முக்தியை அடைந்து கால, தேசங்களுக்கு அப்பாற்பட்ட எங்கும், எப்பொழுதும் நிறைந்த பிரம்மமாகவே ஜீவன் முக்தர்கள் இருப்பார்கள், என்று கூறப்பட்ட விதேக முக்தி நிலைவரையும்,

விளக்கமாக எடுத்துரைத்த சற்குருநாதரை எப்பொழுதும் விடாமல், கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

சந்ததம் புருடன் தன்னைச் சாயைபோல் விடாமல் அன்பாம்
மைந்தனை நோக்கிச்சாட்சி மாத்திரமாய் நின்றாயோ
சிந்தையில் ஐயமெல்லாந் தீர்ந்தவோ தெளிவுனுள்ளே
அந்தரம் கலந்ததுண்டோ அநுபவம் உரை செய்வாயே. (3)

## <u>தெளிவுரை:-</u>

எப்பொழுதும் தன்னுடைய நிழல் போன்று விடாமல் பற்றிக் கொண்டிருக்கும் சிஷ்யனை நோக்கி, சத்குரு நாதர் பின்வருமாறு கேட்கத் தொடங்கினார்.

அன்பனே! காண்பவன், காட்சி, காணப்படும்பொருள் இவைகளின் தோற்றத்தையும், மறைவையும் அறிகின்றவனாகவும், ஆனால் தோற்றமும், மறைவும் அற்றவனாக இருக்கின்ற "**சாட்சி**" மாத்திரமாய் நிற்கின்றாயா?, இதுவரை கேட்ட தத்துவ விளக்கங்களில் தெளிவு உண்டாகி உன்னுடைய அனைத்து சந்தேகமும் தீர்ந்து விட்டதா? அல்லது வேறு ஏதேனும் விபரீத புத்தி கலந்து விட்டதா? இதில், உன்னுடைய அனுபவத்தைக் கூறுவாயாக! என்று வினவினார்.

என உரைத்தருளும் ஆசான் இருபதம் வணங்கியெந்தாய்
சனனவன் காட்டில் மோகத் தமத்தெழு பேதப்பேய்கள்
உனதருள் உதயவெற்பில் உபதேச வருக்கன் தோன்றி
மனவிழி தெரிய ஞான வான்கதிர் பரந்தாலுண்டோ.(4)

## தெளிவுரை:-

இவ்வாறு கூறிய சத்குருநாதரின் இரண்டு பாதங் களையும் பிடித்து வணங்கியபடி சிஷ்யன் பின்வருமாறு கூறத் தொடங்கினான்.

அடர்ந்த காட்டில் உண்டான கருமையான இருளினால், ஒன்றுமே தோன்றாத போது, சூரியன் உதித்தவுடன் உண்டான ஒளியினாலே, கானகம் முழுவதும் பிரகாசமான வெளிச்சம் உண்டாகி, அனைத்தும் தோன்றுகின்றது.

அதுப்போல ஐயனே! அடர்ந்த இருளாகிய பேத புத்திகளாகிய பேய்கள் அறிவை மறைத்துக் கொண்டு ஒன்றுமே தோன்றாதபோது, தங்களது உபதேசத்தால் உதித்த ஞான ஒளியின் பிரகாசமான வெளிச்சத்தால் அறியாமை இருள் இருந்த இடம் தெரியாமல் விலகி, அறிவு தோன்றுகின்றது என்று கூறினான்.

## குறிப்பு:-

(இந்த உலகம் உண்மை என்று மயங்குதல், இந்த உடலை நான் என்று எண்ணுதல், தானே படைப்ப வனாகவும், அனுபவிப்பவனாகவும் கருதுதல், அத்துடன் இறைவனையும், தன்னையும் பிரித்துப் பார்த்தல், அறிவு சொரூபமாக இருந்தும், அதை அறியாமல் இருத்தல் போன்ற இவைகளனைத்தும் அறிவை மறைக்கின்ற பேத புத்திகள் ஆகும்.)

மந்திர மூர்த்தி தன்னால் மாற்றிய பேய் போனாலும்
எந்திரம் எழுதிக்கட்டி இனிவரா வகை செய்வார்போல்
முந்தி உன் உபதேசத்தால் மோகம் போனாலுமையா
புந்தி நின்று உறைக்க இன்னம் புகலும் விண்ணப்ப முண்டே. (5)

## தெளிவுரை:-

மேலும், சிஷ்யன் பின்வருமாறு தொடர்ந்து கூறலானான். ஐயனே! பேய் பிடித்தவனுக்கு மந்திரவாதியைக் கொண்டு பேயை ஓட்ட வைத்து, அவனை இயல்பு நிலைக்கு மாற்றியது போன்றும், எந்திரம் எழுதி கட்டி, இனி வராமல் செய்து விடுவது போன்றும், தாங்கள் முன்பு கூறிய உபதேசத்தால் மன மயக்கம் நீங்கி, இயப்பு நிலையான சொரூபத்தில் நின்றாலும், மீண்டும் நிலை மாறாமல் இவன்

சத்துவ குணத்தில் எப்பொழுதும் இருந்துக் கொண்டு, அந்த சொரூபத்தில் தொடர்ந்து நிற்க இன்னும் சிலவற்றை அறிய ஆவல் கொண்டுள்ளேன் என்றான்.

ஆகமப் பிரமாணத்தால் அறியென்றும் வாக்குக் கெட்டாது
ஏகமாம் பிரமமென்று இதயத்தால் உணர்வாயென்றும்
சோகமாம் மனத்திற் கெட்டாச் சுயஞ்சோதி என்றும் சொன்னீர்
மோகமாம் இரண்டு சங்கை முளைத்தன பறித்திடீரே. (6)

## தெளிவுரை:-

வேத சாஸ்திர பிரமாணத்தின் மகாவாக்கிய உபதேசப்படி, “**தத் த்வம் அசி**” என்ற அந்தப் பரப் பிரம்மமாகவே ‘**நீ அதுவாகவே இருக்கின்றாய்**’ என்பதை அறிந்துக்கொள் என்று முதலில் கூறினீர்கள்,

அதன்பிறகு, அப்படிப்பட்ட ஒன்றேயான அந்த பிரம்மத்தை வாக்குக்கு எட்டாது என்றும், அதை மனதினால்தான் உணரமுடியும் என்று கூறிவிட்டு, பிறகு சோகமான மனதிற்கு எட்டாத சுயஞ்சோதி என்றும் கூறினீர்கள்.

இதில் என்னுடைய சந்தேகம் என்னவெனில், மனம் மற்றும் வாக்கு என்ற இந்த இரண்டுக்கும் எட்டாத

பரப்பிரம்மத்தை **‘நீ அதுவாகவே இருக்கின்றாய்’** என்ற மகா வாக்கியத்தினாலும், ‘மனதிற்கும் எட்டாத சுயஞ்ஜோதி’ என்றதினாலும், இந்த இரண்டையும் எப்படி உண்மை என்று ஏற்பது? இதுவே என் சந்தேகம் என்றான்.

மற்றை முப்பிரமாணத்தால் வஸ்து நிர்ணயம் கூடாதே
உற்றதோர் விடயம் பூதம் உபயம் அன்றாதலாலே
குற்றமாம் குணவிசேடம் கூடாமல் இருக்கையாலே
இற்றது வாக்குக்கெட்டாது என்பதும் அறிவாய் நீயே. (7)

## தெளிவுரை:-

அன்பனே! உன்னுடைய சந்தேகத்தில் முதல் சந்தேகமான பிரம்மம் வாக்குக்கு எட்டாது என்று ஏன் கூறப்பட்டது என்றால், வேதாந்த சாஸ்திரத்தில் ஒரு பொருளை விளக்குகின்ற பொழுது, அதை மூன்று வழிமுறைகளான பிரத்யட்ச பிரமாணம், அனுமானம், மற்றும் உவமானம் என்ற மூன்று வழிகளைக் கொண்டு விளக்க முற்படுவது வழக்கம்.

இதில் பிரத்யட்சப் பிரமாணம் என்றால், அந்த பொருளைக் கண்கூடாக நேரில் கண்டு அதைப்பற்றி அறிந்துக் கொள்வது, அனுமானம் என்றால், ஏற்கனவே அந்தப் பொருளைப் பற்றிய அறிவு இருப்பதினால், இது அதுவாகத்தான் இருக்க முடியும் என்று ஊகித்து அறிந்துக்

கொள்வது. அடுத்து, உவமானம் என்பதும் இதேப் போன்று வேறொரு பொருளை உதாரணமாகக் காட்டி, இதை விளங்க வைப்பது என்ற மூன்று வழிமுறைகள் ஆகும்.

அப்படிப்பட்ட இந்த மூன்று வழிமுறைகளையும் கொண்டு, அந்தப் பரப்பிரம்மத்தை பித்யட்ச பிரமாணமாக நேரில் பார்த்து அறிவதோ, மற்றவர்கள் கூறக்கேட்டு ஊகித்து, அனுமானத்தினால் அறிவதோ, அல்லது வேறொன்றை உதாரணமாகச் சுட்டிக் காட்டி அறிவதோ? இயலாது என்பதினால், பிரம்மம் என்பது வாக்குக்கு எட்டாதது என்று கூறப்பட்டது.

அப்படிப்பட்ட பரப்பிரம்மம் பஞ்ச பூதங்களால் உண்டான இந்திரியங்களுக்கோ, குற்றமுள்ள குண விஷேசங்களுக்கோ, பொருந்தாத பொருளாக இருப்பதினால், இந்த பரப்பிரம்மத்தை வெறும் வாக்கியத்தின் வார்த்தை களினால் வர்ணிக்க முடியாது என்பதை அறிவாயாக.

வாக்கியந் தனக்கெட்டாது வஸ்து என்று உரைத்த வேதம்
வாக்கிய விருத்தியால் அவ்வஸ்துவைக் காட்டிற்றன்றோ
வாக்கியங்களிலே மானமாவது ஏது என்றாயாகில்
வாக்கியமிரண்டும் மெய்யே மறைகள் பொய்யாது கேளாய். (8)

## தெளிவுரை:-

வாக்கிற்கு எட்டாத பரப்பிரம்ம வஸ்துவை, மகாவாக்கியத்தின் வாயிலாக '**நீ அதுவாக இருக்கின்றாய்**' என்று,அதைச் சுட்டிக்காட்டி சாஸ்திரம் உரைக்கின்றது என்றால், அந்த வாக்கியத்தின் பிரமாணம் என்னவெனில், '**நீ அதுவாக இருக்கின்றாய்**' என்ற வாக்கியத்தில் '**வாக்கிய அர்த்தம்**' பொருந்தாமல் விரோதமானால், அதன் உண்மைப் பொருள் அறியும் வண்ணம், இலக்கண விதிப்படி இலட்சணா வாக்கியத்தில் பொருள் கூறுப்படுகின்றது.

அதாவது, ஜீவனிடமும், ஈஸ்வரனிடமும் விட்டும் விடாத இலட்சணை என்ற இலக்கண விதியைக் கொண்டு, ஜீவனிடம் உள்ள சைதன்யமும், ஈஸ்வரனிடத்தில் உள்ள சைதன்யமும் ஒன்றேயான அந்த பரப்பிரம்மத்தின் சேதனமே என்பதை மட்டுமே சுட்டிக் காட்டி, "**நீ அதுவாகவே இருக்கின்றாய்**" என்று சாஸ்திரம் கூற வருகின்ற மகா வாக்கியத்திற்கு பொருளாகும் என்பதை அறிவாயாக.

இதை அறியாமல், ஜீவனின் ஸ்தூல உடலான மனித உடலையும், ஈஸ்வரனின் ஸ்தூல உடலான இந்த பிரபஞ்ச உடலையும்ஒன்று என்று இணைக்க முயன்றோமானால், அது தவறான புரிதல் ஆகும். இது இந்த வாக்கிற்கு பொருந்தாது எனலாம்.

இதனையே வாக்கிற்கு எட்டாதது என்று சாஸ்திரம் கூறுவது உண்மையே அன்றி பொய்யாகாது என்பதை நீ அறிவாயாக.

தன்பதியல்லாப் பேர்கள்தமை அல்ல அல்ல என்றாள்
அன்பனைக் கேட்ட நேரம் அவள் வெட்கி மௌனமானாள்
என்பது போல நீக்கி இதன்று இதன்று எனச் சேடித்த
பின் பரப்பிரமந் தன்னைப் பேசாமற் காட்டும் வேதம். (9)

## <u>தெளிவுரை:-</u>

வெகு நாட்களாக சந்திக்காத தோழிகள் இருவரும் ஒரு விழாவில் ஒன்றாக சந்தித்துக் கொண்ட பொழுது, ஒருவள் தன் தோழியைக் கண்டு உன் திருமணத்திற்கு என்னால் வர இயலவில்லையாதலால், உன் கணவனை அறிந்துக் கொள்ள விரும்புகின்றேன் எனக் கூறினாள்.

அதன்பிறகு, அவள் தோழியிடம் இந்த ஆடவனா உன் கணவர் என்றும், அல்லது அவரா என்றும் பலரை விசாரிக்க,

இவளும் அவர்கள் என் கணவர் ‘**அல்ல**’, ‘**அல்ல**’ என்றே மறுப்புக் கூறி வந்தவள், தன் கணவனைக் காட்டி இவரா? என்று கூறியதுமே ‘**ஆம்**!’ என்ற சம்மதத்துடன் வெட்கித் தலை குனிந்து மௌனமானாள்.

அதுப்போன்று, வேதாந்த சாஸ்திரமும் அந்த அழியாத “**பரப்பிரம்மமே நான்**” என்று கூற வரும்பொழுது, இந்த ஸ்தூல சரீரம் நான் அல்ல, ஐந்து புலன்கள் நான் அல்ல, மனம், புத்தி போன்ற அந்தக்கரணங்கள் நான் அல்ல, பஞ்ச பிராணன்கள் நான் அல்ல! என்று ஒவ்வொன்றாக, அனைத்து தத்துவங்களையும் ‘**அல்ல**’, ‘**அல்ல**’ என்று மறுத்துக்கூறி, முடிவில் எல்லா ஜீவர்களின் புத்திகளிலும் உறைகின்ற அழிவற்ற “**கூடஸ்தன் நான்**” என்று சுட்டிக் காட்டியவுடன் ‘**ஆம்**!’ என்ற சம்மதத்துடன் மௌனமாகி விட்டது.

முந்திய சங்கை தீர மொழிந்ததை அறிந்து கொள்வாய்
பிந்திய சங்கை தீரப் பேசும் உத்தரம் நீ கேளாய்
இந்திரியங்களு இராசன் இதயமாம் அதின் எண்ணங்கள்
புந்தியும் மனமுமென்றே புறத்தகத்து உலாவியாடும். (10)

## <u>தெளிவுரை:-</u>

முன்பு உனக்கு உண்டான முதல் சந்தேகமான வாக்கிற்கு பிரம்மம் எட்டுமா? எட்டாதா? என்பதை அறிந்துக்கொண்டாய் அல்லவா?

அடுத்து, இரண்டாவது சந்தேகமான மனதிற்கு பிரம்மம் எட்டுமா? எட்டாதா? என்பதற்கு இப்பொழுது பதில் கூறுகின்றேன் கேட்பாயாக!

முதலில், மனம் என்பதை என்ன என்று அறிந்துக் கொண்டால் மட்டுமே, அப்படிப்பட்ட மனதிற்கு பிரம்மம் எட்டுமா, எட்டாதா? என்பதை எவ்வாறு புரிந்துக் கொள்ளலாம் என்பது விளங்கும்.

அனைத்து வெளிப்புற இந்திரியங்களான கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு, தோல் மற்றும், உட்புற இந்திரியங்களானமனம், புத்தி, சித்தம், அஹங்காரம் போன்று பிரதி பிம்பிக்கின்ற பிம்பங்கள் அனைத்திற்கும், ஆதாரமான மூலப் பொருளாகவும், சுத்த அறிவாகவும் ஒரு அரசன் போன்று ஆத்மா இருக்கின்றது.

இந்த ஆத்மாவின் அறிவில் பிரதிபிம்பிக்கின்ற பிம்பங்களே **சிதாபாசன்** என்ற ஜீவனுக்கு உள்ளும், புறமும் வெளிப்பட்டு அனைத்தையும் அறிகின்ற இந்திரியங்களான மனம், புத்தி போன்றவைகளாக இருக்கின்றது.

உன்முகம் போற் கண்ணாடிக்குள்ளொரு முகங்கண்டாற் போற்
சின்மய வடிவின் சாயை சித்துப்போல் புத்தி தோன்றும்
நின்மல விருத்தியந்த நிழல் வழியாய் உலாவும்
தன்ம நன்மகனே இத்தைத்தான் அன்றோ ஞானமென்பார். (11)

## தெளிவுரை:-

சிஷ்யனே! உன்முகத்தை போன்று கண்ணாடிக்குள்ளே மற்றொரு பிரதிபிம்ப முகத்தைக் காண்பதுப் போல, பரமாத்மாவின் நிழல் (அறிவு) பிரதிபிம்பித்து, ஜீவனுக்கு சுயபுத்தி போன்று தோன்றுகின்றது.

கலங்கமில்லாத ஈஸ்வர விருத்தி பிரதிபிம்பித்து, ஜீவனில் சிதாபாசன் என்றவாறு உலாவுகின்றது. இவ்வாறு, பிரதிபிம்பித்த பிரம்மத்தின் அறிவுதான் தன்னுடைய அறிவு என்பதை அறிந்துக் கொள்வதைத்தான் "**ஞானம்**" எனப் படுகின்றது.

## குறிப்பு:–

(அதாவது, **அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள்** என்ற மூன்றில் (திரிபுடி), அறிபவனாகிய மனம், அறிவு என்ற ஆத்மாவின் மூலமாக, அறியப்படுகின்ற பொருள்களான இந்திரியங்களைக் கொண்டு அனைத்தையும் அறிகின்றது என்று அறிவதே "**ஆத்ம ஞானம்**" என்று கூறப்படுகின்றது.)

உருக்கிய தராநீர் நாநா உருவங்களானாற் போல
விருத்திகள் கடபடாதி விடயமாய்ப் பரிணமிக்கும்
அருப்பல விடயமெல்லாம் ஆபாசன் தோற்றுவிக்கும்
இருட்டினில் விளக்கும் கண்ணும் இல்லாமல் பொருள் காணாதே.(12)

## தெளிவுரை:-

உலோகங்களை உருக்கிய தாரா நீரைப் பல விதமான வடிவங்களில் செய்யப்பட்ட அச்சுக்களில் ஊற்றி, விதவிதமான உருவங்களில் அந்த உலோகத்தை வார்த்து எடுப்பதுப் போன்று, பல விதமான எண்ணங்களில் உண்டான, பல்வேறு விசயங்களின் வடிவத்தைப் பற்றிக் கொண்ட மனமானது, குடம், துணி போன்று, கற்பித்துக் கொண்டதற்கு ஏற்ப அதனதன் வடிவத்தை எடுத்துக் கொள்கின்றது.

இவ்வாறு பலவிதமான வடிவங்களை வடிவமைத்துக் கொண்ட, ஆத்மாவின் பிரதி பிம்பமான ஆபாச ஜீவன், பல்வேறு எண்ணங்களினால் மனதினை உண்டாக்கிக் கொள்கின்றது. இது எவ்வாறெனில், இருளில் கண்களும், வெளிச்சமும் இன்றி, எந்த ஒரு பொருளையும் எவ்வாறு காண முடியாதோ? அதுப்போல, இந்த ஆபாச ஜீவனும், மனமும் இன்றி இந்த உலகத்தைக்காண முடியாது.

**ஆபாச ஜீவன்** என்றால், பிரம்மத்தின் பிரதிபலிப்பு என்று பொருள்.

எரிகின்ற விளக்கால் கண்ணால் இருட்பொருள் காணல் வேண்டும்
தெரிகின்ற பரிதி காணச் சென்றிடில் கண்ணே போதும்
விரிகின்ற சகத்தைக் காண விருத்தியும் பலமும் வேண்டும்
புரிகின்ற விருத்தி யொன்றேபோது மெய்ப்பொருள் காண்போர்க்கே. (13)

## தெளிவுரை:-

இருளிலுள்ள பொருட்களைக் காண வேண்டுமானால், அதற்கு, கண்களும், விளக்கு வெளிச்சமும் வேண்டும். அதுவே, சூரிய ஒளியைக் காண வேண்டுமானால், கண்கள் மட்டும் இருந்தால் போதும்.

அதுப்போல, பரந்து, விரிந்திருக்கின்ற இந்த உலகத்தை உண்மை போன்று காண வேண்டுமென்றால், அந்தக்கரண விருத்தியான மனமும், ஜீவனாகிய சிதாபாசனும் வேண்டும்.

அதுவே, ஆத்மாவான மெய்ப்பொருளைக் காண்பதற்கு விசாரணை செய்து, தெளிவடைந்த மனம் மட்டுமே, தன் உண்மை சொரூபமாக ஆத்மாவைக் காண முடியும்.

அதாவது, "**பிரம்மம் சத்தியம் - ஜகத் மித்யா**" என்ற பொருள் விளங்க வேண்டுமானால், தெளிந்த மனதிற்கு பிரம்மம் சத்தியமாகவும், இந்த உலகம் மித்யாவாகவும் காணப்படும்.

தெளிவடையாத மனதிற்கு இந்த உலகம் உண்மையாகவும், பிரம்மம் எட்டாதது போன்றும் காணப்படும்.

## குறிப்பு:—

**மித்யா** என்றால், இருப்பது போன்று காணப்படும், ஆனால், உண்மையில் அது இல்லை எனப் பொருள்.

விருத்தியும் பலமும் கூடும் விகாரமே மனமென்பார்கள்
கருத்தெழு விருத்தி வேண்டும் கணக்கினால் மனத்திற்கெட்டும்
வருத்திய பலமாமிந்த மனத்திற்கெட்டாது கண்டாய்
அருத்தம் இப்படியென்று ஐயம் அகன்று நீ தெளிந்திடாயே. (14)

## தெளிவுரை:-

அந்தக்கரணத்தின் விருத்தியான பல எண்ணங்களும், ஜீவனில் பிரதி பிம்பித்த, ஆத்மாவின் பிரதிபிம்பமான சிதாபாசமும் ஒன்று சேர்ந்தக் கலவையே "**மனம்**" எனப்படும்.

இதில், வேதாந்த சாஸ்திரங்களை சத்குருநாதரின் வாக்கால் கூறக்கேட்டு, அந்தப் பாடங்களில் உண்டான சந்தேகங்களை அவரிடம் விசாரித்து தெளிவடைந்த மனம் (ஜீவன்) ஆத்மாவை (பிரம்மத்தை) அறிந்துக் கொள்ளும்.

அதுவே, இதுபோன்ற வேதாந்த விசாரத்தில் ஈடுபடாத, சிதாபாசனுடன் கூடியுள்ள மனதிற்கு (ஜீவனுக்கு) பிரம்மத்தை அறிந்துக் கொள்ள முடியாது. அது எட்டாதப் பொருளாகவே இருக்கும்.

அதாவது, விசாரணை செய்து அதன் உட்பொருளை அறியாத **'மனதிற்கு பிரம்மம் எட்டாது'** என்பதை அறிந்து, உன்னுடைய சந்தேகம் நீங்கி, தெளிவை அடைவாயாக.

வஞ்சகமில் பரமார்த்த குருவே சொன்ன
வழிகள் அறிந்தேன் இனியோர் வசனங் கேளீர்
சஞ்சலமற்று அகண்ட பூரணமாய்ச் சித்தந்
ததாகாரம் ஆவதன்றோ சமாதி யோகம்
உஞ்சலை யொத்து அலைவது தன் சுபாவமாகி
ஒருகணத்தில் பல உலகாய் உதிக்கும் இந்த
நெஞ்சகம் வஸ்துவில் அசையா நிவாததீப
நிலையடைவது எப்படியோ நீர் சொல்வீரே. (15)

## <u>தெளிவுரை:-</u>

சத்குருதேவா! இதுவரை எந்த ஒன்றையும் மறைக்காமல், வெளிப்படையாக தாங்கள் எடுத்துக் கூறிய அனைத்து வழிமுறைகளையும் அறிந்துக் கொண்டேன்.

இனியும் ஒரு சந்தேகமும் உள்ளது ஐயனே!, அதையும் கூறுகின்றேன் அருள்கூருந்து கேட்பீராக.

எந்த ஒரு சஞ்சலமும் இன்றி, அகண்ட பரிபூரணமாய் இருக்கின்ற உள்ளம், அந்த பிரம்ம சொரூபத்தில் நிலைத்திருப்பதை சமாதியோகம் என்கின்றபோது, பலமான காற்றில் சிக்கிக் கொண்ட இலவம் பஞ்சு இங்கும், அங்கும் அலைவது போன்று, இந்த மனமானது, ஒரு கணத்தில் பல உலகங்களை சிருஷ்டி செய்துக் கொண்டு, அதில் இங்கும், அங்கும் அலைவதை தன் சுபாவமாகக் காணும்போது, காற்றில்லாத இடத்தில் அசையாமல் எரிகின்ற தீபச்சுடரைப் போன்று, இந்த மனமும் அசையாமல் நிற்கின்ற நிலை பெறுவது எவ்வாறு? என்று நீர் கூறுவீராக.

கருது மனோ குண மூன்றாம் மூன்றிலொன்று
கதித்தெழுந்தான் மற்றிரண்டும் கரந்து நிற்கும்
தரும மிகும் சத்துவம் மேலானபோது
சன்மார்கமான தெய்வ சம்பத்துண்டாம்
மருவு இரசோ குணமாகில் உலக தேக
வாதனையாம் சாத்திர வாதனையுமாகும்
அருமகனே தமோகுணம் மேலான போதில்
அசுரசம்பத்துண்டாகும் அறிந்து கொள்ளே. (16)

## <u>தெளிவுரை:-</u>

மனதிற்கு மூன்று குணங்கள் உள்ளது. அவைகள், **சத்துவகுணம், ரஜோகுணம்,** மற்றும் **தமோகுணம்** என்பனவாகும்.

ஒரு குணம் மேலோங்கி நின்றால், மற்ற இரண்டு குணங்களும் கீழே அடங்கி இருக்கும். இதில், சத்துவ குணம் மேலோங்கி நின்றால், சன்மார்க்கமான மன அமைதியும், தெய்வீக சம்பத்துக்களான பக்தி, அன்பு, கருணை, கொல்லாமை, எப்பொழுதும் ஈஸ்வர சிந்தனை, அந்த ஈஸ்வரனுக்கும், தனக்கும் உள்ள ஆழமான உறவை வலிமைப்படுத்தும் நிஷ்காமிய கர்மங்களான குரு சேவை, ஈஸ்வர சேவை உண்டாகுதல், விசாரத்தில் ஈடுபடுதல் போன்ற அனைத்து நற்பண்புகளும் உண்டாகும்.

இதில், ரஜோ குணம் மேலோங்கி நின்றால், உலக வாசனைகள், இந்த உலகத்தாரோடு ஒட்டி வாழ விரும்பி, தன்னுடைய உடலுக்கு ஒப்பனை, பாதுகாப்பு, ஏற்படுத்திக் கொள்ளுதல், மற்றும் தன்னுடைய உற்றார், உறவினர்களின் சந்தோசத்திற்காக பல கடமைகளைச் செய்து பொருள் ஈட்டுவதும், ஆலய வழிபாடுகள் மற்றும் தெய்வீகம் சார்ந்த காமிய கர்மங்களைச் செய்து உறவுகளைச் சந்தோசமாக வைத்துக் கொள்வதும், சத்குருவை தேடி அடைந்து, ஆன்மீக முன்னேற்றம் அடைதல், மற்றும் சாஸ்திரங்களை சத்குருநாதரின் வாக்கில் கேட்டும், கற்றும் அறிந்து கொள்வதும், இத்துடன் சமூக சேவைகள் செய்து, அதில் தானும் சந்தோசம் அடைவதும் உண்டாகும்.

தமோ குணம் மேலோங்கி நின்றால், அனைத்தையும் தானே அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணங்கள், அதனால், மற்றவர்களைப் பற்றி அக்கரை இல்லாமல் அவர்களுக்கு தீமைத் தரக்கூடிய காரியங்களை சிறிதும் கவலையின்றி

செய்தல், யாருக்கும் எந்த விதமான உதவியும் செய்யாமை, பயமின்றி பல பாதகமானச் செயல்களைச் செய்துக் கொண்டு, உழைக்காமல் அதர்ம வழியில் பொருள் ஈட்டுதல். சந்தேகம், சஞ்சலம், சோம்பல், பொறாமை போன்ற பல்வேறு அசுர குணத்தினை அடைதல்.

இவைகளே மனதின் மூன்று குணங்களாகும் என்பதை அறிவாயாக.

மனது சத்துவ சொரூபம் மற்றிரண்டும்
வந்து கலந்தன அவற்றை மாற்றினார் போம்
தனது சன்மார்கத்தை விடாதிருந்த போது
தமோகுணமும் ரஜோகுணமும் சமிக்கும் பின்னைக்
கன பரிணாமம் சலனம் போம் போனக்கால்
களங்கமற்று நின்ற ஆகாசம் போலும்
நினதுளம் அப்படியாம் அப்பிரமத்து ஒன்றாய்
நிருவிகற்ப சமாதியிலே நிற்குந்தானே. (17)

## <u>தெளிவுரை:-</u>

மனதின் இயல்பான சுபாவமே, **சத்துவ குணம்** ஒன்று மட்டுமே ஆகும். மற்ற ரஜோ, தமோ குணங்களாக இருக்கும், இந்த இரண்டு குணங்களும் உலக விவகாரங்களில் ஈடுபட்டதின் வாயிலாக வந்து ஒட்டிக் கொண்ட குணங்களாகும்.

சத்துவ குண நற்பண்புகளை மேலோங்கச் செய்தால் மட்டுமே, மற்ற இரண்டு குணங்களும் தானாகவே கீழே தாழ்ந்து போய்விடும்.

இவ்வாறு சன்மார்க்கமான நற்பண்புகளை விடாமல் கடைப் பிடித்துக் கொண்டு, நிஷ்காமிய கர்மத்தில் எந்த விதமான பிரதி பலனும் எதிர்ப் பார்க்காமல், அனைத்தையும் ஈஸ்வர காரியமாகக் கருதி, செய்துக் கொண்டு வந்தால், தமோகுணமும், ரஜோகுணமும் மாறி, மனதின் உண்மையான சத்துவகுணம் மேலோங்கும்.

இதன்பிறகு, இந்த மனதின் தேவையற்ற எண்ணப் பதிவுகளினால் உண்டான பல விசயங்களில், ஒரு விசயத்தி லிருந்து, மற்றொரு விசயத்திற்கு அடிக்கடி தாவிக் கொண்டிருக்கின்ற மனச் சலனங்கள் நீங்கி, எதிலும் ஒட்டாத களங்கமற்று நின்ற ஆகாயம் போன்று, உன்னுடைய உள்ளம் தெளிந்து, எந்த எண்ணங்களுமற்ற நிர்விகல்ப சமாதியில் உன் சொரூபமான அந்த பரப்பிரம்மத்தில் ஒன்றி நிற்கும்.

களங்கமற்ற கண்ணாடி தன்முன் வேறோர்
களங்கமற்ற கண்ணாடி காட்டும்போது
விளங்கி அதன் மயமாகி அபேதமாகி
விகற்பமின்றி நிருவிகற்பமானாற் போல
அளந்தறியப்படா விபுவாய்ச் சத்தாய்ச் சித்தாய்
ஆனந்தமாம் பிரமத்து ஐக்கியமான
உளந்தெளிந்தபடி இருந்தால் உலகமெங்கே
உலைவெங்கே என்று சங்கை ஒழிந்திடாயே. (18)

## தெளிவுரை:-

இரண்டு முகம் பார்க்கும் கண்ணாடிகளைக் கொண்டு, ஒன்றுக்கு நேர் எதிராக, மற்றொன்றைக் காட்டும்போது, அந்த இரண்டு கண்ணாடிகளிலும் எந்த ஒரு பிம்பமும் தோன்றாமல், இரண்டும் ஒன்று போலவே அதன் இயல்பில் ஒன்றாகி, அவைகளுக்குள் எந்த விதமான பேதமும் உண்டாகாமல் தெளிந்த பளிங்கு போன்று கண்ணாடியைக் காண்கின்றோம்.

அதுப்போல, அளவிடமுடியாத அண்ட சராசங்களாக விரிந்துக் கொண்டு, அறிவாய், ஆனந்தமயமாய் இருக்கின்ற, ஒன்றேயான பரப்பிரம்மத்துடன், நிர்விகல்பமான, கலங்கமற்ற, தெளிந்த உள்ளமானது இரண்டறக் கலந்து விட்டால், இந்த **உலகமும், மனமும்** இல்லாமல் போய்விடும் என்பதை அறிந்து, உன் சந்தேகத்தை நீக்குவாயாக.

ஏகமாய் மனம் இறந்தாற் சீவன் முத்தர்
இருக்குமட்டும் பிராரத்தம் எதினால் உண்பார்
போகமானது புசித்துத் தொலைப்பதன்றோ
புசிப்பதென்றால் மனந்தானும் போனதன்றே
சோகமாம் மனமிறந்தாற் போகமில்லை
தோன்றுமெனின் முத்தரென்று சொலக்கூடாதே
மோகமாம் இது தெளியக் குருவே நன்றா
மொழிந்தருள்வாய் தெளிவதன்றோ முத்திதானே. (19)

## தெளிவுரை:-

நிர்விகல்ப நிலையான தெளிந்த மனதைக் கொண்டு எப்பொழுதும் ஒன்றேயான ஈஸ்வர சிந்தனையில் மனம் ஒன்றி இருக்கின்றவரே ஜீவன் முக்தர் என்கின்ற போது, இவரது பரு உடல் (ஸ்தூல சரீரம்) இருக்கும் வரையிலும் பிராரப்த கர்மாவின் வசத்தில் வருகின்ற இன்ப, துன்பங்களை எதனால் அனுபவிப்பார்?

அனுபவித்து தீர்ப்பது என்பது, எது நடந்தாலும், அதை ஈஸ்வர சித்தமாகக் கருதி, மனம் கலங்காமல், தன் காரியங்களை நிஷ்காமியமாக செய்துக் கொண்டு, அதன் விளைவாக வருகின்ற சாதக, பாதகங்களைக் கண்டு மனம் கோணாமல், சத்துவ குணத்தில் நின்று, அவைகளை ஏற்றுக் கொள்வது என்கின்றீர்கள்.

அப்படியானால், சோகமான மனம் இல்லாத காரணத்தினால் இவருக்கு போகமில்லை எனக் கூறினாலும், இவருடைய மனமும், உலக விவகாரங்களில் அடங்கியும், அடங்காமலும் சேஷ்டை செய்துக்கொண்டு இருக்கின்றது அல்லவா? அவர்கள் எப்படி ஜீவன் முக்தர்களாக இருக்க முடியும்?

அதுவே, இவரும் என்னதான் நற்கர்மங்களை நிஷ்காமியமாகச் செய்தாலும், அந்த கர்மங்களின் வாயிலாகப் பல எண்ணங்கள் தோன்றி, விகல்பமான மனம் உண்டாகி, அதன் வாயிலாக இன்ப, துன்பங்களை அனுபவிப்பதைக் காணும்போது, இவருக்கும் மனம் அடங்கவில்லை என்றல்லவா கருத வேண்டும்? மேலும், மனம் பிரம்மத்துடன் அடங்கி, தன்னை பிரம்ம சொரூபம் என்று தெளிந்தவனல்லவா ஜீவன் முக்தன்?

ஐயனே! இதுப்போன்ற மனமயக்கத்தைக் கொடுக்கக் கூடிய சந்தேகங்களை தாங்கள் நீக்கி, தெளிவை கொடுத்தருளும்படி வேண்டுகின்றேன்.

மனநாசம் சொரூப மென்றும் அரூப மென்றும்
வகுத்துரைப்பார் இருவகையாக வரும் இவற்றில்
வினவாத சீவன்முத்தரிடத்தில் ஒன்றும்
விதேகமுத்தரிடத்தில் ஒன்றும் மேவுங்கண்டாய்
தனதான சத்துவமாய் மனம் சேடித்துத்
தமசு ரசசுகள் நசித்தல் சொரூப நாசம்
அனகாசத்து வந்தானும் இலிங்க தேகம்
அடங்கும் போதடங்குதலே அரூப நாசம். (20)

## தெளிவுரை:-

அன்பனே! ஏற்கனவே கூறியது போன்று, மனம் என்பது அந்தக்கரணத்தின் விருத்தியான பல எண்ணங்களின் மொத்த வடிவாக ஜீவனும், அந்த ஜீவனில் பிரதி பிம்பித்த, சித்தின் (அறிவின்) பிரதிபிம்பமான சிதாபாசமும் ஒன்று சேர்ந்தக் கலவையே ஆகும்.

ஆக, இந்த மனமானது கண்ணிற்குத் தெரிகின்ற உருவமுடன் கூடிய ஸ்தூல உடலாகவும், கண்ணிற்குத் தெரியாத உருவமற்ற சூக்ஷும உடலாகவும் என இரண்டாக இருப்பதினால், இதை நாசம் செய்வது என்பது, ஸ்தூல பரு உடலை அழிப்பது, ‘**சொரூப நாசம்**’ என்றும், சூக்ஷும உடலை அழிப்பது, ‘**அரூப நாசம்**’ என்றும் இருவகையில் செய்யலாம்.

அதாவது, ஒரே மனதை கண்ணிற்குத் தெரிகின்ற நிலையில், ஸ்தூல உடல் மனம் என்றும், கண்ணிற்குத் தெரியாத நிலையில், சூக்ஷூம உடல் மனம் என்றும் இரண்டாக வகுத்து, அந்த மனதை இல்லாமல் செய்தல் என்பதாகும்.

இதில், உருவமுடன் கூடிய மனம் சத்துவகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்ற முக்குணங்களையும் பொருந்தியவைகளாக ஸ்தூல உடல் எடுத்து, சாதாரண மக்களிடம் காணப்படுவதால், இந்த மனதை உருவமுள்ள மனம் (ஸ்தூல உடல்) எனக் கொள்ளலாம்.

இதில், ரஜோகுணம், தமோகுணம் என்ற இரண்டு குணங்களும் இன்றி, சத்துவகுணத்தை மட்டுமே தன் இயல்பாகக் கொண்ட நிர்விகல்பமான மனம் (ஸ்தூல உடல்) உலக விவகாரங்களில் ஈடுபட்டுக் கொண்டு, உயிரோடு வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற ஜீவன் முக்தரிடம் காணப்படும்.

இத்தகைய ஜீவன் முக்தர்கள் வாழும் போதே தன்னுடைய ஸ்தூல உடல் அபிமானம் இன்றி, எப்பொழுதும் தன் சுய சொரூபமான ஆத்மாவில் இணைந்து நிற்பதினால், இவர்களது ஸ்தூல உடலான மனம் "**சொரூப நாசம்**" அடைந்து விடுகின்றது.

மேலும், ஜீவன் முக்தர்கள் சரீர (உடல்) அபிமானம் இல்லாதவராக, இந்த உலக விவகாரங்களில் ஈடுபட்டுக் கொண்டு, உயிரோடு வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற

காலத்திலேயே விதேக முக்தர் என்ற தகுதியையும் அடைகின்றார்.

இந்த ஸ்தூல உடலை மறந்து, சொரூப நாசம் செய்து விட்டு, எப்பொழுதும் ஒன்றேயான அந்த ஈஸ்வர நிஷ்டையில், தன் சுய சொரூபத்தில் நிலையாக நிற்கின்றவர் தன்னுடைய பிராரப்தம் முடிந்தவுடன், இந்த பரு உடலையும் பிணமாக இங்கேயே விட்டு விட்டு, நிர்விகல்பமான சூக்ஷும மனதைக் கொண்டு, அந்த பரப்பிரம்மத்துடன் இரண்டறக் கலந்து விடுகின்ற விதேக முக்தர் என்பதினால், இவரது சூக்ஷும மனம் "**அரூப நாசம்**" அடைகின்றது என்றும் அறிவாயாக.

சுத்தமாம் சத்துவமே உண்மையாகும் துகளிருள்
போனான் மனமென் சொல்லும் போம்போம்
வர்த்தமானத்தில் வந்த உணவை உண்பார்
வருவதும் போவதும் நினைந்து மகிழார் வாடார்
கர்த்தராம் அகந்தையை விட்டு அகர்த்தராகிக்
கரண விருத்திகள் அவத்தை காண்பாராகி
முத்தராய் இருக்கலுமாம் புசிப்பும் கூடும்
முட்டிலை என்று அறிந்து சங்கை மோசிப்பாயே. (21)

## <u>தெளிவுரை:-</u>

சுத்தமான சத்துவகுணமே மனதின் உண்மையான இயல்பு ஆகும். மற்ற இரண்டு குணங்களான ரஜோகுணமும், தமோகுணமும் சேர்ந்துதான் பல்வேறு விகல்பமான எண்ணங்களுக்கு காரணமாக அமைகின்றது.

இந்த இரண்டு குணங்களும் இல்லாது போனால், **மனம்** என்ற சொல்லும் இல்லாது போகும்.

இவ்வாறு, மனம் சுத்த சத்துவ குணத்தில் மட்டும் இருந்துக்கொண்டு, விகல்பமற்ற ஏகா(ஆ)த்ம சிந்தனையான நிர்விகல்ப நிலையே, ஜீவன் முக்தர்கள் நிலையாகும்.

இப்படிப்பட்ட ஜீவன் முக்தர்கள் எப்பொழுதும் நிகழ் காலத்தில் மட்டுமே இருப்பார்கள். வந்த உணவை உண்பார்கள். எதிர்காலத்தையும், இறந்த காலத்தையும் கருதாமல், இனி வருவதையும், போனதையும் நினைத்து சந்தோசமோ, வருத்தமோ அடைய மாட்டார்கள்.

அனைத்தையும் நானே செய்கின்றேன் என்ற சரீர அபிமானம் கொண்ட, கர்த்ருத்துவ புத்தியான அகந்தை இல்லாமல், எல்லாம் அவன் செயலே என்ற ஈஸ்வர நிஷ்டையிலே, ஏகாந்தமாக (அந்த ஒன்றே முடிவு என்று) இருந்துக்கொண்டு, அகக்கரணங்களுக்கும், புறக்கரணங்க ளுக்கும் சாட்சியாக, எப்போதும் முக்தராகவே இருப்பார்கள்.

இத்தகைய ஜீவன் முக்தர்கள் பிராரப்த கர்மத்திற்கு ஏற்றவாறு உண்பதும், உறங்குவதும், கர்மங்களை செய்வதும், என தடைகள் எதுவும் இன்றி, அனைத்தையும் ஆனந்தமாக அனுபவிப்பார்கள் என்பதையறிந்து, நீ உன்னுடைய சந்தேகம் தெளிவாயாக.

விவகார வேளை எல்லாம் சமாதி என்றால்
விகற்பமன்றோ மனமலைந்து விடாதோ விட்டால்
அவதானம் நழுவுமன்றோ என்றாயாகில்
அதற்கொரு திட்டாந்தம் கேள் ஆசைக்கொண்டு
நவமாகப் பரபுருடன் தன்னைக்கூடி
நயந்தசுகம் அநுபவித்த நாரி நெஞ்சம்
தவமாக மனைத்தொழில்கள் செய்யும் போதும்
தழுவி அநுபவித்த சுகம்தனை விடாதே. (22)

## தெளிவுரை:-

ஐயனே! ஜீவன் முக்தர்கள் உலக விவகாரங்களில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்ற காலங்களை எல்லாம் எண்ணங்கள் அற்ற நிர்விகல்ப சமாதி நிலையுடன் ஒப்பிட்டு, எப்பொழுதும் பிரம்ம நிஷ்டனாக இருக்கின்றார்கள் என்றால், இவர்களது உலகக் காரியங்களினால் விகல்பமான பல்வேறு எண்ணங்களால் மனம் அலை பாய்ந்து விடாதா?

இவ்வாறு அலைபாய்கின்ற மனம் எப்படி சொரூப நிஷ்டையில் நிலைப்பெறும்?

அன்பனே! இதுதான் உன்னுடைய சந்தேகம் எனில், இதற்கு ஒரு உதாரணம் கூறுகின்றேன் கேட்பாயாக.

திருமணமான பெண் ஒருத்தி தன் ஆசைக் கணவனைத் தழுவி, அவனுடன் கூடி அடைந்த, சுகமான புது அனுபவத்தை, தன் உள்ளத்தில் எப்பொழுதும் இருத்திக்

கொண்டு, பல குடும்ப விவகாரங்களை, அவள் சந்தோசமாக செய்வதுப் போன்றே, ஞானியும் பரப்பிரம்மத்தைக் கூடி அடைந்த, சுகமான அந்த ஆத்மானுபவத்தை, தன் உள்ளத்தில் எப்பொழுதும் இருத்திக்கொண்டு, பல உலக விவகாரங்களை சந்தோசமாக செய்து வருவார்.

தேகத்தன் அலனாகி அகர்த்தனாகிச்
சீவனின்றிப் பிரமமாய்த் தெளிந்த முத்தன்
போகத்தை உண்பன் என்றால் கர்த்தாவாமே
பூரணமாம் அகர்த்தனுக்குப் போகமுண்டோ
சோகத்தை அறுத்தருளும் குருவே இந்தத்
துகளறுக்க வேண்டுமென்று சொன்னாயாகில்
மாகர்த்தன் மாபோகி மாத்தியாகி வகை
மூன்றாய் அவரிருக்கும் மகிமை கேளாய். (23)

## தெளிவுரை:-

ஐயனே! தேகம் நான் அல்ல, அந்த தேகத்தினால் செய்யப்படுகின்ற காரியங்களுக்கு உண்டான கர்த்தா நான் அல்ல என்பதில் தெளிவாகவும், பிரம்ம சொரூபமாகவும் இருக்கின்ற ஜீவன் முக்தர் அந்த தேகத்தின் வாயிலாக உண்டாகின்ற சுக, போகங்களை அனுபவித்துக் கொண்டு, கர்த்தா நான் அல்ல என்று உள்ளத்தில் கருதுவதால் அவர் அனுபவிக்கின்ற சுக, போகங்கள் இல்லாமல் போய்விடுமா?

அவரை கர்த்தா (செயல்படுபவன்) என்றுதான் கருத வேண்டுமே ஒழிய, பூரணமான அகர்த்தா (செயலற்றவன்) என்று எவ்வாறு கூற இயலும்?

ஐயனே! என்னுடைய பிறவித் துன்பத்திற்குக் காரணமான அறியாமையை நீக்கி, என்னை இரட்சித்து, இந்த துன்பத்தை அறுக்க வேண்டும் என்றான் சிஷ்யன்.

அன்பனே! உன்னுடைய அறியாமைத் துயரத்தை அறுக்க வேண்டும் என்று கூறுவாயாகில், அதற்கு ஜீவன் முக்தர்கள் எவ்வாறு மூன்று விதமாக செயல்பட்டு பிறவித் துன்பத்தை தீர்த்தார்கள் என்றும் அறிவாயாக.

அவர்களை **'மாகர்த்தன்'**, **'மாபோகி'**, **'மாத்தியாகி'** என மூன்று வகைகளில் அறியலாம். அத்தகைய மூன்று விதமானவர்களின் மகிமைகளைக் கூறுகிறேன் கேட்பாயாக.

செய்கையும் செய்விக்கையும் அற்றிருக்கும் காந்தச்
சிலை மலைமுன் இம்புகள் சேட்டிக்குமா போல்
செய்கையும் செய்விக்கையும் அற்றிருக்கும் என்முன்
சடமான உலகெல்லாம் சேட்டை செய்யும்
மெய்கலந்த இந்திரிய விகாரரூப
விவகார விருத்திக்கும் விருத்திதானாய்
மெய்கலந்த சமாதிக்கும் சாட்சியே நான் வெயில் போல்
என்றுறைத்தவனே விபுமாகர்த்தன். (24)

## தெளிவுரை:-

அன்பனே! இந்த மூன்றுவிதமான ஜீவன் முக்தர்களில் '**மாகர்த்தன்**' என்பவரைப் பற்றிக் கூறுகின்றேன் கேட்பாயாக.

செயலை தானே செய்வதும், செயலை மற்றவர்களால் செய்ய வைத்தலும் என இரண்டு காரியங்களையும் செய்ய முடியாத காந்தக்கல் என்ற மலையின் முன்னால், இரும்புப் பொருட்கள் எவ்வாறு, தனக்குத் தானாகவே இங்கும், அங்கும் நகர்கின்ற சலனத்தை அடைகின்றதோ? அதுப்போன்று, செயல் செய்வதும், செய்ய வைத்தலும் என இரண்டு காரியங்களும் அற்ற ஜீவன் முக்தர்களின் முன்னால், இந்த சடமான உடலும், உலகமும் தனக்குத்தானே சலனமடைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும்.

ஜீவன் முக்தர்களின் உடலின் புற இந்திரியங்களும், அந்தக் கரணங்களும் அனைத்து உலக விவகாரத்தில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தாலும், சத்துவ குண விருத்தியும்,

நிர்விகல்பமான தன் சொரூபத்திலும், எப்பொழுதும் அசையாமல் சாட்சியாக இருந்துக் கொண்டிருப்பார்கள்.

எவ்வாறு, சூரியன் ஆனது, இந்த அனைத்து உலகங்களுக்கும் சாட்சியாக மட்டுமே வேடிக்கைப் பார்த்துக் கொண்டு, தன் சுயப்பிரகாச வெளிச்சத்தை எங்கும் வியாபகமாக (பரவலாக) பரப்புகின்றதோ, அதுப்போல, இந்த ஜீவன் முக்தர்கள் சாட்சியாக மட்டுமே அனைத்தையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு, தன் ஞான ஒளியின் பிரகாசத்தை இந்த உலகம் முழுவதும் பரவலாகப் பரப்புகின்றனர். இவ்வாறு செயலற்று செயல் செய்பவன் "**மாகர்த்தன்**" என்ற ஜீவன் முக்தராவார்.

அறுசுவையின் குணங்குற்ற அசுத்தம் சுத்தம்
அபத்தியம் பத்தியம் என ஊணாய்ந்திடாமல்
பொறுமையுடன் கிட்டினதைக் காட்டுத் தீப்போற்
போகங்கள் புசிப்பவன் மாபோகியாகும்
சிறிது பெரிதுகள் தனது அந்நியங்கள் நன்மை
தீமைகள் சேரினும் படிகச் செயல் போல் சித்தம்
வெறிதிருக்கும் அவனே மாத்தியாகியாவான்
விரதம் இம்மூன்றுடையவரே வீடுளோரே. (25)

## <u>தெளிவுரை:-</u>

அன்பனே, இனி மாபோகியைப் பற்றிக் கூறுகின்றேன் கேட்பாயாக. அறுசுவை உணவுகள் என்றோ, அது உடலுக்கு நன்மை, தீமைகள்கொடுக்கும் உணவுகள் என்றோ, இது சுத்தம், இது அசுத்தம், இது பத்தியம், இது பத்தியமற்றது என்ற, எந்த வேறுபாடுகளும் இல்லாமல், கிடைத்த உணவை உண்பார் இவர்.

இது எவ்வாறு எனில், காடுகளில் பிடித்துக் கொண்ட, காட்டுத் தீயானது காணப்படுகின்ற அனைத்து சருகுகளையும் பற்றிக் கொண்டே சென்று, செடிகள், கொடிகள், மரங்கள், மற்றும் காணப்படுகின்ற பல்வேறு உயிரினங்கள் என்று எந்த வேறுபாடுகளும் இன்றி, ஒன்று விடாமல் தன் பசிக்கு இரையாக்கிக் கொள்வதுப் போன்று, இவரும் கிடைத்த உணவு எதுவாகினும், அதை இன்னது என்று ஆராயாமல், அனைத்தையும் தன் பசிக்கு இரையாக்கிக் கொள்வார்.

அப்பபடிப்பட்ட இந்த ஜீவன் முக்தர் "**மாபோகி**" என்று அழைக்கப்படுகின்றார்.

அடுத்து, மாத்தியாகி என்ற ஜீவன் முக்தரைப் பற்றிக் கூறுகின்றேன் கேட்பாயாக. எவ்வாறு ஒரு பளிங்கு போன்று நிறமற்ற ஸ்படிகமானது, தன்னருகே உபாதியாக எந்த நிறமுள்ள மலரைக் கொண்டு வந்தாலும், அந்த மலரின் நிறத்தை தன் மீது ஏற்றி வைத்துக் கொண்டு, அந்த நிறத்திற்கு தன்னை மாற்றிக் கொண்டு பிரதி பிம்பித்துக் காட்டும் குணமுடையது.

ஆனால், தன் மீது ஏற்றி வைக்கப்பட்ட அந்த மலரின் நிறத்தினால் ஸ்படிகம் கலங்கமடையாமல், தன் இயல்புத் தன்மை மாறாமல், எப்பொழுதும் போல இருக்குமோ, அதுப்போல, ஜீவன் முக்தர் தன்மீது மற்றவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட மனோ விகாரங்களான இது சிறியது, இது பெரியது என்றோ, தனக்கு இது நல்லது, இது கெட்டது என்றோ எதையும் சாராமல், அந்த ஸ்படிகத்தின் செயல் போல, இவரது மனம் எதைப் பற்றினாலும், அதனால், பாதிக்காதவராக, தன் இயல்பான சொரூபத்தில் எப்பொழுதும் இருப்பார்.

இவரே "**மாத்தியாகி**" என்று அழைக்கப்படுகின்றார். இவ்வாறு இந்த மூன்று விரதங்களை கொண்டவர்கள் வீடுபேறு அடைந்த ஜீவன் முக்தர்களாவர்.

மெய்யும் கொண்டு பிராரத்தம் தருவிதி வழி நின்றிடவும்
உய்யும் கர்மிகளுக்கு அநுகுணமா உறுதொழில் செய்திடவும்
செய்யும் செய்கை முடிந்தவனென்று உரை செப்புவதெப்படியோ
நையும் துன்பம் அகற்றிய குருவே நலமா அருள்வீரே. (26)

## தெளிவுரை:-

குரு நாதா! உடலோடு கூடியிருக்கின்ற ஜீவன் முக்தர்கள் பிராரப்தக் கர்மா என்ற விதியின் வழி இவர்களது நன்மை, தீமைகளைக்கொண்டு இன்ப, துன்பங்களாக அனுபவித்து கொண்டிருக்கும்போது, பிறவிப்பெருங்கடலைக் கடக்க வழி கேட்டு, மோக்ஷத்தை விரும்பி வருகின்ற முமுக்ஷுக்களுக்கு, நல்வழி காட்ட விரும்பி, உயர் வேதாந்த சாஸ்திரங்களை எளிய உபதேசங்களாகவும், உரை நடைப் பாடங்களாகவும், உபன்யாசங்களாகவும், மற்றவர்களுக்கு கொண்டு சேர்க்கின்ற பல காரியங்களை செய்துக் கொண்டிருக்கின்ற, இவர்களது செயல்களை, செயலற்றது (கிருத கிருத்தியன் என்று கூறுவது எவ்வாறு முடியும்?

ஐயனே! சகல துக்கங்களையும் நீக்கி அருள்கின்ற தாங்களே, இதையும் நீக்கி நலம் அருள வேண்டும்.

ஆடவர் செய்தொழில் மூவகையாகும் அவித்தை வசத்துறுநாள்
ஏடணை மமதை அகந்தை உளார்க்கே இகபர விவகாரம்
வீடணுகுவம் எனும் இச்சையுள்ளார்க்கே வித்தை படிப்பதெல்லாம்
பாடன் மிகும் தொழிலால் பலனுண்டோ பரிபூரணமானால் (27)

## தெளிவுரை:-

பொதுவாக, உலக விவகாரங்களில் ஈடுபட்டுள்ள மக்கள் மூன்று விதமாகச் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் **அறியாமை, ஆசை, அகங்காரம்** கொண்டவர்களாக, இந்த உலக விவகாரங்களில் பலத் தொழில்களை விரும்பிச் செய்துக் கொண்டிருப்பார்கள்.

சாஸ்திரம் வகுத்த மனிதனின் **புருஷார்த்தம்** என்ற **அறம், பொருள், இன்பம் வீடுபேறு** என்ற இந்த நான்கில், முதல் மூன்றும் அனைவருக்கும் விருப்பம் என்றாலும், இறுதியாக உள்ள வீடுபேறு என்ற பிறவாப் பெரு நிலையை விரும்புகின்றவர்களுக்கே, இந்த சாஸ்திர விசயங்களை கற்பதும், கேட்பதும், மற்றவர்களுக்கு கற்றுக் கொடுப்பதும், உபதேசிப்பதும் போன்ற எந்தவிதமான பிரதி பலனும் கருதாதக் காரியங்கள் காணப்படும்.

இப்படிப்பட்ட இவர்கள் வீடுபேறு அடைய விரும்பும் ஆர்வமுள்ள முமுக்ஷுக்களுக்கு மேன்மையான மோக்ஷத்தை கொடுப்பதற்காக “**யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**”

என்பதற்கேற்ப, அனைவரும் ஆனந்தமுடன் வாழ, இவர்களாகவே வலியவந்து, வேசாஸ்திரம் கூறுகின்ற உண்மையை மற்றவர்களுக்கு எப்படியாவது கொண்டு சேர்க்க விரும்பி செயல்படுகின்றார்கள்.

மேலும், பிரம்ம நிஷ்டர்களான பரிபூரண ஞானிகள் இதனால் எந்த ஒரு ஆதாயத்தையும் அடைவதில்லை. அவர்களுக்கு அது தேவையும் இல்லை.

குரவர் சிகாமணியே கேளீர் நீர்கூறிய வழியொக்கும்
பரமுடன் இகமும் இழந்தவரன்றோ பழகுவர் மெய்ஞானம்
விரவு முயற்சியின் மீண்டவர் அதை இனி வேண்டுவரோ வேண்டார்
சிரவண மனனாதிகள் வேண்டாவோ சித்தம் உறைத்திடவே. (28)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! தலைச்சிறந்தவரே, இனியொரு விண்ணப்பம் கேட்பீராக, தாங்கள் கூறியதில் பரப்பிரம்மத்துடன் எப்பொழுதும் இணைந்து இருப்பவர்களான ஜீவன் முக்தர்கள் இந்த உலகத்தின் மீதான ஆசைகளும், பரலோகங்களான (சொர்க்க லோகம், பிரம்ம லோகம், பித்ரு லோகம்) போன்ற மற்ற லோகங்களின் மீதான ஆசைகளும், பிறப்பு, இறப்பு

என்ற சம்சாரத்தை அழிக்காது என்பதை அறிந்தவர்கள் ஆவார்கள்.

ஆதலால், முக்தியைத் தராத இவைகள் எதன்மீதும், இவர்களுக்கு விருப்பம் இன்றி, வீடுபேறு அடைய வைக்கும் மெய்ஞான வழியை மட்டும் விரும்பி ஏற்பர்.

அதனால், பல விதமான உலக காரியங்களையும், பல தொழில்களையும் செய்துக் கொண்டிருந்தவர்கள் இனி அவைகளை விரும்பாமல், அதில் இருந்து விடுபட்டு, விடுவது போன்று, எப்பொழுதும் சொரூப நிஷ்டனாக இருக்கின்ற இவர்களுக்கு இதுப் போன்ற வேதாந்த சாஸ்திரங்களை **கேட்டல், சிந்தித்தல்** போன்ற காரியங்கள் சித்தம் திடப்பட இனியும் அவசியம்தானா?

கிளர் மகனே கேள் தத்துவமறியார் கேட்டல் செயக் கடனே
தளர்வறு சிந்தித்தலின் முயல்வார் சிலர் சந்தேகங்களுள்ளார்
தெளிதலில் நிற்பார் விபரீதப் பேய்தீரா வாதனையோர்
வெளியுருவாய் அறிவாய் நிறைவாயினர் வேண்டுவது ஒன்றுண்டோ. (29)

## தெளிவுரை:-

ஆத்ம சொரூபமாக ஒளிருகின்ற மகனே கேள், வேதாந்த விசாரத்தின் தத்துவங்களை அறியாமல் இருக்கின்ற

பாரமர மக்கள் இது போன்ற வேதாந்த சாஸ்திரங்களை நிச்சயமாக கேட்க (சிரவணம்) வேண்டியது கடமையாகும்.

அடுத்து, இவ்வாறு கேட்ட சாஸ்திர விசயங்களில் சந்தேகம் உண்டானால், கேட்டவைகளைப் பற்றி சிந்தித்து (மனனம்), சந்தேகம் தெளிவதற்கு முயற்சிக்க வேண்டும்.

மேலும், சிலர் சாஸ்திர விசயங்களைக் கேட்டதினாலும், அதைப் பற்றிய சிந்தனை உண்டானதாலும், விபரீத புத்தியினால் ஏற்பட்ட சந்தேகங்கள் அனைத்தும் நீங்கி, விசாரித்து தெளிவு பெற்று, தன் சுய சொரூபத்தை அறிந்துக்கொண்டு, அந்த சொரூபத்தில் நிலைத்து நிற்கின்ற (நிதித்யாஸனம்) நிலையை அடைவர்.

ஆகவே, எங்கும், எப்பொழுதும் நிறைந்துள்ள பரந்த ஆகாசம் போன்று, சுத்த அறிவாகவே எங்கும், எப்பொழுதும் நிறைவாய், தன் சொரூபத்தில் நிற்கின்ற ஜீவன் முக்தர்களுக்கு இனி அறிவதற்கு ஒன்றும் இல்லை.

ஐயா கேளீர் தத்துவ ஞானியும் அஞ்ஞானிகள் போலே
செய்யா நின்றேன் கண்டேன் உண்டேன் சென்றேன் எனலாமோ
பொய்யாம் விபரீதங்கள் அவர்க்குப் போயின வென்றீரே
மெய்யாம் பிரம விகாரம் இதன்றே வெளியாய் உரையீரே. (30)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! இனியும் கேட்பீராக, சாஸ்திரங்களைக் கேட்டறிந்த ஜீவன் முக்தர்களான தத்துவ ஞானிகளும், மற்ற அஞ்ஞானிகளைப் போன்றே, அதைச் செய்தேன், இதைச் செய்தேன், **கண்டேன், உண்டேன், உறங்கினேன்** என்று கூறுவதைக் காணும்போது, பொய்யான விபரீத புத்திகளான இந்த உலகம் உண்மை என்று மயங்குதல், இந்த உடலை நான் என்று எண்ணுதல், தானே படைப்பவனாகவும், அனுபவிப்பவனாகவும் கருதுதல், இறைவனையும், தன்னையும் பிரித்துப் பார்த்தல், அறிவு சொரூபமாக இருந்தும், அதை அறியாமல் இருத்தல் போன்ற அறிவை மறைக்கின்ற அனைத்தும் இவர்களுக்கு நீங்கி விட்டதாக எவ்வாறு கருதுவது?

ஐயனே! உண்மையான பிரம்ம விசாரம் இதுவென்று வெளிப்படையாக கூறி அருள்வீராக.

ஓய்ந்த கனாவிற் கண்ட பழங்கதை ஓதுவன் வாதனையால்
ஆய்ந்தறிவுற்றவன் எப்படி செப்புவன் ஆபாசனுமாகான்
மாய்ந்த தன்னுடல் வேமளவும் விண்ணவன் மனிதனெனப் படுவான்
வீய்ந்த சிதாபாசன் போமளவும் விவகாரந் தொடரும். (31)

## <u>தெளிவுரை:-</u>

ஒருவன் தூக்கத்தில் கனவு கண்டு விழித்து எழுந்தவுடன், தான் கண்ட கனவைப்பற்றி, பலக்கதைகளாக அனைவரிடமும் எடுத்துக் கூறுவான்.

இவ்வாறு, இவன் கண்ட கனவில் உண்டான, பல அனுபவங்களை தன் தூக்கத்தில் உண்டானது என்று இவன் அறிந்துக் கொண்டதினால், அவைகளை உண்மையென்று கருதாமல், கற்பனையானது என்று அறிந்தே அனைவரிடம் கூறி மகிழ்வான்.

இதுப்போன்று, ஜீவன் முக்தர்களும் தன் ஆத்ம சொரூப திட நிச்சயத்தால் பரப்பிரம்மத்தின் பிரதி பிம்பமான ஆபாச ஜீவனாகத் தன்னை கருதாமல், அந்த பிரம்மமாகவே தன்னைக் கருதிக் கொண்டு, தன் விழிப்பு நிலை அனுபவங் களையும் கனவு நிலை அனுபவங்களைப் போன்றே கற்பனையாகக் கருதுவதால், தன் தற்போதைய உடலான விழிப்பு நிலை உடலைக் கூட இறந்து போனதாகக் கருதிக் கொண்டு, சரீர அபிமானம் இல்லாமல் இதுப்போன்று

கூறுவதால், விபரீத புத்தி உடையவர்கள் என்று கருத முடியாது.

மேலும், அந்த விண்ணவனாகவே (பிரம்மமாகவே) தன்னை இவர்கள் கருதுவதால், அழியக்கூடிய தன் உடல் மீது அபிமானம் இன்றி இருப்பர். இவர்களது ஸ்தூல (பூத) உடல் அக்கினியில் எறிக்கப்படும் வரை, மனிதன் என்றே மற்றவர்களால் கருதப்படுவார்கள்.

இவ்வாறு பிரம்மத்தின் பிரதி பிம்பமான சிதாபாசன் (ஜீவன்) பூத உடலை விட்டு நீங்கும் வரை இது போன்ற விவகாரங்கள் இவர்களிடம் தொடரும்.

ஆனால் ஐயா குருவே காண்பது அசத்தியமென்றாலும்
நானா விவகாரம் துயரலவோ ஞான சுகந்தருமோ
போனா லன்றோ நன்றாம் நிட்டை புரிந்திடல் வேண்டாவோ
தானாம் நிட்டை புரிந்தாற் செய்கை தவிர்த்தவன் எப்படியோ. (32)

**<u>தெளிவுரை:-</u>**

ஆனாலும் ஐயனே! குருநாதா, இந்த ஜீவன் முக்தர்கள் இந்த உலக விவகாரங்களில் காண்கின்றதை அனைத்தையும் கற்பனையாகவே கண்டாலும், இவர்கள் ஈடுபடுகின்ற பலவிதமான விவகாரங்கள் துயரத்தையல்லவா உண்டாக்கும்,

இதனால், ஞான நிஷ்டனாக சொரூபத்தில் நிலைத்து நிற்கின்ற சுகம் தருமா?

இதுபோன்ற உலக விவகாரங்கள் இவர்களிடம் இருந்து போனால் அல்லவா? இவர்களும் தன் சொரூபத்தில் எப்பொழுதும் நன்றாக நிலைத்து நிற்க முடியும்.

அதைவிடுத்து, இவர்கள் தாங்களாகவே வலிய வந்து,சாஸ்திரங்களை **கேட்டல், சிந்தித்தல்**, பிறகு **தெளிதல்** என்று எதையாவது செய்துக் கொண்டும், இவைகளை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறிக் கொண்டும், இந்த உலகில் பல விவகாரங்களில் ஈடுபட்டுக் கொண்டும் இருக்கின்ற இவர்களை செயலற்றவன் (கிருத கிருத்யன்) என்று எப்படி கூற முடியும்?

தெரிதரு மகனே ஆரம்பத்தொடு தீரும் விவகாரம்
உரிய தியானமும் விவகாரங்களும் உள்ள தொழிலன்றோ
துரிய பரம்பொருளானவர் வேறொரு தொழில் செய்வதுமுண்டோ
அரிய சமாதிகள் பழகுவனேல் அவன் ஆருடனுமன்றே. (33)

## <u>தெளிவுரை:-</u>

ஞானத்தெளிவு பெற்ற மகனே! வீடுபேறு அடைய வேண்டும் என்ற ஆர்வத்தினாலேயே, அதற்கான வழிமுறைகளைத் தேடி, தக்க சத்குருவை சந்தித்து, சாஸ்திரங்களை இவர்கள் கேட்கத் (சிரவணம்) தொடங்கி,

கேட்டதினால் உண்டான பல சந்தேகங்களை (மனனம்) தீர விசாரித்து, சத்குருவின் வாயிலாக அதில் தெளிவு (நிதித்யாஸனம்) பெற்றவருக்கு அவரது உலகியல் விவகாரங்கள் அனைத்தும் தீரும்.

இருப்பினும், உரிய தியானமும், தன் இயல்பான பிரம்ம சொரூபத்தில் நிற்பதற்கான மற்றவிவகாரங்களும் இவர்களிடம் உள்ள தினசரிதொழில் ஆகும்.இதில், எல்லையில்லா பேரானந்த நிலையில், தன்னை பிரம்ம சொரூபமாக அறிந்துக் கொண்ட ஜீவன் முக்தர்கள் வேறு ஒன்றை அற்ப சுகத்திற்காக தேட வேண்டிய தேவை என்ன உள்ளது?

மேலும், இந்த அகண்ட பிரபஞ்சத்தையே, ஒன்றேயான பிரம்ம சொரூபமாக தன்னில் காண்கின்ற இவர்கள்,அனைத்தையுமே தன் சொரூபத்தின் இயல்பாகவே எப்பொழுதும்காண்பார்கள்.

இதைவிடுத்து, மற்ற அரியசமாதிகளான சவிகற்ப சமாதி, நிர்விகற்ப சமாதி போன்ற சமாதிகளை பழகிக் கொண்டு, தன் சொரூபத்தை அறிய முடியாதவன், தன் இயல்பில் சகஜமாக இருக்க முடியாதவன் ஆருட ஞானியும் அன்று.

## குறிப்பு:—

(ஆருடன் என்பது, தானே பரப்பிரம்மம் என்பதை உணர்ந்து, தன் முன் காணப்படுகின்ற இந்த முழு பிரபஞ்சமும் (மாயா அல்லது ஈஸ்வரன்) தன்னிலிருந்து தோன்றியது என்பதில் அசைக்க முடியாத உறுதி நிலைக் கொண்டவர்கள் என்று பொருள்.)

**பகவத்கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறுவது:—**

எப்பொழுது புலன்களால் அனுபவிக்கக்கூடிய விசய, சுகங்களான புறப் பொருட்கள் மீது பற்று வைக்காமல், அவைகள் எனக்கு பிரயோஜனமில்லை என்று மனம் நினைக்கிறதோ? அத்துடன் அதன் சம்பந்தமான செயல்களாகிய கர்மங்களிலும் பற்றுக் கொள்வதில்லையோ? அப்பொழுது, அவனது அனைத்து சங்கல்பங்களையும் விட்டு விடுகின்றான். அதாவது, ரஜோகுணத்திலிருந்து, சத்துவகுணத்திற்கு உயர்ந்து விடுகின்றான்.

எந்தப் பொருட்களிலும் சுகம் இல்லை என்ற உறுதியான மன நிலை ஒருவனுக்கு வந்து விட்டால் அவனே **‘யோகரூடன்’** ஆவான்.

வைராக்கியமும், முமுக்ஷுத்வமும் தீவிர நிலையை அடைய பெற்றவன்தான் யோகரூடனாக உயர்வடைகிறான்.

மனதிலிருந்து உலக போகப் பொருட்களின் மீதுள்ள ஆசைகள் முழுவதுமான சென்று விட்டவுடன் இந்த நிலையை அடைகிறான்.

பொதுவாக, மனதின் சங்கல்பத்தினால்தான் ஆசைகள் எழுகின்றன. விருப்பமான புத்தியுடன் ஒன்றை நினைத்துக் கொண்டிருப்பதே, இங்கு **சங்கல்பம்** எனப்படுகின்றது, இந்த சங்கல்பமே ஆசையாக உருவெடுக்கின்றது.

புறப் புலன்களால் அனுபவிக்கப்படும் பொருட்களில், அவைகளை வேண்டும் என்ற ஆசை இல்லாமல் இருக்கின்ற அறிவுடையவன், செயல்களில் பற்றில்லாமல் இருக்கின்றான்.

இந்த மூன்றும் இல்லாத நிலையை அடைந்தவர்களே யோகரூடர்கள். "**தன்னுடைய தனிமை நிலையை தண்டனையாக நினைக்காமல், சாதனமாக நினைக்கும் மனநிலை அடைந்தவனே யோகரூடன் என்ற உயர்ந்த ஞானியாவான்**". (பகவத் கீதை 6 - 4)

உத்தம குருவே ஆரூடமாய் ஒருதொழில் அற்றவருள்
சித்தம் அடங்கு தியானாதிகள் சிலர் செய்குவதென் என்றால்
இத்தலம் மருவும் பிராரத்தப் பிரிவு எப்படி அப்படியே
முத்தரும் வெகுவிதம் ஆகுவர் என்பது முன்னே சொன்னேனே. (34)

## <u>தெளிவுரை:-</u>

உத்தம குருவே! தானே பரப்பிரம்மம் என்பதை உணர்ந்து, அதிலேயே இரண்டறக் கலந்தவர்களான ஜீவன் முக்தர்கள் அந்த பேரானந்த சுகத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கும்போது, மற்ற அற்ப சுகத்தைக் கொடுக்கக் கூடிய எந்த ஒரு தொழிலும் இல்லாத சிலர் மனதை அடக்க நினைத்து, தியானம், ஜபம், போன்றவைகளை செய்வது ஏன்?

அன்பனே! இவர்கள் தியானம், ஜபம், பூஜைகள், பாராயணம், பக்தி பாடல்கலைப் பாடி பஜனை செய்வது போன்ற பல விதமான செயல்களை செய்வது ஏன் எனில், இந்தப் பிறவியில் இவர்கள் கொண்டுவந்த பிராரப்த கர்மா, இவர்களை எப்படி கொண்டுச் செல்கின்றதோ? அதற்கேற்றவாறு, ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக நடந்துக் கொள்வார்கள் என்று ஏற்கனவே கூறியுள்ளேனே.

நல்லவனே கேள் உலக உபகாரம் ஞானிகள் விவகாரம்
அல்லது வேறொரு பெறுபேறும் இலையதனாற் பிணியுமிலை
வல்ல சிருட்டி முதற்பல தொழிலால் வரு புண்ணிய பாவம்
எல்லவருக்கும் அநுக்கிரகம் செயும் ஈசன் அடைந்திலனே. (35)

## <u>தெளிவுரை:-</u>

நல்லவனே கேள், இந்த உலக மக்கள் அனைவருக்கும் நன்மை செய்யும் பொருட்டு, ஞானிகளின் விவகாரங்கள் இருக்கும். ஞானிகள் ஒரு காரியத்தில் ஈடுபடுகின்றனர் என்றால், அதற்கு ஒரே ஒரு காரணம் மட்டுமே இருக்கும். அது மற்றவர்களுக்கு நன்மைகளை கொடுப்பதற்காகவே இருக்கும்.

இந்த நன்மையானது, மரணமில்லாப் பெரு வாழ்வு வாழலாம் கண்டீர் என்றவாறு, ஒவ்வொருவரையும் அழைத்து, இதைவிட பெறும் பாக்கியம் வேறு ஒன்றும் இல்லையென்று, தன்னை நாடி வருகின்றவர்களுக்கு விருப்பு, வெறுப்பு இன்றி அனைவருக்கும் அனுக்கிரகமாக உபகாரம் செய்து, பல்வேறு பிறவிகளாகத் தொடர்ந்த பிறவிப் பிணிகளை முற்றிலும் நீக்கி விடுவார்கள். இதன் பொருட்டு இவர்களுக்கு எந்த கர்ம பலன்களும் உண்டாவதில்லை.

அது எவ்வாறெனில், இந்த ஜீவர்கள் இதற்கு முன்பு பல்வேறு பிறவிகளாகப் பலக் காரியங்களைச் செய்து சேர்த்த பாவ, புண்ணியங்களை, அவர்கள் அனுபவித்து தீர்க்கும்

விதமாக, எந்த விதமான விருப்பு, வெறுப்பும் இன்றி, கர்ம பலன்களாக அனுக்கிரகம் செய்கின்ற வல்லவன் (ஈஸ்வரன் - கர்மபல தாதா) சிருஷ்டியில், தன் பொருட்டு எந்த பலன்களையும் இந்த ஈசன் அடைவது இல்லை.

ஈசனுமாய் அருவாய் உருவாகி எழுந்தரும் குருவே
ஈசனும் ஞானியும் ஒப்பென்றீரே எப்படி ஒப்பென்றால்
ஈசனும் ஞானியும் மமதை அகந்தை இகந்ததினாலொப்பாம்
ஈசனுமாம் பல சீவருமாம் உலகெல்லாம் இவனாமே. (36)

## தெளிவுரை:-

ஐயனே! ஈசனைப்போன்று உருவமற்றவராகவும், உருவமுடன் இந்த தேகத்தில் எழுந்தருளியிருக்கும் குருநாதரே! ஈசனும், ஞானியும் ஒன்று என்று எப்படி அறிவது?

அன்பனே! ஈசனும், ஞானியும் ஒன்று என்று கூறுவது எப்படியெனில், '**எனது**' என்ற மமதையும், '**நான்**' என்ற அகந்தையும் அற்ற நிலையில் இவர்கள் இருவரும் ஒன்றேயாவர். மேலும், இந்த ஞானியானவர் அகங்காரமும், மமகாரமும் நீங்கியவராதலால், இந்த முழு பிரபஞ்சத்தையும், இதில் உள்ள பல்வேறு ஜீவர்களையும், தன்னிலிருந்து வேறாக எண்ணாதக் காரணத்தினால் ஞானியும், ஈஸ்வரனும் ஒன்றேயாகும்.

எல்லா சீவரும் இவனாம் என்றீர் இவன்தான் முத்தியடைந்து
எல்லாச்சீவரும் முத்தி பெறாமல் இருப்பானேன் ஐயா
எல்லாச்சீவரும் வெவ்வேறானால் இவனெல்லா மலனே
எல்லாப் பொருளும் உரைத்தருள் குருவே இதை நீர் மொழீயீரே. (37)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! ஜீவன் முக்தர்கள் அனைத்து ஜீவர்களையும் தன்னிலிருந்து வேறுபடுத்தி பார்க்காத காரணத்தினால், எல்லாம் இவரே என்று இருக்கும் பொழுது, இவர்தான் முக்தர் ஆயிற்றே, பிறகு ஏன்? மற்ற எல்லா ஜீவர்களும் முக்தி அடையாமல் இருக்கின்றனர். இதற்குக்காரணம் என்ன ஐயா?

அல்லது, எல்லா ஜீவர்களும் வெவ்வேறாக இருக்கக் கூடுமானால், இவர் தன்னையே எல்லாமாகக் கூறுவது முடியாதல்லவா?

ஆகவே, அனைத்துக்கும் பொருள் கூறி தெளிவு படுத்திய குருவே, தாங்கள் இதற்கும் அருள் கூர்ந்து விடையளிப்பீரே.

அகம் எனும் ஆன்மா பூரணம் ஏகம் அனேகவிதம் சீவர்
அகம் எனும் அந்தக்கரண உபாதிகள் அளவிலை ஆதலினால்
சகம் முழுதுங் குளிர்சந்திரன் ஏகம் சலசந்திரர் பலராம்
சகமதில் ஏரி குளம் சிறுகுழி சால் சட்டி குடம் பலவால். (38)

## <u>தெளிவுரை:-</u>

அன்பனே! அகம் (நான்) என்ற ஆத்மா முழுமையானது. ஒன்றேயான அதில் வேறுபாடுகள் கிடையாது. ஜீவர்கள் அனேகர் உள்ளது போன்று தோன்றுவது அளவில்லாத அந்தக்கரண உபாதிகளே (மனம், புத்தி, சித்தம்) காரணம் ஆகும்.

இது எவ்வாறெனில், இந்த உலகம் முழுவதற்கும் ஒரே குளிர்ந்த சந்திரன் இருந்தாலும், அது பல்வேறு (உபாதிகளில்) நீர் நிலைகளான ஏரி, குளம், குட்டை, சால், சட்டி, மற்றும் குடம் என்ற பல நீர் நிலைகளில் பிரதி பிம்பிக்கும்போது, அதன் சாயல்களாக பல சந்திரன்கள் இருப்பதுப் போன்று காணப்படுகின்றது.

அதுப்போன்று, ஒன்றேயான பரமாத்மா, பல்வேறு அந்தக்கரணங்களில் (மனம்) பிரதி பிம்பிக்கும்போது, அதன் சாயலாக பல்பேறு ஜீவாத்மாக்களாக காணப்படுகின்றது.

சட்டி குடங்களில் ஒன்று நசித்திடின் அதினுட் சலசந்திரன்
ஒட்டும் முதற் சந்திரனொடுகூடும் ஒழிந்தவை கூடாவே
கட்டும் உபாதி நசித்திடு சீவன் காரண ஆன்மாவில்
கிட்டும் ஐக்கியம் உபாதி கெடாதவர் கேவலம் ஆகாரே. (39)

## <u>தெளிவுரை:-</u>

சட்டி, குடங்களில் பிரதி பிம்பிக்கின்ற சந்திரன் தோன்றாமல் இருக்க வேண்டுமெனில், குடத்தில் உள்ள நீரை வெளியேற்றி விட வேண்டும். அப்பொழுது, அதில் தோன்றிய சந்திரன் மீண்டும் விண்ணில் உள்ள சந்திரனோடு ஒன்றாகி விடும். அதாவது, சந்திரன் பிரதி பிம்பிக்கக் கூடிய உபாதியான நீர் அந்த குடத்தில் இல்லை. அதனால், சந்திரனின் பிரதி பிம்பம் அங்கு இல்லை.

மற்ற குளம், ஏரி, ஆறு, கடல் போன்ற நீர் நிலைகளில் பிரதி பிம்பித்த சந்திரன்கள், விண்ணில் உள்ள சந்திரனோடு ஒன்றாகாமல், தோன்றிக் கொண்டுதான் இருக்கும். அதற்குக்காரணம், சந்திரன் பிரதி பிம்பிக்கக்கூடிய உபாதிகளான நீர் நிலைகள் இருக்கும் வரை, அவைகளில் தோன்றிக் கொண்டுதான் இருக்கும். அதுப்போல, மனம் என்ற ஒன்று இருக்கின்றவரை இந்த உலகம் என்ற ஒன்றும் தோன்றிக் கொண்டுதான் இருக்கும்.

கண்ணிற்குத் தெரியாத மனம், கண்ணிற்குத் தெரிகின்ற உடல் எடுத்துக் கொண்டு அனைத்தையும் அனுபவிக்கின்றது. மனம் என்பது ஜீவன் என்று ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

அதுப்போல, ஜீவன் பல்வேறு பிறவிகளாக சேர்த்துக் கொண்ட சம்ஸ்காரங்களான எண்ணப்பதிவுகளை மனம் என்ற அந்தக்கரணமான சித்தத்தில் பதித்துக்கொண்டு, அந்த ஆசைகளை, அனுபவித்து தீர்க்க விரும்பி பரு உடலை எடுத்துக்கொண்டு மிருகமாக, பறவையாக, மனிதனாக பல உடல்கள் எடுத்துக் கொண்டு பிறக்கின்றது.

இதில், ஒரு மனித உடலை எடுத்த அந்தக்கரணமான மனம், அரிதாக கிடைத்த இந்த மனித உடலைப் பயன்படுத்திக் கொண்டு, பல்வேறு ஆசைகளை அனுபவித்த பொழுது, உண்டான இன்ப, துன்பங்களில் பற்றற்ற வைராக்கியம் உண்டாகி, இதற்குக் காரணமான மூலத்தை அறிய விரும்பி, கொடுக்கப்பட்ட மனித உடலின், சிறப்பான ஆறாவது அறிவினைப்பயன்படுத்தி, ஆராய முற்படுகின்றது.

இந்த ஆராய்ச்சியின் முடிவில், நிலையான பேரின்பத்திற்கு வழி ஒன்று உண்டென்றால், அது, இந்த மனம் ஆசைப்படும் இந்த உலகத்தைப் படைத்த ஈஸ்வரனின் வேத வாக்கான **சாஸ்திரமே பிரமாணம்** என்பதை அறிந்துக் கொள்கின்றது.

அதனால், அந்த சாஸ்திரங்களை கற்பதற்காக, தக்க சத்குருவைத் தேடி அடைந்து, அவர் வாக்கால் அதில்

கூறப்பட்ட விசயங்களைக் **கேட்டு, சிந்தித்து, தெளிவை** அடைந்து, அதன்வாயிலாக அடைந்த தத்துவ ஞானத்தினால், அனைத்து அறியாமைகளையும் அகற்றிக் கொள்கின்றது.

அதனால், இதுவரை தன் சொரூபத்தை அறியாமல் இருந்த மனம், தன்னை பிரம்மத்தில் இருந்து வேறுபடுத்திக் கொண்டு, தனியாகப் பாவித்துக் கொண்டிருந்த ஜீவத்துவ புத்தியை வெளியேற்றி, இந்த மனம் (ஜீவன்) என்ற பிரதி பிம்பத்திற்குக் காரணமான மூலத்தில், அறிவில் (பிரம்மத்தில்) ஒன்றாக இணைந்து விடுகின்றது.

அதுவே, இதுப்போன்று சாஸ்திர விசயங்களை அறிந்துக் கொள்ள ஆர்வமில்லாத மனம் (ஜீவன்) மற்ற உலக விவகாரங்களை உண்மையென்று கருதிக்கொண்டு, அதில் மயங்கி, மேலும், மேலும் பல எண்ணங்களால், சம்ஸ்காரப் பதிவுகளை மனதில் வைத்துக் கொள்வதினால், பல்வேறு பிறவிகளுக்கு காரணமான உபாதிகளான உடல்களை மீண்டும், மீண்டும் எடுக்க காரணமாக அமைந்து விடுகின்றது.

இதனால், மற்ற ஜீவர்கள் அந்த மூலத்தில் (பிரம்மத்தில்) ஒன்றாக இணைய முடிவதில்லை. காரணம், இவர்கள் மனதின் உண்டான பல்வேறு பதிவுகளுக்கு ஏற்ப, அவைகளை அனுபவிக்க விரும்பி, அதற்கான உடலை எடுத்துக் கொண்டு மீண்டும், மீண்டும் பிறந்து, இறந்துக் கொண்டிருக்கின்றனர்.

இவன் அயன்மால் சிவனாகிய ஈசரொடு எப்படி ஒப்பாவன்
சிவன் முதன் மூவரும் அகில சிருட்டி திதி நாசங்கள் செய்வார்
அவர்பிறர் மதிகளும் முக்காலங்களுமறிவார் விபுவாவார்
தவமிகு குருவே இவனுக்கு அவைபோல் சற்றுங்காணேனே. (40)

**தெளிவுரை:-**

தன் சொரூபத்தை அறிந்துக் கொண்ட ஜீவன் முக்தர்கள் நான்முக பிரம்மா, திருமால், சிவன் (ருத்ரன்) ஆகிய ஈஸ்வரனோடு எப்படி சமமாவார்கள்?

இந்த பிரம்மா, திருமால், சிவன் (ருத்ரன்) ஆகிய மூவரும் இந்த அகில உலகத்தையும் படைத்தல், இருத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களைச் செய்கின்ற ஈஸ்வரனின் மகா சக்திகளாக இருக்கின்றனர்.

மேலும், இந்த ஈஸ்வரன் மற்றவர்களின் மனதையும் (அந்தக்கரணத்தையும்), மூன்று காலங்களான கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் போன்ற அனைத்தையும் கடந்து அறியக் கூடிய சக்தி படைத்தவர்.

மேலும், ஈஸ்வரன்இந்த ஆகாயம் போன்று பரந்து, விரிந்து, எங்கும், எதிலும் நிறைந்து உள்ளவராதலால், இந்த முழு பிரபஞ்சத்தையும் தன்னுள் கொண்ட மகத்தான தலைவனாகவும் இருக்கின்றார்.

இவ்வாறு இருக்க, இந்த ஜீவன் முக்தர்களுக்கு அப்படிப்பட்ட மகிமைகள் எதையும் சிறிதும் காண முடிவதில்லையே, பிறகு எப்படி இவர்கள்அந்த ஈஸ்வரனுக்கு சமமாக முடியும்? தவத்தால் உயர்ந்த குருவே, இதற்கு விடையை அருள்கூர்ந்து கூறுவீராக.

தடத்துநீர் நிலாத்திரி ஒளி உபயம் தழுவும் ஊர்தனைக் காக்கும்
குடத்து நீர் விளக்கினில் ஒளி இரண்டும் ஓர் குடும்பம் மாத்திரம் காக்கும்
அடுத்த மைந்தனே ஞானியும் ஈசனும் அறிவினால் பிரிவில்லை
கெடுத்த மாயையின் குணங்களால் மேலொன்றும் கீழொன்றும்
பிரிவாமே. (41)

## தெளிவுரை:-

அன்பனே! ஜீவன் முக்தர்களும், ஈஸ்வரனும் எவ்வாறு சமம் என்று அறிவாயாகில், ஒரு ஏரியில் உள்ள மொத்த நீரும், வானில் உள்ள முழு நிலவின் ஒளியும் மிகப் பெரிய ஊருக்கே உபயோகப்படுகின்றது.

அதுவே, குடத்தில் உள்ள நீரும், வீட்டில் வைக்கப்பட்ட விளக்கின் ஒளியும் ஆகிய இந்த இரண்டும், ஒரு குடும்பத்திற்கு மட்டும் உபயோகப்படுகின்றது.

மகனே! ஜீவன் முக்தரான ஞானியும், ஈஸ்வரனும், அந்த பரப்பிரம்மத்தின் பிரதி பிம்பித்த நிழலான சித் சொரூபமான அறிவில் பிரிவில்லை.

ஆனால், குணாதீதனான நிர்குண பிரம்மத்தின் பிரதி பிம்பம், சத்துவகுண மாயையில் பிரதி பிம்பித்து தோன்றுவதால், **ஈஸ்வரன்** என்றும், ரஜோகுண மாயையில் தோன்றுவதால் **ஜீவன்** என்றும் உண்டாகின்றது.

ஒரே பிரம்மம் இந்த இரண்டு குணங்களில் பிரதி பிம்பிக்கின்ற பொழுது, வேறு, வேறாகத் தோன்றி, பேதமை காணப்படுகின்றதேதவிர, ஒன்றேயான அந்த பரப்பரப்பிரம்ம சொரூபத்தில் எந்த பேதமுமில்லை.

ஆகவே, முழு நிலவு பிரதி பிம்பிக்கின்ற ஏரி நீர், அளவில் பெரியது, அதனால், நிலவின் ஒளிப் பிரகாசமும், நீரின் அளவும் பெரிய பலன்களைக் கொடுக்கின்றது.

அதுவே, குடத்து நீரும், விளக்கு ஒளியும் அளவில் சிறியது. அதனால், அதன் பலனும் சிறியதாக உள்ளது.

இதுப்போன்று, ஈஸ்வரனின் மகிமைகள் அளவில் பெரியது. ஜீவன் முக்தனான ஞானியின் மகிமைகள் அளவில் சிறியது.

இந்த உயர்வு, தாழ்வு எல்லாம் பரப்பிரம்மம் பிரதி பிம்பிக்கின்ற உபாதியைப் பொருத்து, அந்த பிம்பங்கள் அது

ஈஸ்வரன், இது ஜீவன் என்று மாறுபடுகின்றதே தவிர, பிரம்மத்தின் **சித் (அறிவு)** சொரூபத்தில் எந்த மாறுபாடுகளும் கிடையாது.

எனவே, ஈஸ்வரனுக்கும், ஜீவனுக்கும் சித் சொரூபம் (அறிவு) ஒன்றாக இருந்தாலும், அது வெளிப்படுவதில் உள்ள வித்தியாசம், உபாதியான உடலைப் பொருத்தே உள்ளது.

ஈஸ்வரனின் உடல் மிகப்பெரிய இந்த முழு பிரபஞ்சம் ஆகும். அதுவே, ஜீவர்களில் மனித உடல் மிகச் சிறியது ஆகும்.

**ஜீவ - ஈஸ்வர** வேறுபாடுகள் எல்லாம் இந்த உடல்கள் என்ற உபாதியினால் மட்டுமே மாறுபடுகின்றதே தவிர, உடலுக்குள்ளே உள்ள சேதனத்தில் (அறிவில்) இருவரும் ஒருவரே.

நரரின் மன்னனைச் சித்தரைப் போலவே நாரணன் முதலான
சுரர்கண் மாயை வல்லவர்அணிமாதிகளொக்க மாதவமிக்கோர்
தரணி மானிடர்க் கவைகள் இல்லாமையால் தாழ்வுளரானாலும்,
பிரம பாவனையால் இவரவரென்னும் பேதமொன்றிலை பாராய். (42)

## <u>தெளிவுரை:-</u>

அன்பனே! மனிதர்களில் உலகை ஆளும் மன்னனும், அதே மனிதர்களில் இந்த அகில பிரபஞ்சத்தையே ஆளும் அஷ்டாமா சித்தி பெற்ற சித்தர்களும் பிறப்பால் மனிதர்களே ஆனாலும், இவர்கள் இருவருக்குள்ளும், அவர்கள் அடைந்த சக்தியினால் வேறுபடுகின்றனர்.

இவ்வாறு, இவர்கள் தாங்கள் அடைந்த சக்தியினால் எவ்வாறு வேறுபட்டு இருக்கின்றனரோ, அதுப்போன்று, ஈஸ்வரனின் சக்திகளாக வெளிப்பட்ட பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் போன்ற மும்மூர்த்திகள் மாயையில் வல்லவர்கள் ஆகவும், அணிமா, மகிமா போன்ற அஷ்டமா சித்திகளில் மேலானவர்களாகவும் இருந்தாலும், இவர்களும் மாதவம் செய்த சித்தர்களுக்கு ஒப்பானவர்களாகவே இருக்கின்றனர்.

அதே சமயம், இவ்வளவு வல்லமை பொருந்திய ஈஸ்வரன் முன்பு, இந்த உலக மானிடர்களான ஜீவன் முக்தர்களுக்கு அந்த சக்திகள் இல்லாமையினால், கீழானவர்களாகக் கருதப்பட்டாலும், "**நான் பிரம்மம்**" என்ற

பாவனையினால் ஈஸ்வரன் உயர்ந்தவர், ஜீவன் முக்தர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடுகள் ஒன்றுமில்லை. இருவரும் ஒருவரே என்பதை அறிவாயாக.

முத்தி நல்கிய சற்குருவே பலமுனிகளுக் கணிமாதி
சித்தி பூமியிற் கண்டிருக்கவும் அந்தச்செல்வம் ஈசனதென்றீர்
புத்தி யொத்திட உரைத்தருள் என்றிடின் புகழும் ஈசனை வேண்டிப்
பத்தி செய்திடும் தவத்தினால் யோகத்தாற் பலித்த தென்றறிவாயே. (43)

## தெளிவுரை:-

நிலையான மகிழ்ச்சியாகிய முக்தியைக் கொடுத்த சத்குருவே! இந்த பூமியில் வசிக்கும் மனிதர்களாகிய பல முனிவர்களுக்கு அணிமா, மகிமா போன்ற அஷ்டமா சித்துக்கள் என்ற அந்தச் செல்வம், அந்த ஈஸ்வரனுக்கு உண்டானது எனும்போது, அவருக்கு நிகராக இவர்களுக்கு எவ்வாறு கிடைத்தது?

அன்பனே!விபரீத புத்தி உண்டாகாமல், புத்தி ஏற்றுக் கொள்ளக் கூடிய தன்மையில் உரைத்திட வேண்டும் என்றிடின், அனைத்து புகழுக்கும் அதிபதியான ஈசனிடம் செய்த பராபக்தியின் காரணமாகவும், அவனை அறிய வேண்டி செய்த பல தவத்தினாலும், யோகத்தினாலும் அத்தகைய சித்திகள் அவர்களுக்கு கிடைத்தது என்று அறிவாய் நீயே.

சிவசொரூபமாம் தேசிக மூர்த்தியே சித்தி முத்தியிரண்டும்
தவமுளோ அடைகுவர் எனில் அவர்கள்போல் சகலரும் அடைவாரே
அவர்கள் பூவருஞ் சித்தியும் ஞானமும் அடைந்தது கண்டோமே
இவர்கள்ஞானிகளென்றிடில் சித்திகள் இவர்க்கிலா வகை ஏதோ. (44)

## <u>தெளிவுரை:-</u>

சிவசொரூபமான தேசிக மூர்த்தியே! அஷ்டமா சித்திகளும், முக்திகளும் இரண்டும் தவமுடையவர்கள் அடைவார்கள் என்றால், அவர்களைப் போன்று தவம் செய்த அனைவரும் அடைவார்களே!

அவ்வாறு அடைந்த பல தவசீலர்களை சாஸ்திரத்தின் வாயிலாக நாமும் அறிந்தோமே, அப்படியிருக்க, தன் சொரூபத்தை உணர்ந்த, ஞானிகளான ஜீவன் முக்தர்களுக்கு மட்டும் சித்திகள் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் யாதோ?

காமியத்தவம் காமியம் ஒன்றையும் கருதிடாத் தவமென்றும்
பூமியில் தவம் இருவகை சித்தியும் போதமும் தரும் மைந்தா
ஆம் இவற்றில் ஒன்று இயற்றினால் ஒன்றையே அடைகுவர் இது தீர்வை
யாமுரைத்த அவ்விரண்டையும் இயற்றினார் அன்றுள பெரியோரே. (45)

## தெளிவுரை:-

அன்பனே! தன்னுடைய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, செய்யக்கூடிய தவத்திற்கு **காமியத் தவம்** என்றும், அந்த ஈஸ்வரனைத் தவிர வேறு ஒன்றும் தேவையில்லை என்று, அவன்மீது அலாதியான அன்பு செலுத்தி, அவனைத் தன்னிலிருந்து வேறாக பிரித்துப்பார்க்காத சொரூப ஞானத்தில் நிலைப்பெற்ற **நிஷ்காமியத் தவம்** என்றும், இரண்டு வகை தவங்கள் இந்த பூமியில் உள்ளன.

அவைகளில், ஒன்று ஈஸ்வர பக்தியினால் சித்திகளையும், மற்றொன்று ஈஸ்வர சம்பந்தத்தால் ஞானத்தையும் தரும் மகனே!

ஆம்! இவற்றில் எதையாவது ஒன்றை மட்டும் செய்பவர்கள், அந்த ஒன்றை மட்டும் அடைவர். இதுதான் வழிமுறை. இதில், மேற்சொன்ன அந்த இரண்டையும் செய்தனர் அன்றுள்ள பெரியவர்கள்.

## குறிப்பு:–

“உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.”(திருக்குறள்)

பிறவிப் பிணியாகிய தனக்கு ஏற்பட்ட நோயை நீக்கிக் கொள்வதும், தன் உயிர் போன்று, மற்ற அனைத்து உயிர்களையும் கருதி, அவைகளுக்கு தீங்கு செய்யாமையும் **தவம்** எனப்படுகின்றது.

அதாவது, தன் சொரூபமான சைதன்யம் மற்ற அனைத்து ஜீவர்களிடமும் உள்ளது என்பதை அறிந்து, தன்னை பிரம்ம நிஷ்டனாக உணர்ந்து, ஆத்ம சொரூபத்தில் நிலைத்து இருப்பவர்களே தவசீலர்களான ஜீவன் முக்தர்கள்.

“தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு.”(திருக்குறள்)

தவ சீலர்களான பிரம்ம நிஷ்டர்கள் தன் சொரூபத்தில் நிற்பதையே தன் காரியமாகச் செய்வர். மற்றவர்கள் அனைவரும் ஆசைகளுக்குட்பட்டு, பல தீமை தரும் காரியங்களைச் செய்வார்கள்.)

அனக மைந்தனே முத்தி ஞானத்தையே அடைந்தனர் அல்லாமல்
ஜெனகன் மாபலி பகீரதன் முதலினோர் சித்திகள் படித்தாரோ
இனிய சித்தியே விரும்பினார் சிலர் சிலரிரண்டையும் முயன்றாரம்
முனிவர் சித்திகள் வினோத மாத்திரம் தரும் முத்தியைத் தாராவே. (46)

## <u>தெளிவுரை:-</u>

குற்றமில்லாத மகனே! ஜெனகர், மகாபலி சக்ரவர்த்தி, பகீரதன் போன்ற அரசர்கள் சித்திகள் ஒன்றையும் அறியாத ஆத்ம ஞானிகளாக விளங்கிய ஜீவன் முக்தர்கள் ஆவார்கள்.

சிலர் சித்திகளை விரும்பினர். சிலர் ஞானத்தை மட்டும் அடைந்தனர். சிலர் இரண்டையும் விரும்பினர்.

இதில், சிலர் பெற்றசித்துவிளையாடல்கள் என்பது அவர்களுக்கு தற்காலிகமான அற்ப சுகத்தை மட்டுமே தரும். நிலையான சுகத்தைத் தரக்கூடிய முக்தியைத் தராது.

யோக ஞானமே முத்தியைத் தருமெனில் ஒழிந்த சித்திகள் வேண்டி
மோகமாய் உடல் வருந்தினார் சிலசில முத்தர்கள் ஏனென்றால்
போகமாய் வரும் பிராரத்த கர்மங்கள் புசித்தன்றோ நசித்தேகும்
ஆகையால் அந்தச் சித்திகள் பிராரத்தம் ஆகுமென்று அறிவாயே. (47)

## தெளிவுரை:-

ஐயனே! யோகம் என்பது ஒன்றுதல் என்பதை அறிந்து, அந்தப் பரிபூரண பரப்பிரம்மமும், அதன் பிரதி பிம்பமான ஜீவனும் **சித்** சொரூபத்தில் வேறுபாடுகள் இன்றி, ஒன்றேயான சைதன்யம் என்ற தன் சொரூபத்தை அறிந்த ஆத்ம ஞானம் என்றும் நிலையான சுகத்தைக் கொடுக்கும் முக்தியை தருகின்றது.

இந்த ஆத்மானந்த அனுபவத்தை அனுபவிக்காமல் விடுத்து, அற்ப சுகத்தைக் கொடுக்கும் புற விசயங்களான சித்துக்களை விரும்பி, உடல்களை ஏன் இவர்கள் வருத்தினார்கள்?

அன்பனே! அற்ப சித்து விளையாட்டுகளில் சிலர் ஆர்வமாய் இருந்ததற்குக் காரணம் என்னவெனில், இவர்களது ஆசையினால் உண்டான பிராரப்தக் கர்மாவை அனுபவித்து அல்லவா தீர்க்கவேண்டும்? எனவே, இவர்கள் அடைந்த அந்த சித்து விளையாடல்கள் எல்லாம், இவர்கள் கொண்டுவந்த பிராரப்தக் கர்மா என அறிவாயாக.

இலக்கம் ஆயிரம் சுருதியால் ஊகத்தால் என் மனம் அசையாமல்
பெலக்க வேண்டுமென்று அருள் குருவே அகப்பிராந்தி போய்த் தெளிவானேன்
துலக்கமான கண்ணாடியை அடிக்கடி துலக்கினாற் பழுதன்றே
அலக்கண் மாற்றிய தேவரீர் எனக்குரை அமிர்தங்கள் தெவிட்டாவே. (48)

## <u>தெளிவுரை:-</u>

அருள் குருநாதரே! சுருதியின் ஆயிரக்கணக்கான பிரமாணங்களினாலும், யுக்தியினாலும், என்னுடைய மனம் அசையாமல், திடமாக நிலைத்து இருக்க வேண்டுமென்று விரும்பி, எனக்கு ஏற்பட்ட பலவிதமான சந்தேகங்களை தீர்க்கும் பொருட்டு, கிடைத்தற்கரிய தங்களது அருமையானப் பல அரிய உபதேசங்களினால், எனது அந்தக்கரணமான விபரீத புத்தியின் உள்மயக்கம் போய்த் தெளிவு பெற்றேன்.

இது எவ்வாறெனில், நன்கு துலக்கப்பட்ட பளிங்கு போன்ற தெளிவான கண்ணாடியை மேலும், மேலும் துலக்கினால், அது மிகுந்த பிரகாசம் அடைவதுப் போன்று, எனது மனதை எப்பொழுதும் பிரம்ம நிஷ்டையில் (ஆத்ம ஞானத்தில்) இருந்து நழுவாதபடி செய்த தேவரீர், தங்களது கருணையினால், தாங்கள் எனக்கு உரைத்த அமிர்தம் போன்ற உபதேசங்கள் தெவிட்டாதவைகளாக உள்ளன.

அறியாமையில்உள்ளவர்களுக்குவிபரீத புத்தியினால் உண்டானஐந்து மன மயக்கங்கள் பின் வருமாறு.

1. எது நித்தியம், எது அநித்தியம் என ஆராயாது, இந்த உலகத்தை மட்டுமே **நித்தியம்** என நினைத்தல்.

2. கருவிக்கரணங்களை பிரித்து, தனக்கு அன்னியமாக காணாது, சடமாகிய உடலையே **'நான்'** என நினைத்தல்.

3. நான் ஜீவன், கர்மங்களை செய்கின்றேன், போகங்களை அனுபவிக்கின்றேன் என நினைத்தல்.

4 ஆன்மாவுக்கு அன்னியமாய் இறைவன் இருக்கின்றார் என எண்ணுதல்.

5. தான் சச்சிதானந்த சொரூபம் என உணராது, சிறிதே வல்லமை உடைய நான் எப்படி சிவமாவேன்? என மனம் மயங்குதல்.

இவைகள் ஐந்தும் தன்னையறிந்த தத்துவ ஞானிக்கு உடனடியாக நீங்கிவிடும்.

கை தவங்களைச் சாத்திரம் சொல்லுமோ கருணையால் எனையாளும்
ஐயனே குருவே எவராகிலும் அநுபவித்தாலன்றிச்
செய்த கர்மங்கள் விடாவென்ற வசனமும் சென்ம சஞ்சிதம் வேவத்
துய்ய ஞானத்தீ சுடுமென்ற வசனமும் துணிவதெப்படி நானே. (49)

## <u>தெளிவுரை:-</u>

தங்கள் கருணையினால் எனை ஆளுகின்ற ஐயனே! குருவே, பொய்யான விசயங்களை சாஸ்திரம் கூறுமோ? யாராக இருந்தாலும், தான் செய்த பாவ, புண்ணியங்களை அனுபவித்து தீர்க்க பல உடல்களில் பிராரப்தக் கர்மாவாக கொண்டு வந்து, அவைகளை அனுபவித்து தீர்க்க வேண்டும் என்றும், அடுத்து, அரிய மனிதப் பிறவியினால் மட்டும் ஆத்ம ஞானம் அடைய முடியும் என்றும், அந்த ஞானத் தீயினால் பல சென்மங்கள் செய்த **சஞ்சிதம்** என்ற மொத்த கர்மாக்களும், எரிந்து சாம்பலாகி விடும் என்றும் கூறினீரே, இவைகள் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளதே எவ்வாறு?

சீவபேதங்கள் அளவிலை மைந்தனே செய்கையும் அளவில்லை
ஆவ ஆம் அவரவர் அதிகாரங்கள் அறிந்து பக்குவம் நோக்கிப்
பூ அலர்ந்து பின் பலங்கள் காட்டுவனபோற் பூருவம் சித்தாந்தம்
காவல் வேதங்கள் இரண்டையும் வசனிக்கும் காண்டம் மூவகையாலே.
(50)

## தெளிவுரை:-

மகனே! ஜீவர்களின் அந்தக்கரணமான மனம் பல்வேறு ஜென்ம பிறவிகளில், பல விதமான எண்ணங்களால் உண்டான சம்ஸ்காரப் பதிவுகளுக்கு ஏற்ப அதன் பேதங்கள் அளவிட முடியாததாக உள்ளது. அதனால், அவர்கள் செய்கின்ற செயல்களும் அளவிட முடியாதது எனலாம்.

ஒரு மரத்தில் பூத்த பூவானது ஆரம்பத்தில் மலர்ந்து, பிறகு அது காயாகி, கனிந்து இனிப்பான சுவையைத் தரக்கூடிய பழமாக மாறுகின்றது.

அதைப்போன்று, வேத சாஸ்திரமும் உபதேசிக்க வருகின்ற கருத்துக்களை எடுத்தவுடன் நேரடியாகக் கூறாமல், ஆரம்பத்தில் ஜீவர்களுக்கு மனதைப் பக்குவப்படுத்தும் விதமாக, சில சித்தாந்தங்களை எடுத்துக் கூறுகின்றது.

அவைகளில் பூசை, ஹோமம் போன்ற பலகர்ம காரியங்களினால், மனம் ஈஸ்வரனை நாடி, பக்தி செலுத்தி,

அதன் வாயிலாக ஜபம், தியானம், உபாசனை போன்றவைகளை நடைமுறையில் கொண்டு வந்து, சித்த சுத்தி உண்டானவுடன், அதன் பலனாக நிலையான இன்பத்தைத் தரக்கூடிய வேதத்தின் இறுதிப்பகுதியான வேதாந்தம் என்ற உபநிஷதங்களை, சுகமாகச் சாப்பிடும் இனிப்பான பழம் போன்று கொடுக்கின்றது.

இவ்வாறு, இதனை உபதேசிக்க வந்த சாஸ்திரம் கர்ம காண்டம், உபாசனா (பக்தி) காண்டம், மற்றும் ஞான காண்டம் என்று மூன்று வழிமுறைகளில் உள்ளது.

ஆன பாவிகளடைவன நரகங்கள் அவசியமானாலும்
தான மந்திர விரத ஹோமங்களால் தவிருமென்பது பொய்யோ
ஈனமாம் பல சன்ம சஞ்சிதவினை எத்தனையானாலும்
ஞானமாம் கனல் சுடுமென்ற மறைமொழி நம்பினால் வீடுண்டே. (51)

## <u>தெளிவுரை:-</u>

அன்பனே! பலவிதமான ஆசைகளினால், கர்மங்களைச் செய்து, அதன் பலனாகப் பல பாவங்களைச் சேர்த்துக் கொண்டவர்களுக்கு, அவைகளை அனுபவிக்கும் விதமாக பலத்துன்பங்களை, வாழும் பொழுதே நரகங்களாக அனுபவிக்கும் அவசியம் உண்டானாலும், இவர்கள் செய்ததான, தருமங்கள், மந்திர ஜபங்கள், விரதங்கள், மற்றும்

ஹோமங்கள் போன்றப் பல நற்கருமங்களினால் புண்ணியங்கள் உண்டாகி, பாவங்கள் குறையும் என்று சாஸ்திரம் கூறுவது பொய்யாகாது.

அதுப்போலவே, இழிவான பிறப்பு, இறப்பின் காரணமாகப் பல ஜென்மங்களாக தொடர்ந்த சஞ்சித கர்மங்கள் எத்தனையானாலும், அத்தனையும் அவர்கள் அடைந்த ஆத்ம ஞானத்தினால் எரிந்து சாம்பல் ஆகிவிடும் என்று சாஸ்திரம் கூறுவதை ஏறுக்கொண்டு, அதை நம்பினால், அவர்களுக்கு நிலையான ஆனந்தத்தைத் தரக்கூடிய **வீடுபேறு** என்ற முக்தி நிச்சயம் உண்டாகும்.

என்மனம் திருக்கோயிலாத் தினம் குடியிருந்தருள் குருமூர்த்தி
சென்ம சஞ்சித வினைகள் வேரறுத்திடும் தேவரீர் மெய்ஞானம்
தன்மயம் தரும் மகிமையை விபுதராம் சமர்த்தரும் அறியாமல்
கன்மமாம் குழியினில் விழுந்தழிகின்ற காரணம் உரையீரே. (52)

## <u>தெளிவுரை:-</u>

என்னுடைய மனம் என்ற திருக்கோவிலிலே, தினமும் குடியிருந்து அருளும் குருமூர்த்தியே, பல ஜென்மங்களாகத் தொடர்ந்த, பல பிறவிகளுக்கு காரணமான சஞ்சித கர்ம வினைகள் அனைத்தையுமே வேரோடு அழித்து விடுகின்றது தாங்கள் உபதேசித்த மெய்ஞ்ஞான தத்துவம்.

மோக்ஷத்தை கொடுக்கின்ற மகிமை வாய்ந்த இந்த ஆத்ம ஞானத்தை, மனிதர்களில் பரவலான பலத் திறமைகளைப் பெற்ற அறிவாளிகளும்கூட, இதை அறிந்துக் கொள்ளாமல், உலக விவகாரங்களில் ஆசைக் கொண்டு, காமியக் கர்மங்களையே பலவாறாகச் செய்து, படுகுழியில் விழுந்து, அழிந்து போகின்ற காரணம் என்னவென்று அடியேனுக்கு கூற வேண்டும்.

அழிவிலாத தற்பதந்தனை மைந்தனே அகமுகத்தவர் சேர்வர்
வழிநடப்பவர் பராமுகமாயினான் மலர்ந்த கண்ணிருந்தாலும்
குழியில் வீழ்வர்காண் அப்படி வெளிமுகம் கொண்டு காமிகளானோர்
பழிதரும் பிறவிக் கடலழுந்துவர் பரகதி அடையாரே. (53)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! அழிவில்லாத ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடிய பரிபூரணமான பரப்பிரம்மத்தை தன்னுள்ளே அகக் கண் கொண்டு காண்கின்றவர்கள் நிலையான ஆனந்தத்தை தரக்கூடிய முக்தியை அடைகின்றார்கள்.

அதுவே, வெளியே காண்கின்ற கண்கள் திறந்து இருந்தும், காட்சிகளைப் பாராமுகமாக, வேறு சிந்தனையில் இருந்துக் கொண்டு, பாதை வழியாக நடந்து செல்லும் போது, தவறி குழியில் விழுகின்றார்கள்.

இதுபோன்று, வெளி உலகங்களை உண்மையென்று கருதி, அவைகளில் பற்றுக் கொண்டு, அதற்கு அடிமையாகப் பல ஆசைகளில் சிக்கிக் கொண்டவர்கள், அகத்தில் அறிவுக்கண் இருந்தும், அதைப் பாராமல், புறத்தில் பலச் சிந்தனைகளைச் செலுத்தியதினால், பல்வேறு தீமைகளை தரக்கூடிய பிறவிப் பெருங்கடலில் மூழ்கி விடுகின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் பரமனின் சொரூபமான பரகதியை அடையமாட்டார்கள்.

சிறந்த நன்மையும் தீமையும் ஈசனார் செய்விக்கும் செயலன்றோ
பிறந்த சீவர்களென் செய்வார் அவர்கள்மேல் பிழை சொலும் வழியேதோ
துறந்த தேசிக மூர்த்தியே என்றிடில் சுருதி நூற்பொருள் மார்க்கம்
மறந்த மூடர்கள் வசனிக்கும் பிராந்திகாண் மைந்தனே யதுகேளாய். (54)

**<u>தெளிவுரை:-</u>**

அனைத்தையும் துறந்த தேசிக மூர்த்தியே, என் ஐயனே! ஒவ்வொருவருக்கும் உண்டாகும் சிறந்த நன்மை களும், துன்பம் தரும் தீமைகளும் கர்மபல தாதாவான ஈசனது செயல் அல்லவா? இதில் பிறப்பெடுத்த ஜீவர்களால் என்ன செய்ய முடியும்? அவர்கள் மீது குற்றங்கள் கூறுவதினால் என்ன பயன் உண்டாகும்?

மகனே! ஈஸ்வரனால் கொடுக்கப்பட்ட சுருதி என்ற வேத சாஸ்திரத்தையும், அதன் உட்பொருளையும் அறியாத மூடர்கள், அதனைக் கற்று அறிந்துக் கொள்ளாமல், இவர்களாகவே, அவ்வாறு கருதிக்கொண்டு, அனைத்தும் இறைவன் செயல் என்று, தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டு, இது போன்று கூறுகின்றார்கள். இது அவர்களது அறியாமையினால் உண்டான மன மயக்கமே தவிர வேறில்லை எனலாம். ஆகவே, இதன் உண்மைத் தன்மையைக் கூறுகின்றேன் கவனமாகக் கேட்பாயாக.

திகழ்ந்த ஈசனார் சிருட்டியும் சீவனார் சிருட்டியும் வெவ்வேறே
சகந்தனிற் பொது ஈசனார் சிருட்டிகள் சராசரப் பொருளெல்லாம்
அகந்தையாம் அபிமானங்கள் கோபங்கள் ஆசைகள் இவையெல்லாம்
இகழ்ந்த சீவனார் சிருட்டிகளாகும் காண் ஈசனார் செயலன்றே. (55)

## தெளிவுரை:-

அன்பனே! பரிபூரண அகண்டாகார வஸ்துவான சுத்த பரப்பிரம்மத்தின் சொரூபமாகவே எப்பொழுதும் விளங்கும் ஈஸ்வரனுடைய சிருஷ்டியும், அறியாமையினால், தன்னை ஈஸ்வரனிடம் இருந்து வேறுபடுத்தி காண்கின்ற ஜீவனுடைய சிருஷ்டியும் வெவ்வேறு வகைப்படும்.

அது எவ்வாறெனில், இந்த அண்ட சராசரமாக விளங்கும் ஈஸ்வரனது சிருஷ்டிகள் எல்லாமே படைக்கப் பட்ட அனைத்து ஜீவர்களுக்கும் பொதுவானவைகளாகும்.

அதுவே, இந்த சரீரத்தை “**நான்**” என்று கருதிக் கொண்டு, அஹங்கார, மமகாரத்தின் வெளிப்பாடாக அதை நான் செய்தேன், இது என்னுடையது போன்ற அபிமானங்கள், உண்டாகி, ஈஸ்வரனைத் தன்னிலிருந்து வேறாகக் கருதியதின் விளைவாக உண்டான விருப்பு, வெறுப்புக்களின் காரணமாக, கோபம், பொறாமை, தற்பெருமை மற்றும் ஆசைகள் போன்ற அற்ப தோசங்களை ஜீவன் உருவாக்கிக் கொண்ட சிருஷ்டிகள் எனலாம். ஆதலால், இவைகள் விருப்பு, வெறுப்பற்ற ஈசனுடைய படைப்பு ஆகாது என்பதை அறிவாயாக.

மூவராம் பரன் சிருட்டிகள் உயிர்களுக்கெல்லாம் முத்தி சாதனமாகும்
சீவனார் செயும் சிருட்டிகள் தங்களைச் செனிப்பிக்கும் பிணியாகும்
தாவராதிகள் நசித்திடில் ஒருவர்க்கும் சனனங்க நசியாவாம்
கோபமாதிகள் நசித்திடில் பந்தமாம் கொடும் பிறவிகள்போமே. (56)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! மேலும் மும்மூர்த்திகளாக வெளிப்பட்ட பரமனின் படைப்புக்கள் அனைத்தும் வாழும் உயிர்களுக் கெல்லாம் நிலையான மகிழ்ச்சியைக் கொடுக்கும் முக்தி சாதனமாகும்.

ஜீவர்கள் படைக்கின்ற அஹங்கார, மமகார படைப்புக்கள் அனைத்தும், அவர்களை மீண்டும், மீண்டும் பிறப்பு, இறப்பைக் கொடுக்கின்ற கொடிய நோயில் தள்ளுகின்ற செயலாகும்.

புல்லாகவும், சிறு செடிகளாகவும், புழுவாகவும், மரமாகவும், பலவகை மிருகங்களாகவும், பறவைகளாகவும், பாம்பாகவும், கல்லுக்குள் தேரையாகவும், மனிதராகவும், உடல் நீங்கிய பேய்களாகவும், பலதரப்பட்ட கணக் கூட்டங்களாகவும், வலிமை மிகுந்த அசுரர்களாகவும், முனிவராகவும், தேவர் களாகவும், மற்றும் இந்த அசையும் அசையாதனவற்றால் உண்டான அண்டம் முழுதும் உள்ள தாவர ஜங்கமங்களில் எது அழிந்தாலும், இதில் ஒருவருக்கும் மீண்டும், மீண்டும் உடல்கள் எடுத்து பிறக்கின்ற பிறப்பு அழியாது.

கோபங்கள் முதலான உட்பகைகள் நீங்கினால் மட்டுமே பந்தங்களைக் கொடுக்கின்ற பிறவிகள் நீங்கும் என்பதை அறிவாய் நீயே.

**த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாஸநமாத்மந: |**
**காம: க்ரோதஸ்ததா லோபஸ்தஸ்மாதேதத்த்ரயம் த்யஜேத் ||** [பகவத்கீதை 16 - 21]

ஆசை, கோபம், கருமித்தனம் என்ற மூன்றும் நரகத்தின் நுழைவாயில்கள். அவைகள் ஆத்மாவை நாசம் செய்யக் கூடியவைகள். அதாவது, இழிந்த நிலையில் தள்ளக் கூடியவைகள். எனவே, இந்த மூன்றையும் விடுபவனுக்கே ஆத்ம நிஷ்டை உண்டாகி, பிறவிப் பிணியைத் தீர்க்க முடியும்.

ஈசர் காரியம் பிரளயத்து ஒழியவும் எவர் பவம் ஒழிந்தார்கள்
தேச கால தேகாதிகள் இருக்கவும் சீவகாரிய மோகம்
நாசமாக்கிய விவேகத்தின் உயிரொடு ஞான முத்தர்களானார்
பாச மோகங்கள் பசுக்களின் செயலன்றிப் பசுபதி செயலன்றே. (57)

## தெளிவுரை:-

ஐயனே! ஈஸ்வர சிருஷ்டி காரியங்கள் அனைத்தும் மகா பிரளயத்தில் அழிந்து போனால், பிறந்தவர்கள் அனைவரும் அழிந்தார்கள் எனும்போது, இனி அவர்களுக்குப் பிறவி கிடையாது அல்லவா?

மகனே! தேச, காலத்திற்கு உட்பட்ட உடல்களைக் கொண்டு பிறப்பு வந்துவிட்டால், அதில் உண்டான அறியாமையினால், ஜீவர்கள் உருவாக்கிக் கொள்கின்ற **கோபம், பொறாமை, ஆசைகள்** போன்ற மோகங்களை கலைவதற்கு, தனக்கு கொடுக்கப்பட்ட பிரத்யேகமான ஆறாவது அறிவின் மூலமாக நன்மை, தீமைகளை விசாரித்து, விவேகத்தை அடைந்து, வாழும் பொழுதே, ஆத்ம ஞானத்துடன் கூடிய, ஜீவன் முக்தராகி, நிலையான மகிழ்ச்சியைக் கொடுக்கும் முக்தியை அடைந்துவிட முடியும்.

இவ்வாறு கிடைத்தற்கரிய மனிதப் பிறவியைக் கொண்டு பிறவிப்பிணி தீர்க்கும், ஜீவ சிருஷ்டிகளை ஒழித்து ஜீவன்

முக்தர்களாக முக்தியை அடைவதும், **காமம், கோபம், லோபம்** போன்ற ஜீவ சிருஷ்டிகளைப் படைத்துக் கொண்டு பிறவிப் பிணியை அடைவதும் இந்த ஜீவர்களின் செயல்களே அன்றி, ஈஸ்வரனின் செயல்கள் ஆகாது.

அச்சுவத்தமென்று ஒருமரம் அதில் இரண்டு
அரும் பறவைகள் வாழும்
நச்சும் அங்கொரு பறவை அம்மரக்கனி
நன்று நன்றெனத் தின்னும்
மெச்சும் அங்கொரு பறவை தின்னாது
என வியங்கியப் பொருளாக
வைச்சு மாமறை சீவனை ஈசனை
வகுத்தவாறு அறிவாயே. (58)

## தெளிவுரை:-

அச்சுவத்தம் என்ற ஒரு மரத்தில் இரண்டு அரும் பறவைகள் வாழுந்து வந்தன. அதில் ஒரு பறவை அந்த மரத்தின் கனிகளை நன்றாக உள்ளது என விரும்பமுடன் சுவைத்து உண்ணுகின்றது. மற்றொரு பறவை அதை உண்ணாமல் சாட்சி மாத்திரமாய் நின்று வேடிக்கை மட்டும் பார்க்கின்றது.

இதுபோன்று, உடல் என்ற இந்த மரத்தில் **ஜீவன், ஈஸ்வரன்** என்ற இரண்டு பறவைகள் உள்ளன.

அதில் ஜீவனாகிய பறவை அறியாமையினால் தன் சரீரத்தை உண்மை என்று கருதி, அதனை விரும்புவதின் வாயிலாக பந்தம் ஏற்பட்டு ஆசை, கோபம், லோபம் போன்ற பழங்களை (உட்பகைகளை) விரும்பி உண்ணுகின்றது.

அதாவது, பல விதமான உலக விவகாரங்களில் ஈடுபடுகின்றது.

ஈஸ்வரன் என்ற மற்றொரு பறவை, அதே உடல் என்ற மரத்தில் தங்கி இருந்தாலும், எதையும் விரும்பாமல், சாட்சி மாத்திரமாக வேடிக்கை மட்டும் பார்த்துக் கொண்டுள்ளது. அதனால், அது எதையும் செய்வதோ? அனுபவிப்பதோ கிடையாது.

இவ்வாறு, ஜீவ, ஈஸ்வர சிருஷ்டிகளைப் பற்றி முண்டக உபநிஷதம் மிக விளக்கமாக எடுத்துரைக்கின்றது.

இந்தச் சீவனால் வரும் அறுபகையெலாம் இவன் செயல் என்னாமல்
அந்தத் தேவனால் வரும் என்ற மூடர்கள் அதோகதி அடைவார்கள்
இந்தச் சீவனால் வரும் அறுபகையெலாம் இவன் செயலல்லாமல்
அந்தத் தேவனால் அன்று எனும் விவேகிகள் அமல வீடடைவாரே. (59)

## தெளிவுரை:-

இந்த ஜீவர்களிடம் உண்டான படைப்புக்களான **காமம், குரோதம், லோபம், மோகம், மதம்,** மற்றும் **மாச்சரியம்** என்ற ஆறு உட்பகைகளை தன்னால் உண்டாக்கிக் கொண்ட செயல்கள் என்று புரியாமல், அறியாமையினால் மேலும், மேலும் அவைகளைச் செய்துக் கொண்டும், ஈஸ்வரனின் படைப்புகளாக இவைகள் தன்னிடம் இருப்பதாகக் கருதிக் கொண்டும், பிறவிப் பிணியைத் தருகின்ற, தீராத பாவங்களை சேர்த்துக்கொண்ட மூடர்களாக இருக்கிறார்கள். இதனால், இவர்கள் கீழான துன்ப கதியை அடைகின்றார்கள்.

அதுவே, இந்த ஜீவர்களின் படைப்புக்களான ஆறு உட்பகைகளும் அறியாமையின் காரணமாகத் தன்னால் மட்டுமே படைத்துக் கொள்ளப்பட்டது, இதற்கும், ஈஸ்வரனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்ற விவேகத்தை அடைந்தவர்கள், தான் அடைந்த ஆத்ம ஞானத்தினால் **வீடுபேறு** என்ற மேலான இன்பத்தை அடைகின்றார்கள்.

நலமெய் ஐயனே எல்லவர்க்கும் தெய்வ
நாயகன் பொதுவானால்
சிலரை வாழ்வித்தல் சிலரொடு கோபித்தல்
செய்வதே ஏனென்றாயேல்
குலவு மக்களைத் தந்தை போல் சிட்டரைக்
குளிர்ந்து துட்டரைக் காய்வன்
கலைகள் நல்வழி வரச்செயும் தண்டமும்
கருணை என்றறிவாயே. (60)

## தெளிவுரை:-

நல் உண்மைகளை உரைக்கும் ஐயனே! எல்லோருக்கும் தெய்வம் என்ற தலைவனான ஈஸ்வரன் பொதுவானால், சிலரை சந்தோசமாக வாழவைப்பதையும், சிலரோடு கோபித்துக்கொண்டு, துன்பத்தை கொடுப்பதையும் ஏன் செய்கின்றான்?

அன்பனே! ஒரு பொறுப்பான தந்தையானவர் தன் குழந்தைகள் இருவரில் ஒருவன் மட்டும் தன் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து, நல்ல வழிகளைக் கடைப்பிடித்து, அதன் வழி ஒழுங்காக இருந்தால், அவனிடத்தில் குளிர்ந்த கருணையுடன் நடந்து கொள்வதையும், தன் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்காமல், தவறான தீய வழிகளில் செல்கின்ற வனிடம் கண்டிப்பு காட்டி, அவனைத் திருத்த முயற்சிப் பதையும் கண்கூடாகக் காணுகின்றோம்.

இந்த தந்தையை போன்று, ஈஸ்வரனும் தன்னுடைய வேத வாக்கான சாஸ்திர வழியில் நின்று, அதன்படி செய்ய

வேண்டிய தர்மங்களைச் சரியாகச் செய்பவர்களுக்கு, பல நன்மைகளையும், சாஸ்திரத்திற்கு விரோதமாக தீய வழிகளில் செல்கின்றவர்களை, நல்வழிக்கு கொண்டு வருவதற்காக தண்டிப்பதும் ஈசனது கருணையே ஆகும்.

மனை விலங்கு அறும் மைந்தனே கற்பக
மரம் கனல் புனல் மூன்றும்
தனை அடைந்தவர் வறுமையும் சீதமும் தாகமும் தவிர்த்தாளும்
அனைய ஈசனும் அடைந்தவர்க்கு அருள் செய்வன்
அகன்றவர்க்கு அருள் செய்யான்
இனைய குற்றங்கள் எவர் குற்றமாகும்
என்றெண்ணி நீ அறிவாயே. (61)

## <u>தெளிவுரை:-</u>

பந்தத்தை உண்டாக்கும் பிறப்பு, இறப்பு என்ற சம்சாரத்திலிருந்து விடுபட்ட மகனே! வறுமையினால் வாடுபவர்களுக்கு கேட்டதையெல்லாம் கொடுக்கின்ற கற்பக மரம் போன்றும், கடுங்குளிரில் நடுங்கிக் கொண்டு இருப்பவனுக்கு நெருப்பினுடைய சூடு இதமாக இருப்பது போன்றும், கடும் தாகத்தால் தவிப்பவனுக்கு குடிக்க நீர் கிடைத்தது போன்றும், ஈஸ்வரன் தன்னை விரும்பி அடைந்தவர்களுக்கு அவனது அருளை அள்ளித் தருகின்றான்.

அதுவே, அவனை அறியாமல், ஆணவத்துடன் இருப்பவர்களுக்கு அவனது அருள் கிடைப்பது இல்லை. இது யாருடைய குற்றம் என்பதை எண்ணிப் பார்த்து, உண்மையை அறிவாய் நீயே.

ஒன்று கேள் மகனே புமான் முயற்சியால்
உரைத்து மானுடர்க்கு ஈசன்
நன்று செய்யவே காட்டிய நூல்வழி
நடந்து நல்லவர் பின்னே
சென்று துட்டவாதனை விட்டு விவேகராய்ச்
செனித்த மாயையைத் தள்ளி
நின்று ஞானத்தையடைந்தவர் பவங்கள்போம்
நிச்சயமிதுதானே. (62)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! உனக்கு ஒரு உபாயம் கூறுகின்றேன் கேட்பாயாக! மனிதன் மட்டுமே தனது அறிவைக் கொண்டு, சுய முயற்சியினால்நன்மை, தீமைகளை அறிந்துக் கொள்ள முடியும்.

அதன் அடிப்படையில் நிலையான சந்தோசத்தைக் கொடுக்கக்கூடிய நன்மை ஒன்று உண்டு எனில், அது சம்சார சாகரத்தில் இருந்து கரையேறக் கூடிய, தோணி போன்று உதவுகின்ற சாஸ்திரத்தை ஈசன் மானிடர்க்கு நல்லது செய்ய

உரைத்த வேத வாக்கியங்களை, சத்குரு நாதரின் வாயிலாக கேட்டு, சந்தேகங்களை விசாரம் செய்து, அந்த நூல் காட்டிய நல்வழியில் நடந்து, நித்ய, அநித்ய விவேகத்தை அடைதல் வேண்டும்.

இவ்வாறு பெற்ற விவேகத்தின் துணைக்கொண்டு, வாழ்ந்து காட்டிய ஞானிகளையும், தற்பொழுது ஜீவன் முக்தர்களாக வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற ஞானிகளையும் பின் தொடர்ந்து, அவர்களது உபதேசங்களினால் தீய பதிவுகளை நீக்கிக் கொண்டு, பிறவிக்கு காரணமான மாயையைக் கடந்து, ஆத்ம ஞானத்தை அடைந்து விட்டால், அதன்பிறகு, நிலையான சந்தோசத்தை தரக்கூடிய முக்தியான பிறவாப் பெரு நிலை நிச்சயம் மகனே.

## குறிப்பு:–

முக்தி நிலைகள் பற்றி சிவவாக்கியர் தனது சிவவாக்கியம் நூலில் பின் வருமாறு கூறுகிறார்.

“தெளிந்த நற் சரியை தன்னில் சென்று சாலோகம் பெறும்
தெளிந்த நற் கிரியை பூசை சேரலாம் சாமீபமே
தெளிந்த நல் யோகம் தன்னில் சேரலாகும் சாரூபம்
தெளிந்த ஞானம் நான்கிலும் சேரலாம் சாயுச்யமே” - சிவவாக்கியர்.

இறைவனின் உருவடிவம் ஒன்றினையே பொருள் என உணர்ந்து இயற்றப்படும் வழிபாடு ‘**சரியை**’ எனப்படுகின்றது.

இதனால், இறையுலகத்தில் உள்ள இன்பங்களை நுகர்ந்து வாழுதல் என்ற "**சாலோகம்**" உண்டாகின்றது.

ஒன்றினையே பொருள் என உணர்ந்து அகம்புறம் இரண்டாலும் இயற்றப்படும் வழிபாடு '**கிரியை**' எனப்படுகின்றது.

இதனால், இன்பத்தோடு ஒரு புதல்வனை போல இறைவன் அருகில் அமரும் நிலை "**சாமீபம்**" உண்டாகிறது.

பக்தன் தன் வெளித்தோற்றம் துறந்து உள்ளடங்கி, இறைவனின் **அருவம்** ஒன்றினையே பொருள் என உணர்ந்து இயற்றப்படும் வழிபாடு '**யோகம்**' எனப்படுகின்றது.

இதனால், இறைவனைப் போன்று உருவந்தாங்கி இன்பம் நுகரும் நிலை "**சாரூபம்**" உண்டாகின்றது.

சாஸ்திரம் ஆராய்ந்து அவற்றின் சாரத்தை குருவினிடம் கேட்டு, கேட்டவற்றை சிந்தித்து தெளிந்து, தெளிந்ததை மேற்கொண்டு, ஞானம் (அறிவு) ஞாதா (அறிபவன்), ஞேயம் (அறிபடுபொருள்) இவற்றை கடந்து பரம்பொருளுடன் இரண்டறக் கலத்தல் '**ஞானம்**' எனப்படுகின்றது.

'**ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர்**' - பெரியபுராணம்

இதனால், இறைவனோடு இரண்டற கலந்து பிரியாது அவனை பற்றும் நிலை "**சாயுஜ்ஜியம்**" உண்டாகின்றது.

ஞானமானது **கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிஷ்டை** என நால்வகைப்படும். இவற்றை கடைபிடிக்க **பரமுத்தி** கிடைக்கும்.

இந்த நால்வகை மார்க்கங்களையும், **அரும்பு, மலர், காய், கனிக்கு** ஒப்பிட்டு விளக்கியவர் தாயுமானவர்.

'விரும்பும் சரியை முதல் மெய்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனிபோல் அன்றோ'- தாயுமானவர்.

| முக்தி மார்க்கம் | வேறு பெயர்கள் | ஜீவன் அடையும் பதவி | முக்தி அடைந்தவர்கள் | முக்தி நிலைகள் | உவமை |
|---|---|---|---|---|---|
| சரியை | தாஸமார்க்கம் | சாலோகம் | திருநாவுக்கரசர் | பதமுக்தி | அரும்பு |
| கிரியை | சற்புத்திரமார்க்கம் | சாமீபம் | ஞானசம்பந்தர் | பதமுக்தி | மலர் |
| யோகம் | சகமார்க்கம் | சாரூபம் | சுந்தரர் | பதமுக்தி | காய் |
| ஞானம் | சன்மார்க்கம் | சாயுஜ்ஜியம் | மாணிக்கவாசகர் | பரமுக்தி | கனி |

முக்திகள் பல வகைப்படும். அவைகளில் வாழும் பொழுதே உயர்ந்த ஞானத்தை அடைந்து, நிலையான ஆனந்தத்தை உண்டாக்குகின்ற ஜீவன் முக்தி நிலை இங்கு மிக உயர்வாகப் பேசப்படுவதற்குக் காரணம் என்னவெனில், சரீரம் எடுத்து பிறக்கின்ற ஜீவர்களில் மனிதன் மட்டுமே அந்த பரமாத்மாவை அறிந்து, அவருடன் இரண்டறக் கலந்து விடுகின்ற உயர் ஞானத்தை அடைய முடியும்.

அந்த ஞானத்திற்கு தகுதி என்பதே இந்த ஆறறிவை கொண்ட மனித சரீரம் மட்டுமே ஆகும். மற்ற குறைந்த அறிவைக் கொண்ட சரீரங்களில் வந்த ஜீவர்களுக்கு இந்த தகுதி கிடையாது.

இதில் மனிதன் என்னதான் கர்ம காரியங்களான **பூசை, தியானம், யோகம்** என்று எதைச் செய்தாலும், அதன் வாயிலாக, அவனது மனம் தூய்மையை அடைய முடியுமே தவிர, ஆத்ம ஞானத்தை அடைய முடியாது.

அதுவே, ஒருவன் சத்குருவை அடைந்து, மனித சரீரம் எடுத்ததின் நோக்கத்தை அறிந்து, மகத்தான சாஸ்திரத்தை விசாரித்து, அதன்வாயிலாக தன்னைப்பற்றியும், இந்த தரணியைப் பற்றியும், தரணிக்கு காரணமான ஈஸ்வரனைப் பற்றியும் உண்டாகின்ற சந்தேகங்கள் தெளிந்து, அதனால் கிடைத்த ஆத்ம ஞானத்தினால் பல பிறவிகளுக்கு காரணமான அறியாமையை நீக்கி, அனைத்து அண்ட சராசரங்களும் தன்னிலிருந்து வேறுபட்டதல்ல என்ற அகண்ட வஸ்துவாக தன் சொரூபத்தை அறிய முடிகின்றது.

அதாவது, ஜீவன், ஈஸ்வரன், இந்த உலகம் மூன்றும் ஒன்றே என்ற உயர் ஞானத்தினால் வாழும் பொழுதே இந்த உலகத்தை அனுபவித்து வாழ்கின்ற ஆனந்த வாழ்க்கை உண்டாகின்றது. இதுவே ஜீவன் முக்தர் நிலை. மற்ற முக்திகள் அனைத்தும் இந்த ஜீவன் முக்தர்கள் அடைந்த இந்த ஞானத்திற்குள் அடக்கம்.

அது எவ்வாறெனில், இருக்கின்ற ஒன்றேயான "**நான்**" மற்ற உலகத்தில் வசிக்கும் லோகத்திற்கு சென்று, சந்தோசத்தை அனுபவிப்பது **(சாலோக முக்தி)** என்பதுவோ, ஈஸ்வரன் என்று தனக்கு வேறாக உள்ள ஒருவருக்கு சமீபத்தில் **(சாமீப முக்தி)** சென்று சேவைகள் செய்ய இருப்பதையோ, அல்லது கண்ணிற்குத் தெரியாத சூக்ஷும நிலையில் உடலே இல்லாத ஈஸ்வரனின் உடலை எடுப்பதையோ **(சாரூப முக்தி)** வாழும்பொழுது அனுபவமாக உறுதி செய்ய முடியாது. இதை கற்பிதம் (கற்பனை) என்றே கூற வேண்டும்.

காரணம், அதன் அனுபவம் நமக்கு இறந்த பிறகு உண்டாவதாக கூறுவதால் அதன் நம்பகத் தன்மையும், அனுபவமும் நம்மிடையே கிடையாது.

ஆனால், சாஸ்திர விசாரம் மேற்கொண்டு அடைந்த ஆத்ம ஞானத்தினால் உண்டாகின்ற ஜீவன் முக்தி நிலை அனுபவம் வாழும் பொழுதே உண்டாகின்றது. அதை ஆனந்தமாக அனுபவிக்கவும் முடிகின்றது.

ஆகவே, நிகழ்காலத்தில் நிச்சயிக்கப்பட்ட உறுதியான அனுபவத்தை தவிர்த்து, எதிர்காலத்தில் ஒன்றை அடையப்போகின்றோம் என்ற எதிர்ப்பார்ப்பு உறுதியான, நிச்சயிக்கப்பட்ட நம்பகத் தன்மை கொண்டதாகாது என்பதினால், விசாரம் மட்டுமே விபரீத புத்திக்கு தீர்வாகும் என்று இங்கு சாஸ்திரத்தின் வாயிலாக வலியுறுத்தப் படுகின்றது.

எனவே, ஞானம் மட்டுமே மனிதப் பிறவியின் மகத்தான பலன் என்றால், அது மிகையாகாது. அதுவே, **சாயுஜ்ஜிய முக்தி** ஆகும்.

இந்த ஞானந்தான் வருவதெப்படி எனில் இடைவிடா விசாரத்தால்
வந்தடைந்திடும் விசாரம்தான் ஏதெனின் மனாதியாம் சரீரத்தில்
இந்த நானெவன் சித்தெது சடமெது இரண்டும் ஒன்றாக்கூடும்
பந்தமேது வீடேது என உசாவுதல் பகர் விசாரமதாகும். (63)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! இந்த ஆத்ம ஞானம் வருவது எப்படி என்றால், இடைவிடாத விசாரத்தால் வந்தடைந்திடும்.

விசாரம் என்பது என்னவென்றால், இந்த கண்ணிற்குத் தெரியாத சூக்ஷும மனம், ஆசைகளை அனுபவிக்க விரும்பி, அதற்காக எடுத்துக் கொண்ட கண்ணிற்குத் தெரிகின்ற ஸ்தூல உடலில், பலப் பிறவிகளாகச் சேர்த்துக் கொண்ட சம்ஸ்காரங்களான பதிவுகளை காரண உடலாக வைத்துக் கொண்டிருக்கும்.

இவ்வாறு மனமானது காரண உடலாக சேகரித்துக் கொண்ட ஆசைகளை, கண்ணிற்குத் தெரியாத சூக்ஷும உடலில் இருந்து, கண்ணிற்குத் தெரிகின்ற ஸ்தூல உடலில்

வந்து அனுபவிக்க விரும்பி, அந்தஉடலின் இந்திரிய, கரணங்களின் வாயிலாக இந்த அழியக்கூடிய உடலை '**நான்**' என்று அபிமானித்துக் கொள்ளும்.

இதில் '**நான்**' என்று அபிமானிக்கத் தகுதி கொண்டது அழியக்கூடிய உடலைக் கொண்ட மனமா? அழியாத ஆத்மாவா? ஆத்மா என்ற அறிவை அறிவது எது?

ஜடம் எது**?** ஜடமான உடலையும், அறிவான ஆத்மாவையும் ஒன்றாகக் கருதுகின்ற பந்தம் எது? நிலையான மகிழ்ச்சியைத் தரும் வீடுபேறு எது? என பலவாறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு சத்குருநாதரின் வாயிலாக தீர விசாரிப்பதே "**விசாரம்**" எனப்படும்.

போன சன்மங்கள் தனில் அனுட்டித்த நற்புண்ணிய பரிபாகம்
ஞானமாக்குமே விசாரம் ஏன் என்றிடின் நாம் உரைத்திடக் கேளாய்
ஆன புண்ணியம் ஈசுர அர்ப்பணம் செயின் அசுசி போம் சுசியாகும்
மானதம்பினை விசாரித்து ஞானத்தை மருவும் என்றறிவாயே. (64)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! முற்பிறவிகளில் கடைப்பிடித்த பலவிதமான **பூசை, ஜபம், தியானம், உபாசனை, தான, தர்மங்கள்** மற்றும் **ஹோமங்கள்** போன்ற நற்காரியங்களினால் உண்டான புண்ணியங்களின் பலனாக ஞானம் உண்டாகாதா? பிறகு ஏன்

விசாரம் செய்து ஞானத்தை அடைய வேண்டுமென்று கூறுகின்றீர்கள்?

மகனே! விசாரம் ஏன்? எனில், அதற்கான காரணத்தை கூறுகின்றேன் கேட்பாயாக.

முற்பிறவிகளிலும், இப்பிறவிகளிலும் செய்த பூசை, ஜபம், யோகம், தியானம், போன்ற பல விதமான நற்காரியங்களை காமியக் கர்மங்களாகச் செய்யாமல், நிஷ்காமியமாகச் செய்து, அதனால் உண்டான நற்பலன்களான புண்ணியங்களை ஈஸ்வரார்பணம் செய்திடின், அதன் மேலான பலனாக, மனதின் சம்ஸ்காரங்களான பலவிதமான ஆசைப்பதிவுகள் நீங்கி, மனம் தூய்மையடைந்து **சித்த சுத்தி** உண்டாகிவிடும்.

இவ்வாறு, சுத்தியான மனதில் நித்திய, அநித்ய விவேகம் உண்டாகி, ஆசைகள், கோபங்கள் முதலிய மோகங்கள் நீங்கி, **சத்துவகுணம்** உண்டாகும்.

இந்த சத்துவகுணம் வந்தவனுக்கே, தன்னை அறிகின்ற தத்துவங்களை, சாஸ்திரங்களின் வாயிலாக கேட்டு அறிந்து, அதில் உண்டான சந்தேகங்களை சத்குருவிடம் விசாரிப்பதின் மூலமாகத் தெளிவைப் பெற்று, ஆத்ம ஞானத்தை அடைய முடியும் என்று அறிவாயாக.

**குறிப்பு:–**

(கருமங்களினால் சித்த சுத்தி மட்டுமே உண்டாகுமே தவிர, நேரடியாக ஞானத்தை அடைய முடியாது. எனவே, ஆத்ம ஞானத்திற்கு விசாரம் அவசியம் என்று இங்கு அறிவுறுத்தப்படுகின்றது.)

பத்தியும் வயிராக்கியமும் பரலோகமும் அணிமாதி
சித்தியும் தவ நிட்டையும் யோகமும் தியானமும் சாரூப
முத்தியும் தரும் விசித்திர கருமங்கள் மோக மாத்திரம் தள்ளும்
புத்தி தந்திட அருமையோ விசாரம் ஏன் புண்ணிய குருமூர்த்தி. (65)

**<u>தெளிவுரை:-</u>**

குருமூர்த்தியே! பக்தி, வைராக்கியம், சுவர்கம் போன்ற பரலோகங்கள், அஷ்டமா சித்திகள், தவ நிஷ்டைகள், யோகம், தியானம் மற்றும் சாரூப முக்தி போன்ற அனைத்து உயர்ந்த நிலைகளை கொடுக்கின்ற கர்ம காரியங்கள் சித்த சுத்தியை உண்டாக்கி, மோகத்தை அழித்து விடும்போது, இந்த கர்மங்களைச் செய்து விவேகத்தை அடைய முடியாதா?

விசாரம் செய்துதான் ஞானத்தை அடைய முடியுமா ஐயனே?

வேடம் மாறிய பேர்களை அறியவே வேண்டினான் மகனே கேள்
கூடமாம் அவர் சுபாவங்கள் சீலங்கள் குறிகளாய்ந்து அறியாமல்
ஓடியும் குதித்தும் தலை கீழ்நின்றும் உயர்ந்த கம்பத்தேறி
ஆடியும் பல கருமங்கள் செய்யினும் அவருண்மை தெரியாதே. (66)

## <u>தெளிவுரை:-</u>

மகனே கேள்! ஒருவன் மாறுவேடம் போட்டுக் கொண்டு, தன் உண்மை சொரூபத்தை மறைத்துக் கொண்டுள்ளவனை யார் என்று அறிய விரும்பினால், அவனிடம் இயல்பாக உள்ள சுபாவங்கள், குணங்கள் போன்ற குறிகளைக் கொண்டுதான் அவனை அறிய முடியுமே தவிர, ஓடியும், குதித்தும், தலைகீழ் நின்றும், உயர்ந்த கம்பத்தின் மீது ஏறி ஆடியும் இவ்வாறான பல காரியங்களைச் செய்தாலும் அவருடைய உண்மை சொரூபத்தை அறிய முடியாதே.

இன்னவாறு அந்தப் பிரமத்தை அறிவிக்கும் இலக்கணத்தால் வேதம்
சொன்ன ஞானமும் விசாரத்தால் வருமன்றிச் சுருதிநூல் படித்தாலும்
அன்னதானங்கள் தவங்கள் மந்திரங்கள் ஆசாரங்கள் யாகங்கள்
என்ன செய்யினும் தன்னைத்தான் அறிகின்றது இவைகளால் வாராதே.
(67)

## <u>தெளிவுரை:-</u>

அதுப்போன்று, சச்சிதானந்த சொரூபமாகிய அந்த பரப்பிரம்மம் பஞ்ச கோஷங்கள் முதலானவைகளோடு கூடி ஜீவனாக மாறுவேடம் தரித்துள்ளது.

அத்தகைய பரப்பிரம்மத்தை அறிய வேண்டுமானால், வேதம் வகுத்த இலக்கணமான விட்டும், விடாத இலட்சணையின் வாயிலாக, சாஸ்திரம் கூறிய ஞானத்தை விசாரித்து அறிவதினால் மட்டுமே வருமே அன்றி, வேத சாஸ்திரங்களை தினம், தினம் பொருள் புரியாமல் படிப்பதினாலும், அன்னதானங்கள் செய்வதினாலும், தவங்கள், மந்திர ஜபங்கள், ஆசார அனுஷ்டானங்கள், யாகங்கள் என எது செய்தாலும், தன் சொரூபத்தை அறிவது இயலாது.

துளங்கு தர்பண அழுக்கறக் கைக்கொண்டு துலக்கினாற் போமன்றி
விளங்கு புத்தியால் உலகிலார் துலக்கினார் விமல தேசிகமூர்த்தி
களங்கமாகும் அஞ்ஞானமும் அப்படி கருமத்தால் கழுவாமல்
உளம்குறித்த ஞானத்தினால் எப்படி ஒழியும் ஈது அருள்வீரே. (68)

## தெளிவுரை:-

விமல தேசிக மூர்த்தியே, அழுக்கு படிந்த கண்ணாடியை கையினால் அழுக்கு போகத் துடைத்தால் மட்டுமே அந்த அழுக்கு போகுமேயன்றி, புத்தியினால் செய்யும் விசாரத்தினால் அந்த கண்ணாடியில் உள்ள அழுக்கு எவ்வாறு போகும்?

அதுப்போல, களங்கமடைந்த அறியாமையை, நல்ல செயல்களைச் செய்து, அதன் வாயிலாக கிடைக்கின்ற அனுபவத்தைக் கொண்டு நீக்கிக் கொள்ளாமல், புத்தியினால் விசாரணை செய்து உண்டாகின்ற ஞானத்தினால் மட்டும் எவ்வாறு நீங்கும் இதை அருள் கூர்ந்து விளக்குங்கள் ஐயனே?

தர்ப்பணத்தினில் களிம்பு வாஸ்தவமலம் சகசமாதலின் மைந்தா
கற்பளிங்கினில் கருநிறம் சகசமாக் கருத்ததன்று ஆரோபம்
தர்பணத்தினில் அழுக்கற வேண்டினால் சாதனத் தொழில் வேண்டும்
கற்பளிங்கினில் ஆரோபமே கறுப்பென்று கண்டிட மனம்போதும். (69)

## தெளிவுரை:-

மகனே! கண்ணாடியில் இருக்கின்ற அழுக்கு உண்மையானது. அதனால், அதை கையால் தேய்த்து சுத்தம் செய்ய வேண்டும்.

இதுவே, பளிங்கு போன்ற கண்ணாடி ஸ்படிகக்கல் அருகில் ஒரு கருப்பு நிறத்துணி வைக்கப்பட்டிருந்தால், அது அந்த கண்ணாடி போன்ற ஸ்படிகத்தில் கருப்பு நிறத்தில் அழுக்கு போன்று தோன்றும்.

ஆனால், அது உண்மையான அழுக்கு அல்ல. அந்த ஸ்படிகத்தின் மீது பொய்யாக ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்பதை அறிய வேண்டும். அந்த பொய்யான அழுக்கை நீக்க ஸ்படிகத்தை துடைக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த கருப்புத் துணியை அகற்றினால் போதும்.

இவ்வாறு, மனதில் உள்ள அறியாமையை போக்க அதைத் துடைத்து சுத்தம் செய்ய வேண்டிய செயல் அவசியம் எதுவும் கிடையாது. ஆத்ம ஞானத்தை அடைந்தால் மட்டும் போதும், மன அழுக்குகள் தானாகவே நீங்கி விடும்.

இங்கும் அப்படி சச்சிதானந்தத்தில் இடர் சடம் பொய் மூன்றும்
தங்கும் மாயையின் கற்பிதம் அன்றியே சகச வாஸ்தவமன்றே
பங்கமாகும் அஞ்ஞானத்தைக் கருமங்கள் பகை செய்யாது உறவாக்கும்
துங்க ஞானமே கரும அஞ்ஞானத்தைச் சுடுகின்ற நெருப்பாமே.

(70)

## தெளிவுரை:-

இது போலத்தான் சச்சிதானந்தத்திலே தோன்றுகின்ற துன்பம், அசத்து, மற்றும் பொய் என்ற அஞ்ஞான அழுக்குகளும் கிளிஞ்சலிலே வெள்ளியைக் காண்பது போன்று, கற்பித்துக் கொண்ட மாயையேத் தவிர உண்மையில்லை.

இத்தகைய அறியாமை அழுக்குகளை எத்தகைய கர்ம காரியங்கள் செய்வதினாலும் நீக்கிக் கொள்ள முடியாது.

சத்குருநாதரை அணுகி விசாரம் செய்தால் மட்டுமே ஆத்ம ஞானம் உண்டாகி, சூரியனைக் கண்ட பனி இல்லாது போவதைப் போன்று, அந்த பரிசுத்த ஞான ஒளிப் பிரகாசத்தினால், அனைத்து அறியாமைகளும் சுட்டு எரிக்கப் பட்டுவிடும்.

மனைக்குள் வைத்த பண்டங்களை மறந்தவன்
வருடம் நூறழுதாலும்
நினைத்து உணர்ந்தபின் கிட்டுமப்படி இந்த
நின்மல ஆன்மாவும்
அனர்த்தமான தன் மறதியைக் கெடுத்துத் தன்
அறிவினாற் காணாமல்
கனத்த கர்மங்கள் நூறு உகம் செய்யினும்
காணுமோ காணாதே. (71)

## <u>தெளிவுரை:-</u>

ஒருவன் வீட்டினுள்வைத்த பொருளை மறந்து விட்டு, நூறு வருடங்கள் அழுது புரண்டு கொண்டு, வைத்த இடத்தை விட்டு, மற்ற பல இடங்களில் தேடிக் கொண்டு, இங்கும், அங்கும் ஓடியும், ஆடியும் என்ன செயல் செய்து தேடினாலும் கிடைக்காது. அதுவே, அவனது மனதிற்கு மாத்திரம் அந்த பொருள் வைத்த இடம் ஞாபகத்திற்கு வந்து விட்டால் அப்பொழுதே அந்தப் பொருள் கிடைத்து விடும்.

அதுபோன்று, எந்த விதமான குற்றமும் அற்ற பரிசுத்தமான ஆத்மாவை அறியவிடாமல் மறைக்கின்ற மறதியான, பயனற்ற அனர்த்தமான பல அறியாமைகள் இருக்கின்றவரை, நூறு யுகங்கள் காலமாக எத்தனை விதமான கர்ம காரியங்களைச் செய்து, ஆத்மாவை அறிய முயன்றால் முடியுமா? முடியாதே. அதுவே, அறிவினால் சாஸ்திரத்தின் துணைக்கொண்டு, சத்குருநாதரின் மூலமாக தீர விசாரித்து அறிந்துக் கொண்டால், அந்த நொடியே தன் சொரூபத்தைக் காண முடியுமே.

நன்மையாம் குருவே சுகம் தருவது ஞானமே எனும் வேதம்
தன்ம பாவமிச்சிரங்களால் தேவர்கள் தருவிலங்குகள் மாந்தர்
சென்மமாகுவ சாதி ஆசாரமே செய்தவம் சுகம் என்று
கன்ம காண்டத்தில் விதித்தது என் விதித்துள காரணம் உரையீரே. (72)

## தெளிவுரை:-

பல நன்மைகளை நல்கிய குருநாதரே! சர்வ துக்க நிவாரணமும், பரமானந்த நிலையான நிரந்தர சுகத்தைத் தருவது ஞானமே என்று சாஸ்திரத்தின் இறுதிப்பகுதியான வேதாந்தம் உரைக்கின்றது.

அதே சஸ்திரத்தின் முற்பகுதிகளான கரும காண்டங்கள் அதிக புண்ணிய கர்மங்களினால் தேவர் களாகவும், அதிக பாவ கர்மங்களினால், மிருகம், பறவை போன்ற இழிவான பிறவிகளாகவும், சமமான பாவ, புண்ணிய கர்மங்களின் கலப்பால், மனிதர்களும் என பிறவிகள் உண்டாவதாக கூறுகின்றது.

ஆதலால், மேற்சொன்ன பாவ கருமங்களைச் செய்து இழிவான பிறவிகள் உண்டாகாதவாறு இருக்கும் பொருட்டு, அவரவர்களுடைய வர்ணாசிரம தர்மப்படி வாழ்ந்து வந்தால் போதும், சுகம் உண்டு என்று கர்மகாண்டத்தில் கூறியதற்குக் காரணம் அருள்வீராக.

தினமும் மண்ணுகர் பிள்ளை நோய்க்கு இரங்கியே
தீம்பண்டம் எதிர்க்காட்டிக்
கனமருந்துகள் ஒளித்து வைத்து அழைக்கின்ற
கருணை நல்தாய் போலே
மனை அறங்கள் செய் மகங்கள் செய் நன்றென்று
மலர்ந்த வாசகம் சொல்லும்
நினைவு வேறுகாண் சுவர்க காமிகள் அந்த
நிண்ணயந் தெரியாரே. (73)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! வேதசாஸ்திரம் இவ்வாறு கர்ம காண்டத்தில் கர்மங்களைச் செய்யச் சொல்வதும். பிறகு, ஞான காண்டத்தில் ஞானத்தை சிறப்பாகக் கூறுவதும் எதனால் என்றால், மண்ணை விரும்பி உண்ணுகின்ற தன் குழந்தைக்கு, அதனால் நோய் உண்டாகி விடும் என்று, கருணைக் கொண்ட நல்ல தாயானவள், அந்த குழந்தை மீது இரக்கம் கொண்டு, அதை தடுக்க கசப்பான மருந்தை அவனுக்கு ஒளித்து வைத்துக் கொடுக்க விரும்பி, அவன் விரும்பும் திண்பண்டங்களைக் காட்டி தன் அருகே அழைத்து, அந்த கசப்பான மருந்தினை அவனுக்கு ஊட்டுவது என்பது, அவன் மீது உள்ள அக்கரையினால் என்பதை அறியவும்.

இதுபோன்று, சாஸ்திரம் என்ற தாயானவள் தன் மக்கள் சுகம் அடையும் பொருட்டு, அவனுக்கு நிலையான மகிழ்ச்சியைத் தருகின்ற மோக்ஷ மார்க்கத்தை உபதேசிக்க

விரும்பி நேரடியாக அழைத்தால் இவன் வரமாட்டான் எனக் கருதி, இவனுக்கு பிடித்த விதமாக கர்மகாண்டத்தில் உள்ள பல கர்மங்களைச் செய்தால், அதன் வாயிலாக பல நன்மைகள் பலன்களாக கிடைக்கும் என்று வருவான் என்றே இவ்வாறு நடைமுறைப் படுத்துகின்றது.

ஆகவே, ஒருவனை இல்லற தர்மத்தை செய்யவும், யாக யக்ஞுங்கள், பூசை, புணஸ்காரங்கள் செய்யவும் கூறுவதின் உள் நோக்கம் என்னவெனில், இதுப்போன்ற கர்ம காரியங்களின்மீது ஆசைகள் உண்டாகி, அதன்பலனாக, இவன் போகத்தைக் கொடுக்கக்கூடிய சொர்க்க போகங்களில் விருப்பம் கொண்டு, அதற்கான வழிமுறைகளை அறியும் பொருட்டு, சாஸ்திரத்தை நாடி அதன் உள்ளே ஆர்வமுடன் வருவான்.

இவ்வாறு தன் அருகே வந்தவனை கருணையினால் ஆட்கொண்டு, பிறவாப் பெரு நிலையான மோக்ஷத்தை, மனிதப்பிறவியின் மகத்துவத்தையும், அதன் உன்னத நோக்கத்தையும், அவனுக்கு அறுதி உண்மையாக எடுத்து உரைக்கின்றது.

இவ்வாறு சாஸ்திரத்தை இறுதிவரை கற்று அறியாத, சுவர்க்க போகங்களில் ஆசை உள்ள கர்ம காண்டிகளுக்கு இதன் ரகசியம் தெரியாதே.

போகமாம் உயிர் கண்டதை உண்பதும் புணர்வது இயல்பேகாண்
ஆகமங்களும் சுபாவத்தை விதிக்குமோ அத்தனை தெரியாதோ
காகமே கறுத்திடு நெருப்பே சுடு கசந்திடு வேம்பே நீ
வேக வாயுவே அசையென ஒருவரும் விதித்திடல் வேண்டாவே. (74)

## தெளிவுரை:-

அன்பனே! அனைத்து உயி(ஜீவ)ர்களும் போகத்தில் ஈடுபட்டு, உண்பதும், உறங்குவதும், புணர்ச்சியில் ஈடுபடுவதும், குழந்தை, குட்டிகளைப் பெற்றுக் கொள்வதும், அவைகளின் இயல்பாகவே இருக்கும் பொழுது, அந்த சுபாவங்களைப் பற்றி உண்ணுங்கள், உறங்குங்கள் என்று ஆகம சாஸ்திரங்கள் எடுத்துக் கூறுமோ?

இதைக்கூட அறியாமல் வேதசாஸ்திரம் இருக்குமா? இயற்கைக்கு மாறான விதிகள் கூறுவது பொருந்தாது என்பதை, அவசியம் அறிய வேண்டிய உண்மை அல்லவா?
அப்படிக்கூறினால், அது எவ்வாறு இருக்கும் எனில், காக்கையைப் பார்த்து நீ கறுத்திடு என்றும், நெருப்பைப் பார்த்து சுடு என்றும், வேம்பே நீ கசந்திடு என்றும், வேகமாக வீசும் காற்றைப் பார்த்து அசைந்திடு என்றும் கட்டளையிடுகின்றது போலாகும். இதைச் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது.

கள்ளும் ஊனும் நீ விரும்பினால் மகங்கள் செய் காமத்தில் மனதானால்
கொள்ளும் பெண்டொடு கலவி செய் எனில் இவன் குறையெலாம் தொடான் என்றே
தள்ளும் வேதத்தின் சம்மதம் சகலமும் தவிர்வதே கருத்தாகும்
விள்ளும் இவ்விதி என்னெனில் பூருவ நியமமாம் விதியன்றே. (75)

## தெளிவுரை:-

அதுப்போல, மதுவையும், மாமிசத்தையும் நீ சுவைக்க விரும்பினால் யாகங்கள் செய் என்றும், மோகத்தினால் பெண்ணுடன் சேர விரும்பினால், அவளை மணம் முடித்துக்கொண்டு அனுபவித்துக் கொள் என்றும் சாஸ்திரத்தின் கர்மகாண்டம் கூறினால், அதன் உட்பொருளை அறிய வேண்டும் அல்லவா?

எனவே, வேதம் கூற வருகின்ற மிக ஆழமான கருத்து என்னவெனில், மதுவையும், மாமிசத்தையும் உண்பதற்கு யாகங்கள் செய் என்றால், அரசர்களாக இருந்து போகங்களை அனுபவிக்கத் தகுதி படைத்தவன், தன்னுடைய ஆட்சியின் கீழ் வாழுகின்ற பாமர மக்களுக்காக, பல தான, தர்மங்கள் போன்ற நற்கருமங்களை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தும் விதமாக யாக, யக்ஞங்களை செய்துவிட்டு, அதன் பிறகு மதுவையும், மாமிசத்தையும் தொடு என்று கூற வருகின்றது.

பலருக்கு இன்பத்தைக் கொடுக்கும் காரியத்தை ஒருவன் செய்ய முற்பட்டான் என்றால், அவன் துன்பத்திற்கு காரணமான இவைகளைத் தொடமாட்டான் என்ற அவசியத்தைக் கருதி பல கர்ம காரியங்களாக சாஸ்திரம் இவ்வாறு வகுத்துள்ளது.

அதுப்போலவே, ஆசையினால் ஒரு பெண்ணை தொட விரும்பினால், இல்லற தர்மமான திருமணத்தை செய்துக் கொண்டு, அந்த பெண்ணை உன் மனைவியாக மாற்றிய பிறகு அவளிடம் உறவு கொள் என்றும், இதனால் உண்டாகின்ற வாரிசுகளினால், அவனது வம்சம் விருத்தியாகும் என்றும், இல்லற தர்மம் காக்கப்படும் என்றும் அறிவிக்கின்றது.

இதுபோன்ற கர்மத்தினால் உண்டாகின்ற இன்பத்தை அனுபவிக்க விரும்புபவன், இந்த கர்ம காரியங்களை நடைமுறைப் படுத்தும் போது, அதன் வாயிலாக அவனது மனம் சுத்தியாகி விடுகின்றது.

இதனால், அவன் சம்சாரத்திற்குக் காரணமான துன்பத்தை முழுமையாக தவிர்க்க விரும்பி, இறுதியாக சாஸ்திரம் கூற வருகின்ற மோக்ஷத்தை நாடி, சகலத்தையும் விட்டொழிக்கக் கூடிய விவேகத்தின் வாயிலாக, இதுவரை தன் அறிவை மறைத்துக் கொண்டிருந்த அறியாமையை நீக்கி, ஞானத்தை அடைவது மட்டுமே சாஸ்வதம் என்று சாஸ்திரம் உபதேசிக்க வருகின்ற மிக ஆழமான கருத்தாகும்.

இப்படி ஆயிரம் விதமான விஷயங்களை எடுத்துக் கொண்டு, எவ்வளவு யுக்தி உண்டோ, அவ்வளவையும் ஆக்ஷேபணை செய்து, எதிர்த்தரப்பிலே உள்ள வல்லுனர்களால் நிர்ணயம் செய்வது பூர்வ பக்ஷம் என்ற நியாயமாகும்.

இது மனிதனை தர்ம வழியில் வழி நடத்த ஆன்றோர்களால் உண்டாக்கப்பட்ட வாழ்வியல் சட்டங்களான ஸ்மிருதிகள் ஆகும். இவைகளை சாஸ்திரம் விதித்த விதிகள் என்று கூறமுடியாது.

**குறிப்பு:–**

(**ஸ்ருதி** என்றால் வேதம். **ஸ்மிருதி** என்றால் மக்களுக்காக அந்த, அந்த காலக்கட்டங்களுக்கு ஏற்ப கொண்டு வரப்பட்ட சட்ட திட்டங்களாகும். **உதாரணம்**:- மனுஸ்மிருதி, பராசர ஸ்மிருதி, யாக்ஞவல்கிய ஸ்மிருதி போன்று ஏராளமாக உள்ளன.)

மது இறைச்சிகள் உண்ணென்ற சுருதிபின்
மணந்துபார் எனல் பாராய்
மிதுன இச்சையும் புத்திர உற்பத்தியால்
விரும்பு என்ற விதிபாராய்
இதையும் விட்டொழி யதி நயிட்டிக வன்னிக்கு
இகழ்ச்சியற்றதும் பாராய்
அதை அறிந்து கன்மங்கள் ஆசைகள் ஒழிந்து
ஆனந்த மடைவாயே. (76)

## <u>தெளிவுரை:-</u>

மதுவையும், மாமிசத்தையும் உண் என்று கூறிய சாஸ்திரம், பிறகு பெண்ணைத் தொட விரும்பினால் அவளை மணந்துக் கொள் என்று கூறுவதிலிருந்தும் அறிய வேண்டிய உண்மை என்னவெனில், அரசர்கள் செய்கின்ற பல யாக, யக்ஞங்கள் போன்ற நற்கர்மங்களினால் தான, தர்மங்கள் பெருகி, மக்களின் இயற்கை வளம் கெடாமல், மாதம் மும்மாரி மழை பொழிந்து, விவசாயம் செழித்து, அனைவருக்கும் தானியங்களும் உணவும் கிடைக்கவும் வழி செய்கின்றது.

ஒரு பெண்ணை ஆசை கொண்டு அடைதல் என்பது, திருமண உறவால் முறையாக நடைப்பெறும் போது, இல்லற தர்மம் காக்கப்பட்டு அதனால் உண்டாகின்ற வாரிசுகளினால், வம்சம் விருத்தியாகி, குடும்பத்தில் சந்தோசம் உண்டாகிறது.

இந்த சந்தோசம் நிலையானதாக இருக்க, சாஸ்திரம் உபதேசித்த ஞான காண்டத்தை அறிந்து, தன் சொரூபத்தில்

நின்று, வாழுகின்ற காலத்திலேயே யார் மீதும் விருப்பு, வெறுப்பு இன்றி நடு நிலையான வாழ்க்கையை வாழ வலியுறுத்தப்படுகின்றது.

இவ்வாறு இந்த ஞானத்தை அறிந்த நைஷ்டிக பிரம்மச்சாரிகளும், இல்லற தர்மத்தில் ஈடுபடாத சந்நியாசிகளும் அறியாமையை நீக்கிக் கொண்டு, ஆசைகள் ஒழிந்து ஆனந்தத்துடன் வாழ்வதையும் காண முடிகின்றது.

இதிலிருந்து வேதம் கூற வருகின்ற உண்மை என்னவெனில், சர்வ துக்க நாசமும், பரமானந்த பிராப்தியும் அனைவருக்கும் உண்டாகும் ஞானத்தை அறிந்து, கர்மங்களினால் உண்டாகும் ஆசையை ஒழித்து ஆனந்தம் அடைவாயே.

உலகமான அஞ்ஞானமும் கருமமும் உறவென்ற வழி கூடும்
பலவுமான அஞ்ஞானமும் ஞானமும் பகை என்பது உளதானால்
நிலவிலே மருப்போல அஞ்ஞானமும் நிமல ஞானத்தோடே
குலவி நின்று இந்தச் சிருட்டிகள் செய்யவும் கூடுமோ குருமூர்த்தி. (77)

## <u>தெளிவுரை:-</u>

குருநாதா! இந்த உலகத்தில் அனைத்து அறியாமைகளும், வைதிக கர்மங்களும் ஒன்றுக்கொன்று உறவாக இருப்பதையும், பல்வேறு அறியாமைகளும், ஆத்ம

ஞானமும் ஒன்றுக்கொன்று பகையாக இருப்பதையும் காணுகின்ற பொழுது, முழுமையான வெள்ளை நிலவிலே கருப்பான ஒருமருவைக் காண்பதுப்போல, அறிவில் களங்கத்தை உண்டாக்குகின்ற அறியாமைகள் களங்கமற்ற ஞானத்தோடு கூடியிருந்து இந்த சிருஷ்டிகளைப் படைக்கவும் முடியுமோ?

சொரூப ஞானமும் விருத்திஞானமும் என்று
சோதி ஞானமும் இரண்டாம்
சொரூப ஞானமே விருத்தியின் ஞானமாய்த்
தோன்றும் வேறிலை மைந்தா
சொரூப ஞானம் அஞ்ஞான சத்துருவன்று
சுழுத்தியிற் கண்டாயே
சொரூப ஞானத்தில் மருவும் அஞ்ஞானத்தைச்
சுடும் விருத்தியின் ஞானம். (78)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! ஞானமானது சொரூப ஞானம் என்றும், விருத்தி ஞானம் என்று இரண்டு ஜோதிப் பிரகாசமான ஞானங்கள் உள்ளன.

ஆயினும், இதில் சொரூப ஞானமே, விருத்தி ஞானமாகத் தோன்றுகின்றதே தவிர வேறு அல்ல.

சொரூப ஞானம் என்பது சாதாரண /சாமான்ய ஞானம். விருத்தி ஞானம் என்பது விசேஷ ஞானம். சொரூப ஞானம் அஞ்ஞானத்துக்கு விரோதி அல்ல.

இது எவ்வாறெனில், எண்ணங்கள் அற்ற ஆழ்ந்த உறக்க நிலையில் தூங்கும்போது, இந்த உடலும், உடலின் அந்தக்கரணங்களும், புறக்கரணங்களும் செயல்படாமல், உலகமும், உறவுகளும் தெரியாத ஆழ்ந்த உறக்கத்தில் மனம் இலயமாகி ஒன்றுமே இல்லாத சூன்யம் மட்டுமே விளங்கும்.

ஒன்றுமில்லாத சூன்யத்தை அறிவு சொரூபமான ஆத்மா என்று கூற முடியாது.

அப்படிப்பட்ட ஆழ்ந்த உறக்கத்தில் சொரூப ஞானத்துடன் கலந்து, அழியாமல் இருந்த அஞ்ஞானத்தை, **விருத்தி ஞானம்** சுட்டு எரித்து விடும்.

ஆழ்ந்த உறக்கத்தில் உள்ள சொரூப ஞானம் என்பது ஆன்ம பிரகாசம் மட்டுமே. அங்கு அந்தக்கரண விருத்தி (செயல்பாடு) சுழுத்தியில் (ஆழ்ந்த உறக்கத்தில்) இல்லை.

இதை எவ்வாறு அறிந்து கொள்ளலாம் எனில், சொரூப ஞானம் என்பது ஒரு கொள்ளிக் கட்டைப்போல எனலாம். அதாவது தன் வரை பிரகாசமாக இருக்கும். அதுவே, ஒரு அறை முழுவதும் வெளிச்சத்தை அதனால் பிரகாசமாக்க முடியாது.

அதேசமயம், ஒரு விசிறியைக் கொண்டு காற்று வீசினால், கொள்ளிக் கட்டையில் சுடர் உண்டாகி, அதன் வெளிச்சமானது அந்த அறையின் இருளை நீக்கும்.

அதுப்போல, சொரூப ஞானம் அஞ்ஞானத்தை அழிக்கக் கூடியது அல்ல. அதுவே, விருத்தி ஞானமாக ஆன பின்பு அறியாமையை அழிக்கும் சக்தியை பெறுகின்றது.

அதாவது, அந்தக்கரணமான மனம் ஆழ்ந்த உறக்கத்தில் எண்ணங்களற்ற நிலையில் தன் சொரூபத்தை அறிய முடியாமல் இருக்கின்றது.

ஆனால், அதுவே, விழிப்பு நிலையில் பல எண்ணங்களுடன் கூடிய மனமானது, விருத்தி ஞானத்தினால் அறியாமையை அழிக்கின்றது.

ஒருவன் தன்னுடைய உண்மை நிலையான சொரூபத்தை அறியாது, **பிறப்பு - இறப்பு, சுகம் - துக்கம்** போன்ற இருமைகளை உடலுடனும், மனத்துடனும் மட்டுமே சம்பந்தப்படுத்தாமல், தன்னை ஆத்மா என்பதை மறந்து, தன்னுடனேயே ஐக்கியப்படுத்திக் கொள்கிறான்.

அந்த அறியாமையோடு இருப்பவனை நிர்மலம் ஆக்குவதுதான் ஞானம் பெறுவதன் குறிக்கோள்.

அதற்குத்தான் ஆத்ம சாதனையாக அவன் மந்திரோபாசனை பெறுதல், அந்த ஒன்றிலேயே மனத்தை

இருத்தல், தியானம் செய்தல் போன்ற கர்மங்கள் எல்லாவற்றையும் முறையாகக் கடைப்பிடிக்க அறிவுறுத்தப் படுகின்றது.

வேறு எந்த வழியைப் பின்பற்றி வந்தாலும், இறுதியில் அவன் ஆன்மாவைப் பற்றி அறிந்து, இவ்வாறு சாதனை செய்யும்போது மட்டுமே, அவனது விருத்தி ஞானம் அவனுக்கு, அவனது உண்மை நிலையான **சொரூப ஞானம்** பற்றி அறிவிக்கின்றது.

கேள்வி கேட்டு, முயற்சி செய்யும் ஞானம் வேறு, தான் இருக்கும் இருப்பை தானாய் இருந்து, தன்னை அறியும் **சொரூப ஞானம்** வேறு.

இதில், பின்னதுதான் **ஆன்ம ஞானம்.**

அந்த நிலையில் சதா சர்வ காலமும் இருக்கும் சொரூப ஞானம் அவனுக்கு வந்ததும், அவனது விருத்தி ஞானம் அழிந்து போகிறது.

இதைத்தான் தேற்றாங்கொட்டைப் பொடி எப்படி நீரை சுத்தமாக்கி, அத்துடன் தானும் அழிகிறதோ? அதைப் போல **விருத்தி ஞானம்** அழிகின்றது.

நான் யார்? என்பதைத் தான்தான் அறிய வேண்டும். இன்னொருவர் நமக்குச் சொல்வது என்பது நம் அறிவு வரைதான் செல்லும். ஆனால், “**நான்**” என்ற இருப்போ,

அதையும் கடந்தது, அதற்கும் ஆதாரமானது. அதனால், ஒருவன் எல்லாவற்றையும் அறிந்தபின், கேட்டதைத் தன்னில் உணர வேண்டும்.

அங்குதான் பயிற்சிகள் வருகின்றன. அதற்கு நம்மிடம் இருக்கும் ஒரே சாதனம் நமது மனம்தான். மனம் என்பதோ விதவிதமான எண்ணங்களின் தொகுப்பு. மனத்தின் இயற்கையே குரங்குபோல் ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவிக் கொண்டிருப்பது. அதனால் அந்த மனத்தை ஒரே ஒரு எண்ணத்தில் ஈடுபடுத்தி அதைப் பழக்கப்படுத்த வேண்டும்.

அதற்குத்தான் மந்திரங்களில் ஒன்றை எடுத்துக் கொண்டு அது ஒன்றையே சிந்தித்துக் கொண்டு இருப்பது. ஏதோ ஒரு மந்திரம் என்பதைவிட மகா வாக்கியங்களில் ஒன்றாகவோ, அல்லது அவைகள் சம்பந்தப்பட்ட ஒன்றாகவோ, இருப்பது ஆன்மாவைப் பற்றி அறிய விரும்பும் முமுக்ஷு விற்கு மிகவும் நல்லதுதானே.

அப்படிப் பல எண்ணங்களாக இருந்த மனம் மந்திரத் தியானப் பயிற்சியினால் குவிந்து, எடுத்துக்கொண்ட ஒரே எண்ணத்தில் லயிக்கிறது. இதை **மனோலயம்** என்பார்கள். எண்ணம் பலவோ அல்லது ஒன்றோ, மனம் மனம்தானே. அது எப்படி மனத்தை மனத்தால் அறியமுடியும் என்று உங்களுக்குத் தோன்றினால், அது நியாயமான கேள்விதான்.

அது எப்படி என்று விளக்குவதற்கு வேதாந்திகள் ஒரு உதாரணம் சொல்வார்கள்.

பகவான் ஸ்ரீரமணரும் '**பிணம் சுடு தடி போல்**' என்ற அந்த உவமையை "**உள்ளது நாற்பது**" நூலில் சேர்த்திருக்கிறார்.

கட்டைகள் போட்டு நெருப்பில் இடப்பட்ட பிணத்தை எரிப்பதற்கு, கழி ஒன்றை உபயோகப்படுத்துவார்கள். அதை வைத்துக் கொண்டு, அவ்வப்போது சிதையை கிண்டிக் கிளறிக்கொண்டு இருப்பார்கள். அப்படிச் செய்வதன் மூலம் சாம்பல் கீழே இறங்கி, கட்டைகள் நன்கு எரிந்து, உயிரற்ற உடலும் சீராக வேகும்.

கடைசியில் பிணம் நன்கு சுடுவதற்கு பயன்பட்ட, அந்த குச்சியையும் (கழியையும்) எரியும் சிதையின் மேலேயே போட்டு விடுவார்கள். இப்படியாக மற்ற கட்டைகளோடு, பிணத்தையும் நன்கு எரியவிட்ட கழியும் சேர்ந்து தானும் எரிந்துவிடும்.

இப்படியாக மனத்தின் மூலத்தை அறிவிக்க உதவிய மனம் தானும் அழிந்து போவதை **மனோ நாசம்** என்பார்கள்.

இருக்கும் ஒன்றைப் பலப்பலவாறாகக் காட்டிய மனம் நாசமடைவதால், எப்போதும் உள்ள **ஆன்மா** (அறிவு) ஒன்று மட்டுமே அங்கிருப்பதை உணரலாம்.

அங்கு அறிவு (உணர்வு) மட்டுமே உள்ளதால், அந்த உணர்வே நமது இருப்பு என்றாகிறது. அது இப்போதும், எப்போதும் இருப்பதை நாம் உணராததுதான், நம்முடைய **அறியாமை** என்று சொல்லப்படுகிறது.

துருத்தி மாயையைச் சுழுத்தியில் சுடாததன் சொரூப ஞானம் தானே
விருத்தி ஞானமாய்ச் சுட்டது எப்படி எனில் வெய்யிலால் உலகெங்கும்
பரித்த சூரியன் சூரிய காந்தத்தில் பற்றி அக்கினியாகி
எரித்தவாறுபோல் சமாதியில் விருத்தியால் எரிக்கும் என்றறிவாயே. (79)

## தெளிவுரை:-

குருநாதா! அஞ்ஞானமான மாயையை ஆழ்ந்த உறக்கத்தில் சுட்டு எரிக்காத, தன் சொரூப ஞானமானது விருத்தி ஞானமாக மாறி சுட்டது எவ்வாறு?

மகனே! இது எவ்வாறு எனில், சூரிய கிரணங்கள் சிதறி பலவாக இருப்பதால் எதையும் எரிக்க சக்தி இல்லாது உள்ளன.

அதே கிரணங்கள் சூரிய காந்த கல்லில் (குவி லென்சில்) பிரவேசித்து, அதன் வழியாக வெளி வந்து ஓரிடமாக குவியும்போது அது சூரியனைப்போன்றே எரிக்கின்ற நெருப்பாக வல்லமைப் பெறுகின்றது.

இவ்வாறு, அந்தக்கரண விருத்தியாகிய பல தவறான புரிதல்களைக் கொண்ட மனம் சாஸ்திர விசாரத்தில் ஈடுபடும் பொழுது, உண்டான விவேகத்தினால் விருத்தி ஞானம் உண்டாகி அனைத்து அறியாமைகளையும் சுட்டெரிக்கின்றது.

அறியாமைகள் அனைத்தும் நீங்கிய மனம் தன் சொரூபத்தையறிந்து, அந்த சொரூபத்தில் மட்டுமே நிலைப் பெறுகின்றது.

இதையே **சொரூபஞானம்** என்று அழைக்கின்றோம்.

இவ்வாறு, இந்த சொரூப ஞானமானது, விருத்தி ஞானத்தின் வாயிலாக அறியாமையை சுட்டெரித்தது.

## குறிப்பு:–

(அந்தக்கரணமான மனம் சாஸ்திர விசாரங்களில் ஈடுபடுட்டு, விருத்தி ஞானத்தினால் தவறான புரிதல்களை நீக்கிக் கொள்ளும்போது, அந்த மனம் தன் சொரூபத்தை அறிந்துக்கொண்டு, சொரூப ஞானத்தில், பிரம்மநிஷ்டையில் நிலைப்பெறுகின்றது. இவ்வாறு, விசாரத்தின் வாயிலாக அறியாமைகளை ஒவ்வொன்றாக நீக்கி, இறுதியில் பிரம்மத்தினிடம் குவிகின்ற மனமானது அந்த பிரம்மமாகவே மாறி விடுகின்றது.)

அருளும் ஐயனே திரிவித கரணத்தால் ஆகிய தொழில் எல்லாம்
கருமம் அல்லவோ விருத்தி ஞானமும் அந்தக்கரண காரியம் அன்றோ
உரிய கர்மம் அஞ்ஞானத்தைக் கெடுக்கும் என்று ஓதினால் ஆகாதோ
பெரிய ஞானம் என்று அதற்கு ஒரு பெயரிட்ட பெருமையை உரையீரே.
(80)

## தெளிவுரை:-

ஐயனே! மனம், வாக்கு மற்றும் உடல் என்ற மூன்று விதமான கரணங்களால் செய்யப்படுகின்ற செயல்கள் எல்லாம் கர்மங்கள் அல்லவா?

தாங்கள் கூறுவதைப்பார்த்தால் “**நான் பிரம்மம்**” என்று மகாவாக்கியத்தை சதா மனதினால் சிந்திப்பதினாலும், மனதை ஒரே இடத்தில் குவிக்க மந்திர உபாசனைகள், தியானம் போன்றவைகளை செய்வதினாலும், மனம் என்ற அந்தக்கரணம் செயல் செய்வதாக அல்லவா தோன்று கின்றது?

தாங்களோ சாஸ்திர விசாரம் செய்து அடைந்த ஞானத்தினால் மட்டுமே அறியாமை நீங்கும் என்றும், கர்மத்தினால் நீங்காது, சித்த சுத்தி மட்டுமே உண்டாகும் என்று கூறினீர்கள்.

இவ்வாறு இருக்க, “**நான் பிரம்மம்**” என்று மனதை சதா ஒரே இடத்தில் குவிக்க நினைப்பதும் மனதின் செயல் என்றே கூற வேண்டும். இத்தகைய மனதின் செயலால் ஆன கர்மமே அறியாமையை நீக்கியது என்று ஏன் கூறக்கூடாது?

நான் பிரம்மம் என்ற மனதினால் உண்டாகும் எண்ணத்திற்கு விருத்தி ஞானம் என்று ஒரு புதிய பெயரைச் சூட்டி அதைப் பெருமைப்படுத்த வேண்டிய அவசியம் என்ன வந்தது?

விருத்தி ஞானம் அந்தக்கரணத்தொடு விருத்தியாகிலும் மைந்தா
ஒருத்தி மக்களே தங்களில் பகைக்கின்றது உலகெங்குங் கண்டோமே
கருத்தனாகிய புருட தந்திரங்களாம் கருமங்கள் அவைபோல
வருத்த ஞானமோ புருட தந்திரமன்று வஸ்து தந்திரமாமே. (81)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! "**நான் பிரம்மம்**" என்ற அந்தக்கரணமான மனோ விருத்தியானது, மனதினால் செய்யப்படுகின்ற செயல் என்றே கூற வேண்டும். அதில் சந்தேகம் சிறிதும் இல்லை.

இப்படிப்பட்ட மனதின் செயலை பெருமையுடன் விருத்தி ஞானம் என்று அழைப்பது ஏன் எனில், ஒரு தாய் வயிற்றில் பிறந்த குழந்தைகள் இருவரும் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டு வாழ்வதை இந்த உலகத்தில் கண்கூடாகக் காண்கின்றோம் அல்லவா?.

அதுப்போல, ஒரே சரீரத்தில் ஜீவன், ஈஸ்வரன் ஆகிய இருவர் இருந்தாலும், இருவரும் ஒருவருக்கு ஒருவர் கர்மத்தினாலும், ஞானத்தினாலும் வேறுபடுகின்றனர்.

அது எவ்வாறு எனில், மந்திர ஜபம், பூசைகள், தியானம் போன்ற கர்ம காரியங்கள் அனைத்துமே தன்னை உடலாகக் கருதிக் கொண்டு செயல் செய்கின்ற ஜீவனின் '**புருஷ தந்திரம்**' என்ற கர்மங்கள் (செயல்கள்) எனலாம்.

அதுவே, சாஸ்திரத்தை அறிந்து, விசாரத்தினால் உண்டான விவேகத்தினால் தன்னை '**பிரம்மம்**' என்று தன் இயல்பான சொரூபத்தை அறிந்துக் கொண்ட மனோ விருத்தியானது கர்மத்திற்கு விரோதமான, ஞானம் என்பதினால் ஈஸ்வரன் தன் சொரூபத்தில் நிற்கின்ற '**வஸ்து தந்திரம்**' ஆகும்.

இதை உடலால் செய்யப்படுகின்ற ஜீவனின் கட்டுப்பாட்டில் உள்ள புருஷ தந்திரம் என்று கூற முடியாது. தன் சொருப்பத்தை உணர்ந்த விருத்தி ஞானத்தினால் உண்டான பிரம்ம நிஷ்டை (சொரூப ஞானம்) எனலாம்.

வகுத்த கர்மங்கள் செய்யவும் தவிரவும் மற்றொன்றாக்கவும் கூடும்
மிகுந்த ஞானம் அப்படியன்று தியானமும் விவேகஞானமும் வேறே
செகத்தில் ஒன்றை ஒன்றா இவன் பாவிக்கும் தியானம் கற்பிதயோகம்
முகத்தமாக் கண்ட ஞானமே வாஸ்தவம் மோகமாய் மயங்காதே. (82)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! **மனம்,** **வாக்கு**, மற்றும் **உடலால்** செய்யப்படுகின்ற கர்மங்கள் அனைத்தும் ஜீவன் தானாக விரும்பி, தான் வகுத்துக் கொண்ட கர்மங்கள் எனலாம்.

இத்தகைய கர்மங்களை செய்வதும், செய்யாமல் தவிர்ப்பதும் அல்லது ஒன்றை மற்றொன்றாக மாற்றுவதும் நம்மால் (ஜீவனால்) முடியக்கூடியது.

இவைகளை மனோ விருத்தி என்பதினால், இந்த விருத்தி ஞானம் என்பது சாஸ்திர விசாரத்தினால் உண்டான விவேகத்தின் வாயிலாக, தன் இயல்பான சொரூபத்தை அறிந்த மனம் அடைந்த தெளிவினால் வந்த ஞானம் எனலாம்.

அதுவே, சொரூப ஞானம் அப்படியல்ல.

விசாரத்தினால் தன்னை பிரம்மம் என்று அறிந்துக் கொண்ட விருத்தி ஞானத்தினால் உண்டான விவேகத்தின் மூலமாக, தன்னை '**பிரம்மம்**' என்று அறிந்ததை அனுபவமாக தன்னுள் உணர்வதை **சொரூப ஞானம்** எனலாம்.

உண்மையில் பிரம்மமாகவே இருக்கின்ற தன் சொரூபத்தை மறந்து, அறியாமையினால் தன்னை அற்ப உடலாகவும், ஜீவனாகவும் பாவித்துக்கொண்டு இருக்கின்ற பாவனையையும், விசாரத்தின் வாயிலாக உண்டான விவேகத்தினால், தன்னை பிரம்மமாக பாவிக்கின்ற பாவனையையும் கற்பிதம் (பொய்) என்றே கூற வேண்டும்.

விருத்தி ஞானத்தினால் மனதில் உண்டான தெளிவு அல்லது மாற்றம் என்பது என்னவெனில், தன் சொரூபத்தை அறிந்துக்கொண்ட மனம், அதில் நிலைக்கொண்டு தன் சொரூபத்தில், தன்னுணர்வில் எப்பொழுதும் இருக்க

வேண்டுமே ஒழிய, தன்னை பிரம்மம் என்று மீண்டும், மீண்டும் பாவிக்கின்ற மனோ விருத்தியான செயல்கள் அவசியமில்லை.

ஆகவே, விருத்தி ஞானம் கற்பிதம் என்பதினால், இதை தன் உண்மை சொரூபமான சொரூப ஞானத்துடன் ஒப்பிட்டு மன மயக்கத்தில் மயங்காதே.

## குறிப்பு:—

(இந்த சொரூப ஞானத்தை **மேலான அறிவு** என்று அழைக்கின்றார்கள்.

ஞானானாம் உத்தமம் - உத்தமமான பயனைக் கொடுக்கக்கூடிய அறிவு இதுவாகும். இதை **சாத்திய ஞானம்** என்றும் கூறுவர்.

ஏனென்றால் இந்த அறிவை அடைந்த உடனே பலன் கொடுக்க ஆரம்பித்து விடும். மற்ற அறிவெல்லாம் செயல் படுத்தும் போதுதான் பலனை அனுபவிப்போம்.)

கண்டறிந்தது ஞானம் கேட்டது தனைக் கருது பாவனை யோகம்
கண்டபேர் சொலக்கேட்டது மறந்துபோம் கண்டது மறாவாதே
கண்ட வஸ்து மெய் தியானவஸ்துக்கள் பொய் கறுவி அஞ்ஞானத்தைக்
கண்ட அக்கணங் கொல்வது ஞானமே கருமம் அன்று அறிவாயே. (83)

## <u>தெளிவுரை:-</u>

சத்குருவின் வாயிலாக வேதாந்த சாஸ்திர விசயங்களைக் கேட்டு, அதைப்பற்றி சிந்தித்து, விசாரம் செய்து, அறியாமைகள் நீங்கியதை '**விருத்தி ஞானம்**' எனலாம்.

இவ்வாறு, அறியாமைகள் நீங்கிய விருத்தி ஞானத்தினால், தன் உண்மை சொரூபத்தை உணர்ந்து, தன் இயல்பான அந்த சொரூபத்திலேயே எப்பொழுதும் நிலைத்து நிற்பது '**சொரூப ஞானம்**' எனலாம்.

சாஸ்திரங்களைக் கேட்டதினால், உண்டான கேள்வி ஞானத்தினால், அறியாமை நீங்காமல் "**நான் பிரம்மம்**" என்ற பாவனா தியானத்தினை மட்டும், ஒருவன் எத்தனைக் காலங்கள் விடாமல் செய்து வந்தாலும், என்றாவது ஒரு நாள் உடலும், மனமும் தளரும்போது, அது அவனுக்கு மறந்து போகலாம்.

அதுவே, தன் சொரூபத்தை தன்னுள் உணர்ந்து, அதை அனுபவமாகவே கண்ட ஜீவன் முக்தர்கள் அந்த சொரூபம்

இன்னது என்று காட்டிக் கொடுத்த அந்த நொடியிலேயே, அறியாமைகள் முழுவதும் நீங்கி, தன்னை உணர்ந்த பூரண ஞானத்தினால் தன் இயல்பில், தன் உணர்வில் எப்பொழுதும் பிரம்மமாகவே இருப்பது மட்டுமே உண்மையானது. இது மட்டுமே என்றும் மறக்காது.

ஆகவே, அறியாமைகள் நீங்கி அந்த ஒன்றேயான பிரம்மத்தை தன் சொரூபமாகவே உணர்ந்தவர்கள், அனைத்து ஜீவர்களையும் தன்னை போன்றே அதைச் சேதனமாகக் காண்பதும் உண்மையாகும்.

அதுவே, தன்னை உணராமல், தனக்கு வேறாக ஈஸ்வரனை பாவித்துக் கொண்டு தியானம் போன்ற கர்மத்தை செய்வதினால், அறியாமைகள் நீங்காது. இதை மனதின் கற்பிதம் (பொய்) என்றே கூற வேண்டும்.

இவ்வாறு, விசாரத்தின் வாயிலாக, அடைந்த விருத்தி ஞானத்தினால் உண்டான விவேகத்தில் அனைத்து அறியாமைகளும் அப்பொழுதே நீங்குகின்றதே தவிர, தியானம், போன்ற கர்மங்களை எத்தனை காலங்கள் தொடர்ந்து ஒருவன் செய்து வந்தாலும், அவனது அறியாமைகள் நீங்குவதில்லை என்பதை அறிவாய் நீயே.

சருவ முத்தியைத் தருகின்ற தியானமும் சத்தியம் அன்று என்றால்
சருவ முத்தியும் சத்தியம் அன்று என்று சங்கியாதே நீகேள்
உருவம் கேட்டவன் தியானிக்கும் பொழுதில் அவ்வுருவம் வாஸ்தவமன்றே
உருவமாகும் அப்பொழுது கண்ணால் கண்ட உருவம் வாஸ்தவமாமே.
(84)

## தெளிவுரை:-

ஐயனே! தாங்கள் கூறுவதைக் காணும்போது, முழுமையான முக்தியைத் தருகின்றதாக கருதிக் கொண்டிருந்த தியானமும் உண்மையல்ல என்றால், முழுமையான முக்தியும் உண்மையல்ல என்று ஆகிவிடாதா? இதற்கான விளக்கத்தை விவரிப்பீராக.

மகனே! அனைத்து துக்கங்களையும் முழுமையாக நாசமாக்கக் கூடிய, முழுமையான முக்தி உண்மையல்ல என்று சந்தேகம் கொள்ளாதே.

நான் கூறுவதை சமாதானத்துடன் கவனமாகவும், ஒருமித்த மன நிலையிலேயும் நீ கேட்பாயாக.

முக்திகள் பலவாக கருதப்படினும், அதில் **சாலோகம், சாரூபம், சாமீபம்** போன்ற மற்ற அனைத்து முக்திகளும் உண்மையல்ல. காரணம், அது **பதமுக்தி** ஆகும். அதாவது, தனக்கு வேறாக இறைவன் இருக்கின்றான் என்றும், அவனை

நான் அடையப்போகின்றேன் என்றும் மனம் கருதுவதினால், அதை அறியாமை மற்றும் மனதின் இருமைகள் என்றே கூற வேண்டும்.

ஈஸ்வரனை சகுண பிரம்மமாக உருவத்தில் ஒருவன் விரும்புகின்ற பொழுது, அவரை விஷ்ணுவாகவோ, அம்பாளாகவோ, சிவனாகவோ எந்த ஒரு உருவத்தில் மூர்த்தி பாவனை செய்துக்கொண்டு புறத்தில் வழிபட்டாலும், தியானமாக மனதால் பாவித்து அகத்தில் வழிபட்டாலும், இவைகள் பாவனா ரூபமாயிருப்பதால், இது உண்மையல்ல பொய்யானதே.

ஆகவே, பாவனையினால் ஈஸ்வரனை உருவத்தில் பாவித்து செய்யப்படுகின்ற மூர்த்தி தியானமும், அந்த தியானத்தினால் கிடைப்பதாகக் கருதுகின்ற முக்தியும் பாவனையாதலால் இதை **கற்பிதம்** என்றே கூற வேண்டும்.

அதுவே, அவன் தக்க சத்குருவின் வாயிலாக நிர்குண பிரம்மத்தை தன் உண்மை சொரூபமாகவே (சைதன்யமாகவே) கண்டு கொண்ட மறு விநாடியே, தனக்கு வேறாக இந்த பிரபஞ்சத்தில் எதுவும் இல்லை என்பதை அறிந்துக் கொண்டு, கண்ணால் காணுகின்ற அனைத்து உருவங்களும், தான் கண்ட ஈஸ்வரனாகிய தன் சொரூபம் மட்டுமே என்பதை உணர்ந்து, அதிலேயே ஆனந்தமாக இருப்பது ஒன்றே உண்மை.

சடமதாகிய தியானம் மெய்யாகிய சர்வ முத்தியை நல்கும்
திடமதானது எப்படியெனில் அவரவர் தியானமே பிறப்பாகும்
உடல் ஆசையால் தியானிக்கில் தியானித்த உடல்கள் ஆகுவர்மைந்தா
தொடர்பவங் கெடச் சொரூபமே தியானிக்கில் சொரூபம் ஆகுவர் மெய்யே.
(85)

## தெளிவுரை:-

ஐயனே! அப்படியானால், பொய்யான இந்த மூர்த்தி தியானங்கள் முழுமையான முக்தியை உண்மையாக கொடுக்குமா?

மகனே! பொய்யான இந்த மூர்த்தி தியானங்களைக் கொண்டு, முழுமையான முக்தியைப் பெறலாம் என்ற நம்பிக்கையை மக்கள் திடமாகக் கருதுவது எவ்வாறெனில், பல சாஸ்திரங்களைக் கற்று, அவரவர்கள் விரும்பக் கூடிய உருவத்தில் ஈஸ்வரனைப் பாவித்து தியானிப்பதும், பல்வேறு யோக மார்க்கத்தில் கர்மங்களை செய்வதும், அவரவர்களின் அந்த, அந்த பாவனைகளுக்கு ஏற்ப பலன் உண்டாகின்றது.

அதாவது, உருவமற்ற ஒன்றேயான நிர்குண பிரம்மமான ஈஸ்வரனை அவர்களது மனதின் கற்பனைக்கு ஏற்றவாறு, ஒரு உருவத்தில் வடித்துக் கொண்டு, அந்த உருவத்தில் அதை தியானிக்கின்றனர். அத்துடன், முர்த்தி பேதமைகளினால், என்னுடைய மூர்த்தி மட்டுமே உயர்ந்தவர். மற்ற மூர்த்திகள்

எல்லாம் அவரது மூர்த்தியை விட தாழ்ந்தவர் என்ற **உயர்வு - தாழ்வு** போன்ற இருமைகளில் இருக்கின்றார்கள்.

அதாவது, ஒன்றேயான ஈஸ்வரனை சிவனாக பாவித்து, அதை ஒரு உருவத்தில் வடித்து தியானிப்பவனால், விஷ்ணு உருவத்தில் அந்த ஈஸ்வரனை ஏற்க முடிவதில்லை.

அதுவே, விஷ்ணு உருவத்தில் வடிவத்தை வடித்து தியானிப்பவனால், சிவன் உருவத்தில் அந்த ஈஸ்வரனை ஏற்க முடிவதில்லை.

இதுப்போன்றே, மற்ற கடவுளின் உருவங்களில் ஈஸ்வரனை வடித்துக்கொண்டு, அம்பாளாக, முருகனாக, விநாயகனாக பல உருவங்களில் தியானிப்பவர்களின் நிலையும் உள்ளது.

இவர்கள், ஒன்றேயான ஈஸ்வரனை ஒரு உருவத்தில் கொண்டு வந்து, சகுண பிரம்ம உபாசனையாக வழிபட்டாலும், தியானித்தாலும், மற்ற உருவங்களில் ஏற்க முடியாத மனோ பாவத்தால் அவனை அவமதிக்கின்றனர்.

மேலும், உயிரற்ற ஜடப்பொருட்களில் ஈஸ்வரனை உருவகித்து தியானிக்கின்றவர்கள் தன் கண்முன்னே இருக்கின்ற ஒவ்வொன்றிலும் அந்த ஈஸ்வரனைக் காண மறுக்கின்றனர். இவர்கள், இந்த மொத்த பிரஞ்சமும் ஈஸ்வரனே என்பதை அறியாதவர்கள்.

இதுப்போன்று, ஈஸ்வரனை ஒரு உருவத்தில் கற்பித்துக் கொண்டு, அந்த வடிவத்திலேயே அவரைப் பாவனை செய்து தியானிப்பதால், அதே உருவத்தில் ஈஸ்வரனைக் காண வேண்டும், அல்லது அடைய வேண்டும் என்றும் ஆசைப்படுகின்றனர்.

அந்த ஆர்வத்தில், இவர்கள் இந்த உடலை விட்ட பிறகு, அடைய விரும்புகின்ற மற்ற லோகங்களான **சொர்க்க லோகம், பிரம்ம லோகம் வைகுண்டம், கைலாசம்** போன்ற லோகத்திற்குச் சென்று, அங்கே சந்தோசத்தை அனுபவிக்க ஆசைப்படுகின்றனர். அறியாமையினாலே, இவர்கள் இவ்வாறு, இறைவனை உருவத்தில் உண்டாக்கிக் கொண்டதுப் போன்றே, உலகங்களையும் கற்பனையாக உண்டாக்கி வைத்துக்கொண்டு, அதிலே சென்று இவர்கள் இறைவனுக்கு தாஸனாகத் தொண்டு புரிவது, **'சாலோக முக்தி'** என்றும், அவர்கள் கற்பனையில் பாவித்த உருவத்தில், ஈஸ்வரன் இருப்பதாகக் கருதிக் கொண்டு, அவருக்கு அருகில் இருப்பது **'சாமீப முக்தி'** என்றும், அத்துடன், அவர்கள் பாவித்த அதே உடலில் உள்ள ஈஸ்வரனின் உடலைப் பெறுவதை, **'சாரூப முக்தி'** என்றும் கருதிக் கொண்டு, இதுப்போன்ற கர்மங்களில் தீவிரமாகவும், திடமாகவும் ஈடுபடுகின்றனர்.

அனைத்தையும் படைத்த அந்த ஈஸ்வரனுக்கு இவர்களது உதவிகள் தேவை என்பதாக இவர்களாகவே நினைத்துக் கொள்கின்றனர்.

ஆனால், உண்மையில் வாழும்போதே, அறியாமை மனம் அந்த அறிவை உண்ர்ந்துக் கொண்டு, அதன் வாயிலாக உண்டாகக்கூடிய முழுமையான ஆனந்தத்தை தரக்கூடிய, ஜீவன் முக்தியையை விரும்பாமல், இறந்தபிறகு, இவர்கள் இந்த உடலோடு அடைய வேண்டும் என்ற கற்பனையான இதுப்போன்ற முக்திகள் மீதும், உலகங்கள் மீதும் ஆசை வைக்கின்றனர், இதைத்தான் **அறியாமை** என்று கூறப்படுகின்றது.

இவர்களுடைய இத்தகைய அறியாமையை நீக்க விரும்புகின்ற வேதாந்த சாஸ்திரம் இதைக் கற்பிதம் (கற்பனை) என்றே கூறுகின்றது.

ஏனெனில், உடல் எடுத்த அனைவருமே அழிவுக்கு உட்பட்டவர்கள் என்பதை மறுக்க முடியாது.

அந்தவகையில், ஈஸ்வரனே ஒரு யோனியின் வாயிலாக மனித உடல் எடுத்து, இந்த உலகிற்கு ராமனாகவோ, கிருஷ்ணனாகவோ அவதாரம் எடுத்து வந்தாலும், ஒருநாள் இந்த உடலை விட்டு, விட்டுத்தான் போக வேண்டியுள்ளது.

அதுப்போன்றே மற்ற எந்த உருவங்களில், உடல்களில், ஈஸ்வரன் இந்த உலகத்திற்கு வந்தாலும், இதே நிலைதான் நீடிக்கின்றது. ஏனெனில், இந்த மொத்த ஈஸ்வர உடலாகிய இந்தப் பிரபஞ்சம் மாறிக் கொண்டே இருக்கின்றது.

அதுவே, என்றும் மாறாத, அழியாத சேதனமாக அந்த பரப்பிரம்மம் அனைத்திலும் வியாபித்துக் கொண்டு, தனது ஆற்றலை (சக்தியை) அனைத்திலும் பரப்பி, அதிலே தன்னையே பார்க்கின்ற உயர் ஞானத்தை கொடுக்கின்ற **சன்மார்க்கம்** என்ற உயரிய ஞானத்தை தக்க சத்குருவினால் மட்டுமே காட்டிக் கொடுக்க முடியும்.

அதுவே, உண்மையில் முழுமையான முக்தியைக் கொடுக்கும் என்பதையும் அறிய வேண்டும். இதை விடுத்து, ஜீவர்கள் பூலோகத்தில் உடலுடன் இருக்கின்ற காரணத்தினால், உடலற்ற பிரம்மத்தையும், தன்னை போன்று உடலுடன் இருப்பதாகப் பாவித்துக் கொண்டு, கற்பனையில் அந்த குறிப்பிட்ட உடலோடு பற்று வைக்கின்றனர்.

இதுப்போன்ற பற்றுதல் காரணமாக, இவர்கள் பிறப்பு, இறப்பு என்ற சம்சாரத்தில் சிக்கிக்கொண்டு, மீண்டும், மீண்டும் பிறந்து, இறந்துக் கொண்டிருக்கின்றனர்.

அதுவே, பிறவிக்கு காரணமான சம்சாரத்தை அழிக்க வேண்டுமெனில், தக்க சத்குருவின் மூலமாக. சாஸ்திரங்களை கற்று, விசாரித்து அதன் உண்மையை அறிந்து, பிறவாப் பெரு நிலையான சன்மார்க்கத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

ஆகவே, உருவமற்ற நிர்குண பிரம்மத்தை அறிய விரும்பிய ஜீவர்கள் பல பிறவிகளாக செய்த புண்ணியத்தின் பலனாக, சம்சாரத் துக்கத்திலிருந்து விடுபட விரும்பி, சன்மார்க்கத்தை நாடி, உண்மையான நித்ய, முத்த, புத்த, சுத்த

சத்குருநாதரை அடைந்து, சாஸ்திர விசாரத்தினை மேற்கொண்டு, அவைகளைக் கேட்டு, சிந்தித்து, தெளிவடைந்து, அவர் காட்டிக் கொடுத்த தன் இயல்பான சொரூபத்தை, அனைத்திலும் ஆனந்தமாக உணர்கின்றார்கள்.

இவ்வாறு, இவர்கள் அடைந்த இந்த முக்தி நிலையினால், எப்பொழுதும் தன் சொரூபத்தில் இருந்துக் கொண்டு, அதிலிருந்து சற்றும் விலகாமல் ஜீவன் முக்தர்களாகவே இருக்கின்றார்கள்.

பிரம ரூபத்தைத் தியானித்த பேர்களும் பிரமம் ஆகுவரென்றால்
நர சரீரமாம் குரவனே விசாரம் ஏன் ஞானம் ஏன் என்னாதே
பரம பாவனை பரோட்சமாம் பின்பு அந்தப் பரோட்சமே அபரோட்சம்
திர விசாரமாம் ஞானமே முத்தியாம் தீர்வை ஈது அறிவாயே. (86)

## தெளிவுரை:-

ஐயனே! மனித சரீரத்தில் வந்த என் குருநாதனே, சாஸ்திர விசாரத்தினால் உண்டான கேள்வி ஞானத்தைக் கொண்டு, சிலர் தியானத்தினால் சதா தன்னை பிரம்மமாகவே பாவித்து தியானிக்கின்றார்கள். இவ்வாறு இவர்கள் சதா தியானித்து, அந்த பிரம்மம் ஆக முடியும் என்றால், சாஸ்திர விசாரமும், ஞானத்தை அடைய வேண்டிய அவசியமும் ஏன் வந்தது? என்பதை அருள் கூர்ந்து விளக்குவீராக.

மகனே! ஞானம் என்பது இரண்டு வகைகளில் உண்டாகின்றது. அவைகள் ஒன்று **பரோக்ஷஞானம்,** மற்றொன்று **அபரோக்ஷ ஞானம்** எனப்படும்.

**அக்ஷம்** என்றால் **புலன்கள்** என்று பொருள்.

**பரோக்ஷம்** என்பதற்குப் புலன்கள் தாண்டி இருப்பது என்றும், **ப்ரத்யக்ஷம்** என்பதற்குப் புலன்களின் எல்லைக்குள் இருப்பது என்றும் பொருள்.

ஆனால், **அபரோக்ஷம்** என்னும் சொல்லுக்கு புலன்களின் தேவையின்றி சுயமாக விளங்கும் ஒரு பொருளைக் குறிக்கிறது.

பார்க்கப்படுவதும் அல்லாத, பார்க்க இயலாததும் அல்லாத பிரம்மத்தையே **அபரோக்ஷம்** என்ற சொல் குறிக்கிறது. அதுவே பிரம்மம் என்றும், இரண்டற்றது என்றும், **அத்வைதம்** என்றும் குறிக்கப்படுகிறது.

பிருஹதாரண்யக உபநிஷத்தில் அபரோக்ஷம் என்ற சொல்லுக்கு '**ஆத்மா**' என்று பொருள் சொல்லப்படுகிறது.

பரோக்ஷம், அபரோக்ஷம் என்ற இரண்டு விஷயங்களில், பரோக்ஷம் என்றால், தூரத்தில் புகை வருவதை வைத்து, அங்கு நெருப்பு இருக்கின்றது என்று அறிந்து கொள்வது ஆகும்.

அபரோக்ஷம் என்பது, நெருப்பை கண்களால் பார்த்து நிச்சயம் செய்வது. இந்த வகையில் ஞானத்தில் நிச்சயத்தன்மையை உணர்ந்துக் கொண்ட ஞானி **ஜீவன் முக்தன்** எனப்படுகின்றான்.

ஞானத்தை அறிந்துக் கொண்டாலும், தெளிவில்லாத நடைமுறையில் இருப்பவர்கள் பரோக்ஷஞானம் உடையவர்கள் என்று அறியலாம்.

இதுப்போலவே, பிரம்மம் இருக்கின்றது என்று அறிவது '**பரோக்ஷ ஞானம்**' என்றும், அந்த பிரம்மமாக நானே இருக்கின்றேன் என்று அறிவது '**அபரோக்ஷ ஞானம்**' என்றும் அறிதல் வேண்டும்.

இதுப்போன்ற மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் அபரோக்ஷ ஞானத்தை உடையவன் **ஜீவன் முக்தன்** என்று அழைக்கப்படுகின்றான்.

பொதுவாக அறியாமையில் இருந்த பொழுது, அதாவது சாஸ்திரத்தின் வாயிலாக ஞானத்தை பெறாதபோது, நாம் இந்த உடலை "**நான்**" என்று எந்த அளவிற்கு நாம் நம்பினோம், மேலும் **நான் ஆண்,** அல்லது **நான் பெண்,** என்ற எண்ணம் உள்ளது.

அதன்பிறகு, பிறப்பில் அடைப்படையில் உண்டான சாதி அபிமானத்தினால், நான் பிராம்மணன், நான் சூத்திரன் என்று, மற்றவர்களால், ஏற்றிவைக்கப்பட்ட எண்ணங்களின்

மூலம், எவ்வாறு திடமான நிச்சயத்துடன் அதை நம்பிக்கொண்டு இருந்தோமோ?

அதுப்போன்றே, சாஸ்திரத்தை அறிந்துக் கொண்டவன், மகாவாக்கிய உபதேசத்தின்படி, "**அஹம் பிரம்மாஸ்மி**" என்ற ஆத்ம ஞானத்தை அடைந்தபிறகு, அழியக்கூடிய இந்த உடலினால் உண்டான நான் பிராமணன், நான் சூத்திரன், நான் ஆண் அல்லது நான் பெண் என்ற எண்ணங்களை எல்லாம் விடுத்து, இப்பொழுது "**நான் பிரம்மம்**" என்ற தன்னுடைய சொரூப நிஷ்டையில் மட்டுமே எப்போதும் நிலைத்து நிற்க வேண்டும்.

அதாவது, எந்தவிதமான அனாத்மாவுடனும் சேராமல், திடமான உறுதியுடன் ஆத்மாவின் இயல்பில் இருத்தல் வேண்டும்.

உண்மையில், சத் சித் ஆனந்த ஸ்வரூபமே நான் என்ற திட நிச்சயத்துடன் எப்பொழுதும் இருத்தல் வேண்டும்.

நான் சித் என்ற அறிவு ஸ்வரூபமானவன் என்றும், பூர்ணமான ஆனந்த ஸ்வரூபனாக என்றும் பிரகாசமாக சர்வ அந்தர்யாமியாக எல்லா ஜீவராசிகளிடத்திலும் நான் இருக்கின்றேன் என்று அறிதல் வேண்டும்.

இப்படிப்பட்ட திட நிச்சயமான, திருப்தியுடன் அபரோக்ஷ ஞானம் யாரிடம் இருக்கின்றதோ? அவனே '**ஜீவன் முக்தன்**' ஆகின்றான்.

இனியும், ஒரு உதாரணத்தின் வாயிலாக, இதை இன்னும் தெளிவாக அறியலாம்.

திருப்பதி லட்டு என்ற வார்த்தையை எத்தனை விதமாக, எத்தனை நபர்களின் வார்த்தைகளின் வாயிலாக வர்ணனையினால் கூறக்கேட்டாலும், உண்மையில் அந்த லட்டை சுவைக்காமல், அதன் சுவை இன்பம் நமக்கு அனுபவமாகாது. இப்படி நேரடியாக அனுபவத்தை அடையாமல், கேள்வி ஞானமாக கேள்விப்படுகின்ற அனைத்துமே "**பரோக்ஷ ஞானம்**" எனலாம்.

அதுவே, அந்த லட்டை தின்று, அதன் சுவையை ஆனந்தமாக, உணர்வு பூர்வமாக, இரசித்து, ருஷித்து உண்ணும்போது, அந்த லட்டு நமக்கு அனுபவமாகின்றது. இந்த அனுபவத்தை அடைவதே "**அபரோக்ஷ ஞானம்**" என்று அறியவும்.

அதாவது, கேள்வியறிவு **பரோக்ஷ ஞானம்.**

அநுபவ அறிவு **அபரோக்ஷ ஞானம்.**

அதாவது, அநுபவத்துக்கு வராதவரையில் ஒன்றைப் பற்றிய அறிவு, அதன் பிரயோஜனமான ஆனந்தத்தை நமக்குக் காட்டாமல் ரஹஸ்யமாக வைத்துக் கொண்டு இருக்கிறது என்று அர்த்தம்.

ஆத்மாவுக்கான விஷய சாரங்களை எவ்வளவுதான் புத்தகத்தில் படித்துப் பார்த்தாலும், பலர் கூறக் கேட்டு இருந்தாலும் அதனால் பயனில்லை. குருவே உபதேசம் செய்து, அது காது வழியாக மூளைக்குள்ளே போனாலும்கூட பயனில்லை. அதுவரை அது பரோக்ஷ ஞானம்தான்.

ஆத்மாவிலேயே அது அநுபவமாக மாறவேண்டும். அப்போதுதான் அபரோக்ஷம் ஆகும்.

இதிலே வேடிக்கை என்னவென்றால், குரு உபதேசம் மூளையில் ஏறியவுடன் நமக்கு ரஹஸ்யமாக இருப்பது போன்று தோன்றவில்லை. மூளைக்கு நன்றாக விஷயம் புரிகின்றது. ஆனாலும், அது உயிரின் உணர்வு அநுபவமாக இல்லாததால், அதை **பரோக்ஷ ஞானம்** என்றே கருத வேண்டும்.

எப்போது, புலன்களைக் கடந்து, உயிருக்குள்ளேயே சென்று, உணர்வு பூர்வமாக அநுபவமாகின்றதோ? அப்போது மட்டும்தான் அதற்கு, **“அபரோக்ஷ அநுபூதி”** என்றே பெயர்.

அபரோக்ஷ அனுபூதி என்றால், அனுபூதி என்ற சொல்லுக்கு ஞானம், உணர்தல் அல்லது அனுபவித்தல் என்று

பொருள். அனுபூதி என்றால், அனுபவம் என்றும், அபரோக்ஷம் என்றால் நேரடியாக என்றும் பொருள் கொண்டு "**நேரடி அனுபவம்**" என்று அழைக்கப்படுகின்றது.

அபரோக்ஷ அனுபூதி என்றால், சுயமாக பிரகாசிக்கின்ற அனுபவம் அல்லது ஆத்மாவை நேரிடையாக அனுபவித்தல் என்று பெயர்.

இத்தகைய அபரோக்ஷ ஞானத்தினால் மட்டுமே அனைத்து அறியாமைகளும் அகன்று, முக்தியை அடையக்கூடிய தீர்வு உண்டாகும் என்பதை அறிவாயே.

வீடதாம் பரிபூரண சொரூபத்தில் விருத்தி ஞானமும் கூடிச்
சேடமாகினால் அகண்டமாம் அநுபவ சித்தி எப்படி என்றால்
சாடிநீர் மண்ணைப் பிரித்த தேற்றாம்பொடி தானும் மண்ணொடுமாயும்
ஊடி ஞானமும் அறிவிலாமையைக் கெடுத்து ஒக்கவே கெடும்தானே. (87)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! சாஸ்திர விசாரத்தினால் உண்டான விருத்தி ஞானத்தினால் அடைந்த விவேகத்தினால், தன் சொரூபத்தை அறிந்துக் கொண்ட அந்தக்கரணமான மனம், மோக்ஷ வீடாகிய முக்தியில் நிலையான ஆனந்தத்துடன் தன் பரிபூரண

சொரூபத்தில் நிலைத்து நிற்கின்ற அகண்டமான அனுபவத்தை எவ்வாறு பெறுகின்றது என்பதை கூறுவீராக?

மகனே! அகண்டமாம் அநுபவ சித்தி உண்டாவது எப்படியென்றால், ஒரு பானையில் மண் கலந்துள்ள நீரில், அந்த மண்ணை நீரில் இருந்து பிரித்து எடுக்க, தேற்றாங் கொட்டைப் பொடியை அந்த நீரில் போடுவார்கள்.

இவ்வாறு, நீரில் போட்ட தேற்றாங் கொட்டைப் பொடி, அந்த நீரில் கலந்துள்ள மண்ணை மட்டும் தனியாகப் பிரித்து எடுத்து, தெளிந்த நீரைக் கொடுத்து விட்டு, அந்த மண்ணுடன் சேர்ந்து தானும் கலந்து அழிந்து விடுகின்றது. இனி, குடிப்பதற்கு ஏற்ற தெளிந்த நீர் மட்டும் இருக்கின்றது.

அதுப்போல, அறியாமைகள் என்ற அழுக்குகள் உள்ள மனதில், விசாரணைகள் என்ற தேற்றாம் பொடியைத் தூவினால், அந்த மனதில் உள்ள அழுக்குகளை பிரித்து எடுத்து, **விருத்தி ஞானம்** என்ற விவேகத்தை கொடுத்து விட்டு, அந்த அறியாமைகள் என்ற அழுக்குகளுடன் இந்த விசாரமும் கலந்து அழிந்து விடுகின்றது.

இவ்வாறு, அந்த மண்ணுடன் சேர்ந்து தேற்றாங் கொட்டைப் பொடி தானும், அழிவதுப் போன்று, இந்த அறியாமை அழுக்குகளுடன் சேர்ந்து விசாரிக்கின்ற மனமும் விருத்தி ஞானத்துடன் அழிந்து விடுகின்றது.

அதன்பிறகு, தெளிந்த, தூய்மையான நீர் மட்டமே அங்கு இருப்பதுப்போன்று, அறியாமைகளும், விசாரிக்கின்ற மனமும் இன்றி, ஒன்றேயான அகண்டாகார சொரூபமாகிய தூய அறிவு மட்டுமே இருக்கின்றது. இனி, அறிவதற்கும், அனுபவிப்பதற்கும் அதைத்தவிர, இனி ஒன்றுமில்லை.

**குறிப்பு:–**

இதையே ஏற்கனவே, 78 - வது பாடலின் விளக்கப்பகுதியில் "**பிணம் சுடு தடி போல்**" அதுவும் அழியும் என்று கூறப்பட்டது.)

இந்த நிச்சயம் முத்தருள் அனுபவம் இருப்பது எப்படியென்றால்
சிந்தையற்ற பூமண்டல இராசனும் சிசுவைபோல் சுகமாவர்
பந்த முத்திகள் மறந்துபோம் உண்டென்று பலர் சொலின் நகையாவர்
அந்தரத்தை உண்டு உமிழ்ந்தது ஓர் கொசுகெனும் அவர்களை
நகையாரோ. (88)

**தெளிவுரை:-**

ஐயனே குருதேவா! ஜீவன் முக்தர்கள் அகண்டாகார சொரூபத்தை தன் அனுபவமாகக் கொண்டு இருப்பது எப்படி?

மகனே! இந்த புவியை ஆளுகின்ற அரசன் அனைத்து தேசங்களுக்கும் ஒரே சக்கரவர்த்தியாக இருந்துக் கொண்டு உலக விவகாரங்களில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தாலும், தன் ராஜ்ஜியத்தின் அனைத்து சுகங்களையும் அனுபவித்துக் கொண்டு ஆனந்தமாக இருப்பது போன்றும், சிந்தையற்ற சிறு குழந்தை தாய்ப்பாலை ஆனந்தமாக குடித்துக் கொண்டு, எதைப்பற்றியும் கவலை கொள்ளாமல், தன் போக்கில் ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருப்பதுப் போன்றும், இந்த ஜீவன் முக்தர்கள் மேற்கண்ட இரு நிலைகளையும் கொண்டவர்களாக உலக விவகாரங்களில் பல கர்மங்களைச் செய்துக் கொண்டிருப்பார்கள்.

மேலும், பலர் சொல்லி பல விசயங்களை தன் காதுகளால் கேட்டாலும், கண்களால் பார்த்தாலும் அதனால் பந்தப்படுவதோ, துன்பப்படுவதோ இல்லாமல், எப்பொழுதும் போல, தன் சொரூபத்தில் சுகமாக இருந்துக்கொண்டு இருப்பார்கள்.

யாராவது சிலர் இவர்களிடம் வந்து பந்தத்தைப் பற்றியும், மோக்ஷத்தைப் பற்றியும் எடுத்துக் கூறினால், அதை ஒரு கொசு ஆகாயத்தை உண்டுவிட்டு, பிறகு அதனை வெளியே துப்பி விட்டது என்று கூறுவது எப்படி வேடிக்கையாக சிரிக்கும்படி இருக்குமோ? அதுப்போன்று இவர்களும் சிரித்துக்கொண்டே அவர்கள் பேசுவது அனைத்தையும் வேடிக்கையாக மட்டுமே எடுத்துக்கொண்டு, பரமானந்த அனுபவத்தில் எப்பொழுதும் முழுகி, சற்றும் கவலை இல்லாது, ஆனந்தமாக இருப்பார்கள்.

பிரம்மான்ம ஐக்கிய நிலையில் சீவன் என்ற தன்மை இவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது. இப்பொழுது அடைந்து இருக்கின்ற இயல்பு நிலையே நிரந்தரமான தன் சொரூப நிலை என்று இவர்களுக்கு புரிந்து விட்டது.

மாயை முதல் அனைத்தும் இவர்களுக்கு கனவாக இருக்கின்றன. பந்தம், முத்தி, காலம், இடம், வஸ்து, என ஒன்றுமே இவர்களை பாதிப்பது இல்லை. எப்பொழுதும் தன் சுயத்தில் இருப்பார்கள். இதுவே இவர்களது சகச நிஷ்டை எனலாம்.

பொதுவாக நிஷ்டைகள் 3 வகைப்படும்.

அவைகள், **சவிகற்ப நிஷ்டை, நிருவிகற்ப நிஷ்டை, சகஜ நிஷ்டை** என்பனவாகும்.

## 1. சவிகற்ப நிஷ்டை:

ஆன்மாவை அணு அணுவாக தரிசித்தல். இதில் **அறிபவன், அறிவது, அறியப்படும் பொருள்** என திரிபுடி உண்டு.

## 2. நிருவிகற்ப நிஷ்டை:

ஆன்மாவை அகண்ட சொரூபமாக அனைத்திலும் தரிசித்தல். இது ஒரே பிரம்ம சொரூபமாக விளங்கும்

அனுபவம். இவை சத்துவகுணத் தொழில்கள். இவற்றில் ஒருவன் எத்தனை காலங்கள் நிஷ்டையில் இருந்தாலும், நிஷ்டை கலைந்ததும், மீண்டும் இந்த உலகத்திற்கும், விவகாரத்திற்கும் வர வேண்டியதே ஆகும். ஆகவே இதில் ஆரம்பமும், முடிவும் உண்டு.

### 3. சகச நிஷ்டை:

சகஜ நிஷ்டை என்பது கால, தேசத்தைக் கடந்து, பந்தம், முக்தி, தேகம், இந்திரியம், கரணங்கள் என ஒன்றையும் மனம் பற்றாமல், தனக்கு என ஒரு தோற்றமும் இல்லாமல், மாயையில் மயங்காமல், இரண்டற்று எல்லாம் ஒன்றாக, எல்லையில்லாமல் விரிந்த, அகண்டாகாரமாக, ஆரம்பமும், முடிவும் இல்லாமல், தன்னியல்பில், தன் சொரூபத்தில் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டு ஒரே நிலையில் நிற்பது எனலாம்.

மலடி மைந்தனும் தாணுவில் புருடனும் வான்மலர் முடிசூடி
இலகு கந்தர்ப்ப நகரிலே சுத்திகை இரசதம் விலை பேசிக்
கலகமானார் இடையினில் கயிற்று அராக் கடித்திரு வருமாண்டார்
அலகை ஆயினார் எனும் விவகாரத்தை அறிந்தவன் மயங்கானே. (89)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! ஆத்மானுபவத்தில் சதா இருக்கின்ற ஜீவன் முக்தனுக்கு இந்த உலகம் கற்பனை என்பதற்கு ஒரு கற்பனையான கதையைக் காணலாம்.

குழந்தை இல்லாத மலடிக்கு ஒரு மகன் பிறந்து, அவன் சாலையில் நடந்து சென்ற பொழுது, இரவு நேரத்தில் மங்கிய வெளிச்சத்தில்,சாலை பிரிவுகளில் நட்டு வைத்துள்ள கைகாட்டி கட்டையைக் கண்டு, அங்கு ஒரு ஆள் நிற்பதாகக்கருதி, அவனிடம் சென்று, ஆகாயத்திற்கு செல்லும் வழி கேட்டு, அந்த ஆகாயத்தை அடைந்து, அங்கு பூத்து, மலர்ந்துள்ள தாமரை மலரை பறித்து எடுத்து வந்தான்.

அவ்வாறு அவன் ஆசையுடன் பறித்து வந்த அந்த தாமரை மலரை அவனது காதலிக்குச் சூடி அழகு பார்த்து, அவளையும் இவனுடன் அழைத்துக் கொண்டு கந்தர்வ நகரத்திற்குள் நுழைந்தான். அந்த நகரில் நுழைந்தவன் தன்னிடம் வைத்திருந்த கிளிஞ்சலை வெள்ளியாகக் கொடுத்து, விலைபேசி வாங்கிய ஒரு கயிறு இவர்களுக்கு பயனின்றி

போனதினால், இவர்கள் இருவருக்குள்ளும் விவாதம் உண்டாகி, சண்டையிட்டுக் கொண்டனர்.

இவர்களின் இந்த சண்டையை சகிக்க முடியாத அந்த கயிறே பாம்பாக மாறி இவர்களை கடித்து, இருவரும் இறந்து பேயாக மாறினர் என்ற இந்த கதையின் விவகாரத்தை அறிந்தவன், இதை உண்மை என்று கருதி எப்படி மயங்க மாட்டானோ? அதுப்போன்று, இந்த உலக விவகாரங்களை கண்டு, ஜீவன் முக்தர்கள் கற்பனைக் கதையைப் போன்று மயங்க மாட்டார்கள். அவர்களுக்குத் தெரியும் இந்த உலகம் ஒரு கற்பிதம் (கற்பனை) என்பது. அதாவது, தோன்றி மறைகின்ற மனதின் மாயை என்பது புரியும்.

மாயை என்பது பொய் எனில் அதுபெற்ற வகை எலாம் பொய்யாமே
தாயை அன்றி மக்களுக்கு ஒரு பிறவியும் சாதியும் வேறுண்டோ
சேய சொர்க்கமும் நரகமும் நன்மையும் தீமையும் பாராமல்
தூய சத்துச்சித்தானந்த பூரண சொரூபமாய் இருப்பாயே. (90)

## தெளிவுரை:-

மகனே! கதையில் உள்ள விசயங்கள் கேட்பதற்கு சுவாரசியமாக இருந்தாலும், கேட்பவன் அதனால் மயங்காமல் அதை பொய் என்று கருதுவதுப் போல, ஜீவன் முக்தர்களும் இந்த உலக விவகாரங்களில் காணப்படுகின்ற சுவாரசியமான கற்பனைக் காட்சிகளைக் கண்டும், கேட்டும் மயங்க மாட்டார்கள்.

ஜீவன் முக்தர்களுக்கு நன்றாகத் தெரியும் இந்த மாயை என்பது பொய் என்பதினால், அதனால், உண்டான இந்த உலகமும் பொய்தான் என்பதை நன்கு உணர்ந்திருப்பார்கள்.

ஒரு மனித தாயின் வயிற்றில் பிறந்த குழந்தைக்கு அந்த தாயின் வாயிலாக உண்டான மனிதப் பிறவியும், மனித ஜாதியும் மாறி விடுமா?

அதாவது, வேறு ஒரு பிறவியாகவோ, அவைகளில் காணப்படும் மிருகம், பறவை போன்ற மற்ற இனமாகவோ அந்த குழந்தையைக் காண முடியுமா? முடியாது அல்லவா!

அந்தக் குழந்தையை மனிதப்பிறவியாகவும், மனித ஜாதியாகவும் மட்டுமே கருதுகின்றோம். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

அதுப்போன்று, சாக்ஷாத் அந்த பரப்பிரம்ம சொரூபமான உன்னை, இந்த அற்ப மனித தேகமாகக் கருதி, அற்ப மனதினால் பலவாறாகக் கற்பித்துக் கொண்ட சொர்க்கமும், நரகமும், நன்மையும், தீமையும் உன்னை பாதிப்பதை அனுமதிக்கலாகுமா?

உண்மையில், சொர்கமும், நரகமும், நன்மையும், தீமையும் இல்லாத சுத்த, புத்த, முத்த சுபாவமான தூய சச்சிதானந்த பூரண சொரூபமாகவே நீ இருக்கின்றாய்.

அதுவே, உன் இயல்பான சுபாவம். அது புதியதாக வந்தது அல்ல. அவ்வாறு, எது ஒன்று வந்தாலும், ஒரு நாள் அது இல்லாது போய் விடும்.

ஆகவே, நீ எப்பொழுதும் இருக்கின்ற ஏகாந்தமான சத்சித்தானந்த சொரூபமாகிய அனைத்து உயிர்களிலும் கலந்த தன் உணர்வில், சுயத்தில், உன் சொரூபத்தில் நிலைத்து நிற்பாயாக.

பங்கையாசனன் முதற் பல தேவரும் பாருள பெரியோரும்
கங்கை ஆதியாம் தீர்த்தமும் தேசமும் காலமும் மறைநாலும்
அங்கம் ஆறும் மந்திரங்களும் தவங்களும் அசத்தியம் எனச் சொன்னால்
எங்கள் நாயகனே அதனால் குற்றங்களில்லையோ மொழியீரே. (91)

## தெளிவுரை:-

ஐயனே! தாமரைப் பூவில் அமர்ந்திருக்கும் படைப்புக்கடவுளான நான்முக பிரம்மா முதல் முப்பத்து முக்கோடி தேவர்கள் முதலான அனைவரும், மேலும் அவர்கள் வாழுகின்றதாக கருதுகின்ற மற்ற லோகங்களும், மற்றும் இந்த பூ உலகில் உள்ள மகாத்மாக்களான மகான்கள் பலரும், ஆதியில் தோன்றிய கங்கை நதி தீர்த்தங்களும், காசி போன்ற தேசங்கள் முதலான இவைகள் அனைத்தையும் தன்னிடத்தில் தாங்கிக் கொண்ட இந்த உலகமும், இந்த உலகம் இயங்குவதற்குக் காரணமான சூரிய, சந்திரர்களும், கால, தேசங்களும், நான்கு மறை நூல்களான வேதங்களும், அதன் ஆறு அங்கங்களும், பஞ்சாட்சரம் போன்ற மந்திரங்களும், தவங்களும் ஆகிய இவைகள் அனைத்தும் பொய் என்று கூறினால், சாஸ்திரத்தை அவமதிக்கின்ற குற்றங்கள் ஆகாதோ? சுவாமி! அருள் கூர்ந்து இதற்கான விளக்கத்தை விளக்குவீராக.

சொற்பனம் தனில் கண்டதைப் பொய்யென்று சொல்வது பிழையானால்
அற்ப மாயையிற் றோன்றிய சகங்களை அசத்து எனல் பிழையாமே
சொற்பனம் தனில் கண்டதைப் பொய் என்று சொல்லலாம் எனில் மைந்தா
அற்ப மாயையில் தோன்றிய சகமெலாம் அசத்தியம் எனலாமே. (92)

## தெளிவுரை:-

மகனே! கனவில் கண்ட உலகமும், அதில் கண்ட காட்சிகளும் கற்பனையான பொய் தோற்றம் என்று கூறுவதைக் குற்றம் என்று கூறமுடியுமானால், மாயையில் தோன்றிய இந்த கற்பனையான, அற்பமான உலகமும், உலகக் காட்சிகளும் பொய் என்று கூறுவதை குற்றம் என்று தாராளமாகக் கூறலாம்.

அதுவே, கனவில் கண்ட உலகமும், அதில் கண்ட காட்சிகளும் உண்மையல்ல, அவைகள் கற்பனையான பொய்த் தோற்றம் என்பதை ஏற்க முடியுமானால், இந்த மாயையில் தோன்றுகின்ற இந்த உலகமும், உலகக் காட்சிகளும் கற்பனையான பொய்த் தோற்றம் என்று தாராளமாக ஏற்கலாம். அதனால், ஒரு குற்றமும் இல்லை எனலாமே.

பொய்யை மெய் என்ற மூடர் புண்ணியர் என்று புராணம் கூப்பிடுமானால்
மெய்யை மெய் என்ற ஞானிக்குக் குற்றங்கள் விதித்த சாத்திரம் உண்டோ
பொய்யது ஏதெனின் நாம ரூபங்களாம் பூதமாகிய மாயை
மெய்யது ஏதெனில் சச்சிதானந்தமாய் வியாபிக்கும் ஆன்மாவே. (93)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! அறியாமையினால், இந்த பொய்யான உலகத்தையும், அதில் காண்கின்ற காட்சிகளையும், அனுபவிக்கின்ற அனுபவங்களையும், உண்மை என்று நம்பிக்கொண்டு இருக்கின்ற இவர்களைப் போன்ற மூடர்களை புண்ணியர்கள் என்று சாஸ்திரம் கூறுமானால், பிரம்மம் ஒன்று மட்டுமே உண்மை, மற்ற அனைத்தும் பொய் என்று கூறுகின்ற ஞானிகளை குற்றங்கள் கூறுகின்ற சாஸ்திரம் உண்டோ நீ கூறுவாயே.

பொய்யானது ஏது எனில், பார்ப்பதற்கு இருப்பது போன்று காணப்படுகின்ற, ஆனால் உண்மையில் இல்லாத கானல் நீர் போன்று, பல பெயர்களும், உருவங்களும் கொண்ட தோற்றத்திற்கு காணப்படுகின்ற இந்த உலகம் இல்லாதது (மித்யா) ஆகும்.

உண்மையானது என்னவெனில், சச்சிதானந்தமாய் எங்கும், எதிலும் வியாபித்து இருக்கின்ற ஆன்மாவாகிய பரப்பிரம்மம் ஒன்று மட்டுமே சத்தியம் ஆகும்.

இதையே, சாஸ்திரம் திடமாகவும், தீர்மானமாகவும் "**பிரம்மம் சத்தியம், ஜகத் மித்யா**!" என்பதை ஆணித்தரமாக அனைவருக்கும் அறிவுறுத்துகின்றது.

மாயை என்பது ஏது உடையர் யார் எப்படி வந்தது வருவானேன்
மாயை என்பது பிரமத்தின் வேறு எனில் வஸ்துவும் இரண்டாமே
மாயை என்பதும் பிரமமும் ஒன்றெனின் வஸ்துவும் பொய்யாமே
மாயை என்ற மேகங்களுக்கு ஒரு சண்டமாருத குருமூர்த்தி. (94)

**<u>தெளிவுரை:-</u>**

மாயை என்பது என்ன? அதை உடையவர் யார்? அது எப்படி வந்தது? அது எதனால் வருவானேன்?

மாயை என்பது பிரம்மத்திலிருந்து வேறானதா? அல்லது, மாயையும், பிரம்மமும் ஒன்றா?

மாயை என்பது பிரமத்திலிருந்து வேறானது என்றால், பிரம்மமும், மாயையும் இரண்டாகுமே. அப்படியானால், ஒன்று மட்டுமே உள்ளது, அதுவே பிரம்மம் என்று சாஸ்திரம் கூறும் மகா வாக்கியம் பொய் ஆகிவிடுமே.

மாயையும், பிரம்மமும் இரண்டற்றது (ஒன்று) என்று அத்வைதத்தில் கூறுவீர்களேயானால், மாயை பொய் எனும் போது, பிரம்மமும் பொய்தானே!

ஆகவே, மேகங்களை கலைக்கின்ற சண்டமாருதம் என்ற புயல் காற்றைப்போல, மாயையைக் கலைந்த மகத்தான குருநாதரே! மேற்கண்ட அனைத்து (ஆறு) சந்தேகங்களுக்கும் தெளிவான விளக்கம் அருள்வீராக.

அதனை இன்னது என்று உரைத்திடப் படாமையால் அவாச்சிய வடிவாகும்
இது தனக்குளது உடல் யான் உலகு மெய் என்னும் அவர் உடையோர்கள்
கதையிலாத பொய் வந்தது இப்படி என்று கண்ட பேர் இல்லை மைந்தா
விதன மாயை ஏன் வந்தது என்றால் புத்தி விசாரம் அற்றதனாலே. (95)

## <u>தெளிவுரை:-</u>

### 1. மாயை என்பது என்ன?

மகனே! விரிந்து பரந்துள்ள இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே நிலையில்லாத மாயை ஆகும். இங்கு ஒரு விஷயத்தை விளக்க வேண்டியிருக்கிறது.

மாயை என்பது பொய்யன்று. உண்மையும் அன்று.

குறிப்பிட்ட காலத்துக்கு உண்மை போலத் தோற்றம் அளிப்பதே மாயை. உண்மை என்பது, '**உள்**' என்ற வேர்ச் சொல்லிலிருந்து உருவானது. அதாவது உள்ளதென்று பொருள். ஆக, உண்மை என்பது, எக்காலத்திலும் உள்ளதாக இருத்தல் வேண்டும்.

ஆகவே, எல்லாம் வல்ல இறையாற்றல் ஒன்று மட்டும்தான் எப்போதும் இருக்கக்கூடிய உண்மை ஆகும். (அதுவே, சாஸ்வதமான சத்தியம்).

ஆனால், இந்தப் பிரபஞ்சமானது குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே இருக்கக் கூடியது. அதாவது, மனதினால் வந்து, போகின்றது என்பதினால், ஒருவகையில் மட்டுமே உண்மை.

அதாவது, புலன்களின் அடிப்படையில் விழிப்பு நிலையில் இந்த உலகம் உண்டாகின்றது. அதுவே, அழ்ந்த உறக்கத்தில் இந்த உலகம் இல்லாமல் போகின்றது. அதுவே, மனம் கற்பனையில் கனவு காணும்போது, அங்கு வேறு ஒரு உலகம் படைக்கப்படுகின்றது. அவ்வாறே, இந்த ஸ்தூல உடல் இல்லாமல் இறந்து போனால், சூக்ஷும மனதிற்கு புலன்கள் இல்லாமல் போனதினாலே, உலகம் உண்டாவதில்லை.

ஆகவே, அந்தந்த காலக்கெடு முடிந்ததும், இந்த பிரபஞ்சம் அழிந்து, இல்லாமல் போய் விடுகின்றது.. ஆகையால், அது பொய்யாகவும் முடிகின்றது.

அதுப்போலத்தான், இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள எல்லா வஸ்துக்களும், குறிப்பிட்ட காலம் வரை இருந்து, பிறகு இல்லமல் மறைகின்றன. இதற்குப் பெயர்தான் **மாயை.**

இதனை '**கயற்றரவு**' என்ற வார்த்தையால் மகாகவி சுப்பிரமணிய பாரதி விளக்குவார். அதாவது, காற்றில் அசையும் கயிறு, தூரத்தில் நின்று பார்க்கையில் அரவு போன்று, அதாவது பாம்பு போல அசையும். அந்தக் காற்று நின்று விட்டால், அது வெறும் கயிறு என்பது தெரியும்.

அதுப்போல, பிராணன் என்று காற்று இருக்கும் வரை, இந்த உயிரினங்கள் அசைகின்றன. பின்னர் மடிந்து விடுகின்றன. ஆகையால், இவையெல்லாம் **மாயை.**

மாயை என்பது இன்னது என்று உரைத்திட முடியாததினால், அதனை **அநிர்வசனீயம்** என்பர்.

"**அநிர்வசனீயம்**" என்றால், சரியாக நிருபிக்க முடியாது என்று பொருள். அதாவது மாயை என்பது பரப்பிரம்மம் என்ற ஒன்றைச் சார்ந்து இருப்பது ஆகும்.

அதாவது இங்கு சார்ந்து இருப்பது என்பது, நாம் மதிய நேரம் சூரிய ஒளியில் சாலையில் நடந்து செல்லும் போது நம்முடைய உடலின் நிழல் நம்மைச் சார்ந்து பின் தொடர்வதுப் போல, பரப்பிரம்மம் என்ற ஒன்றிடமிருந்து, அதன் நிழல்போல, இந்த மாயை தோன்றியதால், அதுவும்

பரப்பிரம்மத்தைச் சார்ந்து இருக்கின்றது என்பதையும் அறிய வேண்டும்.

பரப்பிரம்மம் சுதந்திரமாக தனித்து இருந்தாலும், மாயை அதைச்சார்ந்து இருக்கின்றது என்பது, களிமண்ணில் இருந்து செய்யப்பட்ட பானைகள் களிமண்ணைச் சார்ந்து இருப்பதுப்போல, தங்கத்திலிருந்து செய்யப்பட்ட நகைகள் தங்கத்தைச்சார்ந்து இருப்பதுப்போல, பரப்பிரம்மத்திலிருந்து தோன்றிய **மாயை** பரப்பிரம்மத்தைச் சார்ந்து இருக்கிறது.

ஆதனால், மாயைக்கு தனித்து நிற்கும் சக்தி கிடையவே கிடையாது. இந்த மாயை பரப்பிரம்மம் போன்று சுதந்திரமாக தனித்து இல்லாததால், இதனை "**மித்யா**" என்று சாஸ்திரம் அழைக்கின்றது. மித்யா என்பது ஒன்றை சார்ந்து இருப்பதாகும், அதற்கென்று, ஒரு தனித்த **சுயம்** கிடையாது.

அப்படிப்பட்ட மாயை என்ற ஒரு தத்துவத்திடம் இருந்துதான் இந்த உலகம் தோன்றியுள்ளது. இந்த உலகம் எந்த தன்மையுடன் விளங்குகின்றதோ? அந்த தன்மையைத் தான் **மித்யா** என்கின்றோம்.

இந்த மாயையானது தன்னளவில் ஜடமாக உள்ளது. இந்த மாயை பரப்பிரம்மத்தை சார்ந்துள்ளதினால், பரப் பிரம்மத்தினிடம் இருக்கின்ற குணங்களை எல்லாம் தன்னிடம் இருப்பதுப் போலக் காட்டிக்கொள்ளும்.

இதில், இரண்டு தத்துவங்களைப் பரப்பிரம்மத்தினிடம் இருந்து மாயை வாங்கிக்கொண்டு, அதை தன்னிடம் இருப்பதுப்போல வெளிப்படுத்திக்காட்டிக் கொள்கின்றது.

அவைகளில், ஒன்று **இருத்தல்** என்ற இருப்பு நிலை (சத்), மற்றொன்று **சைதன்யம்** என்ற சேதன நிலை. அதாவது, அதை **உணர்வு** அல்லது **அறிவு** (சித்) என்றும் கூறலாம்.

இதில், இருத்தல் (இருப்பு) என்பது பரப்பிரம்மத்தின் "**சத்**" ஸ்வரூபம், சேதனம் (சைதன்யம்) என்பது பரப்பிரம்மத்தின் "**சித்**" ஸ்வரூபம் எனப்படும். இந்த இரண்டும் இணைந்த நிலையில் ஆனந்தம் உள்ளது. அதுவே, **சச்சிதானந்தம்** ஆகும்.

அதாவது, **சத்** மற்றும் **சித்** ஆகிய இந்த இரண்டு குணங்களையும் வாங்கிக்கொண்டு மாயையானது எப்படி வெளிப்படுத்துகின்றது என்றால், சூரியனின் பிரகாசமான ஒளியை ஒரு கண்ணாடி வாங்கிக்கொண்டு, அதை வெளிப்படுத்தும் பொழுது, அந்த சூரிய ஒளியை அந்த கண்ணாடித் தன்னிடம் இருந்து சுய வெளிச்சமாக வெளிப்படுத்துவதுப் போன்று காட்டிக்கொள்கின்றது.

அதுப்போல, மாயை பரப்பிரம்மத்தின் குணங்களை வாங்கிக்கொண்டு, அதைத் தன்னிடமிருந்து சுயமாக வெளிப்படுத்துவதுப் போல காட்டிக்கொள்கின்றது.

இதை எவ்வாறு அறியலாம் என்றால், நாம் ஏற்கனவே கண்டதுப்போல, நாம் நடந்து சென்றால், நம் நிழலும் நடந்து செல்கின்றது.

உடனே நம்மைப்போன்றே, நடக்கும் அறிவு நிழலுக்கு உண்டு என்று, நாம் நிச்சயமாக நம்ப மாட்டோம். காரணம், அது நம்முடைய நடக்கின்ற செயலினால் பிரதி பிம்பிக்கின்றது.

அதுப்போல, பரப்பிரம்மத்தின் இருப்பை (சத்), மற்றும் அறிவை (சித்) மாயை பிரதி பிம்பிக்கின்றது என்று அறிய வேண்டும்.

இவ்வாறு பரப்பிரம்மத்தின் இரண்டு குணங்களை வாங்கிக்கொண்டு, வெளிப்படுத்தும் மாயைக்கு மற்றொரு பெயர்தான் "**ஈஸ்வரன்**" என்பதாகும்.

எனவே, பரப்பிரம்மத்தின் துணைக்கொண்டு, அந்த பிரம்மத்தின் குணங்களான இருப்பும் (சத்), அறிவும் (சித்) தன்னுடைய ஸ்வரூபமாக வெளிப்படுத்துகின்ற மாயைக்கு "**ஈஸ்வரன்**" என்று பெயர்.

அதாவது பரப்பிரம்மத்துடன் கலந்த சிருஷ்டி கர்த்தாவான மாயையே **ஈஸ்வரன்** என்பதாகும். ஆக, பிரம்மனும், மாயையும் சேர்ந்தது **ஈஸ்வரன்** எனலாம்.

## 2. மாயையை உடையவர் யார்?

இந்த உலகமும், இந்த உலகத்தில் உள்ள உறவுகளும் என்னுடையது என்ற அபிமானமும், இந்த சரீரமே "**நான்**" என்ற அபிமானமும் கொண்டு இருப்பவர்கள் மாயையை உடையவர்கள் ஆவார்கள்.

## 3. மாயை எப்படி வந்தது?

மாயா என்ற தத்துவம் பரப்பிரம்மத்திடம் இருந்து, இருத்தல் (சத்), அறிவு (சித்) என்ற இரண்டு தத்துவங்களை வாங்கிக் கொண்டு பிரதி பிம்பிக்கின்றது.

## 4. அது எதனால் வருவானேன்?

தன்னை அறிந்துக் கொள்ள ஆர்வமில்லாமல், அறிவு மற்றும் ஜடம் என்ற இரண்டைப் பற்றிய புரிதலும் இல்லாமல், தன் உடலை உண்மை என்று கருதுவதும், இந்த உலகத்தை உண்மை என்று நம்புவதும், இந்த ஜடமான உடலில், மூன்று அவஸ்தைகளான விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் என்ற அனுபவங்களுக்கு காரணங்களை அறியாமலும், இவைகளால் உண்டான இன்ப, துன்பங்களினால் மயக்கத்தைக் அடைந்து, பிறப்பு, இறப்பு என்ற நீங்காத நோயை கொடுக்கின்ற மாயை என்பது, ஜீவர்களின் அறியாமைகளினால் வந்தது எனலாம்.

அருவமாகும் மாயாவி வித்தைகள் விளையாடும் முன் தெரியாவே
உருவமாம் பல கந்தர்ப்ப சேனையாய் உதித்தபின் வெளியாகும்
பிரம சத்திகள் அநந்தமாம் அதைக்கண்டு பிடித்திடல் கூடாதே
பரவு பூதங்கள் கண்டு அநுமானத்தால் பலருக்கும் வெளியாமே. (96)

**<u>தெளிவுரை:-</u>**

## 5. மாயை என்பது பிரம்மத்திலிருந்து வேறானதா?

ஜால வித்தைக் காட்டுபவன் தன்னை மாயமாக மறைத்துக் கொண்டு, பல வித்தைகள் காட்டி விளையாடு வதையும், அதன்பிறகு அவனே மக்கள் முன்பு தோன்றி, தான் வைத்திருக்கும் தொப்பியிலிருந்து ஒரு முயலை உயிருடன் வெளிப்படுத்துவதையும், மற்ற சில பிரம்மிக்கத் தக்க வித்தைகளை வேடிக்கை காட்டுவதையும் கண்கூடாக அனைவரும் கண்டாலும், அதன் பொய்யான மாயா இரகசியத்தை யாராலும் தெரிந்துக் கொள்ள முடியாது.

அதுப்போல, உருவமற்ற பரப்பிரம்மம் தன்னை உருவத்தில், இந்த உலகமாக பிரதி பிம்பித்துக் கொண்டு வெளிப்படுவதை அனைவரும் கண்கூடாக கண்டாலும், இந்த பொய்யான உலகத்தை, இதன் இரகசியத்தை யாராலும் தெரிந்துக் கொள்ள முடியாது.

அதாவது, ஆகாசம் முதலான பஞ்ச பூதங்களும், அதன் வெளிப்பாடாக இந்த அகண்ட பிரபஞ்சமும், அதில் பூமி போன்ற உலகமும், அந்த உலகத்தில் காணப்படுகின்ற அனைத்து உயிர்களும் உண்மையாகத் தோன்றினாலும், அதன் இரகசியத்தை யாராலும் அறிந்து கொள்ள முடியாது.

இவ்வாறு அறிய முடியாத மாயா சக்தியை பரப்பிரம்மத்தின் (நிழல்) பிரதிபிம்பம் என்று மட்டுமே அறிய முடியும்.

உதாரணமாக, மனிதனின் நிழல் மனிதனைச் சார்ந்து மட்டுமே இருப்பதுப்போன்று, பிரம்மத்தின் நிழல் பிரம்மத்தைச்சார்ந்து மட்டுமே இருக்கும். பிரம்மத்துடன் சேர்ந்து இருக்காது.

காரியங்களும் சத்தி ஆதாரமும் காணும் மற்றதுமாயம்
பாரில் நின்ற மாயாவியும் சேனையும் பார்ப்பவர் கண்காணும்
வீரியம் திகழ் வித்தையாயினசத்தி வெளிப்படாது அதுபோலே
பேரியல் பிரமத்துக்கும் உலகுக்கும் பிறிது சத்திகள் உண்டே. (97)

## <u>தெளிவுரை:-</u>

ஒரு ஜால வித்தைக்காரனின் மாயா சாகசங்களினால் உண்டான பல உருவங்களும், அதன் காரியங்களும்

காண்பதற்கு உண்மை போன்று தோன்றினாலும், அந்த மாயத் தோற்றத்தின் வெளிப்பாடு **பொய்** ஆகும்.

அதாவது, அந்த மாயா சக்திக்கு காரணமான மாயாவியும், அவனது பக்க பலமான மாயக்காட்சிகளும், அந்த அரங்கத்தில் சுய நினைவுடன் இருக்கின்ற அனைவருக்கும் கண்கூடாகத் தெரிந்தாலும், எந்த சக்தி இவைகளை எல்லாம் தோற்றுவித்ததோ? அந்த மாயா சக்தியானது ஒருவர் கண்களுக்கும் புலப்படுவதில்லை.

அதுப்போல, உண்மையாக தோன்றும் இந்த உலகமும், உலக காரியங்களும், அதில் காணப்படுகின்ற உருவங்களும் அதன் பெயர்களும் அனைவருக்கும் கண்கூடாகத் தெரிகின்றது. இந்த தோற்றத்திற்குக் காரணமான மாயாவியாகிய ஈஸ்வரன் இருப்பதும் இந்த உலகத்தின் வாயிலாக அறியப்படுகின்றது.

அப்படிப்பட்ட, மாயாவியான ஈஸ்வரனின் மாயா விளையாட்டுக்களை கண்கூடாகக் கண்டாலும், அதன் மாயா சக்தியைக் கண்ணால் காண முடிவதில்லை.

இதிலிருந்து, மாயாவிக்கு வேறாக அவனது மாயா சக்திகள் இருப்பது போன்று, பிரம்மத்திற்கு வேறாக அவரது மாயா சக்தி இருக்கின்றது என்பதும் உண்மை.

சத்தி சத்தனைத் தவிர வேறன்று காண் சத்தனாம் மாயாவி
வித்தை காட்டிய இந்திர சாலம் பொய் வித்துவான் மெய்போலப்
புத்தி மைந்தனே சத்திமானாகிய பூரண ஆன்மாவின்
வத்து நிண்ணயம் சொன்ன திட்டாந்தத்தின் வழிகண்டு தெளிவாயே. (98)

## தெளிவுரை:-

### 6. மாயையும், பிரம்மமும் ஒன்றா?

மகனே! இந்திர ஜால சக்தியானது அந்த மாயாவியைச் சார்ந்தே இருக்கின்றது. அதாவது, மாயாவிக்கு வேறாக அந்த மாயா சக்தி இல்லை.

அந்த மாயா சக்தியைக்கொண்டு மாயாவி காட்டிய ஜால வித்தையானது பொய் என்பதாகும். அதேசமயம், அந்த மாயா சக்தியை வெளிப்படுத்திய மாயாவி மட்டும் உண்மை.

இதுப்போன்று, சர்வ சக்திமானாகவும், சர்வாத்மனாகவும், நித்ய பூர்ணமாகவும், சச்சிதானந்த சொரூபம் ஆகவும் இருக்கின்ற பிரம்மம் மட்டுமே இருப்பது உண்மை.

ஆனால், அந்த பிரம்மத்தின் பிரதிபிம்பங்களான இந்த உலகமும், உருவங்களும் மாயையில் வெளிப்பட்டது என்பது மாயா சக்தியைக் கொண்ட பிரம்மத்தைச் சார்ந்தது மட்டுமே ஆகும்.

அதனை வார்த்தைகளினால் விளக்கவும் முடியாது. அது இத்தன்மையது, இப்படிப்பட்டது என்பதை அற்ப கரணங்களுக்கும், புலன்களுக்கும் நிரூபிக்கவும் முடியாது.

ஆகவே, அதனை "**அநிர்வசனீயம்**" என்று அழைக்கின்றோம்.

அப்படிப்பட்ட இந்த மாயா சக்தியை **மாயை, அவித்தை, ஆவரணம், விக்ஷேபம், அஞ்ஞானம், சத்தி, பிரகிருதி** என்று பலப் பெயர்களிலும், பலத் தொழில்களிலும், பல ரூபங்களிலும் கற்பனையாக கற்பிக்கப்படுகின்றது.

இந்த மாயா பிரபஞ்சம் விழிப்பு நிலையில் மட்டுமே மிக நன்றாகத் தெரிகின்றது.

அதுவே, ஆழ்ந்த உறக்க நிலையில் இந்த உலகமும், உறவுகளும் எதுவும் தெரிவதில்லை. அதை விழிப்பு நிலையில் கண்டவன், ஆழ்ந்த உறக்க நிலையில் ஏன் காண முடியவில்லை?

அதுவே, கனவு நிலையில் இந்த உலகத்திற்கு வேறாக, வேறு ஒரு உலகத்தையும், வேறு சில உறவுகளையும் உண்டாக்குபவன் யார்?

விழிப்பு நிலையில் காண்கின்றவனுக்கு, இந்த உலகமும், உறவுகளும், ஆழ்ந்த உறக்கத்தில் எங்கு சென்றது? ஆழ்ந்த உறக்கத்தில் அவன் எங்கு இருந்தான்?

அதுவே, அவன் உறங்கி எழுந்தவுடன் நான் நன்றாக உறங்கினேன் என்று எவ்வாறு கூற முடிகின்றது?

இதுப்போன்ற பல திருஷ்டாந்தங்களைக் கொண்டு, மாறுதலுக்கு உட்பட்ட, நிலையற்ற இந்த மாயா பிரபஞ்சம் என்பது, மனம் கற்பித்துக் கொண்ட பொய்யான பாவனை என்பதை அறிந்து தெளிவடைவாயாக.

இல்லையாகிய சத்தியை உண்டென்பது எப்படி எனக் கேட்கில்
புல்லையாதியாம் அசேதனப் பொருளெலாம் பூத்துக்காய்ப்பன பாராய்
நல்லையாம் மகனே அதில் சிற்சத்தி நடந்திடாது இருந்தக்கால்
தொல்லையாய் வரும் சராசர உயிர்க்கெலாம் சுபாவங்கள் வேறாமே.
(99)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! இல்லாத இந்த மாயா சக்தியை மக்கள் அனைவரும் உண்டென்று நம்புவது எவ்வாறு?

நன்றாகச் சிந்திக்கின்ற, நற்புத்தி கொண்ட மகனே!

இல்லாத மாயா சத்தியை உண்டென்பது எப்படியெனக் கேட்பாயாகில், மனிதனைப்போன்று, ஆறறிவு இல்லாத புல், பூண்டு, செடி, கொடி, மரம் போன்ற அறிவற்ற உயிர்கள்

எல்லாம் தளைத்து, பூத்து, காய்த்து, கனிந்து வருகின்ற ஒரு ஒழுங்கு நடவடிக்கையை நன்றாகக் கவனித்துப் பார்.

அவைகளில் காணப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள் அந்த சித் (அறிவு) சக்தி இல்லாமல், இது போன்ற மாற்றங்களை முறையாக நடத்திட முடியாது.

இந்த அண்ட சராசரங்களில் காணப்படுகின்ற அனைத்து உயிர்களிலும், ஓர் அறிவு கொண்ட புல் முதல் ஆறறிவு கொண்ட மனிதன் வரை, ஒன்றுக்கொன்று வேறு பட்ட பல அறிவுகளுடன் இருப்பதைக் காண முடிகின்றது.

அவ்வாறு, இந்த வேறுபாடுகளுக்குக் காரணம், பிரம்மத்தின் சித் சக்தியானது, மாயையில் பிரதிபிம்பிக்கின்ற உபாதிகளைப் பொருத்து, அதன் அறிவு வெளிப்படுவதும், சுபாவங்களும் மாறுபடுகின்றது.

**குறிப்பு:—**

(உபாதி என்பது ஒன்றின் மீது மற்றொன்றை ஏற்றி வைத்தல் என்பதாகும். உதாரணம் கண்ணாடி போன்று கலங்கமில்லாத ஸ்படிகத்தின் அருகே வைக்கப்பட்ட ரோஜா மலரின் சிவந்த நிறம் அந்த ஸ்படிகத்தில் ஏற்றிவைக்கப்பட்டு பிரதிபிம்பிக்கும். அதனால், அந்த ஸ்படிகம் பார்பதற்கு சிவந்த நிறத்தில் காணப்படுமே ஒழிய, உண்மையில் ஸ்படிகத்தின் இயல்பாக உள்ள கலங்கமற்ற கண்ணாடிப் போன்ற பளிங்குத் தன்மை பாதிக்கப்படுவதில்லை.

அதுப்போன்று, பவித்ரமான கலங்கமற்ற பரப்பிரம்மம் இந்த உடல்கள் என்ற உபாதியில் பிரதி பிம்பிக்கின்றது. அதனால், அந்த பிரம்ம சைதன்யத்தில் எந்த விதமான கலங்கமும் உண்டாவதில்லை. மேலும், இந்த உபாதிகளினால் பிரம்மம் பாதிக்கப்படுவதில்லை. அதன் இயல்பில் அது எப்பொழுதும் இருக்கும்.)

கருப்பை முட்டையுள் பறவைகள் பலநிறம் கலந்த சித்திரம் பாராய்
அருப்பமாம் சத்தி நியமம் இல்லாவிடில் அரசிலா நகர் போலாம்
நெருப்பு நீரதாம் கசப்புமே மதுரமாம் நீசனும் மறையோதும்
பொருப்பு மேகமாம் கடலெலாம் மண்களாம் புவனம் இப்படிபோமே. (100)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! பறவையின் கருப்பையில் உண்டான பல முட்டைகளிலிருந்து பல நிறமுள்ள பறவைகள் அழகான சித்திரம் போன்று, பல நிறங்களில் வெளி வருவதைக் காண்கின்றோம்.

அதுப்போன்று, ஒரே பரப்பிரம்மத்தின் சித் சக்தியான பேரறிவு, பல்வேறு உடல்கள் கொண்ட உபாதிகளின் காரணமாக, புல்லில் இருந்து மனிதன் வரை அறிவுகளில் வேறுபாடுகள் (ஓரறிவு முதல் ஆறறிவு வரை) இருப்பதைக் காண முடிகின்றது.

அரசன் இல்லாத நகரத்தில், அவனால் இயற்றப்பட்ட சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகளை நடைமுறையில் செயல் படுத்தாத காரணத்தினால், அவைகளை கடைப்பிடிக்காத நெறித் தவறிய மக்கள், தவறான பலச் செயல்களைச் செய்து ஒழுங்கற்ற வாழ்க்கை முறையை வாழ்வதுப் போன்ற நிலை உண்டாகின்றது.

அதுப்போன்று, அருவமாக (கண்ணிற்குத் தெரியாத) அந்த பரப்பிரம்மத்தின் சித் (அறிவு) சக்தியினால் உண்டான ஒழுங்கு நியமங்கள் (பிரபஞ்ச நியதியான ரிதம்) இல்லாமல் போனால், சுடுகின்ற நெருப்பு, குளிர்ச்சியான நீராகவும், கசப்பு, இனிப்பாகவும், கல்வி அறிவே இல்லாதவன் சாஸ்திரங்களை ஓதுவதும், நிலையாக உள்ள நகராத மலைகள் எல்லாம் நகருகின்ற நிலையும், நகருகின்ற மேகங்கள் எல்லாம் நகராமல் நிற்பதும், கடல் நீரெல்லாம், காய்ந்த பூமியாகவும் இந்த உலகத்தில் எல்லாமே முரண்பாடாக மாறிப் போய் விடுமே.

ஆர்க்கும் காணவும் அறியவும் படாது என்றும் அவாச்சிய வடிவு என்றும்
சேர்க்கும் நாம ரூபப் பயிர் வித்து என்றும் செப்பிய சிற்சத்தி
பேர்க்கும் ஆறு எங்ஙன் பிரித்திடப் படாது எனில் பிரம பாவனை ஒன்றாப்
பார்க்கும் ஆறு எங்ஙன் முத்தியாகுவது எங்ஙன் பரம சற்குருமூர்த்தி. (101)

**<u>தெளிவுரை:-</u>**

ஐயனே! பரம சற்குரு மூர்த்தியே, யாராலும் காணவும் முடியாது, அறியவும் முடியாது, இன்னது என்று கூறவும் முடியாது, அநிர்வசனீயம் என்பதால் நிருபிக்கவும் முடியாது என்று கூறும்போது, பல உருவங்களையும், அதன் பெயர்களையும் கொண்ட மாயையே இந்த பிரபஞ்சம் தோன்றுவதற்கு விதை என்றால், அவ்வாறு கூறப்பட்ட அந்த மாயையை நீக்குவது எவ்வாறு?

அப்படி, அதை பிரித்து நீக்க முடியாது என்றால், பரப்பிரம்மத்தை தவிர, வேறு ஒன்றுமில்லை என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?

பிரம்மம் மட்டுமே உண்டு என்றும், ஜீவாத்மாகிய நானும், பரமாத்மாவாகிய பரமனும் ஒன்றெனக் கூறுகின்ற, சாஸ்திரம் வலியுறுத்தும் **முக்தி நிலை** உண்டாவது, எவ்வாறு சாத்தியம் என்பதை தாங்கள் அருள் கூர்ந்து விளக்குவீராக.

வாயுத் தம்பனம் சலத் தம்பனம் மணிமந்திர மருந்தாலே
தேயுத் தம்பனம் செய்திடில் அதில் சிறந்த சத்திகளெங்கே
நீ அச் சச்சிதானந்தமாய் வேறொன்றும் நினைந்திடாது இருப்பாயேல்
மாயச் சத்திபோம் ஈதன்றி மந்திரம் மறைகளில் காணோமே. (102)

## தெளிவுரை:-

மகனே! மாயாவி தன்னிடம் உள்ள மகிமையான மணி, மந்திர, மருந்தாலே வாயு, நீர், அக்னி போன்ற வைகளை தன் கட்டுக்குள் கொண்டு வரும்போது, அவற்றின் இயல்பான சக்திகளான சலனம் (அசைவு), திரவத்தன்மை (குளிர்ச்சி), சூடு (வெப்பம்) போன்றவைகள் எல்லாம் எங்கே போயின? அவனிடம் செயல்பட முடியாமல் மறைந்து போயின அல்லவா?

அதுப்போல, நீ அந்த சச்சிதானந்த சொரூபம் என்பதை உணர்ந்து, அந்த பேருணர்வில் மட்டுமே இருந்துக் கொண்டு, மற்றவைகள் அனைத்தும் மாயை என்பதை அறிந்து, வேறு எதையும் நினையாமல், ஒரே சித்தத்துடன் பரப்பிரமமாக மட்டுமே நின்றாய் எனில், மனதை மயக்கும் அந்த மாயை மீண்டும் உன்னிடம் வராது, மறைந்து அழியும். இதைத்தவிர, வேறு வழி ஏதும் வேதங்களில் கூறப்படவில்லை.

மேவும் மண்ணில் அவ்வியத்தமே வியத்தமாம் விவகரித்திட வேண்டில்
நாவினால் மண்ணைக் குடமென்பர் அக்குடம் நசிப்பது நாவாலே
பாவு நாம ரூபங்களை மறந்து மண் பார்ப்பதே பரமார்த்தம்
சீவபேத கற்பிதங்களை மறந்து நீ சின்மயம் ஆவாயே. (103)

## தெளிவுரை:-

மகனே! புலன்களுக்கு விசயமாகின்ற மண் எவ்வாறு உலக விவகாரத்திற்கு வேண்டி, குயவனால் அந்த மண்ணை எடுத்து ஒரு குடம் அல்லது பானை செய்யப்படுகின்றது.

குயவன் மண்ணை எடுத்து ஒரு குடம் செய்கின்றான் எனில், அதற்கு நாவினால் பெயர்களைச் சூட்டி, குடம் என்றும், பானை என்றும் பலவாறாக அழைத்துக் கொண்டு அந்த உருவத்தை ஆராதிக்கின்றான். அதுவே, அந்த குடம் உடைந்து போனவுடன், மீண்டும் தன் இயல்பான மண்ணாகவே மாறி விடுகின்றது.

ஆகவே, குயவன் குடம் அல்லது பானை செய்யும் முன்பும் (இறந்த காலத்தில்) மண் இருந்தது. இடையில் குயவன் குடத்தை வடிவமைத்த பொழுதும் (நிகழ் காலத்தில்) அது மண்ணினால்தான் உண்டாகியிருந்தது. அதே குடம் உடைகின்ற பொழுதும் (எதிர் காலத்தில்) மீண்டும் மண் மட்டுமே இருக்கும்

இவ்வாறு, மண்ணுக்கு பெயர்களும், உருவங்களும் குயவனின் செயலால் உண்டாக்கப்பட்டதே தவிர, மண் எப்பொழுதும் போன்று உருவமும், பெயரும் அற்ற மண்ணாகவே இருக்கின்றது.

இவ்வாறு, உலகத்தின் தோற்றமும், அதனால் உண்டான பெயர்களும் மனதினால் உண்டாக்கப்பட்டதே தவிர, பிரம்மம் எப்பொழுதும் போன்று நாம, ரூபங்களை கடந்து பிரம்மமாகவே இருக்கின்றது.

இடையில் இவ்வாறு வந்து போகின்ற பெயர்களும், உருவங்களும் (உலகமும், உறவுகளும்) நம் மனம் கற்பித்துக் கொண்ட பொய்யான தோற்றமே, என்பதை உணர்ந்து, ஜீவ பேதங்களை மறந்து, நீ அந்த சின்மயம் (சைதன்யம்) ஆவாயே.

பூரிக்கும் கன சச்சிதானந்தத்தில் பொய் சடம் துயர் மூன்றும்
தூரத்தாயினும் தோன்று பாழ் விபரிதம் துடைப்பது எப்படி என்றால்
நீரில் தோன்றும் தன் நிழல் தலை கீழதாய் நின்று அலையினும் நேராய்ப்
பாரில் தோன்றிய தன்னை நோக்கிடில் அந்தப் பாழ்நிழல் பொய்யாமே. (104)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! நிறைவான மகிழ்ச்சியைக் கொடுக்கின்ற சச்சிதானந்த பிரம்மத்தில் பொய்யும், ஜடத்தன்மையும், துயரங்களும் போன்ற மூன்று மாறுபாடுகள் இருக்க முடியாத

தாயினும், இதுப்போன்ற விபரீத புத்திகள் தோன்றாமல், துடைத்து நீக்குவது எப்படி? என்பதை அருள் கூர்ந்து விளக்குங்கள் சுவாமி.

மகனே! நீரில் தோன்றுகின்ற தன்னுடைய நிழல் தலைகீழாகக் காணப்படுவதைக் கண்டும், அந்த நீரின் அசைவுக்கு ஏற்ப தன் நிழல் உருவம் அங்கும், இங்கும் அலைந்து அசைவது போன்று காணப்படுவதைக் கண்டும் ஆச்சரியம் அடையாமல், உண்மையாகக் கரையில் நிற்கின்ற தன் நிஜ சொரூபத்தைக் காணும்போது, அதன் உண்மைத் தன்மை அசைவின்றி, அலையாமல் இருப்பதினைக் கண்டு, நீரில் தெரிகின்ற அந்த நிழல் சொரூபம் பொய்யென அறிந்துக் கொள்கின்றாய்.

அதுப்போன்று, தன் உண்மை சொரூபமான பிரம்ம சொரூபத்தை மட்டும் காணும்போது, கற்பித்துக்கொண்ட இது போன்ற நாம, ரூபங்கள் கொண்ட இந்த உலகமும், உயிர்களும் அந்த பாழும் நிழலைப் போன்று அசைவது என்பது, அலைபாயும் மனதின் பொய்யான அசைவுகள் என்பது விசாரத்தில் புரியவரும்.

ஞானம் காரணம் அறிபொருள் காரியம் நாம ரூபப் பேய்கள்
ஆனதெப்படி அழிந்ததெப்படி என ஆய்குதல் பலனன்றே
மான மைந்தனே தீர்க்க சொப்பனசகம் வந்ததும் பாராமல்
போனதும் நினையாமல் உன் போதமாய்ப் பூர்ணமாயிருப்பாயே. (105)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! ஞானம் (அறிவு) என்பது காரணம், அறிந்துக் கொண்ட விசயம் (பொருள்) காரியம்.

இவ்வாறு காரண, காரியங்களைப்பற்றி விசாரித்து அறிய முற்படும்போது, அவைகள் உண்டாவதும், அழிவதும் பற்றிய ஆராய்ச்சிகள் பயனற்றது.

இது எவ்வாறெனில், காரியமான பானைகளைப் படைத்து, அதற்கு உருவமும், பெயர்களும் கொடுப்பதற்கு காரணமாக '**குயவன்**' இருப்பதைப்போன்று, இந்த காரியமான பிரபஞ்சத்தைப் படைத்து, அதற்கு உருவமும், பெயர்களும் கொடுப்பதற்குக் காரணமாக '**மனம்**' இருக்கின்றது.

இதில், நாம, ரூப காரியங்களுக்கு, மனமே காரணமாக இருப்பதால், இந்த காரிய, காரணங்கள் உண்டாவது எப்படி? இவைகளை நீக்குவது எப்படி? போன்ற ஆராய்ச்சிகள் தேவையற்றது.

மேலும், கனவில் தோன்றிய காரிய பிரபஞ்சத்தில் பல உருவங்களும், பெயர்களும் படைக்கப்படுவதற்கும், அந்தக் கனவு கலைந்ததும், அதில் படைக்கப்பட்ட உருவங்களும், பெயர்களும் அழிந்து போவதற்கும், மனம்தான் காரணம் ஆகும்.

அதுப்போன்று, நினைவில் தோன்றிய இந்தக் காரிய பிரபஞ்சத்தில் நாம, ரூபங்கள் படைக்கப்பட்டதற்கும், அவைகள் இல்லாமல் அழிந்து போவதற்கும் மனம்தான் காரணமாக இருக்கின்றது.

இவ்வாறு, இந்த மனதினைக் கொண்டு, பிரபஞ்சத்தில் நாம, ரூபங்கள் தோன்றுவதும், மறைவதும் எப்படி? என்று, ஜடமான அந்த பொய் தோற்றங்களைப்பற்றி ஆராய்ந்துக் கொண்டிராமல், சத்குருவின் வாயிலாக இதுவரை விசாரித்து அறிந்துக் கொண்ட **விருத்தி ஞானத்தினால்,** அடைந்த விவேகத்தின் தெளிவினைக் கொண்டு, விவாதத்திலும், ஆராய்ச்சியிலும் ஈடுபடாமல், சேதனமான தன் சொரூபத்தை உணரக்கூடிய, உன்னதமான தன்னுணர்வில், தன்னறிவில் (ஆத்ம ஞானத்தில்) எப்பொழுதும் முழுமையாக இருப்பாய் நீயே.

அசத்தில் எம்மட்டு உண்டு அம்மட்டும் பராமுகமாகினால் அம்மட்டும்
நிசத்தில் உள்விழிப் பார்வையாம் இப்படி நிரந்தரப் பழக்கத்தால்
வசத்தில் உன்மனம் நின்று சின்மாத்திர வடிவமாயிடின் மைந்தா
கசத்த தேகத்திலிருக்கினும் ஆனந்தக் கடல் வடிவு ஆவாயே. (106)

## தெளிவுரை:-

மகனே! பொய்யாகிய நாம, ரூபங்களில் உள்ள பற்றுதல் காரணமாக, மனம் எப்பொழுதும், வெளியே எதையாவது பார்த்துக் கொண்டிருக்கவும், அவைகளைப் பற்றிக் கொண்டிருக்கவும் மட்டுமே விரும்புகின்றது.

இப்படிப்பட்ட வெளி முகப்பார்வை பார்ப்பதைக் குறைத்துக்கொண்டு, அந்த பார்வையிலிருந்து, விலகி, எவ்வளவுக்கு எவ்வளவு அதை விட்டுவிட முடிகின்றதோ? அந்த அளவுக்கு உள்முகப் பார்வை திடமாக உண்டாகும்.

இவ்வாறு, மனம் வெளியே தேடுவதைக் குறைத்து, உள் முகமாகப் பார்ப்பதை, இடைவிடாது நிரந்தரமாகச் செய்யும் பயிற்சியால், மனம் தன் வசப்பட்டு, தன்னுணர்வில், சின்மயமான அந்த ஆன்ம சொரூபத்தில் நிலைத்து நிற்கும்.

அப்படிப்பட்ட தன் சொரூபத்தில் அகமுகமாக நிலைத்து நிற்கின்றபொழுது, புறத்தில் காணப்படுகின்ற இந்த வெறுக்கத்தக்க தேகத்தில் நீ இருப்பினும், அந்த தேகாபிமானம் சிறிதுமின்றி, பரந்த ஆனந்தக்கடல் போன்று, பரமானந்தத்தில் திளைப்பாயே, ஒன்றேயான பரம சச்சிதானந்தம் ஆவாயே.

தானன்றி வேறொன்றும் இல்லாத பூரணச் சச்சிதானந்த குணமாய்
ஊன் நின்ற உயிர்தோறும் ஒன்றாகுமென்றால் அஃது ஒக்கின்றபடி கண்டிலேன்
நானென்ற சீவன்கள் சத்தான வகை ஒக்கும் ஞானங்கள் வெளி கண்டதால்
ஆனந்தம் இதுபோல வெளியாக உதியாத அடைவு ஏது குருநாதனே. (107)

## தெளிவுரை:-

ஐயனே! தன்னைத்தவிர, வேறு ஒன்றுமில்லாத முழுமையான சச்சிதானந்த குணத்துடன், இந்த உடம்பு என்ற சரீரத்தில், அது உயிராக இருப்பதுப்போன்று, மற்ற அனைத்து உடல்களிலும் இருக்கின்ற உயிரும், ஒன்றேயான அந்த சச்சிதானந்தம் எனில், அது ஒத்துப் போவதாகக் கருத முடியவில்லை.

ஏன் எனில், '**நான்**', '**நான்**' என்று தன்னை அபிமானித்து, வெளிப்படுத்திக்கொண்டு இருக்கின்ற ஜீவர்களிடத்தில் அந்த "**சத்**" என்ற '**இருப்பு**' இருப்பதை அறிய முடிகின்றது.

அதுப்போன்றே, ஜீவர்களிடத்தில் அனைத்தையும் அறிகின்ற அறிவு, உபாதிகளின் வேறுபாட்டினைக் கொண்டு, அவைகளிடத்தில் "**சித்**" என்ற '**அறிவாக**' இருப்பதையும் அறிந்துக் கொள்ள முடிகின்றது.

ஆனால், எல்லா ஜீவர்களிடமும், இந்த ‘**ஆனந்தம்**’ மட்டும் காணப்படுவதில்லை. சத்தும், சித்தும் போன்று, ஏன் ஆனந்தம் மட்டும் வெளிப்படையாகக் காணப்படவில்லை?

**சத்** = இருப்பு. **சித்** = அறிவு இந்த இரண்டும் ஜீவர்களிடம் வெளிப்படையாகக் காணப்படுகிறது. அதுப்போல, ஆனந்தம் மட்டும் எல்லா சந்தர்பங்களிலும் வெளிப்படையாகக் காணப்படவில்லையே?

ஒன்றேயான தன் சொரூபமான சச்சிதானந்தத்தில், ஆனந்தம் மட்டும் அனைவருக்கும் இல்லாமல் வேறு படுவதின் காரணம் யாது? இதை அருள்வீராக.

உருவங்கள் இரதங்கள் பரிசங்கள் ஒரு பூவில் ஒன்றாகும் என்றாலுமே
கரணங்கள் ஓரொன்றில் ஓரொன்று தெரியும் கணக்கன்றி வாராதுகாண்
அருமந்த சச்சிதானந்தச் சுபாவங்கள் ஆன்மாவின் வடிவாகிலும்
பிரபஞ்ச மயமாம் விருத்தி பேதத்தினால் பேதங்களாம் மைந்தனே. (108)

**<u>தெளிவுரை:-</u>**

மகனே! ஒரே பூவாக இருந்தாலும், அதில் நிறம், சுவை (ரஸம்), மணம் (வாசனை) போன்ற குணங்கள் பல இருக்கின்றன.

அதை அறிவதற்குத் தேவையான புறக்கரணங்களான இந்திரியங்களும் பலவாறாக இருக்கின்றன. அவ்வாறு உள்ள இந்திரியங்கள் ஒவ்வொன்றின் மூலமாக, தனித்தனியாக மட்டுமே, அந்த பூவின் குணங்களை முழுமையாக அறிந்துக் கொள்ள முடியும்.

அதாவது, பூவின் நிறத்தை கண்களும், சுவையை நாக்கும், மணத்தை மூக்கும் அறிய முடியுமே தவிர, ஒரே புலனைக்கொண்டு, இவைகள் அனைத்தையும் அறிய முடியாது.

அதுப்போல, ஒன்றேயான **சத் சித் ஆனந்தம்** என்ற பரம்பொருளின் குணத்தில் அதன் **இருப்பு, அறிவு, ஆனந்தம்** போன்ற சுபாவங்கள் ஆத்மாவின் முழு வடிவாக இருக்கின்றது.

ஒரு பூவை முழுமையாக அறிய புலன்கள் பலத் தேவைப்படுவதுப்போன்று, ஒன்றேயான பரமா(ஆ)த்மாவை முழுமையாக அறிய, அகக்கரணங்களான மனம், புத்தி போன்ற விருத்தி பேதங்களின் காரணமாக, இந்த பிரபஞ்சமயமாக உள்ள ஈஸ்வரனை நாம, ரூபங்களில் பேதமைப்படுத்தி, அதன் வேறுபாட்டினால் அவைகள் வேறு, வேறாக அறியப்படுகின்றது.

இவைகள் அனைத்தும் மனதினால் உண்டாக்கிக் கொள்கின்ற, விருத்தி பேதங்கள் என்பதை அறிவாய் மகனே.

தாமதம் இராசதம் சாத்துவிதம் முக்குணத்தால் வரும் விருத்தி மூன்றாம்
ஆம் அவைகண் மூடமும் கோரமும் சாந்தமும் அபிதானமாகும் மகனே
ஏமுற இருக்கின்ற சச்சிதானந்தங்கள் என்றென்றும் ஒன்றாகிலும்
நாம் உரைக்கும் விருத்திப் பிரிவினால் சொரூப ஞானாதி பிரிவாகுமே.
(109)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! தாமசம், ராஜசம், சத்துவம் என குணங்கள் மூன்று உள்ளன. இந்த 3 குணங்களால் உண்டான விருத்திகளும் மூன்று உள்ளன.

அவைகள், தாமச குணத்தினால் மூடத்தனமும், ராஜச குணத்தினால் கொடூரமும், சத்துவ குணத்தினால் சாந்தமும் உண்டாகின்றது.

இதில் மூடத்தனம் என்பது, சோம்பல், அறியாமை, நம்பிக்கையின்மை, எதிலும் அக்கரையின்மை போன்றவை களாகும்.

கொடூரம் என்பது, ஆசை, கோபம், கருமித்தனம், பற்று, அஹங்காரம், மற்றும் பொறாமை போன்ற துற் குணங்களாகும், சாந்தம் என்பது, அமைதி, பணிவு, அன்பு, மகிழ்ச்சி போன்ற நற்குணங்களாகும்.

சத் சித் ஆனந்தம் என்ற பரப்பிரம்மம் இருப்பும், அறிவும், ஆனந்தமும் கூடிய ஒன்றேயாக இருப்பினும், நம்மிடையே இருக்கின்ற மனோ விருத்திகளினால் உண்டான இந்த மூன்று குண பேதங்களே ஆத்மாவை மறைக்கின்ற பேதங்களாக இருந்துக்கொண்டு, சொரூப ஞானத்தை உணர முடியாமல் தடுக்கின்ற பிரிவாகுமே.

சடமான மூடத்தருக்கல்லு மண்களில் சத்து ஒன்றுமே தோன்றுமால்
விடமான காமாதி கோரத்தில் ஆனந்தம் விளையாது மற்றவைகளாம்
திடமான ஒழிவாதி சாந்தத்திலே சச்சிதானந்தம் மூன்றும் வெளியாம்
மடமான மூடங்கள் கோரங்கள் விடுசாந்த மனமாகில் ஆனந்தமே. (110)

## <u>தெளிவுரை:-</u>

அறிவற்ற ஜடப்பொருட்களான மரம், கல், மண் ஆகியவற்றால், **சத்** என்ற இருப்பானது எல்லா இடங்களிலும் வெளிப்படையாகத் தோன்றுகின்றது.

அதுப்போன்று, அறிவும், ஆனந்தமும் எல்லா வற்றிலும் எளிதாக வெளிப்படாது.

காரணம், **தாமஸ, ராஜஸ**, மற்றும் **சத்வ** என்ற மூன்று குணங்களைக் கொண்டே ஒருவனது மனம் வடிவமைக்கப் பட்டு இருக்கும். அவ்வாறு, வடிவமைத்துக் கொண்ட மனம்

**ஆசை, கோபம், பொறாமை** போன்ற கோர விருத்திகளான ராஜஸகுணங்களின் வெளிப்பாட்டினால் **சத்** என்ற இருப்போடு**,** **சித்** என்ற அறிவும், அவனது குணங்களைப் பொருத்தே வெளிப்பட்டு விளங்கும்.

அதாவது, அந்த இருப்பும் (சத்), அறிவும் (சித்) அவனிடம் உள்ள ரஜோகுணத்தின் ஆதிக்கத்தினால் ஆனந்தத்தை வெளிப்படுத்தாது.

இதுப்போன்றே, **சோம்பல், வெறுப்பு, பயம்** போன்ற தமோகுணங்களின் வெளிப்பாட்டினால் **சத்** என்ற இருப்பு நிலையில், **சித்** என்ற அறிவும், ஆனந்தமும் வெளிப்படாது.

அதுவே, **பொறுமை, கருணை, அமைதி** போன்ற சத்வகுண வெளிப்பாட்டினால், உண்டான சாந்த விருத்தியில் மட்டுமே, **சச்சிதானந்தம்** என்ற பரப் பிரம்மத்தின் மூன்று குணங்களும் வெளியாகும்.

ஆகவே, **ஆசை, கோபம், பொறாமை, வெறுப்பு, பயம்,** போன்றவைகளைக் கொண்ட கோரமும், மூடமும் உடைய மனோ விருத்திகளை ஒழித்துவிட்டு, அமைதி பொருந்திய சாந்தமான மனதுடன், உள்பார்வை உண்டாகுமானால், என்றும் நிலையான ஆனந்தம் வெளிப்படுமே.

இகமான குருநாதனே சச்சிதாநந்தம் எனும் இலக்கணம் அறிகிலேன்
அகலாத சத்தாவது ஏது சித்தாவது ஏது ஆனந்தம் ஏதென்றிடில்
மிகு காலம் மூன்றும் கெடாதிருப்பது சத்து வேறுபாடறிதல் சித்தாம்
மகிழ்காமம் நுகர்போது சுகமாகும் அநுபூதி வாழ்வு என்பது ஆனந்தமே. (111)

## தெளிவுரை:-

ஐயனே! சச்சிதாநந்தம் என்கின்ற பரம்பொருளைப் பற்றிய முழுமையான இலக்கணத்தை அறிந்தவனல்ல இவன்.

இப்பிறப்பில் இவனுக்கு குருவாய் வந்து அருள்கின்ற நாதனே, நீங்காமல் இருக்கின்ற அந்த **சத்** என்பது ஏது? **சித்** என்பது ஏது? **ஆனந்தம்** என்பது ஏது? இவைகளை அருள் கூர்ந்து தெளிவு படுத்துங்கள் சுவாமி.

மகனே! மூன்று காலங்களிலும், எங்கும் நிறைந்து, எப்பொழுதும் நசியாது இருப்பது “**சத்**” என்று கூறப்படும். அதன் இருப்பு ஒன்று மட்டுமே எல்லா இடங்களிலும், எப்பொழுதும் நிறைந்துள்ளது.

இவ்வாறு, எங்கும் நிறைந்த சத் ஆனது, தன் இருப்பின் வெளிப்பாடாய் காணப்படுகின்ற அனைத்திலும் “**சித்**” ஆகப் பிரகாசிக்கின்றது.

ஒரு செல் உயிரியான கண்ணிற்குப் புலப்படாத அமீபா என்ற நுண்ணுயிரியில் தொடங்கி, புல் என்ற தாவரம் முதற்கொண்டு, மனிதன் என்ற பல செல்கள் கொண்ட உயிரினங்கள் வரை காணப்படுகின்ற அறிவு வேறுபாடுகளே “**சித்**” என்று கூறப்படும்.

இந்த ‘**சித்**’ என்ற ‘**அறிவு**’ வெளிப்படுவது, ஜடமாக உள்ள உடலில், சேதனமாக இருக்கின்ற ஆத்மாவிடமிருந்து வருகின்றது என்பதை அறிதல் வேண்டும்.

மேலும், இப்படிப்பட்ட ‘**சித்**’ (அறிவு) ஆனது உயிரினங்களுக்கு கிடைத்த உபாதிகளான உடல்களைப் பொருத்து, ஓர் அறிவு முதல் ஆறறிவு வரை, பிரதி பிம்பிக்கின்ற நிலைகளில் வேறுபடுகின்றது.

இவ்வாறு, சேதனமான ஆத்மாவில் இருந்து வெளிப்படுகின்ற அறிவைக் (சித்தைக்) கொண்டே, ஜீவர்கள் அவரவர்களின் தகுதிக்கு ஏற்ப, சகல விசயங்களையும் அறிந்து கொள்கின்றனர். கிடைத்த உடல்களினால் அறிவில் வேறு படுகின்றனர்.

இதில், ஆனந்தம் என்பது சேதனமான ஆத்மாவின் (சித்தின்) வெளிப்பாடு.

ஆகவே, ஜடமான சரீரத்தில் சித்தானது வெளிப்பட, புறக்கரணங்களாக உள்ள கண்கள், காதுகள், நாக்கு, மூக்கு போன்றவைகளையும், அகக்கரணங்களான மனம், புத்தி

போன்றவைகளையும் கொண்டு, அந்த சேதனமான ஆத்மா பிரகாசிக்கச் செய்கின்றது.

இங்கு அறிவாக, சேதனமாக உள்ள ஆத்மாவே, ஜடமான சரீரத்தில் ஞானமாக பிரகாசிக்கச் செய்கின்றது.

அது எவ்வாறெனில், சரீரத்தில் உள்ள நாக்கு என்ற புலன் ஒன்றின் மூலம் சுவையை அனுபவிக்கின்ற பொழுது, அதில் உண்டாகும் ஒரு ஆனந்தமும், இயற்கையான காட்சிகளை கண்டு மயங்குகின்ற கண்களினால் உண்டாகின்ற பார்வையின் மூலம் ஏற்படும் அனுபவமும், ஆத்மாவின் வாயிலாக ஓர் அறிவையும், அனுபவத்தையும் கொடுத்து, தற்காலிக ஆனந்தத்தை உண்டாக்குகின்றது.

காரணம், ஒன்றை சுவைக்கும் வரையும், பார்க்கும் வரையும் மட்டுமே அதைப்பற்றிய அறிவு உண்டாகி, அதனால், ஆனந்தம் அடைய முடிகின்றது. அதன்பிறகு, அந்த ஆனந்தம் நிலையாக இருக்காது.

ஆகவே, ஜடப்பொருட்களாக நாம் காணுகின்ற காட்சிகளிலும், சுவைக்கின்ற பண்டங்களிலும் ஆனந்தம் கிடையாது.

அதாவது, ஒருவனுக்கு மிகவும் விரும்பி, சுவைத்து உண்கின்ற, திண்பண்டத்தினால் உண்டாகின்ற அந்த சந்தோசம், மற்றொருவனுக்கு சிறிதும் சந்தோசத்தைக் கொடுப்பதில்லை.

(உதாரணம்:- சர்க்கரையினால் செய்யப்பட்ட இனிப்பு பண்டங்கள் சர்க்கரை நோய் உள்ளவனுக்கு சந்தோசத்தைக் கொடுக்காது.)

ஒருவனுக்கு காணும் காட்சிகளினால் உண்டாகின்ற சந்தோசம், மற்றொருவனுக்கு வெறுப்பாக மாறி, சந்தோசத்தைக் கொடுப்பதில்லை.

(உதாரணம்:- ஒருவனுக்கு ராமரை படத்தில் காட்சியாகக் கண்டு வழிபடுகின்றதினால் உண்டாகின்ற சந்தோசம், மற்ற மதத்தைச் சார்ந்தவனுக்கு அந்த காட்சியினால் சந்தோசம் உண்டாகாது.)

இதிலிருந்து, சந்தோசம் என்பது ஜடப்பொருட்களில் கிடையாது என்பது உறுதி செய்யப்படுகின்றது. ஆகவே, அப்படிப்பட்ட ஆனந்தம் எதில் இருக்கின்றது என்றால், அது ஆத்மாவில் மட்டுமே இருக்கின்றது.

எவன் ஒருவன் ஆத்மாவை (அறிவை) அறிகின்றானோ? அவனே ஞானி. அவனே நிலையான ஆனந்தத்தை அனுபவிக்க முடியும்.

ஆத்மாவை விட்டு, அறிவு தனியாக பிரிந்து இல்லை.

ஆனால், அறிவுள்ள அனைத்து ஜீவர்களும் ஏன் ஆனந்தமாக இல்லை எனில், அவைகளின் அறியாமை ஆத்மாவை மறைக்கின்றது.

ஞானம் என்பது புதியதாக உண்டாகுவதில்லை. அது ஏற்கனவே இருந்த ஒன்றுதான், அது அறியாமை நீங்கும் பொழுது வெளிப்படுகின்றது.

எவன் ஒருவன் ஆத்மாவை அனுபவமாக உணர்கின்றானோ? அவனே ஆத்மாவை அனுபவித்து, நிலையான ஆனந்தத்துடன் சுகமாக வாழ்கின்றான். இதுவே, “**ஆத்ம அநுபூதி**” எனப்படும்.

நாசச்சரீரத்து இருக்கும் சரீரிதனை நால்வேத மாவாக்கியம்
நீசச் சிதானந்தம் என்றிடினும் ஆசிரியர் நீ பிரம்மமாகு எனினும்
மாசற்ற சச்சிதானந்தம் நான் என்ன இவன் மன்னும் அநுபவம் எங்ஙனே
கோசப்புரங்களை இடித்துத் தகர்க்கும் மத குஞ்சரக் குருநாதனே. (112)

## <u>தெளிவுரை:-</u>

பஞ்ச கோசங்களையும், ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் தகர்தெறிந்த மதயானைப் போன்ற சாமார்த்தியம் உடைய குருநாதனே. என் ஐயனே!

நாசமாகி, நசிந்து போகக்கூடிய, இந்த சரீரத்தில் இருக்கும் சரீரி என்ற ஆத்மனை நான்கு வேதங்களில் வருகின்ற மகா வாக்கியங்களும் சச்சிதானந்தம் என்று கூறினாலும், இதை உபதேசிக்கின்ற ஆசிரியரும், குருநாதரும் ஆகிய தாங்களும் நீதான், அந்த பிரம்மம் என்று எடுத்துக் கூறினாலும், கலங்கமற்ற சச்சிதானந்தத்தின் (ஆத்மாவின்) இலக்ஷ்ணம் இதுதான் என்று, இவன் எதை அனுபவமாகக் கொண்டு உணர்வது?

## குறிப்பு:–

{அன்னமய கோசம், மனோமய கோசம், பிராணமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்ற ஐந்து கோசங்கள் உள்ளன. முப்புரங்கள் என்பது ஆணவம், கண்மம், மாயை என்பனவாகும்.

முப்புரம் என்பது மும்மலம் என்பதற்கான ஆதாரமாக திருமூலரின் திருமந்திரப் பாடல் இங்கு கீழே கொடுக்கப்படுகின்து.

“அப்பு அணி செஞ்சடை ஆதிபுராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார் அறிவாரோ” (பத்தாம் திருமுறை, திருமந்திரம் - 5).

கங்கையை சடையில் அணிந்த இறைவன், தோற்றமும், முடிவும் இல்லாத பழமையானவனாகிய சிவபெருமான் திரிபுரம்

எரித்த வரலாற்றைப் புராணங்கள் கூறக்கேட்டு, அறிவில்லாத மூடர்கள் அந்த வரலாற்றை மட்டுமே எடுத்துக் கொண்டு, அவ்வளவில் மட்டுமே சிவபெருமானைப் போற்றிப் புகழ்கின்றனர்.

ஆயினும், அவ்வரலாற்றால், அறியத் தக்க உண்மையை அறிகின்றவர்கள் மிகச் சிலரே.

‘**இரும்பு, வெள்ளி, பொன்**’ என்பவற்றால் ஆகிய மூன்று கோட்டைகளும் முறையே ‘**ஆணவம், மாயை, கன்மம்**’ என்னும் மும்மலக் கட்டினைக் குறிப்பனவாகக் கொண்டு ‘**சிவபெருமான் அக்கோட்டைகளை எரித்துச் சாம்பலாக்கினான்**’ என்பது, ‘அந்த மும்மலங்களையும் அழித்து பிறப்பு, இறப்பு என்ற கயிற்றினால் கட்டப்பட்ட கட்டினை அறுத்து அருளுகின்றான்’ என்னும் பேருண்மையை யார் அறிகின்றார்களோ? அவர்களே **ஞானிகள்** என்று இங்கு அறிவுறுத்தப்படுகின்றது.

அடுத்து, ‘**சரீரி**’ என்ற பதம் “**ஆத்மா**” - வை குறிக்கின்றது என்பதை சுட்டிக்காட்டும் விதமாக, பகவத்கீதை ஸ்லோகம் கீழே கொடுக்கப்படுகின்றது.

சரீரத்தை (உடலை) உடையவன் **சரீரி** = ஆத்மா எனப்படுகின்றது.

"அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தா: சரீரிண: |
அநாஸிநோப்ரமேயஸ்ய தஸ்மாத்யுத்யஸ்வ பாரத" ‖ (கீதை 2 - 18).

“எப்பொழுதும் உள்ளதாய், அழிவில்லாததாய், அளவிட முடியாததாய் உள்ள சரீரியினுடைய (ஆத்மாவினுடைய) உடல்கள் யாவும் அழியும் தன்மையுடையவைகள். ஆதலால், அர்ச்சுனா! போர் புரி.” என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணர் தமது கீதையில் கூறுவதிலிருந்து, ஆத்மா அழிவற்றது என்பதும், உடல் அழியக்கூடியது என்பதும் இங்கு அறிவுறுத்தப்படுகின்றது.

சென்மாந்தரம் செய்த வினைகள் உடல் தரும் எனில் செல்காலம் இவன் உண்டலோ
கன்மா அநுபவம் நரக சொர்க்கம் எனில் வருகின்ற காலத்தும் இவன் உண்டலோ
உன்மாத யாதனா உடல் கடவுள் உடல் மநுட உடன்மாறி மாறி அழியும்
தன்மாய உடல் கெடினும்இவன் இருப்பதுகொண்டு சத்து என்பது ஒக்கும் மகனே. (113)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! முன் ஜென்மத்தில் செய்த பல கர்மங்களின் பலனாக, இந்த மனிதப் பிறவியை நீ எடுத்து இருக்கின்றாய் அல்லவா?

ஆகவே, செய்த பாவ, புண்ணியங்களுக்கு ஏற்ப, கர்ம பலன்களை நல்லதாகவும், தீயதாகவும் அனுபவிக்கும் வகையில் மரம், செடி, மிருகம், பறவை, புழு, பூச்சி மற்றும்

மனிதன் என்று பல பிறவிகள் எடுத்து, அந்த உடலைக் கொண்டு, அனுபவித்து தீர்க்கும் நியதி உண்டு என்பது அறிய முடிகின்றது.

ஆகவே, போன ஜென்மத்தில் நீ இருந்தாய் என்பதற்கு, தற்பொழுது உனக்கு கிடைத்த இந்த மனித உடலே ஆதாரம்.

இப்போது, இந்த ஜென்மத்தில் நீ செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும், அதன் கர்ம பலனாக நரகமோ, சொர்கமோ கிடைக்கும் எனில், இனி வருகின்ற காலத்திலும் நீ இருப்பாய் என்பதும் உறுதி செய்யப்படுகின்றது.

இவ்வாறு, பாவ, புண்ணியங்களினால் உண்டான இன்ப, துன்பங்களை சமமாக அனுபவிக்க மனித உடலையும், துயரமான நரகத்தை அனுபவிக்க வேண்டி இழிவான மிருகங்கள், புழு, பூச்சிகள் போன்ற உடலையும், இன்பமான சொர்க்கத்தை அனுபவிக்க வேண்டி தேவர்களின் உடலையும் கொண்டு, மாறி, மாறி பல உடல்களை எடுத்து, மீண்டும் அந்த உடல்களை அழிவுக்கு உட்படுத்தி வருவது நடைமுறையில் காணப்படுகின்றது அல்லவா?

இதுபோன்று, நீ எடுத்த பல பிறவிகளிலும், பல விதமான அழியக்கூடிய உடல்களிலும், அழியாத சேதனமாக **‘ஆத்மா’** ஒன்று மட்டும் இருந்துக்கொண்டு, என்றும் அழிவதில்லை. ஆகவே, நீ ஆத்மாவாக என்றும் இருக்கின்ற **“சத்”** (இருப்பு) என்பதை அறிவாயாக.

இருளாக மூடும் சுழுத்தியில் இராத்திரியில் இரவி சுடர் அற்றபொழுது
மருளாமல் இருளையும் பொருளையும் தெரிகின்ற வகைகொண்டு
சித்தாகுமே
பெருவாழ்வு மிக்கதானே தன்னிடத்தினில் பேராத பிரியம் அதனால்
அருகாத பிரியம் சுகத்தில் வரும் ஆதலால் ஆனந்தமாம் மைந்தனே. (114)

## தெளிவுரை:-

இருட்டாக இருக்கும் ஆழ்ந்த உறக்கத்தில் சூரியன் இல்லாத இரவு நேரத்தில், எதுவும் தோன்றாமல் மறைந்து இருக்கும் ஆனந்தத்தையும், அறியாமை என்ற காரிருளையும் எது அறிகின்றதோ? அதுவே சித் (அறிவு) எனப்படும்.

அதாவது, சூரிய ஒளி இல்லா விட்டாலும், ஆன்மாவானது தன் சுயப்பிரகாசத்தால் **காண்பவன், காட்சி, காணப்படும் பொருள்** என்ற திரிபுடிகளாகிய மூன்றையும் பிரகாசித்து அறிகின்றது. இவ்வாறு அறிகின்ற அறிவையே **‘சித்’** என்கின்றோம்.

அதுப்போன்றே, அனைவருக்கும் மற்ற அனைத்து பொருட்களைக் காட்டிலும், மற்ற உறவுகளைக் கட்டிலும் தன் மீதே அதிக பிரியம் இருக்கும்.

தன்னை அடிக்கடி அழகு படுத்திக் கொள்வதிலும், மற்றவர்கள் தன்னை கவனிக்கின்றார்களா? என்பதிலும்,

தன்னை எந்த வகையிலாவது வெளிப்படுத்திக்கொள்வதிலும் அதிக விருப்பமும், சந்தோசமும் இருக்கும்.

அதனால், அந்த பிரியம் ஆனது, சுகத்தையும், சந்தோசத்தையும் மட்டுமே விரும்புகின்றது, துயரத்தை விரும்புவதில்லை.

அப்படிப்பட்ட ஆனந்தம் வெளிப்பொருட்களில் இல்லை. அது தன்னிடமே இருக்கின்றது. ஆகவே, தன்னிடம் இயல்பாக வெளிப்படும் ஆனந்தம் என்பது **ஆத்மாவின் ஆனந்தம்** என்பதை அறிவாய் மகனே.

## குறிப்பு:–

இதை நான் எப்படி ஏற்பது? தாய் ஆகிய நான் என் மீது பிரியம் வைப்பதை விட, என் மகன் மீதுதான் அதிகம் பிரியம் வைத்திருக்கின்றேன். என் மகனுக்கு ஏதாவது ஒன்று என்றால், நான் துடித்து விடுவேன்.

இவ்வாறு சிலர் கூறுவார்கள். இது நடைமுறையில் காண்கின்ற அனுபவமும் கூட.

அதாவது, உடலினால் தன் மகன் தனக்கு வேறாக இருப்பினும், உள்ளத்தால் தனக்கு வேறாக, தன் மகனைப் பார்க்க முடியாத தாயின் அன்பானது, இங்கு அவனுடன் ஒன்று படுகின்றது. அதுவே, அவன் மீது பிரியமாக மாறுகின்றது.

இந்த பிரியமானது, தனது என்ற அபிமானத்தினால் மட்டுமே உண்டாகின்றது. இதுவே, மற்ற குழந்தைகளின்மீது இந்த அளவிற்குப் பிரியம் உண்டாவதில்லை. காரணம், அங்கு இருவரின் உள்ளங்களும் ஒன்று படுவதில்லை.

எப்பொழுது, தனது என்ற அபிமானம், சுய நலமாக உண்டாகாமல், பொது நலமாக உண்டாகின்றதோ? அப்பொழுதே, அனைத்து உள்ளங்களும் ஒன்றாக உணரப்பட்டு, அங்கும் ஆனந்தம் அறியப்படுகின்றது.

இதிலிருந்து, "**உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்**" என்ற திருமூலரின் பாடல் வரிகளினால், உள்ளத்தில் ஊடுறுவியிருக்கும் ஆத்மாவை உணரும்போது, ஆனந்தம் தானாகவே வெளிப்படுவதைக் காணலாம்.

ஆகவே, மனதினால் பேதமையைக் கற்பித்துக் கொண்டவன், அதே மனதை சாஸ்திர விசாரத்தால் ஆராயும் போது, அங்கு மனம் கரைந்து, பேதமை நீங்கி, ஒன்றேயான உள்ளம் (ஆத்மா) வெளிப்படுகின்றது.

இவ்வாறு, விருப்பமான உள்ளத்தால் அனைத்தும் ஒன்றுபடுவதால், ஒன்றேயான ஆத்மாவின் வெளிப்பாடுதான் '**ஆனந்தம்**' என்பதை அறிந்து, அதை தன்னிடத்திலேயே அனுபவிக்க முடிகின்றது.

அப்படிப்பட்ட, ஆனந்த அனுபவத்தை விருப்பமுடன் தாய் தன்மகனிடம் மட்டும் காணாமல், அனைத்து

மக்களிடமும் காட்டும்போது அங்கு ஆனந்தம் மட்டுமே மலருகின்றது.

அத்தகைய அன்புத் தாய்மைக்கு உதாரணமாக, **அன்னை தெரஸா** என்ற தாயை போற்றினால், அது ஒன்றுபட்ட உள்ளத்தின் வெளிப்பாடு என்று அறிய வேண்டும்.

அன்னபானாதி சுகசாதனமது ஆகையால் ஆர்க்கும் வெகு பிரியமாகும்
இன்னவாறு ஆன்மாவும் ஆனந்த சாதனம் எனக்கருதல் பொருளல்லவே
சொன்ன ஆன்மாவை ஒரு சுகசாதனங்களொடு சொல்லுவாயாகின் மகனே
உன்னது ஆனந்தம் வேறேது அனுபவிப்பது ஆர் உபய ஆன்மாவும்
உளவோ. (115)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! உண்ணுகின்ற உணவுகள், அருந்துகின்ற பானங்கள் போன்றவைகள் ஒருவனுக்கு சுகத்தையும், சந்தோசத்தையும் தருகின்றது. ஆதலால், இவைகள் அனைவருக்கும் மிகவும் பிரியமானது.

இதுப்போன்று, ஆன்மாவையும் இன்பத்தைத் தருகின்ற சாதனமாகக் கருதி விடக்கூடாது.

காரணம், ஆன்மாவை சுகத்தைக் கொடுக்கக்கூடிய சாதனமாக நீ கருதுவாயாகில், உனக்கு வேறாக ஆன்மா ஒன்று இருப்பதாகவும், அது உனக்கு சுகத்தை தருவதாகவும் ஆகிவிடும். அதனால், ஆன்மாவாகிய உன்னைத்தவிர அனுபவிப்பதற்கு மற்றொருவர் இருப்பதாகவும், ஆனந்தம் என்ற ஒரு அனுபவம் தனியாக இருப்பதாகவும் ஆகிவிடும்.

ஆகவே, இதில் அனுபவிப்பவன், அனுபவம் என்ற இருமை நிலைகள் உண்டாகி, பேதமையின் காரணமாக ஏற்றத்தாழ்வுகள் தோன்றி, துயரங்கள் வந்து, சுகம் மறைந்து விடும்.

ஆகவே, **அனுபவிப்பவன், அனுபவம், அனுபவிக்கப்படும் பொருள்** ஆகிய இந்த மூன்றும் ஒன்றே என்பதினை அறிந்து, ஆத்மா வேறு, ஆத்ம சுகம் வேறு, அனுபவிப்பவன் வேறு என்று கருதாமல், ஒன்றேயான அந்த ஆத்மாவும், அதன் ஆனந்தமும் **உன்னையன்றி வேறில்லை** என்பதை நீ உணர்வாயாக.

அதாவது, இனிப்பான சர்க்கரைக்கு தன்னிடம் உள்ள இயல்பான குணமாக இனிப்பை மட்டுமே கொண்டுள்ளது. அதனால், அது தன்னைத்தானே சுவைத்து, அந்த இனிப்பை உணர வேண்டிய அவசியம் உண்டாகாது அல்லவா?

அதுப்போல, ஆத்மாவாகிய நீ தன்னிடம் உள்ள இயல்பான குணமாகிய ஆனந்தத்தை தனக்கு வேறாக

அனுபவிக்க வேண்டிய அவசியம் உண்டாகாது. ஆகவே, ஆனந்தமே ஆத்மா, அந்த ஆத்மாவே நீ.

உனக்கு வேறாக அனுபவிக்கின்றவனும், உனக்கு வேறாக மற்றொரு ஆத்மாவும் உள்ளதா என்ன?

**குறிப்பு:–**

{தன் இயல்பு நிலை சொரூபமே ஆனந்தம் (ஆத்மா) என்பதை மறந்து விட்ட மனிதன், மற்றவர்களால் தவறாக கற்பிக்கப்பட்ட பல கருத்துக்களை, ஆழமான எண்ணங்களாக சேகரித்து, ஒட்டு மொத்த மனமாக மாற்றி, அதனை திடமாக சித்தத்தில் பதித்துக் கொண்டதினால், அதனிடமிருந்து விடுபட்டு வெளிவர முடியாமல், பல காலங்களாக அதிலேயே ஒன்றிவிட்டதின் விளைவு, ஒன்றேயான அவனது இயல்பான ஆனந்தத்தை (ஆத்மாவை), அவனால் அனுபவப்பட முடியாமல், தனக்கு வேறான அனுபவம் போன்று அதை வெளியே தேடுகின்றான்.}

விடயசுகம் அதில்வருதல் பிரியம் மாத்திரமாகும்
வெகு பிரியம் ஆன்மாவிலாம்
விடயசுகம் வருபிரியம் மாறிவரும் ஆன்மாவில்
வெகுபிரியம் மாறாது காண்
விடயசுகம் விடலுமாம் கொளலுமாம் ஆன்மாவை
விடுவதெவர் கொள்வதெவர் பார்
விடயசுக போகங்கள் விடும் அவனை அவனால்
விடப்படாது ஒருநாளுமே. (116)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! உலகத்தில் காணப்படுகின்ற விசயங்களினால் உண்டாகின்ற சுகம் காரணமாக, அதன்மீது அவனுக்கு விருப்பத்தை உண்டாக்குகின்றது. அந்த சுகம் அவனுக்கு தற்காலிகமாக மட்டுமே உண்டாகின்றது. காரணம், அவன் அந்த சுகத்தை அனுபவித்து முடித்ததும் அதன்மீது இருந்த விருப்பம் நீங்கி, மற்றொரு புதிய சுகத்தை மனம் நாடுகின்றது. ஆகவே, இதுப்போன்ற நிலையற்ற சுகங்களின் மீது வைக்கின்ற பிரியம் அற்பமானது.

அதுவே, ஆத்மாவாகிய தன் மீதுள்ள விருப்பமும், சுகமும் என்றும் நிலையானது, மிகவும் அலாதியானது.

பொதுவாக, விசய, சுகங்களிலுள்ள விருப்பம் மாறி, மாறி வரக்கூடியது. ஒன்றை விரும்பி, அதை அடைந்து, அனுபவித்து முடித்ததும், மற்றொன்றின்மீது புதிய விருப்பம் உண்டாகி விடுகின்றது.

அதனால், இதுப்போன்ற அற்பமான விசய, சுகங்கள் சலிப்படைந்ததும், மனம் போதும் என்று விடவும் செய்கின்றது. பிறகு மற்றொன்றை நாடும் பொழுது, அதை விரும்பவும் செய்கின்றது. ஆனால், ஆத்மாவில் உள்ள சுகமோ என்றும் நிலையானது. எப்பொழுதும் மாறாதது. அதுவே இயல்பானது.

அதனால், இதை விசய சுகங்கள் போன்று விடவும் முடியாது, விரும்பி அடையவும் முடியாது. காரணம், அந்த நிலையான ஆனந்தம் ஆத்மாவாகிய தன்னிடமே இருப்பதினால், அவனை, அவனால் ஒருநாளும் விட முடியாது.

வேகின்ற கோபங்களால் என்னை நான்கொன்று
விடுகிறேன் என்று சிலபேர்
சாகின்ற படியினால் தன்னையே தான்கொன்று
சாவன் எனல் சங்கையலவே
தேகம் தனைக் கொல்லும் அவனால் விடப்பட்ட
தேகம் அவன் அல்லன் மகனே
ஆகம் தனில் கோபம் இலதுதனை ஒருநாளும்
ஆன்மா வெறுப்பதிலையே. (117)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! சிலர் மிகவும் கடுமையான கோபத்துடன் என்னை நான் கொன்று விடுகிறேன் என்று தற்கொலை செய்து கொண்டு சாகின்றார்களே அது ஏன்?

மகனே! ஒருவன் தற்கொலை செய்துக்கொண்டு இறந்தான் எனில், அது அவனது உடல்மீது கொண்ட வெறுப்பினால் அதை விட்டானே தவிர, அவ்வாறு விட்ட தேகம் அவனல்ல.

ஆனந்த மயமான ஆத்மா எப்போது,ம் தன்னை வெறுக்க முடியாது. வெறுப்பெல்லாம் தன்னுடைய ஸ்தூல உடலின் மீது, சூக்கும மனதினால் வந்தது அல்லாது, வேறொன்றுமில்லை. ஆனால், அனைத்துமாக இருக்கின்ற ஆத்மா தன்னை ஒரு நாளும் வெறுப்பதில்லை.

தாகப்படும் பொருளிலும் மகன் பிரியமாம்
தனயனிலும் உடல் பிரியமாம்
ஆகத்திலும் பிரியம் இந்திரியமாம் கரணம்
அதனிலும் பிரியம் உயிராம்
ஏகப்பிராணனிலும் வெகுபிரியம் ஆன்மாவில்
இந்த ஆன்மா முக்கியம்
ஊகத்தினால் கௌணம் மித்தை கர்த்தா மூன்றும்
ஓரொன்றில் அதிகம் மகனே. (118)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! ஒருவன் பிரியமாகச் சம்பாதிக்கும் பொருட்களைக் காட்டிலும் தன்னுடைய மகன் மீது பிரியம் அதிகம் இருக்கும். தன் மகன் மீது இருக்கின்ற பிரியத்தைக் காட்டிலும் தன் உடல் மீது பிரியம் அதிகம் இருக்கும்.

தன் உடலினை விட, அதிக பிரியம் தன்னுடைய கண்கள், காதுகள், மூக்கு போன்ற புலன்களின்மீது காணப்படும்.

அவ்வாறே, புறப் புலன்களைக் காட்டிலும், அந்தக்கரணமான மனம், புத்தி போன்றவற்றில் பிரியம் இன்னும் அதிகமாம்.

அந்தக்கரணங்களைக் காட்டிலும், தன் உயிருக்கு ஆதாரமான பிராணன் மீது இன்னும் அதிகமான பிரியம் இருக்கும்.

இந்த பிராணனைக் காட்டிலும் ஆத்மா மீது வெகுவான பிரியம். இந்தக் காரணத்தினால்தான் ஆத்மா மட்டுமே மிக முக்கியமான பிரிய வஸ்து எனலாம்.

அடுத்து, யுக்திப் பூர்வமாகப் பார்த்தாலும் கௌணாத்மா, மித்தையாத்மா, மற்றும் கர்த்தாத்மா என மூன்றும், ஒன்றைக் காட்டிலும் ஒன்றின்மீது அதிகம் பிரியம் வைக்கப்படுகின்றது.

**குறிப்பு:–**

(இவ்வாறு, மூன்று பெயர்களால் பிரியமாக அழைக்கப்படுகின்ற ஆத்மாவின் விளக்கம் அடுத்த பாடல்களின் வாயிலாக அறியலாம்.)

கெடலான பொழுது இவன் காணிக்கு மகனான கௌண ஆன்மா முக்கியம்
விடலாத உடலம்பரிக்கும் நாள் உடலான மித்தை ஆன்மா முக்கியம்
திடமான நன்மை கதி வேண்டினால் கர்த்தனாம் சீவ ஆன்மா முக்கியம்
சடம் மாயும் முத்தியினில் ஞான ஆன்மாவான தானே மகாமுக்கியம். (119)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! ஒருவன் தன் உடல் கெட்டு மரண காலத்தை நெருங்கும் பொழுது, தன்னுடைய சொத்துக்களுக்கு தன் மகனை வாரிசாக நியமித்து, கௌண ஆத்மாவாகிய தன் மகனை அருகில் வைத்துக் கொள்ள விரும்புகின்றான்.

அந்தச் சூழ்நிலையில் அவனுக்கு அதுவே முக்கியமாக தோன்றுகிறது.

ஆனால், அதுவே அவன் வாழும் காலத்தில் தன் உடலை மிகவும் நேசிப்பதினால், தன் உடலின் சுக போகத்திற்காக மாது, மது, ஆட்டம், பாட்டம் கொண்டாட்டம் என்று மற்ற போகங்களை மிகவும் விரும்புகின்றான்.

அவைகளை அவன் அனுபவிக்க விரும்பி, மற்ற உறவுகளைக் காட்டிலும், அவனது உடல் பற்றே மிகுந்து, மித்தை ஆத்மாவான உடலை மிகவும் நேசிக்கின்றான்.

அதுவே, திடமான நன்மைகள் உண்டாக வேண்டுமானால், அதற்கு மோக்ஷத்தைக் கருதி, அதனை அறியக்கூடிய தன் சீவ ஆத்மா விரும்பப்பட்டு, அதனை விசாரிக்கத் தொடங்குகின்றான்.

இவ்வாறு, விசாரணையின் மூலமாக அடைந்த ஞானத்தில், ஜடப் பொருட்களான தன்னுடைய இந்த உடல், இந்த உலகம் நிலையற்றது என்றும், முக்தியினால் கிடைத்த நிலையான ஆனந்தம் உடைய, ஞான ஆத்மாவாகிய தானே மிகவும் நேசிக்கத்தக்கவன் என்பதை உணருகின்றான்.

புலியும் அனுகூலம் எனில் இட்டமாம் பகைசெயில்
புதல்வன் எனினும் வெறுப்பாம்
உலகில் இருவகையும் அல்லாத புல்லாதியில்
உதாசீனமாம் ஆதலால்
மலினம் அறு சின்மயன் பலவகையும் இப்படி
மகிழ்ச்சியில் விருப்பம் இகழான்
அலகில் ஆனந்த வடிவாகும் உன் சொரூபத்தை
ஆராய்ந்துபார் மகனே. (120)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! ஒருவர் புலியை பழக்கி, அதனை வைத்து பிழைப்பு நடத்துகிறார். அப்படி அந்த புலியின் மூலமாக

சம்பாதிக்கும் அவருக்கு அஞ்சத்தக்க புலி கூட விரும்பத்தக்க ஒன்றாக மாறுகின்றது.

அதுவே, தனக்கு விருப்பமான மகன் கூட தனக்கு பகையாகும்போது, அவன் வெறுக்கத்தக்க ஒன்றாக மாறுகின்றான்.

அதுப்போல, சாதாரணமாக உதாசீனப்படுத்துகின்ற புல், பூண்டு போன்ற தாவரங்கள் உணவாகப் பயன்படும் பொழுது விரும்பப்படுகின்றன.

அவையே பாதையில் நடந்து செல்லும்போது இடையூறு செய்தால், அவற்றின்மீது வெறுப்பு வருகின்றது. அதாவது, ஒரு சமயத்தில் விரும்பப்படுகின்ற அந்த ஒன்றே, மற்றொரு சமயத்தில் வெறுக்கப்படுகின்றது.

ஆனால், பரிசுத்த சின்மய சொரூபமான ஆத்மா தன் ஆனந்தத்தை பல வஸ்துகளில் வெளிப்படுத்திக் கொண்டு, தன் இயல்பான ஆனந்தத்தை எப்பொழுதும் விட்டு விலகாமல் இருக்கின்றது.

ஆகவே நீங்காத ஆனந்த சொரூபியான உன் ஆத்மாவை ஆராய்ந்து பார்த்து அறிவாயாக.

மானம் சிறந்த குருநாதனே ஆனந்த
வகைகள் எத்தனை என்னிலோ
ஞானம் திகழ்ந்த பிரமானந்தம் வாசனா
னந்தம் விடயானந்தம் என்று
ஆனந்தம் மூன்று விதம் எட்டு வகை என்பர் சிலர்
அவ்வைந்தும் இதில் அடக்கம்
ஆனந்த வகை சொலக்கேள் மைந்தனே எட்டும்
இஃது இன்னது இன்னது எனவே. (121)

## தெளிவுரை:-

ஐயனே! ஆத்மா ஆனந்த சொரூபம் என்று கூறினீர்கள். அப்படிப்பட்ட ஆனந்தங்கள் எத்தனை விதமாக இருக்கும் என்பதை அருள்வீராக.

மகனே! ஆனந்தம் என்பது, **பிரம்மானந்தம், வாசனானந்தம், விசயானந்தம்** என்று மூன்று வகைப்படும்.

இதனை எட்டு விதமான ஆனந்தங்களாக சிலர் கூறுவர். அவ்வாறு, கூறப்பட்ட எட்டு விதமான ஆனந்தங்களில், ஐந்து ஆனந்தங்கள் இந்த மூன்று ஆனந்தங்களினுள் அடக்கம்.

ஆக, அந்த எட்டு விதமான ஆனந்தங்கள் இன்னது, இன்னது என்று கூறுகின்றேன் கேட்பாயாக.

போகத்தில் வருசுகம் விடயசுகம் நித்திரைப்போது உளது பிரமசுகமாம்
மோகத்து அனந்தலில் சுகம் வாசனைச்சுகம் முழுப்பிரியம் ஆன்மசுகமாம்
யோகத்தில் உளது முக்கியசுகம் உதாசீனமுற்ற சுகம் நிசசுகமதாம்
ஏகத்தை நோக்கல் அத்துவிதசுகம் வாக்கியம் எழுந்தசுகம் ஞானசுகமே.
(122)

## தெளிவுரை:-

மகனே! உலக விவகாரங்களில் போகத்தில் ஈடுபடுவதினால் கிடைக்கின்ற சுகம், **விசய சுகம்** எனலாம். அதாவது, ஊர், உலக விசயங்களை ஆனந்தமாக பேசுகின்ற சுகத்தை "**விசய சுகம்**" எனப்படுகின்றது.

ஆழ்ந்த உறக்கத்தில் தன்னையும், தன்னை சார்ந்த உறவுகளையும், தன் சொத்து, சுகங்களையும், இந்த உலகத்தையும் விடுத்து, எண்ணங்களற்ற நிலையில், அமைதியாக தன் இருப்பையும், ஆனந்தத்தையும் உணர்வது "**பிரம்ம சுகம்**" எனலாம்.

அதாவது, பிரம்மத்தை ஆத்மார்த்தமாக அனுபவிக்கும் பொழுது உண்டாகின்ற ஒரு உன்னதமான, சாந்தியான, சந்தோசமான, நிம்மதியான சுகம் இந்த ஆழ்ந்த உறக்கத்தில் தற்காலிகமாக வந்து போகின்றது.

ஆனால், உறக்கத்தில் உண்டாகின்ற சுகத்தில், அறிவு பிரகாசிக்காத காரணத்தால், அங்கு அறியாமை மட்டுமே

இருக்கின்றது. ஆகவே, தூக்கத்தை முழுமையான ஆத்ம சுகமாக நினைத்துக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

அடுத்து, மனதில் பதிக்கப்பட்ட வாசனைகளினால், மனம் ஈர்க்கப்பட்டு, அதனை நடைமுறைக்கு கொண்டுவந்து அனுபவிக்கப்படுகின்ற சுகம் "**வாசனை சுகம்**" எனலாம்.

உதாரணம், தான் மருத்துவர் ஆகவேண்டும் என்ற ஆசை மனதில் ஆழத்தில் இருந்தும், சந்தர்ப சூழ்நிலையின் காரணமாக மருத்துவர் ஆக முடியாமல் வழக்கறிஞர் ஆகி, வருத்தத்துடன் தொழில் செய்து வரும்பொழுது, தன் மகனை அதற்காகப் படிக்க வைத்து, அவனை அந்த மருத்துவத் தொழிலுக்கு கொண்டு வருவதால் உண்டாகும் சுகம், **வாசனை சுகம்** எனப்படுகின்றது.

தன் சொரூபமான ஆத்மாவை இன்னது என்று அறிந்துக் கொள்ளா விட்டாலும், விழிப்பு நிலையில் அதன் இருப்பை "**நான் இருக்கின்றேன்**" என்று உணர்ந்துக் கொண்டு, அனைத்தையும் அறிகின்ற அறிவு பிரகாசித்துக் கொண்டு, தன் மீதே தனக்கு உண்டாகின்ற முழுப்பிரியம் "**ஆத்ம சுகம்**" எனலாம்.

இங்கு தன் மீதுள்ள பிரியம் என்பதை தன் உடலின் மீது வைக்கின்ற பிரியமாகக் கருதி விடக்கூடாது. அது தன்னை ஆத்மா என்று உணர்கின்ற **ஆத்ம சுகம்** என்பதை அறிய வேண்டும்.

யோகத்தில் ஈடுபடுகின்ற சாதகன், தினசரி யோகப் பயிற்சியினால், அவனது மனம் ஒரு நிலைப்பட்டு, அதில் அமைதி உண்டாகி, அதனால் சுகம் உண்டாகின்றது. இதை "**முக்கிய சுகம்**" எனலாம்.

விருப்பு, வெறுப்பு அற்று, அனைத்து உயிர்களையும் தன் உயிர்போல பாவித்து, அவைகள் மீது அன்பு செலுத்துகின்ற சுகம் இருக்கின்றதே, அதையே "**நிஜ சுகம்**" எனப்படும்.

இந்த நிஜமான சுகத்தை இயல்பாக அனுபவிக் கின்றவன், எளிதில் ஆத்ம சுகத்தை உணர்வான்.

ஒன்றேயான பரமாத்வைத் தவிர, மற்ற அனைத்து ஜடமான அனாத்மாக்களையும் நீக்கி, தனக்கு வேறாக இந்த உடலும், உறவுகளும், உலகமும் இருக்கின்றது என்ற இருமைகளை கடந்து விட்டவன் அடைகின்ற சுகம் "**அத்வைத சுகம்**" எனப்படும்.

உபநிஷதங்களின் மகாவாக்கிய விசாரத்தை மேற் கொண்டு, தத்துவங்களை அறிந்து, அதனால், பூரணத் துவத்தை உணர்ந்து, தன்னை அறிந்துக் கொண்ட சுகம் "**ஞான சுகம்**" எனப்படும்.

இதுபோன்று எட்டுவிதமான சுகங்களை அடைந்து அனுபவித்து வர முடியும்.

இவ்வாறு உரைசெயும் சுகபேதங்களின்
இயல்பாம் அவைசொல மகனே கேள்
ஒவ்வா நனவினில் உழல்வான் இடர் கெட
உறங்கும் சயனமது உறும் நேரம்
செவ்வா மனம் அகமுகமாகும் அதில் ஒளிர்
சித்தின் சுகநிழல் சேரும் காண்
அவ்வாறு இவன் உளம் மகிழ்வாம் அனுபவம்
அதுதான் விடயசுகானந்தம். (123)

## தெளிவுரை:-

மகனே! இதுப்போன்ற சுகபேதங்களை பற்றி மேலும் விபரமாகக் கூறுகின்றேன். கவனமாகக் கேள்.

ஜீவன் விழிப்பு நிலை அனுபவமான நனவில் பலவிதமான உலக விவகாரங்களில் பல்வேறு விசயங்களில் ஈடுபட்டு, அடைந்த சுக, துக்கங்களை மனம் என்ற அந்தக்கரணமான சித்தத்தில் பதித்துக் கொண்டு, தன் ஸ்தூல உடல் அடைந்த துன்பத்தின் மிகுதியால் உண்டான, சோர்வின் காரணமாக உறங்கும் நேரத்தில், ஸ்தூல உடலை மறந்து, சூக்ஷும மனம் வெளிப்புறத்தில் இருந்து உள்முகமாகத் திரும்புகின்றது.

அவ்வாறு உள்முகமாக திரும்பிய மனம், விழிப்பு நிலையில் சேர்த்து வைத்த சுகானுபவங்களை, நிழல் அனுபவங்களாக கற்பித்துக்கொண்டு, கனவுகளைக்கண்டு

உள்ளம் மகிழ்கின்றது. இவ்வாறு உறக்கத்தில் உண்டாகின்ற சுகமும் "**விசய சுகம்**" எனலாம்.

ஈனந்தருசுக விடயம் திரிபுடி இடராம் என மனம் அசையாமல்
சேனம் தனது குலாயம் தனில் விழு செயல்போல் நித்திரை செறி சீவன்
தான் அந்தமில் பரனுடன் ஒன்றுவன் ஒரு தனையல்லது பிற நினையாமல்
ஆனந்த மயனுமாவன் சுகம் மிகும் அதுதான் உயர் பிரமானந்தம். (124)

## தெளிவுரை:-

இழிவான விசய சுகத்தைத் தருகின்ற அநித்யமான விசயங்களினால், அனுபவிப்பவன், அனுபவம், அனுபவிக் கப்படுகின்ற பொருள் என்ற மூன்றும் உள்ள திரிபுடியாகிய நிலைகள் துன்பத்தை உண்டாக்கி, ஒருவனது கருவி, கரணங்களை ஒடுக்கி, சோர்வினால் அவனை உறக்கத்திற்கு அழைத்துச் செல்கின்றது.

இது எப்படியெனில், ஆகாயத்தில் இரையைத் தேடி இங்கும், அங்கும் பறந்து, அலைந்து திரிந்த கருடன் சோர்வின் மிகுதியால் தான் கட்டி வைத்த தன் இருப்பிடமான கூட்டில் சென்று தங்குகின்ற செயல் போன்று, ஜீவனும் நனவில் விசயங்களைத் தேடி இங்கும், அங்கும் அலைந்து, இறுதியில் களைப்பின் மிகுதியால் தூக்கத்திற்குச் செல்கின்றது.

இவ்வாறு, தூக்கத்திற்குச் சென்ற ஜீவன் (மனம்), ஆழ்ந்து உறங்கும்போது, எந்த விதமான புற அனுபவங்களும், அவஸ்தைகளும் இன்றி, தன்னுள் ஒடுங்கித் தானாய் இருக்கின்றது.

இந்த நிலையில் ஜீவனாகிய தன்னைத் தவிர, இந்த பரு உடல், உடலைச் சார்ந்த உறவுகள், சேர்த்து வைத்த சொத்துக்கள், இந்த உலகம் மற்றும் அதன் விவகாரங்கள் என்று எதுவும் இல்லாமல், சுயமாய் இருக்கின்ற சுகானுபவத்தை மிக உயர்ந்த “**பிரம்ம சுகம்**” எனப்படுகின்றது.

தூங்கும் சுகமது பிரமச்சுகம் எனல்
சுருதிப் பொருள் விழி துயில்வோர்கள்
தாங்கும் மலரணை நன்றாகச்சிலர்
சம்பாதிப்பது தான் ஊகம்
தீங்கும் நன்மையும் ஆண்பெண் முறைமையும்
தெரியாது அமளிசெய் பொழுதேபோல்
ஆங்கு உள் வெளிகளும் அறியா அனுபவம்
அதனால் அது பிரமானந்தம். (125)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! தூங்கும் சுகம் இருக்கின்றதே அதை பிரம்ம சுகம் என்று கூறுவதற்கு வேதப் பிரமாணம் கூறுகின்றேன் கேள். ஆழ்ந்த உறக்கத்தை பிரம்ம சுகம் என்று அதர்வண வேதத்தில் கைவல்ய உபநிஷதம் உறுதிப்படுத்துகின்றது.

அத்தகைய தூக்கத்தில் சுகம் இருப்பதினால்தான் தூங்குபவனும் தனக்குத் தேவையான அந்த சுகத்தை அடைவதற்காக மெத்தை, தலையணை போன்ற சொகுசு தரக்கூடிய படுக்கைகளை தேடிக்கொண்டு ஆனந்தமாகத் தூங்குகின்றான். இதுவே, தூக்கத்தில் ஒரு சுகம் உண்டு என்பதற்கு சான்று எனலாம்.

மேலும், ஆழ்ந்த உறக்கத்தில், நல்லது, கெட்டது அறியாமலும், தான் ஆணா, பெண்ணா என்ற பாலின பேதம் கூட தெரியாமலும், இவன் உறங்கும் பொழுது, மற்றவர்கள் செய்கின்ற பல்வேறு காரியங்களின் அமளியைக் கூட கண்டு கொள்ளாமலும், அது, இரவுப் பொழுதா, பகல் பொழுதா என்ற காலம் தெரியாமலும், உள்ளே, வெளியே என்ற தேசம் (இடம்) தெரியாமலும், உள்ள அறியாமை நிலை அனுபவத்தை "**பிரம்ம சுகம்**" என்று அறிய வேண்டும்.

## குறிப்பு:—

பிரம்ம சுகம் உண்டாகின்ற ஆழ்ந்த உறக்கத்தையே ஆத்மாவின் முழுமையான சுகம் என்று தவறாகக் கருதிவிடக் கூடாது.

ஆழ்ந்த உறக்கத்தில் ஜீவன் (மனம்) தன்னுடைய கருவி, கரணங்கள் எதுவும் செயல்படாத அறியாமையில் மூழ்கி இருக்கின்றது.

அதாவது, மாயையுடன் சம்பந்தப்பட்டு இருக்கின்றது. அதனால், கர்ம பலனை உண்டாக்குகின்ற விழிப்பு நிலை அனுபவத்திற்கு மீண்டும் அது வருகின்றது.

அதுவே, ஜீவன், பிரம்மத்துடன் முழுமையாக இலயமடைந்து இருந்தால், அங்கு அறியாமை இருக்காது.

ஆனால், ஆழ்ந்த உறக்கத்தில் தன்னை அறிய முடியாத அறியாமை இருக்கின்றது. அங்கு அறிவு பிரகாசிப்பது கிடையாது.

ஜீவன் ஆழ்ந்து உறங்கி வெளி முகப்படும் பொழுது, ஜீவன் முத்த நிலையில் இருக்க வேண்டும்.

ஆனால், அது தன் இயல்புக்கு விரோதமாகவே உறக்கத்தில் இருந்து விழித்தவுடன் பல்வேறு எண்ணங்களால் ஆட்கொள்ளப்படுகின்றது.

அதனால், ஆழ்ந்த உறக்கத்தில் தற்காலிகமாக உண்டாகின்ற ஆனந்தத்தில் மாயா சம்பந்தம் இருக்கின்றது.

ஜீவ, பிரம்ம இலயத்தில் உண்டாகின்ற நிலையான ஆனந்தத்தில் மாயா சம்பந்தம் இல்லை.

இந்த பிரம்ம சுகத்தை சிறிய உதாரணத்தின் வாயிலாக அறிந்து கொள்ள முயற்சிக்கலாம்.

ஒரு சிறிய எறும்பு சக்கரை வைத்திருக்கும் மூட்டையின் மீது ஏறி, அதன் உடல் உருவத்திற்கு முன்னால், மலைப் போன்று கொட்டி வைத்திருக்கும் சக்கரை மூட்டையின் உள்ளே சென்று, ஒரே ஒரு சர்க்கரை துகள்மீது அமர்ந்து, அதன் ஒரு முனையை தன் நாவால் நக்கி ருஷித்துப் பார்த்தால், எப்படி அந்த சர்க்கரையில் எந்த ஒரு மாற்றமும் நிகழாது.

மேலும், அந்த எறும்புக்கும், அந்த மொத்த சர்க்கரையின் முழுமையான திருப்தியை அடைய முடியாமல் இருக்குமோ? அதுப்போன்று, நம்முடைய ஆழ்ந்த உறக்கத்தில் நாம் அனுபவிக்கின்ற பிரம்ம சுகத்தை பரமா(ஆ)ன்மாவின் முழுமையான சுகத்தில், துரும்பிலும், துரும்பு என்றே அறிய வேண்டும்.

உதவும் புவியினில் ஒருவன் அனுபவம் ஒருவன் மனதினில் உதியாதே
மதியும் கெடுகிற துயில் கொண்டு ஆனந்த மயனன்றோ சுகமுறுகின்றான்
இது விஞ்ஞான மயனாம் சிந்தையில் நினைவாய் வந்திடல் அழகன்றே
சுதை விண்ணோர்புகழ் குருவே நீரிது சொல்வீர் சகலமும் வல்லீரே. (126)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! விண்ணோர்களான தேவர்கள் போற்றுகின்ற குருநாதனே, உயிர்கள் வாழ்வதற்கு உதவுகின்ற இந்த பூ உலகத்தில் ஒருவன் அடைகின்ற அனுபவம் போன்று, மற்றொருவனுக்கு அனுபவம் மனதில் உண்டாகாது.

அப்படியிருக்க, உறங்கச் செல்லும் அனைவருக்கும் பஞ்சகோசங்களில் மனோமய கோசமான மனமும், விஞ்ஞானமய கோசமான புத்தியும், உறக்கத்தில் இல்லாமல் போய், ஆனந்தமய கோசமான ஆனந்தத்தை மட்டும் ஆழ்ந்த உறக்கத்தில் அனுபவிக்கப்படுகின்றது என்றீர்கள். அப்படியானால், இந்த ஆனந்த அனுபவம் உறக்கத்தில் உண்டாகும் பொழுது, அங்கு மனமும், புத்தியும் இல்லை.

அப்படியிருக்க, உறக்கத்தில் ஏற்பட்ட ஆனந்தத்தை விழிப்பு நிலையில் உள்ள விஞ்ஞானமய கோசமான புத்தியில் எப்படி அறியமுடியும்?

அவ்வாறு அறிவது என்பது, சாத்தியம் அல்லவே? ஆகவே, இதற்கு, தாங்கள் அருள்கூர்ந்து விளக்கம் அளிக்க வேண்டும்.

நெய்யும் வெண்ணையும் இருபேர்களும் அறி
நினைவில் பிரிவு அறிவினில் இல்லை
செய்யும் நனவினில் இறுகும் மனதொடு
சேரும் சின்மய விஞ்ஞானன்
நையும் துயர்மனம் நழுவும் பொழுது உணர்
ஞானச்சுகம் உணும் ஆனந்தன்
பெய்யும் துளிகளும் நீரும் குளமொடு
பாகும் போலிவர் பிறிவன்றே. (127)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! நெய் என்றும், வெண்ணெய் என்றும் இரண்டு பெயர்களில் அழைக்கப்படுவதற்குக் காரணம், மனதின் நினைவில் ஏற்பட்ட பிரிவுகள் ஆகும்.

அதுவே, அதை அறிவால் விசாரித்து அறியப்படும் பொழுது, உருக்கிய வெண்ணையே நெய் ஆகின்றது என்பதிலிருந்து, இரண்டும் ஒன்றே என்றும், அதில் பிரிவுகள் ஏதும் இல்லை என்றும் அறிய முடிகின்றது.

அதுப்போன்று, விழிப்பு நிலை அனுபவத்தில், பல்வேறு எண்ணங்களினால் செயல் செய்யத் தூண்டுகின்ற, அந்தக்கரண விருத்தியான மனோமய கோசமான மனம், அறியாமையின் அடர்த்தி காரணமாக, விஞ்ஞானமய கோசமான புத்தியுடன் சேர்ந்து, விபரீத புத்தியாக மாறுகின்ற காரணத்தினால், ஆனந்தமய கோசத்தின் ஆனந்தத்தை அனுபவிக்க முடியாமல் நழுவுகின்றது.

அதுவே, மனம், புத்தி இரண்டும் ஆழ்ந்த உறக்கத்தில் பிரிவுகள் இன்றி ஒன்றாக இலயமாகும்போது, இந்த வேறுபாடுகள் நீங்கி, ஆத்மாவின் இயல்பான ஆனந்தம் மட்டும் வெளிப்படுவதை உணர முடிகின்றது.

அதுப்போன்று, பெய்கின்ற மழைத் துளிகளும், அதனால், உண்டான மழைநீரும், அவ்வாறே, வெல்லமும், அதனால் உண்டான பாகும் என இந்த இருமைகள், மனதின் அறியாமையின் காரணமாக, வேறு படுத்திக் கொண்டு, பிரிவுகளாகத் தெரிகின்றது. உண்மையில் இவைகள் பிரிவுகள் அல்ல.

பல்வேறு எண்ணங்களினால் உண்டான அறியாமையின் காரணமாக மனம் கற்பித்துக் கொண்ட பிரிவுகளே மனம், புத்தி, என்று பிரிந்து இருப்பது போன்று காணப்படுகின்றது.

உண்மையில், ஒன்றேயான ஆத்மாவில் (சித்தில்) எந்த பிரிவுகளும் இல்லை.

ஒன்றாகிய பிரமானந்தச் சுகம்
ஒழிவான் ஏன் வெளி வருவானேன்
என்றான் முன் செய்த கருமம் வெளியினில்
இழுக்கும் சுழுத்தி விட்டெழுந்தோனும்
நன்றாயின சுகம் அகலான் வெளியிலும்
நடவான் மறதியும் பெறமாட்டான்
அன்று ஆம் என இருந்து உறங்கும் சிலகணம்
அதுவே வாதனை ஆநந்தம். (128)

## தெளிவுரை:-

ஐயனே! ஆழ்ந்த உறக்க நிலையில் மனம், புத்தி என்ற அனைத்தும் ஒன்றாகி, அங்கு கிடைத்த அந்த பிரம்மானந்த சுகம், விழிப்பு நிலையில் இல்லாமல் போவதும், பிறகு, உறக்க நிலையில் வெளி வருவதும் ஏன்?

மகனே! அனைத்தும் ஒன்றாகிய பிரம்மானந்த சுகம் போவதும், வெளி வருவதும் ஏன் என்றால், இந்த ஜீவன் முன் பல சென்மங்களில் செய்த கருமங்களினால், மனதின் சேர்த்த வாசனைகளின் காரணமாக, அவனை சுழுத்தி அவஸ்தையான ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து வெளியினில் இழுக்கும்.

அவ்வாறு, ஆழ்ந்த உறக்க நிலையிலிருந்து, விழிப்பு நிலைக்கு வந்தவனும், சிறிது நேரம் தான் நன்றாகத் தூங்கிய, அந்த ஆனந்த அனுபவித்தை, நிம்மதியான சுகத்தை விட்டு விலகவும் மனமின்றி, அதை மறக்கவும் முடியாமல், அந்த

சுகத்தையே சில நிமிடங்கள் நினைத்து ஆனந்தப்படுவது "**வாசனானந்தம்**" அல்லது "**வாசனை சுகம்**" எனப்படும்.

அந்தக் கணம் உடல் அகம் என்று இடர்களில்
அலைந்தே சுகந்தனை மறந்தேபோம்
முந்தைச் செயும் வினை சுகதுக்கம் தரும்
மோனந்தரு நடு வடிவே காண்
எந்தப் புருடனும் ஒருசிந்தையும் அற
இருந்தேன் எனல் அனுபவமாகும்
இந்தப்படி தனு உதாசீனச்சுகம்
இதுவே நிசம் எனும் ஆனந்தம். (129)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! மேலும், உறக்கத்திலிருந்து, விழிப்பு நிலைக்கு வந்த சில நொடிகளில் உண்டான வாசனானந்தம் என்ற வாசனை சுகம், தொடர்ந்து நீடிக்க முடியாமல், விழிப்பு நிலையில் இந்த உடல், மனம் என்ற இடர்களில் சிக்கிய ஜீவன், தான் அடைந்த சுகத்தை மறந்து, மீண்டும் இந்த உலக விவகாரங்களில், முன் செய்த வினைகளின் காரணமாக ஈடுபடும்.

இவ்வாறு, சுக, துக்கங்களைத் தருகின்ற கருமங்களில், வாசனைகளின் காரணமாக ஈடுபட்டாலும், அதில் சில நல்ல வாசனைகள் வெளிப்பட்டு, சுகம், துக்கம், மற்றும் விருப்பு,

வெறுப்பு போன்ற இருமைகள் இன்றி, நடுவில் நின்று, எந்த ஒரு சிந்தனையும் இல்லாமல் இருக்கின்ற நிர்விகல்ப நிலை அவனுக்கு (புருஷனுக்கு) அனுபவமாகும்.

இந்த நிலையில் தன்னுடைய உடல் (தனு), மற்ற உடல்கள் என்ற பேதமை இல்லாமல், அதை உதாசீனமாக மறந்து, அனைத்து உடல்களிலும் உள்ள ஒன்றேயான அந்தர்யாமியை தன் உயிர் போல பாவித்து, அவைகள்மீது அன்பு செலுத்துகின்ற சுகம் இருக்கின்றதே, அதையே "**நிஜ சுகம்**" அல்லது "**நிஜ ஆனந்தம்**" எனப்படும்.

நிசமானது முக்கியமோ குடத்துள நீரன்றே வெளி ஈரம்தான்
வசமா அகங்கரம் மறைந்தால் நிசமது படிந்தால் முக்கிய வகையாகும்
திசையார் திரிசயம் அறியாதே துயில் செறியாதே உடல் தறிபோலே
அசையாதே மதி சமமாகிய நிலையதுதான் முக்கிய ஆனந்தம். (130)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! நிஜ ஆனந்தம் மற்றும் முக்கிய ஆனந்தம் என்பது என்னவெனில், ஒரு குடத்தில் வைக்கப்பட்டுள்ள நீர் மிகவும் குளிர்ச்சியாக இருக்கின்றது. அந்த குடத்தின் வெளிப்புறத்தை தொட்டுப் பார்த்தால், குளிர்ச்சி தெரிகின்றது. அந்த மென்மையான நீரின் குளிர்ச்சி, திடமான குடத்தின் மீது தற்காலிகமாக ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. அதாவது, நீரின் குளிர்ச்சி குடத்தில் காணப்படுகின்றது.

அதுப்போன்று, மென்மையான ஆத்மாவின் "**நான்**" என்ற கர்த்ருத்துவ அஹங்காரம், ஜீவ அஹங்காரமாக மாறி, திடமான உடலின் மீது "**நான்**" என்று பலமாக ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. அந்த ஜீவ அஹங்காரம் மறைந்து, விருப்பு, வெறுப்பு இன்றி, அனைத்து உயிர்களையும் தன் உயிர்போல பாவித்து, அவைகள் மீது அன்பு செலுத்துகின்ற சுகம் இருக்கின்றதே அதையே "**நிஜ சுகம்**" அல்லது "**நிஜானந்தம்**" எனப்படும்.

அதுவே, திடமான உடல் பற்றின் காரணமாக, யோகத்தில் ஈடுபடுகின்ற சாதகன், திசை தெரியாமல், விசயங்கள் அறியாமல், உறக்கம் பிடிக்காமல், உடலை கட்டைப் போன்று வைத்துக்கொண்டு, மனதை சமமாக ஒரு நிலைப்படுத்தி, அதனால் அமைதி ஏற்பட்டு, உடல் மீது ஏற்றி வைக்கப்பட்ட ஜீவ அஹங்காரம் பணிந்தால் உண்டாவது "**முக்கியானந்தம்**" அல்லது "**முக்கிய சுகம்**" எனப்படும்.

மனுடன் மனுட கந்தருவன் தேவ நன்மாகந்தருவன் ஒண்பிதிரோடே
பனும் ஆஜானர்கள் கருமத் தேவர்கள் பகர் முக்கியர் இந்திரன் ஆசான்
கனமார் பிரஜாபதியென் விராட்டு பொன் கர்ப்பப் பிரமன் என்று இன்னோர்கள்
பின ஆனந்தங்கள் நுரையாம் பிரளய வெள்ளக் கடல் பிரமானந்தம். (131)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! ஆனந்தம் என்பது ஒன்றேயான பரப் பிரம்மம் என்பதினால், அதில் வேறுபாடுகள் கிடையாது. ஆனால், அது பிரதிபிம்பிக்கின்ற உடல் என்ற உபாதிகளைப் பொருத்து, வித்தியாசப்படுவது போன்று காணப்படுகின்றது.

அந்தவகையில் மனிதன், மனித கந்தர்வன், தேவ கந்தர்வன், பிதிர், ஆஜானதேவன், கருமத்தேவன், முக்கிய தேவர்கள், இந்திரன், பிரகஸ்பதி, பிரஜாபதி, விராட் மற்றும் ஹிரணியகர்பன் என்று அழைக்கப்படுகின்ற நான்முக பிரம்மா ஆகிய இவர்களுடைய ஆனந்தம், மனிதனில் தொடங்கி பிரம்மா வரை ஒருவருக்கு, ஒருவர் நூறு மடங்கு அதிகமாக அனுபவிக்கப்படுகின்றது.

ஒன்றேயான கடலின் நீர் எவ்வாறு நுரை, குமிழி, அலை என்று வேறுபட்டு இருப்பது போன்றும், அதுவே, அதே கடல் நீர் பிரளயத்தில் வருகின்ற வெள்ளம் போன்று அளவிட முடியாத அளவிற்கு பெரிதாக இருக்குமோ? அதுப்போன்று, இந்த பிரம்மானந்தம் மனிதனில் தொடங்கி

பிரம்மா வரை நூறு மடங்கு உயர்ந்துக் கொண்டே வந்து, இறுதியில் பிரம்மா அனுபவிக்கின்ற ஆனந்தம் மற்றவர்கள் அனுபவிப்பதைவிட அளவிட முடியாத அளவிற்கு பெரிதாக இருக்கும் என்பதை அறிய வேண்டும்.

மனித தேகத்தில் அனுபவிக்கின்ற ஆனந்தம் அந்த உடலின் (உபாதியின்) எல்லைக்கு உட்பட்ட மிக மிகச் சிறிய ஆனந்தம் என்பது மட்டுமே உண்மை ஆகும்.

**மேற்கண்ட பெயர்களுக்கு உண்டான விளக்கங்கள்:—**

மனிதரில் சிறந்தவன் சார்வபௌமன் எனப்படுவான். இவன் ஒருவனுக்கும் பணியாது உலகை ஆள்கின்ற பேரரசன் என்ற ஒரே சக்ரவர்த்தி. இவன் அனுபவிக்கும் சுகத்தைவிட 100 மடங்கு அதிகமானது மனுட கந்தர்வனின் ஆனந்தம். இவன் இந்த மனிதினாக இருந்து, செய்த புண்ணியத்தால் கந்தர்வனாக ஆனவன். தேவ கந்தர்வன் என்பவன் பூர்வ கல்பத்தில் செய்த புண்ணியத்தால இந்த கல்பம் தொடங்கும் காலத்திலேயே கந்தர்வன் ஆனவன்.

பிதிர் என்ற அக்னிஷ்வாத்தா என்ற பித்ருக்கள் ஆனவர்கள் கல்ப ஆதியிலேயே தோன்றிய தேவர்களான இவர்களை ஆஜானதேவர்கள் எனப்படுகின்றது. கருமத் தேவர்கள் பல யாகங்கள் செய்து உயர்ந்த நிலை அடைந்து, ஆஜான தேவர்களால் பூஜிக்கப்பட்ட தேவர்கள் ஆவார்கள். முக்கிய தேவர்கள் என்பது பகர் முதலான அஷ்ட வசுக்கள், துவாதச ஆதித்யர், ஏகாதச ருத்திரர் ஆகிய 31 முக்கிய

தேவர்கள். தேவர்களின் தலைவன் இந்திரன். இந்திரனின் ஆச்சாரியர் பிரகஸ்பதி.

அடுத்து, ஒட்டுமொத்த பிரபஞ்சமுமே விராட் புருஷன்தான். பிரம்மம் பிரம்மமாக தெரியாது பிரபஞ்சமாக நிலை கொள்ளும்போது, வெறும் தோற்றம் மாத்திரமாகத் தெரியும். நிலையான பிரபஞ்ச வஸ்துவைத்தான் விராட் என்று அழைக்கின்றோம். படைப்பிற்கு முற்பட்ட உலகமானது, ஒளிர்ந்து கொண்டிருக்கும் தங்க முட்டைக்கு உவமையாக காட்டப்படுகின்றது. பிரபஞ்சத்தை தன்னுடைய கர்ப்பத்தில் வைத்துக் கொண்டிருக்கும், படைப்புத் தொழிலைச் செய்யும் பிரஜாபதியான நான்முகன் எனும் பிரம்மாவே ஹிரண்யகர்பன் ஆவார்.

எவனாகிலும் இந்தத் துரியாதீதத்தில் ஏழாம் பூமியில் இருந்தானேல்
அவன் நாரதன் சுகன் சிவன் மால் அயன் முதல் அறிவோர் அனுபவ
சுகபோதம்
விவகார திர்சயம் இதுவே அனுபவம் எனமுன் சொல்லிய விவகாரி
உவமானமும் அறி மகனே அவன் அடி உதிரும் பொடிகள் என்
முடிமேலே.(132)

## தெளிவுரை:-

மகனே! ஏழு ஞானபூமிகள் பற்றி ஏற்கனவே கூறப்பட்டது.

அவைகள், சுபேச்சை, விசாரணை, தநுமானசி, சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்தபாவனை, துரியம் என்பனவாகும். இதில், ஏழாம் பூமியாகிய துரியத்தில் எந்த மனிதன் இருந்தாலும், அவன் நாரதன், சுகன், சிவன், விஷ்ணு, பிரமன் முதலிய தன்னை அறிந்த தத்துவ ஞானிகளைப்போன்று, அனுபவ அறிவுடன் இவனும் சுகமாக இருப்பான்.

இத்தகைய இவன், உலக விவகாரங்களில் நாட்டம் இல்லாமல், ஜீவ அஹங்காரம் மறைந்து, விருப்பு, வெறுப்பு இன்றி, அனைத்தையும் தானாக பாவித்து, தன்மீதே தனக்கு உண்டான பிரியமான நிஜ சுகத்தை அனுபவமாக்கிய ஞானிகளான நாரதர் முதலான பரம புருஷர்களைப்போன்று, போற்றத்தக்க, இவனது பாத தூசிகளை என் தலை மீது உள்ள ஏழாம் பூமியான துரியத்தில் தாங்கத் தக்கதாகும்.

## ஞானபூமியின் ஏழு படிகள்:

வைராக்கியத்தை முன்னிட்டெழும் **சுபேச்சை** எனும் ஆசை.
நன்னடத்தையைக் கைக்கொள்ளும் **விசாரணை** எனும் அப்பியாசம்.
இவையிரண்டாலும் புலன்களின் ஓட்டமாகிற மனது தேய்ந்து இளைப்பது, **தனுமானசி** எனப்படுவது.
இவை மூன்றால் சித்தத்தில் பற்று நீங்கி **சத்வாபத்தி** எனப்படும் நிலைபெறுதல்.
இதனால், ஏற்படும் **அஸம்ஸக்தி,** அதாவது, பற்றற்ற திடமான ஸத்வநிலை.
**பதார்த்த பாவனை**, அதாவது, உள்ளேயும் நிலை பெறாமல் வேளியேயும் எதையும் நாடாமல் எழும் அறிவு விளக்கம்.

இதனின் நீண்ட பயிற்சியால் பேதமொழிந்து ஏற்படும் இயற்கையான நிட்டை. இது **துரியம்** எனப்படும்.

## துரியம் விளக்கம்

சுத்தவேதாந்தத் துரியமேல் வெளியெனும்
அத்தகு சிற்சபை அருட்பெருஞ் ஜோதி − 42

இந்து சமயத்தில் கூறுகின்ற போதாந்தம், யோகாந்தம் மற்றும் வேதாந்தம் இவைகளின் மொத்த அனுபவமே '**சுத்த வேதாந்தம்**' என்கின்றார் வள்ளற்பெருமான்.

“வேதாந்தத்தில் போதாந்த, யோகாந்தமும், சித்தாந்தத்தில் நாதாந்த, கலாந்தமும் அடங்கியிருக்கின்றன. இந்த ஐக்கியம் பற்றி வேதாந்த, சித்தாந்தமே இப்போது அனுபவத்தில் சுத்த வேதாந்த, சுத்த சித்தாந்தமாய் வழங்குகின்றன.” (திருவருட்பா - உரைநடை நூல் பக்கம் - 401).

**போதாந்தம்** - அறிவின் முதிர்ச்சி

**யோகாந்தம்** - யோகத்தின் முதிர்ச்சி

**வேதாந்தம்** - வேதத்தின் முதிர்ச்சி

இந்த மூன்று முதிர்ச்சியின் முதிர்ச்சி எதுவோ? அதுவே “**சுத்த வேதாந்தம்**” ஆகும்.

அது எது என்றால்?

துரிய மேல் வெளியே சுத்த வேதாந்த அனுபவமாக உள்ளது. துரிய நிலை அனுபவமானது ஆன்ம ஆனந்தத்தை கொடுக்கும். எல்லா சித்துக்களும் இந்நிலையில் கைகூடும்.

யோகத்தின் வழி இவ்வனுபங்களை பெறாமல், அதற்கும் மேற்பட்ட அனுபவங்களை ஆன்ம தயவினால் பெறலாம் என்கின்ற கருத்தினை இங்கு வள்ளலாரும் வலியுறுத்துகின்றார்.

அதாவது, நமது ஆன்மாவினை அஞ்ஞானம் என்ற ஏழு திரைகள் மறைத்துக் கொண்டுள்ளன. நம்முடைய உண்மையான சொரூபமான ஆன்மாவை மறைக்கின்ற இத்திரைகளை நாம் ஒவ்வொன்றாக விலக்கிக் கொள்ளும் போது, நமக்கு ஏற்படும் அனுபவமே **ஆன்ம அனுபவம்** என்கின்றார் வள்ளல் பெருமான்.

இவ்வாறு, இந்த ஆன்மவை தரிசிக்காமல், வெறும் சடங்காக மூடப்பட்ட ஏழுதுணித் திரைகளை விலக்கி, ஜோதி தரிசனம் என்ற பெயரில், தீப ஒளியை மட்டும் தரிசிப்பது, **துரிய நிலை** ஆகாது.

இந்தவாறு ஐந்து சுகம் சொல்லினோம் வித்தைசுகம் இனிமேற் சொல்வோம்
முந்த மாயையும் சச்சிதானந்தப் பொருளுமே மொழியும் போதில்
அந்தமாம் அத்துவித சுகம் ஆன்ம சுகம் இரண்டும் அங்கே சொன்னோம்
தொந்தமாற்றிய மகனே இன்னமும் உனக்கு ஐயமுண்டேல் சொல்லுவாயே. (133)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! **விசயசுகம், முக்கியசுகம், பிரம்மசுகம், நிஜசுகம், வாசனை சுகம்** என்ற ஐந்து சுகங்களை கூறினோம். **வித்தை சுகம்** என்று ஒன்று உள்ளது. அதை இனிமேல் கூறப்படும்.

முன்பு. மாயைப் பற்றியும், சச்சிதாநந்தப் பொருளைப் பற்றியும் கூறும்போது, அனைத்து சுகங்களிலும் இறுதியான சுகங்களாக **அத்வைத சுகம், ஆத்ம சுகம்** என்ற இரண்டைப்பற்றி கூறினோம்.

இரண்டு என்ற துவைத பேதமையை விடுத்து, ஒன்றேயான (ஏகத்தில்) அத்வைதத்தில் நிலைத்து இருக்கின்ற மகனே, உனக்கு இன்னமும் சந்தேகம் இருப்பின் கூறுவாயாக.

குகன் தனையும் எனையும் உலகினையும் ஈன்று
அளித்து அருளும் குருவே கேளீர்
புகன்ற சச்சிதாநந்தப் பதங்கள் தனித்
தனியாகிப் பொருள் வேறானால்
உகண்ட மனம் உறைப்பது எங்ஙன் பரியாய
பதங்களைப்போல் உறவு காணேன்
அகண்டமாய் ஒரு சுவையாய்த் தேனீக்
கூட்டிய மதுவா அறிவிப்பீரே. (134)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! ஈஸ்வரன், உலகம், ஜீவன் என மூன்றையும் படைத்து, காத்து, இரட்சித்து அருளுகின்ற என்னுடைய குருநாதனே, எனக்கு இன்னும் சில சந்தேகங்கள் உள்ளன அருள் கூர்ந்து கேளுங்கள்.

தாங்கள் கூறிய சத் சித் ஆனந்தப் பதங்களில் சத் வேறு, சித் வேறு மற்றும் ஆனந்தம் வேறு என்று அவைகளின் பொருள் வெவ்வேறாக இருக்கும்போது, விசயங்களினால் ஈர்க்கப்படும் இந்த மனம் பல பதங்களை ஒரே அர்த்தத்தில் ஒன்று என்று கூறுகின்ற ஒற்றுமையையும், அதன் உறவையும் ஏற்க முடியவில்லையே. பல மலர்களில் இருந்து சேகரித்த தேன் தேனிக்களினால் ஒன்றுகூட்டி அடையில் வைத்து பாதுகாக்கும்போது, அதன் சுவையில் வித்தியாசம் ஏதுமின்றி, ஒரே சுவையைத் தருகின்றதோ? அதுப்போன்று, ஒன்றேயான சச்சிதானந்தத்தின் உன்னதமான விளக்கத்தை தாங்கள் அருளுங்கள் ஐயனே.

குளிர் இளகல் வெண்மை என்ற பதங்களினால்
நீர்மூன்று கூறாக ஆயிற்றோ
ஒளித வனம் செம்மை என்ற பதங்களால்
அக்கினியும் ஒரு மூன்றாமோ
வெளி முதலாம் சகம் அசத்து மூடம் இடர் எனப்
பிரித்து விலக்கி வேதம்
எளிதறிய முரண் மொழிந்த சத்தாதி
எனும் பிரமம் ஏகந்தானே. (135)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! ஒன்றேயான நீர் குளிர்ச்சி, நெகிழ்ச்சி மற்றும் நிறமற்ற கண்ணாடி போன்று தூய்மையானது என்று கூறுவதினால், அந்த நீர் மூன்று பொருள்கள் ஆகி விடுமா?

ஒளி, சூடு, சிவந்த நிறம் என்று மூன்று தன்மைகளில் நெருப்பு காணப்படுவதால், அது மூன்று பொருள்கள் ஆகிவிடுமா?

ஆகவே, அந்த பிரம்மத்தின் சாயலாக உள்ள இந்த உலகத்தை விளக்குவதற்காக, வேத சாஸ்திரம் அசத்து (உண்மையல்ல), ஜடம், மற்றும் துன்பமயமானது என்று அதன் தன்மைகளைக்கூறி, இந்த ஜகத்தை "**மித்யா**" என்று கூறுவதுப்போன்று, அதற்கு எதிரான பரப்பிரம்மத்தை **சத்** (இருப்பு), **சித்** (அறிவு), **ஆனந்தம்** என மூன்று தன்மைகள் கொண்ட ஒன்றேயான பிரம்மம் மட்டுமே "**சத்தியம்**" என்று விளக்குகின்றது.

நித்தியம் பூரணம் ஏகம் பரமார்த்தம் பரப்பிரமம் நிதானம் சாந்தம் சத்தியம் கேவலம் துரியம் சமம் திருக்குக் கூடஸ்தன் சாட்சி போதம் சுத்தம் இலக்கியம் சனாதனம் சீவன் தத்துவம் விண் சோதி ஆன்மா முத்தம் விபு சூக்குமம் என்று இவ்வண்ணம் விதி குணங்கள் மொழியும் வேதம். (136)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! சத்சிதாந்தம் என்பது வேறு வேறல்ல என்பதற்கு வேதத்தின்படி நாம வாக்கியப் பிரமாணங்களைக் கூறுகின்றேன் கேட்பாயாக.

அது எப்பொழுதும் இருக்கின்றதினால் நித்தியம் எனவும், எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்துள்ளதால் பூரணம் எனவும், தன்னிகரில்லாமல் தான் மட்டுமே இருப்பதினால் ஏகம் எனவும், அனைத்திற்கும் மேலானதாக இருப்பதினால் பரமார்த்தம் எனவும், ஞானசொரூபமாக இருப்பதினால் பரப்பிரம்மம் எனவும், அனைத்திற்கும் முதற்காரணமாக இருப்பதினால் நிதானம் என்றும், ஆபாசம் இன்றி அடங்கி இருப்பதினால் சாந்தம் என்றும், மூன்று காலங்களிலும் மாறாமல் இருப்பதினால் சத்தியம் என்றும், தனித்து இருப்பதினால் கேவலம் என்றும், மூன்று அவஸ்தைகளுக்கும் சாட்சியாக இருப்பதினால் துரியம் என்றும், விகாரமற்றதினால் சமம் எனவும், அனைத்தையும் அறிவதினால் திருக் எனவும் எல்லாப் பிராணிகளின் புத்திகளிலும், ஏற்றத்தாழ்வு இன்றி உறைகின்ற கூடஸ்தன் எனவும், காரியத்தில் இறங்காமல் அதை வேடிக்கை மட்டும் பார்த்துக் கொண்டிருக்கின்ற சாட்சி எனவும், அறிவாக இருப்பதினால் போதம் எனவும், கலங்கமற்று இருப்பதினால் சுத்தம் எனவும் அழைக்கப்படுகின்றது.

இது விட்டுவிடாத இலட்சணையினால் விளங்குவதால் இலக்கியம் எனவும், என்றும் அழியாது இருப்பதினால் சனாதனம் என்றும், உணர்வில் கலந்த உயிரை ஜீவன் என்றும், தத் பதம் மற்றும் துவம் பதம் என்ற வார்த்தைகளால் விளக்குவதால் தத்துவம் என்றும், எங்கும் நிறைந்து, எதிலும் ஒட்டாத ஆகாசம் போன்று உள்ளதால் இதை விண் எனவும், ஜடமாக இல்லாமல் அறிவாக பிரகாசிப்பதால் சோதி எனவும், அகண்ட வஸ்துவாதலினால் ஆன்மா எனவும், பந்தம்

இன்மையால் முத்தம் (முக்தி) எனவும், கால, தேசம் கடந்து வியாபித்து இருப்பதினால் விபு எனவும், காண்பதற்கு அரிதாதலினால் சூக்ஷூமம் எனவும், இவ்வாறு பலப் பெயர்களில் சத்சிதானந்தத்தின் குணங்களை விவரித்து வேதம் அழைக்கின்றது.

அசலம் நிரஞ்சனம் அமிர்தம் அப்பிரமேயம் விமலம் அநுபா தேயம்
அசடம் அனாமயம் அசங்கம் அதுலம் நிரந்தரம் அகோசரம் அகண்டம்
அசம் அனந்தம் அவிநாசி நிர்குணம் நிட்களம் நிரவயம் அநாதி
அசரீரம் அவிகாரம் அத்துவிதம் என விலக்காம் அனேகமுண்டே. (137)

**<u>தெளிவுரை:-</u>**

**அசலம்** - செயல்கள் அடங்கிய நிலையிலிருப்பது.
**நிரஞ்சனம்** - குற்றமில்லாத வெளி.
**அமிர்தம்** - அழிவு இல்லாதது.
**அப்பிரமேயம்** - அளக்க முடியாதது.
**விமலம்** - அழுக்கின்மை, மலங்கலற்றது.
**அநுபாதேயம்** - தானே அடையத்தக்க பரம லட்சியமாக இருப்பதால், வேறு லட்சியத்தை அடைவதற்கு உபயோகிக்க இயலாதது.
**அசடம்** - உயிர்த்தன்மையுள்ளது, ஜடமற்றது.
**அநாமயம்** - சம்சாரம் என்ற வியாதியற்றது.

**அசங்கம்** - எதனுடனும் சேராதது.

**அதுலம்** - ஒப்பற்றது.

**நிரந்தரம்** - இடைவெளியில்லாதது.

**அகண்டம்** - பகுதிகளாகப் பிரிக்கவியலாதது

**அசம்** - பிறப்பற்றது.

**அனந்தம்** - அளவற்றது.

**அவிநாசி** - அழிவற்றது

**நிர்குணம்** - சத்துவம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களற்றது.

**நிட்களம்** - உடல் உறுப்புகள் அற்றது.

**நிரவயம்** - உருவமற்றது.

**அநாதி** - மிகப்பழமையானது

**அசரீரம்** - உடல் இல்லாதது

**அவிகாரம்** - எப்பொழுதும் மாறுபாடற்றது

**அத்துவிதம்** - இரண்டற்றது. என இவ்வாறு பிரம்மத்தை பலவாறாக அறிவிக்கின்றது வேதம்.

இன்னவகை விதிவிலக்குக் குணங்கள் நன்றாய்ச்
சேர்ந்து ஒருமித்து எல்லாம் கூடிச்
சொன்னபொருள் ஒன்றன்றி இரண்டில்லை ஒரு
பொருளைச் சொல்லும் சொற்கள்
பின்ன பதமாம் அதனால் சத்தாதி குணப்
பொருளாம் பிரமம் ஏகம்
அன்னபொருள் ஒருமைய அறிந்து அகண்ட
பரிபூரணமாய் ஆவாய் நீயே. (138)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! இதுப்போன்ற விதிவிலக்கு குணங்கள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து, ஒன்றெனக் கூறியப் பொருள் இரண்டல்ல ஒன்று.

எனவே, அந்த ஒரு பொருளை விளக்கிக்கூறும் சொற்கள் வேண்டுமானாலும் பிரிந்து காணப்படினும், அந்த சொற்களின் சத்து என்ற குணம் மட்டும் பிரம்மம் என்ற ஒன்றேயாகிய **சத்சிதானந்தம்** ஆகும்.

அத்தகைய சச்சிதானந்தப் பொருளின் ஒருமையை அறிந்து, அகண்ட பரிபூரணாமாய் ஆவாய்நீயே.

நிற்குண வஸ்துவின் குணங்கள் உரைப்பது
தாய் மலடி என நிகரென்னாதே
சற்குணனே வத்துநிலை உரையாமல் அறிய
வல்ல சதுரர் உண்டோ
நற்குண வேதங்கள் இந்தச் சீவன்முத்தி பெறப்
பிரம ஞானம் தோன்றச்
சொற்குணங்கள் பிரமத்தின் குணங்களன்று
பிரமமாம் சொரூபந்தானே. (139)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! குணங்களற்ற வஸ்துவான பரப்பிரம்மத்திற்கு குணங்கள் பலக்கூறி வேதம் உரைப்பது என்னுடைய தாய் மலடி என்று, அவள் வயிற்றில் பிறந்த மகனே கூறுவது போன்று அல்லவா இருக்கின்றது? இதற்கு விளக்கம் அருளுங்கள் சுவாமி.

மகனே! குணங்களற்ற பரப்பிரம்மத்தை குணங்களுடன் ஒப்பிட்டு சாஸ்திரம் கூறுவது, சாஸ்திரம் முன்னுக்கு பின் முரணாகக் கூறுவதாகக் கருதி விடக்கூடாது.

ஒரு ஆச்சாரியர் சாஸ்திரங்களை சிஷ்யர்களுக்கு போதிக்கும் பொழுது, அதில் உள்ள ஆழமான கருத்துக்களுக்கு விரிவாகப் பொருள் விளக்கம் கூறாமலேயே, அவைகளைத் தானாகவே கற்று புரிந்துக் கொள்ளக்கூடிய புத்திசாலி மாணவன் உள்ளனரா?.

ஆகவே, இந்த நற்குணமுடைய வேதசாஸ்திரமானது ஒருவன் ஜீவன் முக்திப் பெற பிரம்ம ஞானத்தை உபதேசிக்கின்றது. அவ்வாறு உபதேசிக்கும் அந்த சொற்களில் உள்ள குணங்களை, பிரம்மத்தின் குணங்கள் என்று கருதாமல், அந்த பிரம்மத்தின் சொரூபம் என்று அறிய வேண்டும்.

மோக இருள் கெடக்கோடி அருணன் என வரு குருவே மொழியக் கேளீர்
ஏக பரிபூரணமாம் என்சொரூபம் என் உளத்தில் இறுகும் வண்ணம்
ஆகமங்கள் சொன்னபடி என்னை அகண்டார்த்தமா அறிந்தேன் ஐயா
ஊகமும் ஒத்திட உரைத்தால் பசுமரத்தில் ஆணிபோல் உறைக்கும்
நெஞ்சே. (140)

## <u>தெளிவுரை:-</u>

அஞ்ஞான இருளை நீக்க, கோடி சூரியப் பிரகாசத்துடன் வருகின்ற குருநாதனே, அருள்கூர்ந்து கேட்பீராக.

ஒன்றேயான, எங்கும் நிறைந்த என்னுடைய சொரூபத்தை, என் உள்ளத்தில் நிலைக்கும்படிச் செய்த வேதங்கள் உபதேசித்த மகாவாக்கியங்களின்படி, அதிலிருந்து பிரிக்க முடியாத என்னை, அந்த அறிவு சொரூபமாகவே அறிந்துக் கொண்டேன் ஐயா.

இருப்பினும், அந்த சத்சிதானந்தப் பொருளின் விளக்கத்தை யுக்தி பூர்வமாக எனக்கு சம்மதம் ஆகும்படி எடுத்துக்கூறி, பசுமையான மரத்தில் பதமாய் இறங்குகின்ற ஆணியைப் போன்று, என் நெஞ்சில் இதமாய் நிறைந்திட உரைத்திடுவீர்.

சத்தே சித்தாகும் அயல் எனில் அசத்தாம் அசத்தானால் சாட்சி எங்கே
சித்தே சத்தாகும் அயல் எனில் சடமாம் சடங்களுக்குத் திதியு மில்லை
ஒத்தே தோன்றிய சத்தும் சித்தும் நல்ல சுகமாகும் ஊகத்துக்கோர்
வித்தே அன்னியமாகில் சடம் அசத்தாம் சுகாநுபவம் விளைந்திடாதே. (141)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! மூன்று காலங்களிலும் இருக்கின்ற **'சத்'** எதுவோ? அதுவே **'சித்'** என்ற அறிவு ஆகும். சத் என்ற இருப்புக்கு வேறாக சித் என்ற அறிவு உள்ளது என்று கூறினால், அதை அசத் (இருப்பற்றது) என்றே கூற வேண்டும். அவ்வாறு, **சித்** என்ற அறிவு இன்றி, **சத்** என்ற இருப்பு உள்ளதை அறிவது யார்? அதாவது, அறிவு இன்றி இருப்பை எவ்வாறு அறிய முடியும்?

ஆகவே, **சித்** என்ற அறிவே **சத்** ஆகும். அத்தகைய சித் என்ற அறிவு இல்லாது போகுமானால், அது வெறும் **சடம்**

எனப்படும். அத்தகைய சடத்திற்கு தானாகவே இருப்பில்லை என்பதினால், **சத்** என்ற இருப்புக்கு **சித்** என்ற அறிவு நிச்சயம் இருந்தாக வேண்டும். இந்த சத்தும், சித்தும் இணைந்தே **ஆனந்தம்** வெளிப்படும்.

ஜடமான வெறும் உடலுக்கு ஆனந்தம் உண்டாகாது. அதனுள்ளே அறிவு (ஆன்மா) இருந்தால் மட்டுமே ஆனந்தத்தை அனுபவிக்க முடியும்.

சத்துக்கும், சித்துக்கும் வேறானது ஆனந்தம் என்றால், அந்த ஆனந்தமும் அசத் ஆகிவிடும். எனவே, இந்த **சத், சித், ஆனந்தம்** என்ற மூன்றும் கூடிய ஒன்றேயான பரப்பிரம்மம் இன்றி, பரமானந்தம் உண்டாகாதே.

வீயாத சத்து முன்னம் விளங்குவது
தன்னாலோ வேறொன்றாலோ
வாயால் வேறெனில் அதுவும் அசத்தோ சத்தோ
அசத்தேல் மலடி மைந்தன்
பேயா காரியம் செயுமோ சத்தென இப்படி
அதையும் பிரித்துச் சொன்னால்
ஓயாத அவத்தையாம் குதர்க்க விகற்பங்களை
விட்டொழித்திடாயே. (142)

## தெளிவுரை:-

மகனே! மூன்று காலங்களிலும் நீங்காமல், எப்பொழுதும் விளங்குகின்ற '**சத்**' என்ற இருப்பானது ஆதியில் இருந்தே இருக்கின்றது. அதை விளக்க, அதற்கு வேறாக மற்றொன்று தேவையில்லை. அவ்வாறு தேவை என்று வாதத்திற்கு மற்றொன்றை எடுத்துக் கொண்டாலும், அதை விளங்கச் செய்வது சத்தா, அசத்தா?

அசத் (இருப்பற்றது) என்றால், அந்த அசத்தை விளங்கச் செய்வது எது? என்ற முடிவில்லாத குழப்பங்களுக்கு வழி வகுக்கும்.

இது எவ்வாறு இருக்குமெனில், குழந்தைப் பெற முடியாத மலடிக்கு மகன் இருக்கின்றான் என்று கூறுவதற்கு ஒப்பாகும். இதுப்போன்ற குழப்பங்கள் **அனவஸ்தா** தோசத்தை

உண்டாக்கும். பொதுவாக, **அறிவு** (சித்) இன்றி எதையும் அறிய முடியாது.

அனவஸ்தா தோசம் என்பது, ஒரு தீபத்தை வைத்து, பல தீபங்களை ஏற்றும் பொழுது, எந்த தீபத்தின் பிரகாசமானது இந்த தீபத்தில் தெரிகின்றது என்று கேள்வி எழுமானால், அது முடிவில்லாத குழப்பத்தில் முடிகின்ற அனவஸ்தா தோசம் எனப்படும்.

ஆகவே, சித் ஆனது சத் ஆக இருக்கின்றது என்று பிரித்துப் பொருள் கூறுவதின் ஆழமாக உட்பொருளை அறியாமல், பேய் போன்று அலையும் மனதினைக் கொண்டு குதர்க்கமான சந்தேகங்கள் எழுப்புவதை விட்டொழிப்பாயாக.

சுருதியுத்தி ஒத்ததுபோல அனுபவமும் கேள்
சுழுத்திச் சுக ஆனந்தம்
மிருதி வடிவாதலில் அவ்வானந்தமே அறிவாம்
வேறு அங்கு இல்லை
கருது பிரளயம் சுழுத்தி இரண்டிலும் நீ இருந்து
இருளைக் காண்கிறாயே
இருதயத்தில் இப்படி நோக்கி ஏக பரிபூரணமாய் இருந்திடாயே. (143)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! இதுவரை சுருதி, யுக்தி ஒப்பிட்டுக்கூறியது போன்று, இனி அனுபவத்தையும் கூறுகின்றேன் கேள்.

ஆழ்ந்த உறக்கத்தில் ஏற்படுகின்ற சுகத்தினால் கிடைத்த ஆனந்தம், விழிப்பு நிலைக்கு வந்த பிறகுதான், நான் சுகமாகத் தூங்கினேன் என்ற நினைவு உண்டாகின்றது.

இது எப்படியெனில், ஆழ்ந்த உறக்கத்தில் மனமும், புத்தியும் அடங்கிய பிறகு உண்டாகும் ஆனந்தத்தை அறிவது எது? என்றால், அந்த ஆனந்தமே அறிவாக இருந்து, அதை அறிந்து கொண்டதினால் அது ஞாபகத்தில் இருக்கின்றது.

அதாவது, அறிவு இங்கு ஆனந்தமாக வியாபிக்கின்றது. அதனால்தான் எதையும் அறிய முடியாத அறியாமை சூழ்ந்த ஆழ்ந்த உறக்கத்தில் உண்டான சுகமான இருப்பை (சத்) அறிவு (சித்) ஆனந்த அனுபவமாக அறிகின்றது.

ஆகவே, அனைத்தையும் அழிக்கின்ற மகாப் பிரளயம் உண்டாவதைப் போன்று, மனம், புத்தி, மனைவி, மக்கள், சொத்து, உறவுகள் என அனைத்தையும் நீக்கிய ஆழ்ந்த உறக்கம் என்ற காரிருள் சூழ்ந்த, சிறிய பிரளய காலத்திலும், அதை அறிகின்ற அறிவாக நீ மட்டுமே இருந்துக்கொண்டு, மாயையாகிய அறியாமை இருப்பதையும், ஆனந்தம் வெளிப்படுவதையும் அறிகின்றாயே, அந்த சித்தே (அறிவே) நீ என்று அறிவாயாக.

அதைப்பற்றி உன் இருதயத்தில் விசாரித்து, சத்தே சித்து, சித்தே ஆனந்தம் என்றும், அந்த **சத் சித் ஆனந்தம்** என்ற நிஜ சொரூபமே “**நான்**” என்றும் அறிந்துக்கொண்டு, அந்த ஒன்றேயான பிரம்மத்தில் பூரணமாய் இருந்திடு வாயாக.

பல கலையும் உணர்ந்த குரு மொழிந்தபடி இவனும் அனுபவம் விடாமல்
பல மலரின் மதுப்போல சச்சிதானந்தம் ஒன்றாம் பரமார்த்தத்தைப்
பல பொழுதும் கண்மூடிச் சமாதி இருந்தான் விழித்துப் பார்த்தபோது
பல வடிவாம் சராசர சித்திரங்கள் எல்லாம் தோன்றும் ஒரு படமானானே.
(144)

## தெளிவுரை:-

அனைத்து வேத, வேதாந்த சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த குருவின் உபதேசங்களின் மூலமாக, சிஷ்யனான இவனும் பலவாறான சந்தேகங்களை கேட்டு, அவைகளை அறிந்து, பல மலர்களில் இருந்து தேனைக் கொண்டுவந்து சேகரித்து வைத்த தேன் எவ்வாறு ஒரே சுவையைக் கொடுக்கின்றதோ? அதுப்போன்று பலவாறாக கருதப்பட்ட சத்சித்தானந்தத்தை இருமைகளற்ற நிலையில், ஒன்றேயான பரமாத்மாவாக தன் இருதயத்தில் இருத்தி, எண்ணங்கள் ஏதுமற்ற நிலையில், கண்மூடி தன் சொரூப நிஷ்டையில் சமாதியில் அதை தியானித்தான்.

அதன்பிறகு, கண் விழித்துப் பார்த்தபொழுது, தன் எதிரே பலவாறாகக் காட்சியாகின்ற இந்த உலகம் ஒரே துணியில் வரையப்பட்ட சித்திரத்தைப் போன்று, அனைத்தும் ஒன்றாய் அந்த சத்சிதானந்த பிரம்மமாய் இவனுக்கு விளங்கியது.

இதுவே, ஜீவன் முக்தர்களின் நிலை என்று உணர்ந்து, அந்த துணியைப் போன்று, பலவாறாக காணப்படுகின்ற இந்த உலகத்தை தன்னுள் ஒன்றாய் கண்டு, தன் சொரூபத்தில் நின்றானே.

## ஆன்ம இரகசியம்

(உயிர் அசைவதினால்தான் மனம் அசைகிறது. மனம் ஒரு ஜடம்.எனவே, ஆன்மா இன்றி மனம் தனித்து, தானாகவே அசைய இயலாது.

ஆன்மாவை கவனித்து, உற்று நோக்கினால் அந்த உண்மை வெளிப்படும்.

### ஆன்மாவை எப்படி கவனிப்பது?

ஆன்மாவாகிய தன்னை, தன் சொரூபத்தை எப்பொழுதும் மறக்காமல், தன்சொரூப நிலையில் நிலையாகவும், திடமாகவும் நின்று, பல எண்ணங்களை தோற்றுவிக்கின்ற மனம் எங்கே? என்று, அதே மனதைக் கொண்டு கவனிக்கத் தொடங்க வேண்டும்.

அதாவது, கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் அமர்வது போன்று, ஒரு இடத்தில் அமர்ந்து இதைச் செய்யலாம். அல்லது இயல்பாக கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு, வேடிக்கைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருக்கும்

பொழுது, தோன்றுகின்ற எண்ணங்களை ஒவ்வொன்றாக கவனித்தும் இதைச் செய்யலாம். இதை எவ்வாறு செய்வது?

அதாவது, மனித மனம் ஓய்வின்றி எப்பொழுதும் எதையாவது சிந்தனை செய்தவாறு மட்டுமே இருந்துக் கொண்டு இருக்கும். ஒரு விநாடி நேரம் கூட சும்மா இருக்காது.

இந்த சூழ்நிலையில், ஒரு எண்ணம் தோன்றி அடங்கி, மறு எண்ணம் தோன்றத் தொடங்கும்போது, அந்த இரண்டாவது எண்ணத்தை தடுத்து நிறுத்தி, இரண்டு எண்ணங்களுக்கு இடைவெளியில், ஒன்றுமற்ற சூன்யத்தை கவனிக்கத் தொடங்க வேண்டும்.

பொதுவாக, இதுப்போன்ற பல்வேறு எண்ணங்கள் காரணமாக, காலம், தேசம் என இரண்டும் தோன்றி, மனம் உண்டாகி விடுகின்றது.

அதாவது, ஒரு எண்ணம் உதயமாவதற்கு ஒரு விநாடியை விடக்குறைவான நேரமும் (காலம்), இதுப் போன்று பல எண்ணங்களின் தொகுப்பாக பல மணி நேரங்களும் உண்டாகி, அந்த எண்ணங்கள் அடங்கிய மனம் தங்குவதற்கு சித்தம் என்ற இடம் (தேசம்) தோன்றி விடுகின்றது. இவ்வாறு காலத்தையும், இடத்தையும் எடுத்துக் கொண்ட மனம் அதில் சிக்கிக் கொள்கின்றது. இந்த கால, தேசமே **மாயை** எனப்படுகின்றது.)

இவ்வாறு, எண்ணங்களால் சூழப்பட்ட மனதிற்குத் தன்னைத்தவிர, தான் தங்குவதற்கு வேறு இருப்பிடம் இல்லை என்பதுவும், இதுவே, அறியாமையாகிய மாயை என்பதுவும், இந்த தொடர் பயிற்சியினால் தெரியவரும். அந்த ஒன்றுமற்ற சூன்யத்தை அறிவது **அறிவு** என்பதுவும் புரிய வரும்.

இந்த உண்மையை அறிந்து, மனதின் அசைவை வளர விடாமல் தடுத்து, ஆழ்ந்த உறக்கத்தில் இதே மனம் எவ்வாறு, சாட்டை இல்லாத பம்பரம் போன்றும், காற்றில்லாத காற்றாடி போலவும், அமைதியாக அடங்கி, ஒடுங்கி இருந்ததோ? அதுப்போன்று, விழிப்பு நிலையிலும் மனதை ஒடுங்க வைப்பது என்பது, இரண்டு எண்ணங்களுக்கு இடையில் உள்ள வெளியை மட்டும், அடிக்கடி கவனித்து வருகின்ற தொடர் பயிற்சியினால் உண்மை புலப்படும்.

அதாவது, ஒன்றுமற்ற அந்த வெட்ட வெளியில் உண்டாகின்ற சூன்யத்தை அறிவதுக்கூட, அந்த ‘**அறிவு**’தான் என்பதுவும். அதுவே, தன் உண்மை சொரூபம் என்பதுவும் புரியவரும். இதுவே, **ஆன்ம அனுபவம்** ஆகும்.

இதை மறைக்கப்பட்ட ‘**குஹ்யம்**’ அல்லது ‘**இரகசியம்**’ என வெளிப்படுத்தாமல் பாதுகாக்கப்பட்டது. இப்பொழுது, இது வெளிப்பட்டு பயன் அடைவது என்பது, யாருக்கு போய்ச் சேர வேண்டுமோ? அவர்களுக்கு மட்டுமே இது போய்ச் சேரும். இது, நூதன விவேகி உள்ளம் நுழையாது, அப்படி நுழையுமாகில், பூதசென்மங்கள் கோடி புனிதனாம் புருடனாமே.

இதயமொத்த சற்குருவே நமக்கு இதுவே
வினோதம் அன்றி இனிவேறு உண்டோ
அதை உரைத்தும் அதை நினைத்தும் இருப்பது
அன்றோ ஞானிகளுக்கான நீதி
முதல் உரைத்த துரியாதீதமும் ஏழாம்
பூமியும் முக்கியமாம் என்ற
பதமும் அதின் வகையும் எனக்கு எளிதாகத்
தெளியும் வண்ணம் பணித்திடீரே. (145)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! நமது இருவர் உள்ளமும் ஒன்றெனச் செய்த சத்குருவே, எனக்கு ஆத்ம சொரூபமான பரப்பிரம்மத்தை வேதாந்த மகா வாக்கியங்களினால் உபதேசித்து, அதை அனுதினமும் சிந்திக்கச் செய்து, எண்ணங்கள் அற்ற நிலையில் அதை உணர வைத்து, அந்த பிரம்மமும், நானும் வேறு வேறல்ல என்ற மகிழ்ச்சியில் திளைக்க வைத்து, வினோதமான அனுபவத்தை உண்டாக்கி, தாங்கள் எனக்கு மிகப்பெரிய உபகாரம் செய்துள்ளீர்கள்.

மேலும், எப்பொழுதும் அதைப்பற்றியே பேசுவதும், அதையே நினைத்துக் கொண்டிருப்பதும் மட்டுமே ஞானிகளுக்கான தர்மம் என்று, அதன்படி வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற தாங்கள், ஏற்கனவே கூறிய, துரியாதீதமும், ஏழாம் பூமியும் சாதகனுக்கு மிக முக்கியம் என்றீர்கள்.

அதைப்பற்றிய விபரங்களை மேலும் அறிய ஆவலாக உள்ளேன். ஆகவே, தாங்கள் அதன் பதமும், வகையும் பற்றி, இன்னும் சற்று விரிவாக எனக்குக் கூற வேண்டுமாய் பணிவுடன் வேண்டுகின்றேன்.

வினவுமிடத்து அஞ்ஞான பூமிகள் ஏழ்
ஞானபூமிகள் ஏழ் என்பார்
இனி அவற்றுள் அஞ்ஞான பூமிகள் ஏழையும்
முந்தி இயம்பக் கேளாய்
தனி வித்துச் சாக்கிரம் சாக்கிரம் மகாசாக்கிரம்
சாக்கிரத்தைச் சார்ந்த
கனவு கனாக் கனவுசாக்கிரம் சுழுத்தி என்று
எழுபேர் கணித்தார் மேலோர். (146)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! உன்னுடைய விருப்பத்திற்குக் காரணமான துரியாதீதத்தையும், ஏழாம் பூமியை பற்றியும் கூறுகின்றேன் கேட்பாயாக.

துரியாதீதத்தை அறிவதற்கு முன்னர் முதலில், ஏழு ஞான பூமிகளைப் பற்றியும், ஏழு அஞ்ஞான பூமிகளைப் பற்றியும் விபரமாக அறிவாயாக.

## ஏழு அஞ்ஞான பூமிகள்

1. தனி விதை சாக்கிரம்
2. சாக்கிரம்
3. மகா சாக்கிரம்
4. சாக்கிர சொப்பனம்
5. சொப்பனம்
6. சொப்பன சாக்கிரம்
7. சுழுத்தி என்ற இந்த ஏழும், அஞ்ஞான பூமிகளின் பெயர்களாக மேன்மை பொருந்திய ஞானிகள் வகுத்தனர்.

இந்த ஏழு அஞ்ஞான பூமிகள் பற்றிய விளக்கங்கள் அடுத்து வருகின்ற பாடல்களில் வருகின்றது.

முந்த அகண்டத்து எழும் ஓர்அறிவு மாத்திரம்
அதுதான் முதல் வித்தாகும்
இந்த அறிவில் பண்டில்லா அகந்தை முளைபோல்
இது நனாவாம்
வந்து வந்து பிறவிதொறும் அகம் மமதை
வளரும் அது மகா நனாவாம்
நந்தும் அகங் கொடு நனவில் மனோராச்சியம்
செயலே நனாக்கனாவே. (147)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! இனி நாம் கூறப்போகும் விளக்கத்தை கவனத்துடன் கேட்பாயாக!

அகண்டமான இந்த சிருஷ்டியின் ஆரம்பத்தில் சுத்த சித்து (அறிவு) மட்டுமே இருந்தது. பிரம்ம சக்தியான மூலப்பிரகிருதியில் (சத்) அனாதி காலமாக வெளிப்படாமல் அவ்வியக்தமாய் அடங்கியிருந்த ஒன்றேயாகிய அறிவு (சித்) என்ற சைதன்யமானது தன்னை வெளிப்படுத்த நாடினபோது, அதன் சக்தியானது சத்துவம், ராஜஸம், தாமஸம் என்னும் மூன்று குணங்களாக வெளிப்பட்டன.

இந்த மூன்று குணங்களில் ஏதாவதொரு குணம் மற்ற இரண்டு குணங்களையும் மீறி ஓங்கி நிற்கும்.

இந்த முக்குணங்களில் முதற்குணமாகிய சுத்த சத்வகுணத்திற்கு “**மாயை**” என்று பெயர்.

சமஸ்டி அவஸ்தையான மாயை, சத்துவ குணத்தில் பிரதிபலித்த, பிரம்மத்தின் சாயலான ஞான நிழலுக்கு "**அந்தர்யாமி**" என்றும் மாயா சகித "**ஈஸ்வரன்**" என்றும் அழைக்கப்படுகின்றது.

இந்த ஈஸ்வரனுடைய சத்வகுணமே ஆழ்ந்த உறக்க நிலையான சுழுத்தி அவஸ்தையும், காரண சரீரமும் "**ஆனந்தமயகோசம்**" எனவும் கூறப்படுகின்றது.

(கோசம் என்றால் கவசம் அல்லது மூடுகிற உறை என்பது அர்த்தம்)

அடுத்து, **சமஸ்டி - வியஸ்டி** பற்றிய விபரம் இங்கு கூறப்படுகின்றது.

(பல மரங்கள் உள்ள தோப்பு '**சமஸ்டி**' என்றும், ஒரு தனி மரம் மட்டும் இருந்தால், அதை '**வியஸ்டி**' என்றும் உதாரணப்படுத்தலாம்.

சமஸ்டி என்றால் '**ஒட்டுமொத்தமான அல்லது ஒருங்கிணைந்த நிலையில் உள்ளது**' என்றும், வியஸ்டி என்றால், '**தனியே அல்லது தனித்த நிலையில் உள்ளது**' என்றும் பொருள் கொள்ளலாம்.)

அடுத்து, ஈஸ்வரனுடைய இரண்டாவது குணமாகிய ராஜஸகுணம் அனேக ரூபங்களாய் பிரிந்து **அவித்தைகள்** என்று ஆனது.

(அவித்தை என்றால் அஞ்ஞானம், அறியாமை எனப்பொருள்).

இங்கு வியஸ்டி அவஸ்தையான மாயை, ராஜஸ குணத்தில் அவித்தைகளில் பிரதிபலித்த பிரம்ம நிழலுக்கு "**ஜீவன்**" என்று பெயர்.

இந்த ஜீவனுக்கு இந்த ராஜஸ குணமே காரண சரீரமும், சுழுத்தி அவஸ்தையும், ஆனந்த மயகோசமும் ஆகும்.

இவ்வாறு, சுழுத்தி அவஸ்தையில் காரண சரீரத்தை அபிமானிக்கின்ற ஜீவன் "**பிராக்ஞன்**" என்னும் பெயரைப் பெறுகின்றது.

பிராக்ஞன் மற்றும் அறிவு என்ற இரண்டும் சேர்ந்து "**சாட்சி**" ஆகின்றது. இது நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றது.

காண்பவன், காட்சி, காணப்படும் பொருள் என்ற திரிபுடி ஆகிய இவைகளின் தோற்றத்தையும், மறைவையும் அறிகின்ற அறிவாகவும், அதேசமயம் தோற்றமும், மறைவும் இல்லாதவனாகவும் இருக்கின்ற அந்த அறிவை "**சாட்சி**" எனப்படுகின்றது.

ஒன்றேயான எங்கும் நீக்கமற நிறைந்துள்ள அறிவு ஸ்வரூபமான சைதன்யத்தை "**பிரஹ்மம்**" எனப்படுகின்றது.

அந்த பிரம்மம் ஐந்து தொழில்களை (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) செய்வதினால் "**ஈஸ்வரன்**" என அழைக்கப்படுகின்றது.

பிரம்மா முதல் எறும்பு வரை உள்ள எல்லாப் பிராணிகளின் புத்திகளிலும் ஏற்றத்தாழ்வு இன்றி,

அனைத்திலும் காணக் கூடியவனாய், உறைகின்ற அந்த அறிவை "**கூடஸ்தன்**" எனப்படுகின்றது.

பல பிறவிகளாகச் செய்த புண்ணிய பாவங்களை அனுபவிப்பதற்காக கிடைத்த ஸ்தூல உடலில் ஒட்டாமல், அதன்மீது ஏற்றிவைக்கப்பட்டுள்ளதை "**ஜீவன்**" எனப்படுகிறது.

க்ஷேத்திரம் என்ற உடலின்மீது ஒட்டாமல் ஏற்றி வைக்கப்பட்டுள்ள ஜீவனை, எந்த மெய்யறிவு உள்ளிருந்து விளங்க வைக்கின்றதோ? அதையே "**க்ஷேத்திரஞ்ஞன்**" என்றும் அழைக்கப்படுகின்றது.

பிரம்மமாகிய சித் (அறிவு), சத்துவகுண மாயையில் பிரதிபிம்பித்தபோது, ஈஸ்வரன் தோன்றியதால், அதற்கு "**மாயா சிதாபாசன்**" எனப்படுகின்றது.

ஈஸ்வரனுக்கு மாயை மட்டுமே உபாதி. மேலும் மாயை ஈஸ்வரனின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது!

பிரம்மமாகிய சித் (சைதன்யம் அல்லது அறிவு) ராஜஸகுண மாயையில் பிரதி பிம்பித்தபோது ஜீவர்கள் தோன்றியதால், ஜீவனுக்கு "**அவித்யா சிதாபாசன்**" எனப்படுகின்றது.

ஜீவர்களுக்கு உடல் அஞ்ஞானத்திலிருந்து உண்டானது*.

தொடர் விசாரத்தினாலும், அப்பியாசத்தினாலும் தமோகுணம், ரஜோகுணம் அற்று, சத்துவகுணத்தை மட்டும் பிராதனமாகக்கொண்ட **சிதாபாசன்** கூடஸ்தனாக மாறுகின்றது.

இதே கூடஸ்தன் தன்னிடம் உள்ள புத்தியின் வாயிலாக விசாரித்து ஞானமடைந்ததும், அதன் உபாதி நீங்குவதால், மீண்டும் பழையபடி பிரஹ்மமாகின்றது.

இவ்வாறு, சேதனம், சைதன்யம், பிரம்மம், ஆத்மா, ஈஸ்வரன், ஜீவன், க்ஷேத்திரஞ்ஞன், சாட்சி, மற்றும் கூடஸ்தன் என்று பலப் பெயர்களில் ஒன்றேயான அறிவு விளங்குகின்றது.

சைதன்யமே பிரம்மம்! பிரம்மமே சித்! சித்தே சாட்சி! சாட்சியே உணர்வு! உணர்வே பிரக்ஞை!

பரிசுத்தமான உயர் அறிவாகிய சைதன்யத்தோடு, படைப்பின் பொருட்டு, பல்வேறு அசுத்தங்கள் கூடக்கூட, ஒன்றேயான சைதன்யத்தின் பெயர்கள், இவ்வாறு இடத்திற்கு ஏற்றாற்போல பலவாக மாறுபடுகின்றது.

மாயை, அவித்தை, அஞ்ஞானம், அஞ்ஞான காரியமாகிய மூன்று சரீரங்கள் ஆகிய இவைகள் எல்லாம் அசுத்தமே ஆகும்.

இவ்வாறு, இந்த ஜீவனுக்கு கை, கால்கள் போன்ற அவையவங்கள் கொண்ட, பரு உடல் உண்டாவதற்கு முன்பு, சூக்ஷூமமாக இருந்த மூலப்பிரக்ருதி (அவ்வியக்தம்) என்ற விதையை "**பீஜ சாக்கிரம்**" (**தனி விதை சாக்கிரம்**) என்று அழைக்கப்படுகின்றது.

(சாக்கிரம் என்பது ஜாக்ரதா அவஸ்தை எனப்படும். அதாவது **விழிப்புநிலை அனுபவம்** ஆகும். அதுப்போலவே, பீஜம் என்பது **விதை** எனப்படும்.)

இவ்வாறு, இந்த ஜீவனிடம் உள்ள சைதன்யமான அறிவில் "**நான்**", "**எனது**" என்ற அபிமானம் சூக்ஷுமமாக உண்டாவது "**சாக்கிரம்**" (**விழிப்பு நிலை**) எனப்படுகின்றது.

இத்தகைய அபிமானம் ஒவ்வொரு பிறவிதோறும் ஜீவனுக்கு உண்டாவதே, "**மகா சாக்கிரம்**" எனப்படுகின்றது.

இவ்வாறு, சேதனமான அறிவு உலக விசயங்களைப் பற்றி எழுகின்ற பல்வேறு எண்ணங்களினால் உண்டான கற்பனையான மனோராஜ்ஜியத்தை "**சாக்கிர சொப்பனம்**" (**விழிப்பு நிலை கனவு**) என்று அழைக்கப்படுகின்றது.

உண்டு உறங்கி மனோராச்சியம் செயல் சொப்பனம்
எனும் பேருடையதாகும்
பண்டு கனாக்கண்டு மறந்ததை மீண்டும் நினைப்பது
சொப்பன நனாவாம்
மண்டும் இருள் மூடுவது சுழுத்தியாம் அஞ்ஞான
வகைகள் சொன்னோம்
விண்டு நிறை முத்திதரும் ஞானபூமிகள் ஏழும்
விளம்பக்கேளாய். (148)

## தெளிவுரை:-

நாம் சமைக்கும் உணவில் அடங்கி இருக்கும் மூலப் பொருட்கள், சாத்வீக குணமுடையதாக இருக்க வேண்டும்.

பால், வெண்ணெய், நெய், அரிசி, கோதுமைமாவு, பாதாம்பருப்பு, முந்திரி, கீரைகள், காய்கறிகள், மற்றும் பழங்கள் போன்றவைகள் சாத்வீகமானவை.

புளிப்பு, உரைப்பு (காரம்), உப்பு, மசாலா பண்டங்கள், சூடான டீ, காபி, வெங்காயம், பூண்டு உள்ளிட்டவைகள் ராஜஸகுணம் கொண்டவைகள்.

மாமிசம், முட்டை, பதப்படுத்தப்பட்டவைகள், இருமுறை சுட வைத்த உணவுகள், பழையவைகள் மற்றும் சீரணத்திற்கு கடினமான உணவுகள் தாமஸகுணம் கொண்டவை.

சாத்வீக உணவுகள் மனதை அமைதிப்படுத்தி, ஆன்மிக முன்னேற்றத்தைத் தருகின்றது.

ராஜஸ உணவுகள் உலக விவகாரங்களில் அதிகம் ஈடுபடுத்தி, மாயையில் சிக்கவைத்து, உணர்ச்சிகளைத் தூண்டி சுயநலத்திற்கு வழி வகுக்கின்றது.

தாமஸ உணவுகள் மந்தத் தன்மையையும், அடிக்கடி உறக்கத்தையும், தீய எண்ணங்களையும் வளர்க்கின்றது.

ஆகையால், இந்தப் பாடலில் உண்டு, உறங்குவதைப் பற்றி அறிவுறுத்தப்படுகின்றது.

இவ்வாறு உணவை உண்டு, அந்த உணவினால் உண்டான பல்வேறு எண்ணங்களை எண்ணியவாறு உறங்கி,

எண்ணிய எண்ணங்களை செயல்படுத்தக்கூடிய கற்பனையான கனவுகளைக்கண்டு, அந்த கற்பிதமான மாயா உலகத்தில், மனம் மயங்கிய நிலையை "**சொப்பனம்**" எனப்படுகின்றது.

இவ்வாறு ஏற்கனவே கனவில் கண்டு, மறந்து போன பல்வேறு கற்பனையான எண்ணங்களை, மீண்டும் நினைவில் கொண்டு வந்து சிந்தித்தவாறு இருப்பது "**சொப்பன சாக்கிரம்**" எனப்படுகின்றது.

அடுத்து, கனவும், விழிப்பும் அற்ற ஆழ்ந்த உறக்கத்தில், மொத்த பிரபஞ்சமும் அடங்கியவாறு, இருளால் மூடப்பட்ட அஞ்ஞானத்தில் தன்னையும், தன்னால் விழிப்பு நிலையில் படைத்துக் கொள்ளப்பட்ட இந்த உலகத்தையும் அறிய முடியாமல் இருப்பது, ஏழாம் பூமியாகிய "**சுழுத்தி**" எனப்படும்.

இதுவரை **ஏழு அஞ்ஞான பூமிகளைப்** பற்றிப் பார்த்தோம்.

இனி, அறியாமை நீங்கிய, நிறைவான முக்தியைத் தருகின்ற **ஞான பூமிகள்** ஏழும் என்னவென்று கூறப்போகின்றேன் அதையும் கவனமாக கேட்பாயாக.

புலவர்புகழ் முதற்பூமி சுபேச்சை விசாரணை இரண்டாம் பூமியாகும்
நல தனுமானசி மூன்றாம் பூமி சத்துவாபத்தி நாலாம் பூமி
சொலும் அசம்சத்திப்பேரும் பதார்த்தாபாவனைப் பேரும் துரியப் பேரும்
மலினமறு மகனே ஐந்து ஆறு ஏழு பூமிகளா வகுத்தார் மேலோர். (149)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! ஏழு ஞான பூமிகளின் பெயர்களைக் கூறுகின்றேன். அவைகள்,

1. சுப இச்சை என்ற சுபேட்சை.
2. விசாரணை.
3. தனுமானசி
4. சத்துவாபத்தி
5. அசம்சத்தி
6. பதார்த்தாபாவனை
7. துரியம்

என இவ்வாறு களங்கமில்லாத ஏழு ஞான பூமிகளை வகுத்தவர்கள் மேலோர்.

துற்சங்க நிவர்த்தி வந்து சிவஞானம் விரும்புவது சுபேச்சையாகும்
நற்சங்க மொழி வினவி ஞானநூல் பழகல் விசாரணையாம் நம்பி
முற்சங்க ஈடனைகள் விடல் தனுமானசி இந்த மூன்றினாலும்
சற்சங்க மனதில் உண்மை அறிவு உதித்தல் சத்துவாபத்தி தானே. (150)

## தெளிவுரை:-

மகனே! பல்வேறு பிறவிகளுக்கு காரணமான அறியாமையை விலக்கி, மூடர்களுடைய பழக்க, வழக்கங்களில் இருந்து விடுபட்டு, ஆத்ம ஞானத்தை அடைந்து, அறிவால் உயர்ந்த, நல்லவர்களான சாதுக்களுடைய தொடர்புகளை உண்டாக்கி, அவர்களின் மூலமாக பிரம்ம ஞானத்தை அடைய விரும்பம் கொண்டு, நிலையான மகிழ்சியைக் கொடுக்கக்கூடிய மோக்ஷத்தின் மீது ஆசை உண்டாவதே '**சுப இச்சை**' என்ற "**சுபேச்சை**"ஆகும்.

அத்தகைய உயர்ந்த நற்பண்புகளைக் கொண்ட பிரம்ம ஞானிகளான சாதுக்களின் நட்பினால், சாஸ்திர விசாரங்களில் ஈடுபட்டு, மோக்ஷத்துக்கு அழைத்து செல்லக் கூடிய மிக உயர்ந்த வேதாந்த நூல்களான உபநிஷதங்களை கற்று, அதில் உள்ள மகாவாக்கிய உபதேச விசாரத்தை மேற்கொள்வது என்பதே, "**விசாரணை**" எனப்படும்.

மண் ஆசை, பெண் ஆசை, மற்றும் பொன் ஆசை என்ற இந்த மூன்று ஆசைகளே, மற்ற அனைத்து

ஆசைகளுக்கும் மூலமாக இருப்பதினால், இதுப்போன்ற ஆசைகள் கொண்டவர்களின் அற்ப சங்கமத்தை (தொடர்பை) விட்டு, விலகுவது என்பது "**தனுமானசி**" எனப்படும்.

மேற்கண்ட ஞான பூமிகளான சுபேச்சை, விசாரணை மற்றும் தனுமானசி ஆகிய இந்த மூன்றினாலும், தீயவர்களின் தொடர்பை விடுத்து, நல்லவர்களான சாதுக்களின் நட்பைக் கொண்டு, இவர்களது உபதேசத்தினால் சித்த சுத்தி ஏற்பட்டு, அதன்பிறகு கேட்டறிந்த சாஸ்திர விசாரத்தினால் அடைந்த தெளிவினால், தன் உண்மை சொரூபத்தை அறிந்த அறிவு "**சத்துவாபத்தி**" எனப்படுகிறது.

தத்துவத்தின் மனம் உறைத்து மித்தை எலாம் மறத்தல் அசம் சத்தியாகும்
அத்துவிதானந்தம் வரும் திரிபுடி போம் பதார்த்தாபாவனை அது ஆகும்
வத்துநிலை இருந்தபடி இருந்த மவுனசுபாவம் துரியமாகும்
இத்துரிய பூமியை முன் துரியாதீதப்பதம் என்ற அதுவும் கேளாய். (151)

## தெளிவுரை:-

தத்துவ விசாரத்தினால் தன் உண்மை சொரூபத்தை அறிந்து, மனம் திடமாகி, விசய சம்பந்தங்களில் இருந்து விடுபட்டு, காணும் அனைத்தையும் **மித்யா** என்ற புரிதலின் காரணமாக, அனைத்தையும் மறந்து, சங்கல்பங்கள் ஏதுமற்ற மனம் நிர்மலம் ஆவது "**அசம்சத்தி**" எனப்படுகின்றது.

காண்பவன், காட்சி, காணப்படும் பொருள் என்ற திரிபுடியானது நீங்கி, அனைத்தும் ஒன்றென உணர்ந்து, அந்த ஏகாந்த பிரம்மத்தில் ஒன்றிய, இரண்டற்ற அத்வைத ஆனந்தத்தை அடைவது "**பதார்த்தாபாவனை**" எனப்படும்.

அந்த பரிபூரண பரப்பிரம்மத்தில் பிரிவற்று ஒன்றாகி, கைவல்ய மோக்ஷத்தை கைப்பற்றிய முழுமையான திருப்தியுடன், பூரணமான அமைதியுடன், பரமானந்த மௌனத்தில் பரம சுகமாய் இருக்கின்ற சுபாவமே "**துரியம்**" எனப்படும். இந்த துரியம் என்ற ஏழாம் பூமியையே "**துரியாதீதம்**" என்றும் கூறலாம்.

முற்புவி மூன்றினும் உலகம் தோன்றுதலால்
சாக்கிரமாம் மூன்றற்கு அப்பால்
சொற்பனமாம் அதுவும் மெள்ள நழுவும்
ஐந்தாம் பூமியே சுழுத்தியாகும்
அற்புதமாம் சுகானுபவம் மிகும் ஆறாம்புவி
துரியம் அதற்கு அப்பால் ஒர்
கற்பனை இலாத இடம் அதீதம் என்று
மௌனமாக் காட்டும் வேதம். (152)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! முதல் மூன்று பூமிகளான சுபேட்சை, விசாரணை மற்றும் தனுமானசி ஆகியன மூன்றும் விழிப்பு நிலை அனுபவத்தில் அறியப்படுவதால், இதனை '**சாக்கிரம்**' எனப்படுகின்றது.

அதுவே, நான்காவது பூமியாகிய சத்துவாபத்தியில் வளர்கின்ற வாசனைகளை விழிப்பு நிலை அனுபவம் போன்று, பற்றில்லாமல் அனுபவிப்பதினால், அதை '**சொப்பனம்**' எனப்படுகின்றது.

அறிதல் இல்லாமல், அறியாமையுடன்கூடி, நாம, ரூபங்கள் தோன்றாத, ஆனந்த அனுபவத்தை மட்டும் அனுபவிக்கின்ற அசம்சத்தி என்ற ஐந்தாம் பூமியே '**சுழுத்தி**' எனப்படுகின்றது.

அற்புதமாக அளவிட முடியாத சுகத்துடன் கூடிய பேரானந்த உணர்வு பொருந்திய, ஆறாம் பூமியாகிய பதார்த்தாபாவனை என்பதே '**துரியம்**' என்றும், அதற்கு அப்பால் எந்த விதமான மனோ விகாரங்களுக்கும் இடமளிக்காத, கற்பனைக்கும் எட்டாத, கற்பகத் தளிராகிய மௌனத்தில், அதீத அறிவு மட்டும் பிரகாசிக்கின்ற ஏழாம் பூமியாகிய துரியத்தை '**துரியாதீதம்**' என்று வேதம் காட்டுகின்றது.

**முதல் மூன்று பூமிகள்** - சாக்கிரா அவஸ்தை (நனவு).
**நான்காம் பூமி** - சொப்பன அவஸ்தை (கனவு).
**ஐந்தாம் பூமி** - சுழுத்தி அவஸ்தை (உறக்கம்).
**ஆறாம் பூமி** - துரிய அவஸ்தை (பேருணர்வு).
**ஏழாம் பூமி** - துரியாதீத அவஸ்தை (பேரறிவு).

ஒருவன் நனவு, கனவு, உறக்கம் என்று மாறி, மாறி மூன்று அவஸ்தைகளிலும் தினமும் ஈடுபடுகின்றான். அவன் நனவு நிலையில் வெளிச்சத்தில் இருந்த பொழுது, இந்த உடல், உலகம் அவனுக்கு வெளிப்படுகின்றது.

அவனே, இருளில் இருக்கும் பொழுது, இந்த உடல், உலகம் அவனுக்கு வெளிப்படையாகத் தெரியவில்லை. ஆனால், அவனிடம் உள்ள மனம், புத்தி, சித்தம் மற்றும் அகங்காரம் போன்ற அந்தகரணங்கள் வெளிப்படுகின்றன.

இவ்வாறே, கனவில் அவன் மனமானது புதிய உலகை படைத்துக் கொள்கின்றது. அவனது கனவு நீடிக்கும் வரை அந்தப் புதிய உலகம் உண்மை என்று அவனால் அனுபவிக்கப்படுகின்றது.

அப்படிப்பட்ட அந்த கனவு உலகமானது, இதுவரை அவன் வாழ்ந்த இந்த நனவு உலகத்தை அழித்து விடுகிறது.

அவனே, ஆழ்ந்த உறக்க நிலையில் இருக்கும் பொழுது, அந்தக் கரணங்கள், இந்த பரு உடல், மற்றும் அவன் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற இந்த உலகம் என எதுவுமின்றி, ஒன்றுமே தோன்றாத **சூனியம்** மட்டும் விளங்குகின்றது.

அந்த ஆழ்ந்த உறக்கத்தில் கனவு, நனவு என்கின்ற இரண்டு உலகங்களும் அழிந்து விடுகின்றன.

அவன் எந்த உலகத்தில் இருக்கின்றான் என்பதை அவனாலேயே அறிய முடியாத அறியாமை மட்டும் அங்கு இருக்கின்றது.

அத்தகைய அறியாமை மட்டும் விளங்குகின்ற ஆழ்ந்த உறக்க நிலையிலும் கூட, ஆனந்தமாக உறங்கும் அவனுள்ளே, உறங்காமல் ஒன்று மட்டும் விழித்துக் கொண்டு, "**நான் இருக்கின்றேன்**" என்று தன்னை வெளிப் படுத்துகின்றது.

அதுவே, **பேருணர்வு, பேரறிவு, சாட்சி, பிரம்மம்** என்று பலவாறாக அழைக்கப்படுகின்றது.

அதனால்தான், அவன் விழித்து எழுந்தவுடன் எனக்கு எதுவுமே தெரியவில்லை. இருப்பினும், நான் சுகமாகத் தூங்கினேன் என்று கூறுகின்றான். ஆகவே, ஒன்றுமே தெரியாத ஆழ்ந்த உறக்க நிலையில்கூட, அந்தப் பேருணர்வு மட்டும்தான் சாட்சியாக இருக்கின்றது.

மூன்று அவஸ்தைகளையும் மூன்று விதமாக அனுபவித்தவன் தனித்தனியான ஆள் இல்லை. அந்த ஒரே பேருணர்வுதான் மூன்று அவஸ்தை நிலைகளிலும் பொதுவாக இருந்தது.

அத்தகைய அந்தப் பேருணர்வு உண்ணுவதில்லை, உறங்குவதில்லை, பிறப்பதில்லை. இறப்பதில்லை இவற்றிற் கெல்லாம் சாட்சியாக மட்டுமே, என்றும் இருந்து வருகின்றது. இதைத்தான் "**துரியம்**" எனப்படுகின்றது

இதற்கு வெளியாக வெளியே ஒன்றுமில்லை. ஏனெனில், அதுவே வெட்ட வெளியாக இருந்து, அனைத்தையும் அறிகின்ற அறிவாக எல்லா இடங்களிலும் பரவி இருக்கின்றது. அதையே "**துரியாதீதம்**" எனப்படுகிறது.

எனவே, இது சூக்ஷுமமான வெளி. இது எப்பொழுதும் தன்னைத்தானே விளக்கிக் கொண்டிருப்பதால், இது மட்டுமே உள்ளது உள்ளபடி வெளியாகின்ற வெளி.

மற்ற ஜட ஆகாசம் போன்ற ஆகாய வெளியெல்லாம் இதற்குள் அடங்குகின்ற வெளி. மனிதன் செய்கின்ற ஆத்ம சாதனங்கள் அனைத்துமே, இந்த துரியத்தினுள் தன்னால் கற்பித்துக் கொள்ளப்பட்ட கற்பனை சொரூபங்களை எல்லாம் புதைத்து ஒழித்து விடுவதற்காகவே ஆகும்.

துரியமானது எதிலும் அடங்காதது, எதற்கும் கட்டுப் படாதது, கால, தேசம் முழுமையும் இதற்குள் ஒடுங்கி யுள்ளது. காலமும், தேசமும் உண்டாவதற்குக் காரணமாக இருக்கின்ற, கற்பிதமான மனதைக் கடந்து, மகத்தான **துரியம்** என்று அழைக்கப்படுகின்ற அந்த **பேருணர்வில்** ஒடுங்கி விடுதற்குத்தான், அனைத்து விதமான கர்மங்களும், யோகங்களும், ஞானமும் தேவையாகும்.

ஆகவே, ஒன்றேயான அந்த பரமாத்மாவிற்கு வேறாக, தன்னை பாவித்துக் கொண்டிருக்கின்ற ஜீவாத்மா, துரியத்தில் தன்னை முழுமையாகக் கரைத்துக் கொள்வதே மகத்தான மனிதப் பிறவியின் பயன் ஆகும்.

துரிய நிலந்தனைத் துரியாதீதம் எனின் மயக்கம்
என்று கருதி மேலோர்
அரியதொரு விதேகமுத்தி அதீதம் என்பார் அது
கணக்கில் ஆறாம் பூமி
மருவு சுழுத்தியில் காட்சி சுழுத்தி என்பார் என்பது
நீ மனதில் கொள்வாய்
பெருமைதரும் ஞானபூமியின் விகற்பம் இன்னம்
உண்டு பேசக் கேளாய். (153)

## தெளிவுரை:-

மகனே! மேலும், இந்த துரிய பூமியை துரியாதீதம் என்று கூறுவதை சிலர் குழப்பிக்கொண்டு, அதீதமான அரியதொரு துரியாதீதத்தில், அதாவது, விதேக முக்தியில் இந்த பேருணர்வு நிலையை அனுபவிப்பது எவ்வாறு சாத்தியம் என்று கருதி மயங்குவர்.

அதாவது, உடல் கொண்ட ஜீவன் முக்தர்கள் மட்டுமே, இந்த உணர்வை அனுபவிப்பது சாத்தியம் என்றும் உடலற்ற விதேக முக்தர்களுக்கு இந்த பேருணர்வு உண்டாவது சாத்தியமில்லை என்பது அவர்களது ஐயம்.

பொதுவாக, முன்பு கூறப்பட்ட பாடலில், முதல் மூன்று பூமிகள் சாக்கிரம் எனவும், அதற்கு அடுத்த நான்காம் பூமி சொப்பனம் எனவும், ஐந்தாம் பூமி சுழுத்தி எனவும், திரிபுடி நிலையைக் கடந்த சுகானுபவத்தை தருவது ஆறாம்

பூமியாகிய “**பதார்த்தாபாவனை**” எனவும், ஏழாம் பூமி துரியம் எனவும் கூறி, அதற்கு அப்பால் ‘**அதீதம்**’ என்ற “**துரியாதீதம்**” உள்ளது, அதை மௌனமாக வேதம் காட்டுகின்றது என்கின்றது. இதில், **மௌனம்** என்பது **சித்** (அறிவு) என்று அறிய வேண்டும்.

இதில் ஐந்தாம் பூமியான சுழுத்தியுடன், ஆறாம் பூமியான பதார்த்தபாவனை என்பதை, மீண்டும் சுழுத்தியுடன் இணைத்து மருவியுள்ளதாலும், ஏழாம் பூமியை துரியாதீதம் என்று கூறாமல், துரியம் என்று கூறுவதாலும், இந்த வேறுபாடுகளை நீ மனதில் கொண்டு, அதீதமான துரியாதீதத்தில், அரியதான விதேக முக்தியில் பேருணர்வு நிலை என்பது, பேரறிவு நிலையாவது சாத்தியம் எனப்படுகின்றது. இத்தகைய பெருமை தரும் ஞான பூமிகளின் வேறுபாடுகள் இன்னமும் உண்டு. அவற்றையும் கேட்பாயாக.

## குறிப்பு:–

### இந்த பேருணர்வு அனுபவம் எங்கே நடக்கின்றது?

நாம் ஒரு மலைப்பகுதியில் மிகவும் ரம்மியமான இடத்தில் அமர்ந்திருக்கிறோம். மாலை நேரம். சுற்றிலும் மரங்கள், மலைகள். காற்று மெல்ல வீசிக்கொண்டிருக்கிறது. மேகங்கள் மலைகளின் மீது மோதியபடி மிதந்து செல்கின்றன. வானம் விரிந்திருக்கின்றது. பறவைகளின் கூவல்கள் மெல்லியதாக கேட்டுக்கொண்டிருக்கிறது.

நாம் அந்த இடத்தில் இருப்பதனால்தான், அவற்றை எல்லாம் பார்ப்பதனால்தான் அந்த அனுபவம் நிகழ்கின்றது.

நாம் நம்முடைய புலன்களின் வழியாக எல்லாவற்றையும் அறிகின்றோம். மனதின் வழியாக அந்தப் பொருள்களை அடையாளம் கண்டுகொள்கின்றோம்.

நம் அறிவுணர்வின் விளைவாகவே அந்த அனுபவம் நமக்குக் கிட்டுகின்றது.

அந்தக் கணம், அந்த அனுபவம் நிகழ்வது நம் உணர்வுவெளியில்தான்.

அந்த உணர்வுதான் '**சித்**'.

வெளிதான் '**அம்பலம்**'.

உணர்வுவெளியைத்தான் "**சிற்றம்பலம்**" என்கின்றோம்.

உணர்வுவெளியில்தான் இந்த உலகம் இருக்கின்றது.

உலகம் என்பது ஒரு இடமில்லை. அது ஓர் அனுபவம். அதாவது, பொதுவாக, நாம் இந்த உலகத்தில் இருக்கின்றோம் என்று நம்புகின்றோம். ஆனால் உலகம்தான் நமக்குள் இருக்கின்றது.

நம் உணர்வு வெளியில் உலகம் எழுகின்றது, இருக்கின்றது, அழிகின்றது. ஆனால், உணர்வு வெளி எப்போதும் இருக்கின்றது.

இந்த உணர்வு வெளியைத்தான் "**சிதாகாசம்**" என்கின்றோம்.

பெரியவர்கள் **மகாகாசம், சிதாகாசம், பிரேமாகாசம், பரமாகாசம்** என்று வகைப்படுத்தி வைத்திருக்கின்றார்கள்.

**மகாகாசம்** என்பது ஐம்பூதங்களாலான பௌதிக உலகம்.

**சிதாகாசம்** என்பது உணர்வுவெளி.

**பிரேமாகாசம்** என்பது அன்பின் எல்லையற்ற விரிவு.

**பரமாகாசம்** என்பது அனைத்தையும் கடந்த, அனைத்தையும் தன்னுள் அடக்கிய முதலும் முடிவுமற்ற பரப்பிரம்மம்.

முன் நிலங்கள் ஏறிய மூவரும் அப்பியாசிகளாம் முத்தரல்லர்
பின் நிலங்கள் வரன் வரீயான் வரிட்டன் எனும் சீவன் முத்தர் பேதமாகும்
சொன்ன நடுப்பூமி வந்த ஞானிகளே பிரமவித்தாம் தூயமுத்தர்
இன்னமும் அப்பூமிகளின் பெருமைதனை நீ அறிய யான் சொல்வேனே.
(154)

## தெளிவுரை:-

மகனே! முன்பு கூறிய சுபேச்சை, விசாரணை, தனுமாசி ஆகிய இந்த மூன்று பூமிகளை ஏறிய மூவரும் அப்பியாசிகள் (பயிற்சி செய்பவர்கள்) எனப்படுவார்கள்.

இதில், **சுபேட்சை (முதல் பூமி)** - துற்சங்கத்தை நீக்கி மோக்ஷத்தை அறிய விருப்பம் உண்டாதல்.

**விசாரணை (இரண்டாம் பூமி)** - சாதுக்களை அடைந்து, அவர்கள் மூலமாக சாஸ்திர விசாரம் மேற்கொள்வது.

**தனுமானசி (மூன்றாம் பூமி)** - விசாரத்தின் மூலமாக மெய்ப்பொருளை அறிந்து ஆசைகளை நீக்குவது.

இந்த மூன்று பூமிகளை அடைந்தவர்கள் அப்பியாசிகள் எனலாம். இவர்கள் சீவன் முக்தர்கள் அல்லர்.

பின்பு கூறப்பட்ட பூமிகளான அசம்சத்தி, பதார்த்த பாவனை, துரியம் என்ற மூன்று பூமிகளை அடைந்தவர்கள் **வரன், வரீயான், வரிட்டன்** எனும் சீவன் முத்தர் ஆவார்கள்.

இவர்களில் வேறுபாடுகள் உண்டு என்று ஏற்கனவே அறிந்துள்ளோம்.

**அசம்சத்தி (ஐந்தாம் பூமி)** - மித்யா என்ற புரிதலின் காரணமாக, அனைத்தையும் மறந்து, சங்கல்பங்கள் ஏதுமற்ற மனம் சத்தியத்தில் திடமாகி, பொய்மைகளை விட்டு விலகுவது.

**பதார்த்தபாவனை (ஆறாம் பூமி)** - காண்பான், காட்சி, காணப்படும் பொருள் என்ற திரிபுடி நிலை மாறி, ஒன்றேயான அத்வைத ஆனந்தம் உண்டாதல்.

**துரியம் (ஏழாம் பூமி)** - பரப்பிரம்மத்தில் ஒன்றி, எப்பொழுதும் அதன் அமைதியில் மௌனமாக இருத்தல்.

அடுத்து, நடுவில் கூறிய '**சத்துவாபத்தி**' என்ற பூமியை அடைந்த ஞானிகளே "**பிரம வித்து**" எனப்படுவர்.

**சத்துவாபத்தி (நான்காம் பூமி)** - சாஸ்திர விசாரத்தினால் அடைந்த தெளிவினால், தன் உண்மை சொரூபத்தை அறிந்தவர்கள்.

இந்த பிரம்ம வித்து என்ற ஞானிகளே தூய முக்தர்கள் எனப்படுகின்றனர். இதுபோன்று, இன்னமும் இந்த பூமிகளின் பெருமைதனை நீ அறிய நான் கூறுவேனே.

நாலாம் பூமியில் வரும்முன் மூன்று பூமியும் அடைந்து நடந்து மாண்டோர்
மேலான பதம் அடைந்து பிறந்து மெள்ள மெள்ள வந்து வீடுசேர்வார்
மாலான பவத்தில் விழார் முதற்பூமி கிடைப்பதுவே வருத்தம் மைந்தா
காலான முதற்பூமி கைவந்தால் முத்தியும் கை வந்ததாமே. (155)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! நான்காம் பூமியான சத்துவாபத்தி என்ற பூமியை அடைவதற்கு முன்னதாகவே முதல் மூன்று பூமிகளை அப்பியாசம் செய்து வருகின்றவர்கள் மரணத்தை தழுவினர் எனில், அவர்கள் மேலான பதம் என்கின்ற சொர்கம் போன்ற சுக போகங்களை அனுபவித்து முடித்து, மீண்டும் பிறந்து, காலப்போக்கில் மெதுவாக மோக்ஷம் என்ற வீடுபேற்றை அடைவர்.

இத்தகைய அப்பியாசிகள் அறியாமை மயக்கத்தை கொடுக்கின்ற இழி பிறவிகளுக்கு வந்து பிறக்க மாட்டார்கள்.

ஆனால், துஷ்டர்களின் சகவாசங்களை விடுத்து, நல்லவைகளை அடைந்து, மோக்ஷத்தை அடைய வேண்டும்

என்ற ஆசையுடன் முதல் பூமியாகிய **சுப இச்சை** என்ற ‘**சுபேட்சை**’ பூமியை அடைவது மிகவும் கடினம் மகனே.

ஒருவருக்கு அனைத்து தடைகளையும் மீறி, முதல் பூமியை அடையக்கூடிய ஆசை வந்துவிட்டால், அவருக்கு ‘**முக்தி**’ என்ற வீடுபேறு கிடைப்பது நிச்சயம்.

இப்புவியில் இஞ்ஞானபூமி ஒன்றில் இரண்டில் அடைந்திருந்தாரானால்
அப்புருடர் மிலேச்சராகிலும் முத்தர் குருபாதத்து ஆணை மெய்யே
தப்புரை என்றவர் கெடுவார் நடுவான மறைகளை நீ சங்கியாதே
செப்பும் மொழிவழி திடமாய் அகம்பிரமம் என்றிருந்து தெளிந்திடாயே. (156)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! இன்னும் இந்த ஞான பூமிகளின் பெருமையைக் கூறுகின்றேன் கேட்பாயாக.

இந்த ஞான பூமிகளில் முதல் பூமியான சுபேட்சை மற்றும் இரண்டாம் பூமியான விசாரணை என்ற இரண்டையும் அடைந்த அப்பியாசிகளான பயிற்சி செய்கின்றவர்கள் எத்தகைய மோசமான குணங்களில் அல்லது சூழ்நிலைகளில் பிறந்து, இதுவரை வாழ்ந்து வந்தவர்களானாலும், இந்த இரண்டு பூமிகளையும் கடந்து விட்டார்கள் எனில், அவர்கள் முக்தர்கள் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

எனவே, சத்குருவின் பாதம் பணிந்து, அவர் மீது ஆணையிட்டு கூறுகின்றேன். இது சத்தியம். இதை தவறு என்று கூறுபவர்கள் கெடுவார்கள்.

ஏற்றத்தாழ்வுகள் அற்ற நடு நிலையான சாஸ்திரம் கூறுகின்ற சுருதி வாக்கியங்களில், நீ சந்தேகம் கொள்ளாதே மகனே.

சாஸ்திரத்தின் மகா வாக்கிய உபதேசத்தின்படி "**நான் பிரம்மம்**" என்பதை அறிந்து, தெளிவடைந்து அதில் திடமாய் இருப்பாயே.

பொல்லாத மிலேச்சருக்கும் விதேகமுத்தி தரும் ஞான பூமியென்று
நெல்லாகி முளைக்கும் எனைத் தண்டுலமாக்கிய குருவே நீர் சொன்னீரே
இல்லாளும் குடும்பம் விட்டுச் சன்னியாசம் புகுந்தே ஏகாங்கியானோர்
அல்லாமல் முத்தி பெறார் என்று சிலர் சொல்லும் மயக்கம்
அகற்றுவீரே. (157)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! பொல்லாத மனிதர்களுக்கும், இழிவான மனிதர்களுக்கும்கூட விதேக முக்தியைத் தருகின்ற ஞான பூமிகளை மிக அழகாக எடுத்துரைத்தீர்கள்.

மேலும், உமியால் மூடப்பட்ட நெல் மணிகளிலிருந்து, அந்த உமிகளை நீக்கி, அரிசிகள் ஆக்கிக் கொடுத்து, அனைவரும் உண்டு பசியாறுவது போன்று, அற்ப ஆசைகள் என்ற அறியாமைகளினால் மூடப்பட்டிருந்தவனை, ஆத்ம ஞானத்தைக் கொடுத்து, பிறவிப் பிணி தீர்த்த சத்குருவே!

கட்டிய மனைவியையும், குடும்பத்தையும் விட்டு, சந்நியாஸம் எடுத்துக் கொண்டு தனியாகக் கிளம்பியவர்கள் மட்டுமே முக்தியை பெறுவார்கள் என்றும், மற்றவர்கள் முக்தியை அடைய மாட்டார்கள் என்றும் சிலர் கூறுகின்றார்களே, அதன் சந்தேகத்தை அகற்றுவீர் ஐயா.

**குறிப்பு:–**

(உமியை நீக்கி விட்டால், நெல் முளைக்க முடியாது. அவ்வாறு, மீண்டும் பிறவி முளைக்காமல் இருக்க இந்த உவமை கூறப்பட்டது.)

சிட்டர்புகழ் மகனே நீ சங்கித்த சங்கை நன்று தெரியக் கேளாய்
கட்டழியும் துறவு நால்வகையாகும் அவைகளுக்கு அங்கு ஆகும் பேர்கள்
பட்டதுயர் கெடும் குடீசகம் வெகூதகம் அஞ்சம் பரம அஞ்சம்
விட்டகலும் துறவுக்கு விராகம் காரணமன்றி வேடமன்றே. (158)

## <u>தெளிவுரை:-</u>

வேத, வேதாந்தங்களை கற்றறிந்த பெரியோர்கள் புகழ்கின்ற மகனே! நீ கேட்ட சந்தேகம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அருமை! அதைப்பற்றி தெரிந்துக் கொள்ள கேட்பாயாக.

பந்தத்தை அழிக்கும் துறவு என்பது நான்கு வகைப்படும். அவைகள்,

1. குடீசகம்
2. வெகூதகம்
3. அஞ்சம்
4. பரம அஞ்சம்

என்பனவாகும்.

இவைகளால், பிறவிப் பிணிக்கு காரணமான சம்சாரம் நாசமாகும்.

சந்நியாஸம் என்பது விருப்பு, வெறுப்பற்ற விவேகத்தினால் (ஞானத்தினால்) உண்டான "**வைராக்கியம்**" மட்டுமே ஆகும்.

இந்த விருப்பு, வெறுப்பற்ற வைராக்கியம் கொண்டு இருப்பவர்கள் எந்த உடையில் இருந்தாலும், எந்த திசையில் வாழ்ந்தாலும், எந்த சூழ்நிலையில் இருந்தாலும், அவரை '**சந்நியாஸி**' என்றே கருத வேண்டும்.

அதை விடுத்து, காவி உடைகளை மட்டுமே அணிந்துக்கொண்டு இருப்பவர்களையும், சிலர் போடும் காவி வேடங்களைவைத்தும் "**சந்நியாஸி**" என்று கூறுதல் சந்நியாஸ தர்மம் ஆகாது.

**நான்கு வகை சந்நியாஸ வாழ்க்கை முறைகள்**

விருப்பு, வெறுப்புகள் இன்றி, வீட்டை விட்டு வெளியே செல்ல சக்தியற்று, தன்னுடைய குடும்பத்தில் இருந்துக் கொண்டு, வெளியே சென்று பிச்சை எடுத்து உண்ண விரும்பாமல், தன் மகன் உதவியினாலும், சுற்றத்தார்கள் உதவியினாலும், தன்னுடைய வயிற்றுப்பசியை மட்டும் தீர்த்துக்கொண்டு, வேறு எதையும் விரும்பாமல், தனியாக தனிக்குடிலில் வசித்து வருகின்ற வாழ்க்கை முறையை '**குடீசகம்**' என்று அழைக்கப் படுகின்றது.

இவ்வாறு, இவர்கள் தனிமையில் இருந்துக்கொண்டு, சாஸ்திர விசயங்களை **கேட்டல்** (சிரவணம்), கேட்ட விசயங்களைப் பற்றி **சிந்தித்தல்** (மனனம்), அடுத்து, அந்த சாஸ்திரங்களில் கூறப்பட்ட மகா வாக்கிய விசாரத்தினால் உண்டான ஞானத்தினால், தன் உண்மை சொரூபத்தை அறிந்து, அதில் எப்பொழுதும் **திடமாய் நிற்கின்ற** நடை முறையில் (நிதித்யாஸனம்) இருந்துக் கொண்டு, ஜீவன் முக்தர்கள் ஆகின்றனர். இவர்கள் "**குடீசகம்**" என்ற சந்நியாஸ வாழ்க்கை முறையை வாழ்கின்றவர்கள்.

இது, இன்றைய காலங்களில் தனியாக குடில் அமைத்து வாழ்வது என்பது, நடைமுறையில் சாத்தியம் இல்லை என்பதினால், ஒரே வீட்டில் தனியாக, தனி அறையில் இருந்துக்கொள்ள வேண்டியது எனலாம்.

இரண்டாவது வகையான சந்நியாஸிகள் வெளியே மற்றவர்கள் கொடுக்கின்ற உணவை பிச்சை ஏற்று உண்பதும், தொடர்ந்து ஒரு இடத்தில் தங்காமல், பல இடங்களுக்கு இடம் மாறி பிரயாணங்கள் மேற்கொள்வதும் என ஊர் ஊராக சுற்றி, திரிந்துக் கொண்டு இருப்பர்.

உண்ண உணவே கிடைக்காத சில இடங்களுக்குச் சென்றாலும், பழங்களையும், துளசி, வில்வம், பால், நெய் போன்றவைகளை மட்டுமே உணவாக உண்டு பசியாற்றிக் கொள்வதுப் போன்ற சில நியமங்களை இவர்களாகவே வகுத்துக் கொண்டு, தீவிர வைராக்கியத்தில் திடமாக

இருக்கின்றனர். இவர்களது இந்த வாழ்க்கை முறையினை "**வெகூதகம்**" எனப்படுகின்றது.

அடுத்து, மூன்றாவது சந்நியாஸ முறையான '**அஞ்சம்**' என்பதை அன்னப்பறவை என்றும், பிராணவாயு என்றும் தமிழ் மொழியில் பொருள் விளக்கம் கூறப்படுகின்றது.

இதில், அன்னப்பறவை என்றாலும், பிராணன் என்ற மூச்சுக்காற்று என்றாலும், இந்த '**அஞ்சம்**' என்பதை "**ஹம்ஸம்**" என்று பொருள் கொள்ளப்படும்.

இங்கு, இந்த சந்நியாஸ வாழ்க்கை முறையை நம் முன்னோர்கள், "**சப்தமில்லாத சப்தம்**" என்கின்றனர்.

மூச்சை உள்ளே இழுக்கும் போது, சுவாசம் "**ஸம்**" என்ற சப்தத்துடன் போவதையும், மூச்சு வெளியேறும்போது, அது "**ஹம்**" என்ற சப்தத்துடன் வெளியேறுவதையும் கவனிக்க முடியும்.

இதை "**ஹம்ஸம்**" எனக் கூறுகின்றனர். இதையே, இனி ஒருவிதமாக "**ஸோ**", "**ஹம்**" என்றும் கூறுவதுண்டு.

இவ்வாறு, இந்த மூச்சில் உண்டாகும் அதன் சப்தத்தில் தொடர்ந்து லயித்திருக்க பரவச நிலை உண்டாகும். இதனையே செபிக்காத மந்திரம், பேசாத மந்திரம் எனப் பலவாறாகக்

கூறுவர். இதனை ‘**அஜபா ஜெபம்**’, ‘**அஜபா காயத்திரி**’ என்றும் கூறுவதுண்டு.

ஔவையார் அருளிய ‘**விநாயக அகவல்**’ பாடலில் அசபை பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றது.

“குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்”

என, தொடர்ந்து இந்த பயிற்சியினை செய்து வந்தால், மனம் பரவச நிலையை உணர ஆரம்பிக்கும். அவர்களுக்கு பிராணன் மட்டுமே உணவாகவும் மாற ஆரம்பிக்கும்.

இதுப்போன்ற பயிற்சியினால், இந்த ஸ்தூல சரீரத்தை காப்பாற்றிக் கொண்டு, மூச்சுக் காற்றையே உணவாக உண்டு, பல காலங்கள் உயிர் வாழுகின்ற தீவிர வைராக்கியம் உடைய ஒரு பிரிவினரை ‘**அஞ்சம்**’ என்ற “**ஹம்ஸ**” சந்நியாஸிகள் வகையில் சேர்க்கின்றனர்.

இது இன்றைய காலங்களில் நடைமுறைப்படுத்துவது என்பது மிகவும் சிரமம். இருப்பினும், சிலர் குடும்பத்தை பிரிந்து, இதுபோன்ற பயிற்சிகளைப் பயின்று, இமயமலைச் சாரலில் கடும் பணியிலும், உணவுகளை விரும்பாமல் காற்றை மட்டும் சுவாசித்து உயிர் வாழ்கின்றனர்.

இவர்களது சாதனைக்கு பலன் இந்த பூ உலகில் கிடைக்காமல், உடலை விட்ட பிறகு, சத்திய லோகத்திற்குச் சென்று, அங்கு பிரம்மாவிடம் பிரம்ம ஞானத்தை கற்றறிந்து மோக்ஷத்தை அடைவர் என்று சாஸ்திரம் கூறுகின்றது.

அடுத்து, '**பரம அஞ்சம்**' என்பது, "**பரமஹம்ஸம்**" என்று பொருளில் கூறப்படுகின்றது. இவர்களது வாழ்க்கை முறையே இந்த பூ உலகில் அடையக்கூடிய மிக உன்னதமான **ஜீவ - பிரம்ம ஐக்கிய நிலை** எனலாம்.

மனிதப்பிறவி கிடைத்தும், அனைவருக்கும் இது சாத்தியமில்லை. பல கோடி ஜென்மங்களில் செய்த புண்ணியத்தின் பலனாக மட்டுமே, இந்த வாழ்க்கைப் பாதை தெரிய ஆரம்பிக்கும்.

இந்த பாதையைத் தெரிந்துக் கொண்ட இவர்கள் பிற உயிர்களுக்கு தீங்கு இழைக்காமல், எது நிலையானது? எது நிலையற்றது? என்ற நித்ய, அநித்ய வஸ்து விவேகம் உண்டாகி, அதனால், விசாரம் மேற்கொண்டு, தாங்கள் வாழுகின்ற அற வாழ்க்கையின் பலனாக, மோக்ஷத்தின்மீது ஆசை உண்டாகி, முதல் பூமியாகிய **சுப இச்சை** என்ற '**சுபேச்சை**' என்ற பூமியை முதலில் அடைவார்கள்.

அதன்பயனாக, இவர்களுக்கு ஜீவன் முக்தர்களின் தொடர்பு உண்டாகி, அவர்கள் வாயிலாக சாஸ்திரத்தின் இறுதிப்பகுதியான வேதாந்த விசாரங்களில் மனம் தீவிரமாக ஈடுபட்டு, **சிரவண, மனன, நிதித்யாஸனம்** மேற்கொண்டு, சித்த

சுத்தி உண்டாகி, அதில் கூறப்பட்ட மகா வாக்கியத்தின் பொருள் உணர்ந்து, தன் உண்மை சொரூபத்தை அறிந்துக் கொள்கின்றனர்.

அதன்பிறகு, எப்பொழுதும் அந்த சொரூபத்தை தியானித்து, மிக உயர்ந்த மூன்று குணங்களைக் கொண்ட '**சத்யம், ஞானம், அனந்தம்**' என்ற ஈஸ்வரனாகவே இங்கு உடல் இருக்கின்றவரை, ஜீவன் முக்தர்களாக வாழ்கின்றனர்.

நாளடைவில் இவர்களது கடுமையான தவ வலிமையினால், பரப்பிரம்மத்தின் பரமானந்த நிலையில் குணங்களைக் கடந்த **குணாதீதன்** என்ற நிலைக்கு உயர்ந்து விதேக முக்தியை அடைந்து, பரமஹம்ஸர்களாக மாறி விடுகின்றனர்.

இவர்கள் ஜீவன் முக்தர்களாக வாழும்பொழுது, இந்த பூ உலகில் சனாதனதர்மம் வகுத்துக்கொடுத்த இல்லறத்திலும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். பிரம்மச்சாரியாகவும் வாழலாம், வானப்பிரஸ்தனாகவும் இருக்கலாம், பிறப்பால் ஆண் மகனாக பிறந்திருக்கலாம். அல்லது பெண் மகளாகவும் இருக்கலாம்.

சாஸ்திரம் வகுத்த தகுதியின் அடிப்படையில், ஜீவன் முக்தர்கள் ஆவதற்கு, எந்தவிதமான கட்டுப்பாடுகளும், கர்ம காரியங்களும், சடங்கு, சம்பிரதாயங்களும், ஜாதி, மத பேதங்களும், என எதுவும் இங்கு முக்கியமல்ல.

“**தன்னை உணர்ந்த தத்துவ ஞானி**”யாக இருக்கின்றானா? (இருக்கின்றாளா?) என்பது மட்டுமே, மிக முக்கியமான தகுதியாக கருதப்படுகின்றது.

இந்தத் தகுதியை அடைவது என்பது ‘**நான் யார்?**’ என்ற விசாரத்தின் மூலமாக மட்டுமே சாத்தியம். இந்த விசாரத்தின் வாயிலாக மட்டுமே, மனதை மேல் நிலைக்கு உயர்த்தி, தன்னை உணர்ந்த தத்துவ ஞானிகள் ஆகின்றனர். அவனே மிக உயர்ந்த சந்நியாஸி. அவனே ஜீவன் முக்தன், அவனே பிரம்ம வித்து, அவனே ‘**பரம அஞ்சம்**’ என்ற “**பரமஹம்ஸன்**” ஆகின்றான்.

மந்தமும் தீவிரமும் தீவிரதரமும் என மூன்று வகை விராகம்
வெந்துயரம் வரும்பொழுது குடும்பத்தை வெறுத்துவரும் விராகம் மந்தம்
இந்த உடலளவும் மனை தனம் வேண்டாம் எனவிடல் தீவிரம் என்பார்கள்
அந்தணன் நூல் மித்தை என விடல் அது தீவிரதரமாம் அறிந்திடாயே. (159)

## தெளிவுரை:-

மகனே! துறவி வாழ்க்கைக்கு வருவதற்கு காரணமான வைராக்கியம் மூன்று விதங்களில் உள்ளன. அவைகள், **மந்தம், தீவிரம், தீவிரதரம்** என மூன்று வகைப்படும்.

இதில், தன்னுடைய குடும்பத்தில், தொழில் ரீதியாக பொருளாதார கஷ்டம் வரும் பொழுதும், மனைவி,

குழந்தைகளால் பிரச்சனைகள் வரும் பொழுதும், அதனை சமாளிக்க முடியாமல், தற்காலிகமாக வாழ்க்கையின்மீது வெறுப்பு உண்டாகி, இந்த குடும்பத்திற்காக உழைத்தது போதும், இனி நிம்மதியாக இருக்க வேண்டும் என்று தன் சுய நலம் கருதி, துறவு மேற்கொள்வது "**மந்த வைராக்கியம்**" எனப்படும்.

அதுவே, தன்னுடைய இந்த ஸ்தூல சரீரம் மண்ணிற்கு போகின்றவரை இந்த மனைவி, மக்கள், மற்றும் செல்வம் வேண்டாம் என, தன்னுடைய மனதின் புரிதலினால் விட்டு விடுதல் "**தீவிர வைராக்கியம்**" எனப்படும்.

இதில், குடும்பத்தை துறந்து சாதுக்களை சந்தித்து, சாஸ்திரங்களை கற்று, அவைகளை விசாரம் செய்து, எது நிலையானது? எது நிலையற்றது? என்ற விவேகம் உண்டாகி, தன் சொரூபத்தை அறிந்துக் கொண்டதினால், தான் வாழுகின்ற இந்த உடலும், உலகமும் அநித்யம் (மித்யா) என்றும், தான் இறந்த பின் செல்ல விரும்பிய சொர்க்க லோகம், பிரம்மலோகம் போன்ற மற்ற லோகங்களும் நிலையற்றவைகள் என்பதை உணர்ந்து, இவைகள் அனைத்தையும் முழுமையாக துறப்பது "**தீவிரதர வைராக்கியம்**" எனப்படும்.

பாவி மந்த விராகத்தில் சந்நியாஸங்கள் ஒன்றும் பலித்திடாதே
தீவிரத்திறல் குடீசகமும் வெகூதகமும் என்று இரண்டு திறங்கள் உண்டாம்
தாவி நடந்திடத் திடமிலாதவர்க்கு குடீசகமும் சகங்கள் எங்கும்
மேவி நடந்திடத் திடமுள்ளவர்க்கு வெகூதகமும் என விதித்தார் மேலோர். (160)

## தெளிவுரை:-

இதில் மந்த வைராக்கியத்தில், துறவு மேற் கொண்டவனை சந்நியாஸி என்று கூற முடியாது. காரணம், அவனுக்கு வேறு ஏதேனும் வகையில், பொருட்செல்வம் கிடைத்தாலும், பெண்கள் சகவாசம் கிடைத்தாலும், துறவு வேடத்தை கலைந்து, மீண்டும் உலக போகங்களில் ஈடுபடுவான்.

அதுவே, தீவிர வைராக்கியத்தினால் துறவு வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் **குடீசகம், வெகூதகம்** என்ற இரண்டு வகை சந்நியாஸ வாழ்க்கை முறைகளில், அவர்களின் சூழ்நிலைக்கு தக்கவாறு, இரண்டில் ஏதேனும் ஒன்றை ஏற்றுக் கொள்வார்கள்.

தன் உடல், தன் குடும்பம், இந்த உலகம் என இவற்றின்மீது வெறுப்படைந்து, தீவிரமாக சந்நியாஸ வாழ்க்கையை மேற்கொண்ட இவர்களில், உடல் தளர்ந்து, நோய் வசப்பட்டு, தாவி நடந்திட சக்தியற்ற வயதானவர்கள்

‘**குடீசகம்**’ என்ற சந்நியாஸ வாழ்க்கை முறையை மேற் கொள்கின்றனர்.

இவர்கள் தாங்கள் தங்கி உள்ள இடத்திலேயே இருந்துக் கொண்டு, சாஸ்திர சிரவணம் மேற்கொண்டு, உலக விவகாரங்களில் ஈடுபடாமல் ஒதுங்கி இருந்துக் கொள்வர்.

அதுவே, தீவிர வைராக்கியத்தினால் துறவு வாழ்க்கையை மேற்கொண்ட சிறிய வயதினரும், பிரம்மச் சாரிகளும், உடல் திடம் உடையவர்களும் பல இடங்களுக்கு ஊர் ஊராகச் சுற்றி வாழுகின்ற ‘**வெகூதகம்**’ என்ற சந்நியாஸ வாழ்க்கை முறையை ஏற்று வாழ்கின்றனர்.

இவர்கள் பல மடங்களுக்கு சென்று, சாதுக்களைச் சந்தித்து, அவர்களிடம் சாஸ்திர சிரவணம் மேற்கொண்டு, உலக விவகாரங்களில் சிக்கிக் கொள்ளாமல், ஒதுங்கி இருந்து, பிறவிப் பயனை அடைய முயற்சி மேற்கொள்வர்.

இவ்வாறு, சான்றோர்கள் நம் சனாதன தர்மத்தில் சந்நியாஸ வாழ்க்கை முறைகளை வகுத்துக்கொடுத்துள்ளனர்.

## குறிப்பு:–

இந்த சந்நியாஸ வாழ்க்கை முறைகளைப்பற்றி, விரிவான விளக்கங்கள் 158 - வது பாடலின் விளக்க உரையில் இறுதியில் கூறப்பட்டுள்ளது.

இருவகை தீவிரதரத்தும் அஞ்சன் என்றும் பரமாஞ்சன் என்றும் சொல்வார்
வரும் அஞ்சனுக்கு முத்தி சத்திய லோகத்தன்றி வாராது என்பார்
பரமாஞ்சனுக்கு முத்தி இவ்வுலகில் ஞானத்தால் பலிக்கும் என்பார்
திரம் மருவும் பரமாஞ்சன் தானும் இரு வகையாகும் செப்பக் கேளாய். (161)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! தீவிரதர வைராக்கியம் என்பது இரண்டு வகைகளில் உள்ளது. இந்த தீவிர தர வைராக்கியத்தில் திடமாக இருக்கின்ற சாதுக்களை **அஞ்சன்** (ஹம்ஸன்) என்றும், **பரமாஞ்சன்** (பரமஹம்ஸன்) என்றும் கூறுகிறார்கள்.

இதில் அஞ்சன் என்ற ஹம்ஸ சந்நியாஸி மூச்சை உள்ளே இழுக்கும் போது, சுவாசம் "**ஸம்**" என்ற சப்தத்துடன் போவதையும், மூச்சு வெளியேறும்போது அது "**<u>ஹம்</u>**" என்ற சப்தத்துடன் வெளி வருவதையும், கவனிக்கின்ற **அஜபா மந்திர** ஜெபத்தை எப்பொழுதும் மேற்கொண்டு, இருப்பதினால், இவர்களுக்கு இந்த உலகம் அநித்யம் என்பது புரிந்து, எதன் மீதும் பற்று வைக்காமல், தீவிரதர வைராக்கியத்தினால் உலக விவகாரங்களில் இருந்து ஒதுங்கி பிராணனையே பிரம்மமாக பாவித்து பரம நிஷ்டையில் பரவசமாக வாழ்கின்றனர்.

இவர்களுக்கு முக்தி என்பது, இந்த உலகத்தில் உண்டாகாது. காரணம், இவர்கள் இறைவனை துவைத பாவத்தில் இவர்களுக்கு வேறாக பாவித்து, பக்தி செய்ததின்

பலனாக, இந்த சரீரத்தை விட்டவுடன், நான்முக பிரம்மா வசிக்கின்ற சத்திய லோகம் செல்கின்றனர் என்றும், அங்கு, இவர்களுக்கு சாஸ்திர உபதேசம் உண்டாகி, தன்னை உணர்ந்த தத்துவ ஞானிகளாக, தன் சொரூபத்தில் நின்று முக்தியை அடைவர் என்றும் சாஸ்திரம் கூறுகின்றது.

**குறிப்பு:–**

(உண்மையில் சத்திய லோகம் என்பது, இறந்தவுடன் உண்டாகும் என்று பலரும் கருதுகின்றனர். ஆனால், சாதகன் ஒருவன் நிஷ்காமிய கர்மாவாக செய்யும் செயல் விளைவுகளின் பயனாக, அவனுக்கு, இதே பூமியில், சத்ய சொரூபமான சத்குரு சாஸ்திரங்களை உபதேசித்து, அவனதுக்கு மோக்ஷத்தை அளிப்பார் என்று அறிய வேண்டும். அதைவிடுத்து, எங்கோ பிரம்ம லோகமோ, அல்லது சத்திய லோகமோ சென்று, பிரம்மா வகுப்பு எடுப்பார் என்று கற்பனையில் இருக்கக் கூடாது.)

இதில், பரமாஞ்சன் என்ற மற்றொரு வகை பரமஹம்ஸ சந்நியாஸிகள் இந்த உலகத்திலேயே சாஸ்திர சிரவண, மனன, நிதித்யாஸம் மேற்கொண்டு, அதில் உண்டான விவேகத்தினால் நான் யார்? என்ற விசாரணையில் ஈடுபட்டு, தன்னை அறிந்த தத்துவ ஞானிகளாக மாறி, தன் உண்மை சொரூபத்தை உணர்ந்து, ஜீவன் முக்தர்களாக பிராரப்த கர்மா முடியும்வரை வாழ்ந்து, இந்த பூத உடலை விட்டவுடன், விதேக முக்தர்களாக இறைவனுடன் இரண்டறக் கலக்கின்றனர்.

இவ்வாறு, இந்த **பரமாஞ்சன்** என்ற பரமஹம்ஸர் களிலும் இரண்டு வகையினர் இருக்கின்றனர். அவர்களைப் பற்றியும் கூறுகின்றேன் கேட்பாயாக.

சிஞ்ஞாசு ஞானவான் என்று இரண்டு பேர்கள் அவரில் சிஞ்ஞாசு
மெஞ்ஞான பூமியின் முன் மூன்று பூமியுள் நடக்கும் விவேகியானோன்
சுஞ்ஞானவான் என்போன் சீவன்முத்தி அடைந்திருக்கும் தூய மேலோன்
அஞ்ஞானம் அகலும் அந்தச் சிஞ்ஞாசும் இருவகையாம் அதுவும் கேளாய்.
(162)

## தெளிவுரை:-

மகனே! பரமாஞ்சன் என்பவர்களில் இருவகையினர் உள்ளனர். அவர்களில் ஒரு வகையினரை **“ஜிக்ஞாஸு”** என்றும், மற்றொரு வகையினரை **“ஞானி”** என்றும் அழைக்கின்றனர்.

### ஜிக்ஞாஸு

ஜிக்ஞாஸு என்பவர்கள் ஏழு ஞான பூமிகளில் சுபேச்சை, விசாரணை, தனுமானசி என்ற படி நிலைகளின் முறையே முதல் மூன்று ஞான பூமிகளை கடந்தவர்கள் ஆவார்கள்.

வேதாந்தத்தின் உள்ளே நுழைய விரும்புகின்ற ஒருவனுக்கு முதலில் உத்திர மீமாஸ்ஸை என்ற ஞான காண்டமான பிரம்ம சூத்திரத்தின் முதல் சூத்திரம் கூறுகின்ற உபதேசமே “**அதாதோ பிரம்ம ஜிக்ஞாஸா**” என்று துவங்குகிறது. இதன் பொருள் ‘**பிரம்ம ஞானத்தை தேடுபவனே**’ என்பதாகும்.

அவ்வாறு, பிரம்ம ஞானத்தை விரும்பி ஆசை கொள்வது, முதல் பூமி என்ற சுப இச்சை என்ற “**சுபேச்சை**” எனவும், இரண்டாவது பூமியான சாஸ்திர விசாரத்தினால் நான் யார்? என்று தன்னை அறிவது “**விசாரணை**” எனவும், மூன்றாவது பூமியில் விசாரித்து தன் சொரூபத்தை அறிந்து, அனைத்து ஆசைகளில் இருந்தும் விடுபடுவது, “**தனுமானசி**” எனவும், இந்த முதல் மூன்று ஞான பூமிகளைக் கடந்தவனே, “**ஜிக்ஞாஸு**” என்றும் கூறப்படுகின்றது. பரமாஞ்சன் என்ற பரமஹம்ஸர்களில் இவர்கள் ஒரு வகையினர் ஆகும்.

## ஞானி

அடுத்து, முதல் மூன்று பூமிகளையும் கடந்து, மற்ற நான்கு பூமிகளான சத்வாபத்தி, அசம்சத்தி, பதார்த்த பாவனை, மற்றும் துரியம் என்ற பூமிகளில் வசித்துக் கொண்டு, உயர் ஞானத்துடன் இருக்கின்ற தூய்மையான வர்களை “**ஞானிகள்**” என்று கூறப்படுகின்றது. இவர்களே ‘**ஜீவன் முக்தர்கள்**’ ஆகிய பரமஹம்ஸர்களில் மற்றொரு வகையினர் ஆகும்.

இதில், முதல் மூன்று பூமிகளை கடந்து, அறியாமைகளை அகற்றிய அற்புதமான "**ஜிக்ஞாஸு**" என்பவர்களிலும் இரண்டு வகையினர் உள்ளனர். அவர்களைப் பற்றியும் கூறுகின்றேன் கேட்பாயாக.

பந்த மனை துறந்து சிலர் அதிதிகளாய் இருந்து அடைவர் பரம ஞானம்
அந்தணர் மன்னவர் வணிகர் சூத்திரராய் இருந்து சிலர் அடைவர் ஞானம்
இந்த வகைச் சாத்திரத்தும் உலகத்தும் நடப்பது கண்டிருந்தும் மைந்தா
சிந்தனையின் மயக்கமென்னே சுருதி யுத்தி அனுபவத்தால் தெளிந்திடாயே. (163)

## தெளிவுரை:-

மகனே! சிலர் ஞானத்தை அடையும் ஆசைக் கொண்டு, முதல் பூமியான '**சுப இச்சை**' என்ற "**சுபேச்சை**" பூமியில் நுழைவதற்காக, மனைவி, மக்கள், சொத்து, சுகம் என்று அனைத்து பந்தங்களையும் துறந்து, யாருக்கும் இன்னார் என்று தன்னை தெரிந்துக்கொள்ள முடியாத அளவிற்கு தாடி, மீசைகளை வளர்த்துக்கொண்டு, பரதேசிகள் போன்ற தோற்றத்துடன் காணப்படுவர்.

இவர்கள் சாஸ்திரம் கற்றறிந்த சாதுக்களை நாடி, அவர்களுக்கு சேவைகள் பல செய்து, அவர்களால் உபதேசித்தப்பட்ட வேதாந்த பாடங்களில், விசாரம்

மேற்கொண்டு, தன் உண்மை சொரூபத்தை அறிந்து, மிக உயர்வான பரம ஞானத்தை அடைகின்றனர்.

இவர்கள் "**ஜிக்ஞாஸு**" என்று அழைக்கப்படுகின்ற ஒரு வகையினர் ஆகும்.

## குறிப்பு:—

(திதி என்றால் தெரிந்த அல்லது தெரிந்தவர் எனலாம். அதிதி என்றால் தெரியாத அல்லது தெரியாதவர் என்று பொருள். அதனால்தான் அன்றைய சான்றோர்கள் வீடு தேடி வருகின்ற முன், பின் அறிமுகமில்லாத அதிதிகளை, சாதுக்களாக பாவித்து வரவேற்று உபசரித்து உணவளித்து மகிழ்ந்தனர். இது நம்முடைய தர்மமாகவும் இருக்கின்றது.)

இரண்டாம் வகை ஜிக்ஞாஸுகள் சனாதன தர்மம் வகுத்துக் கொடுத்த வர்ணாசிரம தர்மத்தின்படி, பிராமணன், அரசன், வணிகர், மற்றும் இந்த மூன்று வர்ணத்தாருக்கும் தேவையான அடிப்படை வசதிகளுக்கு ஆதாரமாக இருக்கின்ற மிக உன்னதமான சூத்திரர்கள் ஆகிய நான்கு விதமான வர்ணாசிரம தர்மத்தில் இருக்கின்றவர்களில் கூட பல **ஜிக்ஞாஸுகள்** இருக்கின்றனர்.

இவர்கள் தாங்கள் எந்த ஆசிரம தர்மத்தில் இருக்கின்றார்களோ? அதிலிருந்து மாறாமலும், மேலும் நம்முடைய வாழ்வியல் தர்மங்களான பிரம்மச்சரியம்,

இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாஸம் என்று தற்போது அவர்கள் இருக்கின்ற சூழ்நிலைகளை மாற்றாமலும், அப்படியே ஏற்றுக்கொண்டு, அகத்துறவு மேற்கொண்டு, தக்க சத்குருவை நாடிச் சென்று, அவர்கள் உபதேசத்தினால் சாஸ்திரத்தின் வாயிலாக இந்த உயர்ந்த பிரம்ம ஞானத்தை அடைகின்றனர். இவர்களும் "ஜிக்ஞாஸு" என்ற மற்றொரு வகையினர் ஆகும்.

இவ்வாறு, நம் வாழ்வியல் முறைகளை ஆசிரம தர்மங்கள் போன்றே, சந்நியாஸ தர்மங்களையும், சாதுக்களின் தர்மங்களையும் நம் சாஸ்திரம் வகுத்துள்ளதின் மூலமாகவும், உலகத்தார் நடைமுறையில் இதுப்போன்று வாழ்ந்து வருவதின் மூலமாகவும், இவைகளை நேரடியாக நீ கண்டிருந்தும், உன் சிந்தையில் இதுப்போன்ற சிந்தனைகள் உண்டாவதேன் மகனே?

சுருதி (வேதம்) கூறவருகின்ற உண்மைத் தன்மையை உணர்ந்து, யுக்தி பூர்வமாக உன் அறிவினால் இவைகளை விசாரித்து அறிந்து, அனுபவத்தால் தெளிந்திடுவாயே.

பிறந்தது உண்டானாலன்றோ பிறகு சாவதுதான் உண்டாம்
பிறந்ததே இல்லை என்னும் பிரமமாவதுவும் நானே
பிறந்தது நானென்றாகில் பிரமமன்று அந்த நானே
பிறந்ததும் இறந்ததற்ற பிரமமாம் நானே நானே. (164)

## தெளிவுரை:-

மகனே! பிரம்மம் நித்யமானது, என்றும் இருப்பது, அழிவற்றது, ஆதாலால் அதற்கு பிறப்பு என்று ஒன்று உண்டானால் அல்லவா? இறப்பு என்பது அதற்கு உண்டாகும்.

அவ்வாறு, பிறப்பு இறப்பற்ற அந்த பிரம்மமாகவே நானே இருக்கின்றேன் எனும்பொழுது, பிறந்தது **நான்** என்று கூறுவாயாகில், அவ்வாறு கூறுவது பிரம்மமாக இருக்க முடியாது. ஆகவே, பிறப்பும், இறப்பும் அற்ற பிரம்மமாக நானே இருக்கின்றேன் என்பதில் திடமாக இருப்பாயாக.

நானென்ற பிரமமான நானேநான் அறியேன் என்றால்
நானென்பது ஏது பின்னை நம்முடைப் புந்தி என்னில்
தானது மயக்கம் தன்னில் சாகுமே சாவாதாகி
நானென நிறைந்திருந்த ஞானமாம் நானே நானே. (165)

## <u>தெளிவுரை:-</u>

மகனே! நான் என்பதை பிரம்மமாக நானே அறியவில்லை என்றால், பிறகு "**நான் யார்**?" என்னுடைய உடலும், மனமும் சார்ந்த அகங்காரமா? அல்லது புத்தியா? அத்தகைய இந்த புத்தி போன்றவைகள் ஆழ்ந்த உறக்கத்தில் இறந்து போகின்றனவே.

எனவே, உறக்கத்திலும் '**நான்**' '**நான்**' என்று உறங்காமல் அனைத்தையும் சாட்சியாக வேடிக்கைப்பார்த்துக் கொண்டிருப்பதும், பூரணமாய் எங்கும் நிறைந்திருப்பதும் ஆகிய உணர்வே தன்னை, "**பிரம்மமே நான்**" என்று அறிவதுதான் **ஞானம்** எனப்படுகின்றது.

நிறைந்தவாறு எந்தவாறு நிலை தெரிந்திலன் என்றாயேல்
அறிந்ததாம் சுழுத்தி தன்னில் ஆனந்தம் அதுவேயாகும்
குறைந்ததற்கு ஆனந்தம்தான் குவலயம் தன்னில் இல்லை
நிறைந்ததே இந்த ஆன்மா நிதானம் இவ்வறிவுதானே. (166)

## தெளிவுரை:-

நான் எங்கும் நிறைந்த பூரணமானவன் என்ற அந்த உன்னதமான நிலையை அறியமுடியவில்லை என்றாயானால், ஆழ்ந்த உறக்கத்தில் தன்னையும், தன் அகங்காரத்தையும் அறியமுடியாமல், அறியாமையுடன் உறங்கும் பொழுது, ஆனந்த அனுபவம் உண்டாகியதை அறிவது யார்?

உறக்கத்தில் இருந்து விழித்து எழுந்தவுடன் "**நான் ஆனந்தமாக உறங்கினேன்**" என்பதை, "**நான்**" என்ற ஜீவ அஹங்காரம் இல்லாமல், சாட்சியாகிய **கூடஸ்தன்** என்ற "**நான்**" அறிகின்றது. ஆதலால், உறக்கத்தில் குறைவற்ற பூரண ஆனந்தம் அனுபவப்பட்டது.

இவ்வாறு, எங்கும் பூரணமாய் நிறைந்த இந்த ஆனந்தம் உலக விவகாரங்களில் ஈடுபடும் பொழுது மட்டும், குறைந்து காணப்படுவதற்குக் காரணம், தன்னில் நிறைந்த ஆன்மாவில் அமைதியாய், பூரண அறிவாய் ஆனந்தம், வெளிப்படுவதை அறிய முடியாததற்கு தடையாக "**நான்**" என்ற ஜீவ அஹங்காரமே காரணம் எனப்படுகின்றது.

மனத்தினால் எண்ணித்தானே வந்தது இவ்வுலகம் ஆகும்
நினைத்திடில் அனேக லோகம் நிற்பது அவ்வறிவில் அன்றோ
அனைத்தையும் கடந்த அப்பாலும் அந்தமற்ற அறிவு இதாம் என்று
எனைத்தனி விசாரத்திட்டால் ஏகமாய் நிறைந்தோன் நானே. (167)

## தெளிவுரை:-

மனது கற்பித்துக் கொண்ட எண்ணங்களினால் உண்டானது இந்த உலகம் ஆகும். இவ்வாறு, நினைத்த மாத்திரத்தில் கற்பனையாக பல்வேறு லோகங்களை படைத்துக் கொள்கின்ற மனதிற்கு ஆதாரமாக நிற்பது, அந்தர்யாமியாக இருக்கின்ற **அறிவு** என்ற சித் அல்லவா?

அனைத்தையும் கடந்து, அப்பாலுக்கும் அப்பாலாய் முடிவு இன்றி, எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்ததாய், இருக்கின்ற அறிவினை இதுதான் என்று, அஹங்காரத்தினால் மனது, புத்தியினைக் கொண்டு விசாரித்துப் பார்த்தாலும், அந்த அந்தக்கரணமான மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்று அனைத்திலும் ஒன்றாய் நிறைந்திருப்பது அறிவு (சித்) ஆகிய நானே.

அந்தவாறு இருந்து கொண்டே ஆனந்தம் அனுபவிக்க
எந்தவாறு இருந்து கொண்டால் எனக்கு இது தெரியும் என்னில்
இந்த மூன்று அவத்தை தம்முள் எழுந்திடும் விருத்தி நீக்கில்
அந்தவாறு இருந்து நீயும் ஆனந்தம் அடையலாமே. (168)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! அனைத்திலும் ஒன்றாய் நிறைந்த பூரண அறிவாக இருந்துக் கொண்டே, ஆனந்தத்தை அனுபவிக்கலாம் எனில், எவ்வாறு இருந்து கொண்டால், எனக்கு இந்த ஆனந்தம் தெரியவரும்?

மகனே! மூன்று அவஸ்தைகளான விழிப்பு நிலை, கனவு நிலை, மற்றும் ஆழ்ந்த உறக்க நிலை என்ற இவைகளில் உதிக்கின்ற எண்ணங்களினால் உண்டாகின்ற மனோ விகாரங்களை நீக்கல் வேண்டும்.

அவைகள், அனுபவிப்பவன், அனுபவிக்கப்படும் பொருள், அனுபவம் போன்ற விருத்திகளாக சாட்சி இன்றி தோன்றாத பொழுதும், அவஸ்தைகளில் அனுபவங்கள் மாறுதலுக்கு உட்படுவதில் இருந்தும், இவைகள் சித்தாக இருக்க முடியாது.

ஆனால், இவைகள் அனைத்திலும் சாட்சியாக எப்பொழுதும் மாறாமல் இருப்பது, நித்யமான அந்த அறிவு (சித்) ஒன்று மட்டுமே.

அந்த பரிபூரண பிரம்மமாகிய அறிவே (சித்) உன் சொரூபம் என்று அறிந்துக் கொண்டால், நீயும் முழுமையான ஆனந்தத்தில் எப்பொழுதும் இருக்கலாமே.

அதாவது, தன்னை அந்த அறிவு (சித்) என்று அறிந்துக்கொண்டு, அதன்வாயிலாக தன்னுடைய இருப்பை (சத்) அறிந்துக் கொள்வதினால், இதுவரை அறியாமையில் இருந்த மனம் தன்னுடைய அஹங்காரத்தை இழந்து, அந்த அறிவிடம் தன்னை ஒப்படைத்து விடுவதினால், உண்டாகும் ஆனந்தமே '**சத்சிதானந்தம்**' என்ற பரப்பிரம்ம நிலையாகும்.

அதாவது, விழிப்பு நிலையில் இந்த உலகத்தை உண்மை என்று அனுபவிப்பவனாகவும், கனவு நிலையில் புதிய உலகத்தைப்படைத்து அனுபவிக்கின்ற பொருளாகவும், ஆழ்ந்த உறக்க நிலையில் அறியாமையும், ஆனந்தமும் அனுபவமாக இருப்பதுப் போன்ற அனைத்து மனோ விருத்திகளுக்கும் ஆதாரமாக, அந்த அறிவு ஒன்றே விளங்குகின்றது. அதாவது வெளிச்சம் இன்றி, எவ்வாறு எதையும் அறிய முடியாதோ? அதுப்போன்று, அந்த அறிவு இன்றி எதுவும் பிரகாசிக்காது என்பதை மனம் அறிவதே, இங்கு **ஞானம்** எனப்படுகின்றது.

வாதனா வசத்தினாலே வருகின்ற விருத்தி எல்லாம்
ஏதினால் அடக்கல் ஆகும் என்றுதான் விசாரம் செய்யில்
போதம் ஆம் இராசன் தானாய்ப் புந்தியைம் புலன்கள் எல்லாம்
தாதராய் இருக்கப் பெற்றால் சகலமும் அடங்கும் தானே. (169)

**<u>தெளிவுரை:-</u>**

மகனே! ஒருவனனுடைய பூர்வ சென்ம வாசனைகளினால் உண்டாகின்ற மனோ விருத்திகள் அனைத்தையும், எந்த உபாயத்தினால் அடக்க முடியும் என்று விசாரித்துப் பார்க்கும் பொழுது, அவனது பூரண ஞானமாக விளங்கும் அறிவை (சித்) அரசனாக வைத்துக் கொண்டு, மனம், புத்தி போன்ற அந்தக்கரணங்கள், கண், காது போன்ற ஞானேந்திரியங்கள், கை, கால்கள் போன்ற கர்மேந்திரியங்கள் அனைத்தையும் அரசனுக்கு (அறிவுக்கு) பணிவிடை செய்கின்ற தாஸனாக (தன் வசமாக) மாற்றிக் கொண்டு விட்டால், சகல விருத்திகளும் அடங்கி ஒடுங்கிவிடும்.

விருத்திகள் அடக்க இன்னம் வினோதமாம் யோகத்தாலே
துருத்திபோல் ஊதும் முச்சைச் சுகமுடன் அடக்கில் நிற்கும்
கருத்து அதற்கில்லை என்னில் காரண சரீரமாகிப்
பெருத்ததோர் அவித்தை தன்னைப் பிடுங்கிடில் அடங்கும் தானே. (170)

## தெளிவுரை:-

மகனே! மனதில் எப்பொழுதும் உண்டாகிக் கொண்டிருக்கின்ற எண்ண ஓட்டங்களினால், வருகின்ற மனோ விகாரங்களையும், பூர்வ சென்ம வாசனைகளினால் உண்டாகின்ற மனோ ஓட்டங்களையும், அடக்க இன்னும் ஒரு அதிசயமான வழி ஒன்று யோக மார்க்கத்தில் உள்ளது.

அது கொல்லன் பட்டரையில் நெருப்பை ஊதுவதற்கு பயன் படுத்துகின்ற துருத்தி என்ற காற்றை ஊதி விடும் கருவி போன்று, மூச்சை உள்ளே இருந்து '**ஸோ**', '**ஹம்**' என்று ஊதும் போது மனம் தன்னால் அடங்கி நிற்கும்.

இதில், உனக்கு ஆர்வம் இல்லையெனில், பல பிறவிகளாக சேர்த்து வைத்துள்ள காரண சரீரம் என்ற மிகப்பெரிய அஞ்ஞானத்தை (அறியாமையை) அடியோடு பிடுங்கி எடுக்க வேண்டும். அப்பொழுது இந்த மனம் அடங்கும்.

காரண சரீரத்தில் உள்ள அஞ்ஞானத்தை நீக்குதல் என்பது, '**நான் யார்?**' என்று தன்னை விசாரித்து, தன் உண்மை சொரூபத்தை அறிவதினாலே மனம் அடங்கும்.

## காரண சரீரம் விளக்கம்

ஐந்து கோசங்களில் முதலில் கூறப்பட்ட அன்னமய கோசமாக விளங்கும் பருவுடலே **ஸ்தூல சரீரம்**. அடுத்து உள்ளபிராணமய கோசம், மனோமய கோசம், மற்றும் விஞ்ஞானமய கோசங்களின் தொகுப்பே **சூக்ஷும சரீரம்**. இந்த இரண்டிற்கும் காரணமாக விளங்குவதே '**காரண சரீரம்**' எனப்படும்.

உறங்கும்போது, உடலுக்கும், மனதுக்கும் இருப்பு இல்லாதபோது, நாம் சார்ந்திருப்பது, நம்மை சம்பந்தப் படுத்திக் கொள்வது, தொடர்பு படுத்திக் கொள்வது அனைத்தும் காரண சரீரத்துடனேயே ஆகும். இதுவே அறியாமைகளின் மொத்த தொகுப்பு.

அந்த ஸ்தூல சரீரத்தால் படைக்கப்படும், அனுபவிக் கப்படும் எந்த விஷயத்துடனும், நம்மை நாம் சம்பந்தப் படுத்திக் கொள்வதில்லை. அதாவது, விழிப்பு நிலையில், நனவுலகின் எந்தப் பொருளோடும், நிகழ்வோடும் நாம் சம்பந்தப்படுவதில்லை.

அதுப்போன்று, சூக்ஷம சரீரத்தால், உறக்க நிலையில், படைக்கப்படும், அனுபவிக்கப்படும் எந்த விஷயத்துடனும், நம்மை நாம் சம்பந்தப்படுத்திக் கொள்வதில்லை. அதாவது, கனவுலகின் எந்தப் பொருளோடும், நிகழ்வோடும் நாம் சம்பந்தப்படுவதில்லை. ஆக, '**நான்**' தோன்றுவதில்லை.

'**நான்**' எங்கிருந்து அல்லது எதிலிருந்து தோன்றுகிறது?

காரண சரீரம் இந்தத் தன்மையுடையது அல்லது அந்தத் தன்மையுடையது என்று வார்த்தைகளால் விளக்க முடியாது. அது நிலையானதாகவும் இல்லாமல், நிலையற்ற தாகவும் இல்லாமல் இருப்பதினால், அதை "**அநிர்வசனீயம்**" என்று சாஸ்திரம் அழைக்கின்றது. அதாவது, சரீயாக நிரூபிக்க முடியாதது. அதனால், காரண சரீரமே '**மாயை**' எனப்படும்.

'**மா**' என்றால், ஒடுங்குதல் என்றும், '**யா**' என்றால், விரிதல் என்றும் பொருள். இந்த மனம் விரிந்து இந்த உலகம் தோன்றுவதற்கும், ஒடுங்கி உலகம் மறைவதற்கும் இந்த **காரண சரீரம்** என்ற மாயையே காரணம் ஆகும்.

மாயை எனும் சொல்லே, உலகம் தன்னிலிருந்து தோன்றுவதற்கும், தன்னில் வந்து ஒடுங்குவதற்கும் அடிப்படைத் தத்துவம் ஆகும்.

அப்படிப்பட்ட இந்த காரண சரீரத்தை நிலையானதா, நிலையற்றதா? என அறிய முடியாததாக இருப்பதினாலும்,

அதில் புதைந்துள்ள அறியாமைகள் வெளிப்படாத நிலையில் அது விதை (பீஜம்) வடிவாக இருக்கும் நிலையை '**அவ்யக்தம்**' என்று சாஸ்திரம் கூறுகின்றது. அதாவது, காரண சரீரம் வெளிப்படாத நிலையில் **அவ்யக்தமாக** இருக்கின்றது.

நாம் உறங்கும்போது என்ன நிகழ்கின்றது? என்றால், இதுவரை விழிப்பு நிலையில், இந்த ஸ்தூல சரீரத்தினால், நாம் பெற்ற அனுபவங்கள் யாவும் ஒரு விதையாக, அதாவது, வெளிப்படாமல் அவ்யக்தமாக ஒடுங்குகின்றன.

அதுப்போன்றே, கனவு நிலையில் சூக்ஷம சரீரத்தினால், நாம் பெற்ற அனுபவங்கள் யாவும் ஒரு விதைப்போன்று அவ்யக்தமாக ஒடுங்குகின்றன. இவ்வாறு ஒடுங்கும் இடமே **காரண சரீரம்** ஆகும்.

இந்த விழிப்பு, மற்றும் கனவு நிலை அனுபவங்கள் யாவும், ஆழ்ந்த உறக்க நிலையில் தோன்றாமல் இருக்கின்றன.

ஸ்தூல தேகத்துக்கும், சூக்ஷம தேகத்துக்கும் இருக்கும் எல்லா உணர்வுகளும் ஒடுங்கிய நிலை இந்த **ஆழ்ந்த உறக்க நிலை** எனலாம்.

மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் ஆகிய எல்லாமே விதை வடிவில், பீஜமாக ஒடுங்கிய நிலை ஆழ்ந்த உறக்கம் ஆகும்.

நாம் உறக்கத்திலிருந்து விழிப்பு நிலைக்கு வரும் போது, நாம் காரண சரீரத்தை விடுத்து, ஸ்தூல சரீரத்தை அபிமானிக்கின்றோம்.

உடனே, அதுவரை, பீஜங்களாக ஒடுங்கியிருந்த அனுபவங்கள் யாவும், வளர்ந்து விரிவடைகின்றன. அதாவது வ்யக்தமாகின்றன.

நாம் உறக்கத்திலிருந்து கனவு நிலையை அடையும் போது, காரண சரீரத்தை விடுத்து, சூக்ஷ்ம சரீரத்தை அபிமானிக்கின்றோம். அப்போதும், அதுவரை விதைகளாக நம்மில் ஒடுங்கியிருந்த அனுபவங்கள் யாவும், வளர்ந்து விரிவடைகின்றன.

இதனாலேயே, உறக்கத்திலிருந்து விழித்தவுடன், உறங்குவதற்கு முன் நின்ற நினைவுகள் யாவும், மீண்டும் விட்ட இடத்திலிருந்தே தொடர்கின்றன. பல நேரங்களில், கனவு அனுபவங்கள் விழித்த பின்னும், நினைவில் இருக்கின்றன.

நாம், எப்பொழுதெல்லாம், காரண சரீரத்துடன் சம்பந்தப்பட்டு இருக்கின்றோமோ? அப்பொழுதெல்லாம், எவ்வித அனுபவமும் இன்றி, ஏதும் அறியாத நிலையில் (ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதுப்போல) இருக்கின்றோம். இந்த நிலை அறியாமை நிலை அல்லது **அவித்யை நிலை** எனப்படும்.

பொதுவாக, எண்ணங்களினால் உண்டாகின்ற மனோ விகாரங்கள் காலம் மற்றும் இடத்தை ஆதாரமாகக் கொண்டே

உண்டாகின்றது. உறக்கத்தில், நாம் **காலம், இடம்** ஆகியனவற்றை உணராமலேயே இருக்கின்றோம்.

காரண சரீரம், இடம், காலம் ஆகியவைகளை அறியாத நிலையில் (அறியாமையில்) நம்மோடு சம்பந்தப்படுகின்றது. அதனால், காரண சரீரம், மாறுதல் அடையாததாக உள்ளது.

நாம் உறங்கும்போது ஆனந்தமாக உறங்கிக் கொண்டு இருக்கின்றோம் என்று உணர்வதில்லையே தவிர, விழித்தவுடன், நாம் அதுவரை ஆனந்தமாக உறங்கினோம் என்று உணரவே செய்கிறோம்.

சரி, நாம் உறங்கும்போது ஆனந்தமாக இருந்தோம். அதாவது, எப்போதெல்லாம், ஸ்தூல சூக்ஷம சரீரங்களை விடுத்து, காரண சரீரத்தை மட்டும் அபிமானிக்கின்றோமோ? அப்போதெல்லாம் ஆனந்தமாக இருக்கின்றோம்.

உறங்கும்போது ஸ்தூல சரீரமும், சூக்ஷம சரீரமும், செயல்படாது ஓய்ந்து விடுகின்றன. உடனே நாம் ஆனந்த மயமாகின்றோம்.

உறக்கத்தில் எல்லா இந்திரியங்களும் ஒடுங்கி விடுகின்றன. புத்தியின் விருத்தியும் ஒடுங்கி விடுகின்றது. நாம் முழு அறியாமையில் இருக்கின்றோம். ஆக, உறக்கத்தில் காரண சரீரத்தை முழு அறியாமையில் அபிமானித்து இருக்கிறோம் என்று பொருள்.

உறக்கம் என்பது ஆனந்தம் தருவது என்பதினால், அதுவே, உண்மையான ஆனந்தம் என்று தவறாக பொருள் கொள்ளக்கூடாது. நம், நித்திய அனுபவங்களில், உறக்கம் ஒன்றே, ஆனந்தத்திற்கு வெகு அருகில் அனுபவமாகின்றது.

உறங்கும் போது வருகின்ற ஆனந்தம் எதன் ஆதாரத்தில் விளைகின்றது என்று தெரிந்துக் கொண்டால், அதை மீண்டும், மீண்டும் அடையலாமே, முடிந்தால் அதிலேயே நிரந்தரமாக, லயித்திருக்கலாமே.

உறக்கத்தில், அறியாமையில் காரண சரீரத்துடன் நமக்கு ஏற்படும் தொடர்பு, விழித்தபின், சில நொடிகளுக்கே நிலைக்கின்றது. ஆகவே, உறக்கத்தால் விளைந்த ஆனந்தத்தின் இருப்பும், நேரமாக, ஆக நீர்த்து விடுகின்றது.

விழிப்பு நிலையில் இருக்கும்போது, சில நேரங்களில், காரண சரீரத்தை அபிமானிக்கின்றோம்.

அந்த நிலைகளை, **ப்ரியம்**, **மோதம்**, **ப்ரமோதம்** என மூன்று நிலைகளாக சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது.

இதில், நமக்குப் பிடித்த, நாம் ஆசைப்படும் பொருளைக் காண்பதால் ஏற்படும் மகிழ்ச்சி '**ப்ரியம்**' எனப்படும்.

அந்தப் பொருள் நம் கைக்கு கிடைத்து நம்முடையது என்று ஆவதால் உண்டாகும் மகிழ்ச்சி, '**மோதம்**' எனப்படும்.

அந்தப் பொருளை நாம் அனுபவிப்பதால், ஏற்படும் மகிழ்ச்சி '**ப்ரமோதம்**' எனப்படும்.

இந்த மூன்று நிலைகளிலும், மனம் அடங்கி ஆனந்தம் உண்டாகின்றது என்பதை நாம் நன்கு அறிவோம்.

அதாவது விழிப்பு நிலையிலும் நாம் காரண சரீரத்தை அபிமானிப்பதாலேயே, இந்த ஆனந்தம் உண்டானது என்பது தற்பொழுது நன்கு விளங்கும். அத்தகைய இந்த காரண சரீரமே "**ஆனந்தமய கோசம்**" எனப்படுகின்றது.

ஆனாலும், இந்த ஆனந்தமும், அறியாமையில் விளைந்த ஆனந்தமே ஆகும். ஏனெனில், அந்தச் சில கணங்கள், நாம், நம் புத்தி நிலை கொண்டுள்ள சூக்ஷும தேகத்தின் தொடர்பில்லாமல்தான் இருந்தோம். அப்பொழுது, காரண சரீரத்தை மட்டுமே முழுவதுமாக அபிமானித்து இருக்கின்றோம் என்பதினால், நாம் அறியாமையிலேயே இருக்கின்றோம். ஆதலால்தான், இந்த ஆனந்தமும் நிலைப்பதில்லை.

இருமைகளால் எழும் எண்ணங்களற்று, உணர்வுடன் பொருந்தி இருக்கின்ற நிலையே **உண்மையான ஆனந்தம்** எனப்படும்.

எதையாவது அடைய விரும்பும் எண்ணம் நம் மனதில் உண்டாகி, அந்த எண்ணம் செயலாகி, அந்த செயல்

நிறைவடைந்தவுடன், உண்டாகின்ற திருப்தி என்பது, நாம் நம் உணர்வுடன் இணைந்து விடுவதினால் உண்டாகின்றது.

அதாவது, எண்ணங்களற்று, உணர்வு மாத்திரமாக நாம் மாறியதும், ஆனந்தத்தில் திளைக்கின்றோம். அப்பொழுதே முழுமையான ஆனந்தமயமாகின்றோம்.

மீண்டும் எண்ணம் எழ, மனம் பிரவிருத்தியாகி, ஆனந்தத்தை மறக்கின்றோம்.

காரண சரீரம் தன்னை களைவது எவ்வாறு என்று ஏதில்
ஆரணம் பொய் சொல்லாதே அதன்பொருள் அகத்திலுன்னிப்
பூரணமாகும் என்மேல் புவனங்கள் தோற்றம் என்று
தாரணை வந்ததாகில் தரித்திடும் அவித்தை எங்கே. (171)

## <u>தெளிவுரை:-</u>

காரண சரீரம் என்ற அஞ்ஞானத்தை அடியோடு பிடுங்கி விடுவதினால், மனோ விருத்திகள் அடங்கும் என்று கூறுகின்றீர்களே! அது எவ்வாறு சாத்தியம்? என்பதை விளக்கமாக அருளுங்கள் ஐயா.

மகனே! காரண சரீரத்தைக் களைகின்ற வழி முறைகளை கூறுகின்ற வேதம் பொய் சொல்லாது என்பதினால், அந்த வேதம் கூற வருகின்ற உண்மை என்ன? என்று

விசாரித்து அறிந்து, அது கூறும் மகாவாக்கியங்களின் பொருளை உணர்ந்து, உன் மனதில் உள்வாங்கிக் கொண்டால், பூரண அறிவு சொரூபமாகிய என்மீது, அறியாமைகள் நிறைந்த இந்த உலகங்கள் ஏற்றி வைக்கப்பட்டுள்ளன என்பது உனக்குப் புரியும்.

இவ்வாறு, திடமான நிச்சயத்தன்மை மட்டும் உண்டாகி விடுமானால், அதன் பயனாக "**பிரம்மம் சத்தியம், ஜகத் மித்யா**" என்பதில் அனுபவம் ஏற்பட்டவுடன், அனைத்து அறியாமைகளுக்கும், மூல விதையாகிய காரண சரீரம் அழிந்து ஒழியும். அதன்பிறகு அறியாமைகளை ஏங்கே காண்பது?

அப்படி இருக்கச் சித்தம் அலைதலால் விவகாரத்தில்
எப்படி கூடும் என்னில் என்னைவிட்டு ஒன்றுமில்லை
இப்படிக் கண்ட எல்லாம் என்மயம் என் கனாப்போல்
கற்பிதம் என்று தானே காண்கின்ற சித்து நானே. (172)

## <u>தெளிவுரை:-</u>

ஐயனே! தாங்கள் கூறுவதுப் போன்று பிரம்மம் மட்டுமே சத்தியம் எனில், இந்த சித்தம் அதை அறிய முடியாமல், மனம் போன போக்கில், பல்வேறு உலக விவகாரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அதன் அனுபவம் எப்படி உண்டாகும்?

மகனே! பிரம்மம் மட்டுமே சத்தியம். அதுவே உன் உண்மை சொரூபம். இந்த உலகம் பிரம்மமாகிய (அறிவாகிய) உன்மீது, மனதினால் ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த உலகம் உண்மையில் இருப்பதுப் போன்று காணப்படுகின்றது, விசாரித்துப் பார்த்தால் உண்மையில் இந்த உலகம் இல்லை.

இவைகள் மனம் கற்பித்துக் கொண்ட கற்பனை என்பதை, சாஸ்திர விசாரத்தினால் அடைந்த அறிவினைக் கொண்டு தெளிந்து, ஒன்றேயாகிய பிரம்மமாகிய என்னைத் தவிர, எனக்கு வேறாக ஒன்றுமே இல்லை என்று அறிய வேண்டும்.

அது எவ்வாறு எனில், ஒருவன் கனவு காண்கின்ற பொழுது, அந்தக் கனவில் அவனால் படைத்துக் கொள்ளப்பட்ட புதிய உலகமும், அதன் தொடர்பாக காணுகின்ற மற்ற அனைத்து விசயங்களும் அந்தக்கனவை காண்கின்றவனுக்கு வேறாக இருப்பதில்லை.

ஆதலால், இவைகள் அனைத்தையும் அறிகின்ற **அறிவு நானே** என்று இருப்பாயாக.

**குறிப்பு:–** (அதாவது, உண்மையில் **பிரம்மம்** அல்லது "**நான்**" என்பது, **பிரக்ஞை** அல்லது **அறிவு** என்று, இதுவரை நாம் கற்றவற்றிலிருந்து புரிந்துக் கொண்டிருப்போம்.

அப்படி இருக்கும்போது, இங்கு படைக்கப்பட்ட அத்தனையும் நம் அறிவுக்கு வேறாக இருக்க முடியுமா? என்பதை சற்றே சிந்தித்து பார்க்க வேண்டும். அதாவது, நாம் சிறு குழந்தையாக ஒன்றுமறியாத வெகுளியாக இருக்கும் நம்மிடம், மற்றவர்கள் ஏற்றி வைக்கின்ற எண்ணங்களாகிய நாமமும், ரூபமும் நம் மனதில் பதியப்படுகின்றன. அவைகளை, **‘இது, இது இன்னது’** என்று எப்படி நம்மால் அறிய முடிகின்றது?

அது நம்மிடம் உள்ள அறிவு என்ற சேதனம் மூலமாகவே அறியப்படுகின்றது. அவ்வாறு அறிவது மனம் என்ற ஒன்றாக இருப்பினும், அதுவும் எப்படி அறிகின்றது. அது, நம்மிடம் உள்ள ஐம்புலன்களாகிய கண்கள், காதுகள், மூக்கு போன்றவைகளைக் கொண்டு அறிகின்றது.

அவ்வாறு, அனைத்தையும் அந்த புலன்கள் வாயிலாக அறிவதும், அவ்வாறு அறிந்தவைகளை மனம் தன்னுடைய புத்தி சக்தியினால் பகுத்தறிவதும் எல்லாமே நம்முடைய உண்மை இயல்பாகிய தூய அறிவு இருப்பதினாலேயே எல்லாம் அறியப்படுகின்றன.

அதாவது, **சித்** என்ற அறிவு **சத்** என்ற இருப்பாக இருப்பதினாலேயே, எல்லாம் அறியப்பட்டு, மனம் ஆனந்தத்தை அடைகின்றது. ஆனால், அதே மனம், ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களால் மனமாக பிர்காசிப்பதும், அதே மனதின் மேம்பட்ட புத்தியின் பிரகாசமும், அந்த அறிவு இருப்பதினால்தான் இருக்க முடிகின்றது என்பதை அறிந்துக்

கொள்ளும்போது, அனைத்துமே அந்த அறிவுக்கு வேறாக இருக்க முடியாது என்பதுவும், அதே மனதிற்கு விளங்கும். அதுவே, மனதிற்கு விடுதலை (மோக்ஷம்) என்று கூறப்படுகின்றது.)

சித்துநான் நிறைந்தோன் என்ற திடம் மறவாதிருந்தால்
எத்தனை எண்ணினாலும் ஏதுசெய்தாலும் என்ன
நித்திரை உணர்ந்த பின்பு நிற்கின்ற கனாவே போல
அத்தனையும் பொய்தானே ஆனந்த வடிவு நானே. (173)

## தெளிவுரை:-

எங்கும், எதிலும் நிறைந்த பரிபூரணமான (சித்) அறிவாகவே நான் இருக்கின்றேன் என்ற நிச்சயத் தன்மையை மறக்காமல் திடமாக இருந்தால் மட்டும் போதும், மனம் எத்தனை விதமான எண்ணங்களை எண்ணினாலும், எதை செய்தாலும், அதனால் ஒரு பாதிப்பும் இல்லை.

காரணம், உறக்கத்தில் கண்ட கனவு எவ்வாறு பொய் என்று அறிகின்றோமோ? அதுப்போன்று, இந்த உலகம் முதற்கொண்டு அனைத்துமே கற்பனையாகத் தோன்றிய கற்பிதம் என அறிகின்ற, உண்மை அறிவாகிய, அந்த ஆனந்த சொரூபம் நானே.

நானென உடலைத் தானே நம்பினேன் அனேக சன்மம்
ஈனராய்ப் பெரியோராகி இருந்தவை எலாம் இப்போது
கானலில் வெள்ளம் போலக் கண்டு சற்குருவினாலே
நானென என்னைத் தானே நம்பி ஈடேறினேனே. (174)

## தெளிவுரை:-

ஐயனே! இந்த உடலைத்தான் '**நான்**' என்று அனேக சென்மங்களாக நம்பி இருந்தேன். இதில் மிகவும் கீழான மிருகம், புழு, பூச்சி, பறவை என்று பல ஈனப் பிறவிகளிலும், மனிதன், தேவன், கந்தர்வன் என்று மிக உயர்வான பல பெரியவர்களின் பிறப்புகளிலும் இதுவரை பிறந்து, பிறந்து இறந்தேன். இதுவரை இருந்தவைகள் எல்லாம், அந்த அறிவின்மீது மனம் ஏற்றி வைத்துக் கொண்ட கற்பிதம் என்று புரிந்துக் கொண்டேன். அதாவது, கானல் நீர் போன்று கற்பிதம் என்று இப்பொழுது புரிந்துக் கொண்டேன்.

இதுப்போன்று, மனதினால் தோன்றி, மறைகின்ற நிலையற்ற, அழியக்கூடிய உடல்களைக் கொண்டவன் நான் அல்ல! என்பதுவும், உண்மையில் "**நான்**" என்பது, என்றும் அழியாத அந்த ஏக அறிவாகிய பரப்பிரம்மமே என் சொரூபம் என்பதுவும், சத்குருவாகிய தங்களின் தயவால் மிகத் தெளிவாக அறிந்துக்கொண்டு கடைத்தேறி விட்டேன்.

என்ன புண்ணியமோ செய்தேன் ஏது பாக்கியமோ காணேன்
நன்னிலம் தனில் எழுந்த நாரணன் கிருபையாலே
தன்னியன் ஆனேன் நான் உத்தரீயத்தை வீசுகின்றேன்
தன்னியன் இன்னும் நானே தாண்டவம் ஆடுகின்றேன். (175)

## தெளிவுரை:-

ஐயனே! என்ன புண்ணியம் செய்தேனோ? ஏது பாக்கியம் செய்தேனோ? அறியவில்லை. நன்னிலம் தன்னில் எழுந்தருளிய என் சத்குருநாதராகிய நாராயண தேசிகரின் கிருபையாலே தன்னியன் ஆனேன்.

இதனால், எனக்கு உண்டான அளவற்ற மகிழ்ச்சியின் காரணமாக உண்டான பரமானந்தத்தை வெளிப்படுத்த மேலே உள்ள விட்டத்திற்கும், கீழே உள்ள தரைக்குமாக, மேலும், கீழும் குதித்தவாறு ஆனந்த தாண்டவம் ஆடுகின்றேன்.

## குறிப்பு:–

இதுவரை சிஷ்யனாக இருந்து தத்துவங்களில் பல சந்தேகங்களைக் கேட்டவாறு இருந்த இந்த நூலாசிரியரான **ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள்** அவர்களின் கேள்விகளுக்கு, தன்னுடைய சத்குருவான **நன்னிலம் ஸ்ரீமத் நாரயண தேசிகர்** சுவாமிகள் பதில் அளித்தவாறு, இந்த “**கைவல்ய நவநீதம்**” என்ற இந்த நூலின் நடை அமைக்கப்பட்டிருந்தது.

இனி வருகின்ற இறுதியான ஆறு பாடல்களும் தன் சத் குருவாகிய நன்னிலம் ஸ்ரீமத் நாராயண தேசிகரை தன்னுடைய தாய் தந்தையாகவே பாவித்து, **ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள்** அவர்கள் குருவை புகழுகின்ற பாடல்களாக இனியுள்ளது.

தத்துவ ஞானம் வந்த சந்தோட அதிசயத்தால்
நித்தம் ஆடுவன் காண் என்ற நிலை முன்னமே அறிந்த
சத்தியம் அதனாலன்றோ தாண்டவா என்றழைத்தார்
அத்தனை மகிமையுள்ளோ அன்னையும் பிதாவும் தாமே. (176)

## தெளிவுரை:-

தத்துவ ஞானம் அடைந்த சந்தோசமும், தன் சொரூபத்தை அறிந்துக் கொண்ட அதிசயத்தாலும், எப்பொழுதும் ஆனந்தக் கூத்தாடும் என் தற்போதைய நிலையை, அன்றே அறிந்துக் கொண்ட உண்மையினால் அல்லவா? என் ஐயனும், தாயில் சிறந்த தயாபரனும் ஆகிய என் குருநாதன் எனக்கு **தாண்டவா** என்று பெயரிட்டு அழைத்தார் போலும். அத்தனை மகிமை உள்ள அவரே என் அன்னையும் பிதாவும் ஆகின்றார்கள்.

வந்தோர் இவ்வானந்த மகிழ்சியாருடன் சொல்வேன் யான்
சிந்தையில் எழுந்து பொங்கிச் செகமெலாம் நிறைந்து தேங்கி
அந்தம் இல்லாததாயிற்று அப்படிக் குரு வேதாந்த
மந்திரம் அருளும் ஈசன் மலரடி வணங்கினேனே. (177)

## தெளிவுரை:-

இவ்வாறு கிடைத்த நிரந்தரமான ஆனந்தத்தைக் கொண்ட மகிழ்ச்சியை நான் யாருடன் பகிர்ந்துக் கொண்டு வெளியிடுவேன்.

இத்தகைய ஆனந்தம் உள்ளத்தில் எழுந்து பொங்கிப் பரவி, இந்த பிரபஞ்சம் முழுவதும் நிறைந்து முடிவற்றதாயிற்று. இவ்வாறு, மேன்மையான இந்த வேதாந்த உபதேசத்தை அருளிய என் சத்குருநாதராகிய ஈசன் மலர் பாதங்களை பணிந்து வணங்குகின்றேனே.

வித்தியானந்தம் இந்த விதம் என விளம்பினோமே
பத்தியாய் இந்த நூலை பார்த்து அனுபவித்த பேர்கள்
நித்திய தரும நிட்டை நிலைதனை அறிந்து சீவன்
முத்தியை அடைந்திருந்த முனிவரர் ஆகுவாரே. (178)

## <u>தெளிவுரை:-</u>

இதுவரை உபதேசித்து வந்த வேதாந்த சாஸ்திரத்தினால் உண்டான வித்யா (கல்வி) ஆனந்தம் இப்படிப்பட்டது என்று எடுத்துக் கூறினோம்.

இந்த நூலை பக்தியோடு படித்து அனுபவித்த அத்தனைப் பேர்களும், என்றும் அழியாத நிலையான அற வழியை அறிந்து, அதனை நடைமுறையில் கடைப்பிடித்து, ஜீவன் முக்தியை அடைந்த முனிவர்களைப் போன்றே இவர்களும் ஜீவன் முக்தர்கள் ஆகுவார்கள்.

ஆரணப் பொருளாம் வித்தியானந்தம் விளங்க ஏதும்
காரணம் குறைவில்லாமல் கைவல்லிய நவநீதத்தைப்
பூரணமாக்க வேண்டிப் பூர்வமாம் நன்னிலத்தில்
நாரண குரு நமக்கு நவின்றனர் யோகில் வந்தே. (179)

## <u>தெளிவுரை:-</u>

வேதாந்த நூல்களின் உபதேசமான '**தத்வமஸி**' என்ற மகாவாக்கியத்தின் பொருளை அனைவரும் அறியும்படி உணர்த்தி, குறைவற்ற, மிக உன்னதமான, தன் சொரூப ஞானத்திற்கு காரணமாகிய, இந்த வித்யா ஆனந்தம் விளங்கும் வகையில், "**கைவல்லிய நவநீதம்**" என்ற இந்த நூலை குறைவில்லாமல், முழுமையாக எழுதி முடிக்க வேண்டி, பழமை வாய்ந்த நன்னிலம் தன்னில் இருக்கின்ற என் சத்குருவான **ஸ்ரீமத் நாராயண தேசிகர்** அவர்கள் தனது யோக சக்தியினால், எனது உள்ளே இருந்து, இந்த நூலை முழுமையாக எழுத வைத்து அருளினாரே.

குலவு சற்குருவின் பாதகுளிர் புனல் தலைமேல் கொண்டால்
உலகினில் தீர்த்தம் எல்லாம் உற்றபேறு அடைவார் போல
நலமை ஆகும் கைவல்லிய நவநீத நூலைக் கற்றோர்
பலகலை ஞான நூல்கள் படித்த ஞானிகளாய் வாழ்வார். (180)

## <u>தெளிவுரை:-</u>

சத்குருவின் பாதங்களைத் தழுவிய நீரை, தன் தலைமேல் தடவிக் கொண்டால், இந்த உலகினில் உள்ள கங்கை, யமுனை, காவேரி போன்ற புண்ணிய நதிகளின் நீர் நிலைகளில் எல்லாம் தலை முழுகிய நற்பயனை அடைவார்கள்.

அதுப்போன்றே, இந்த **கைவல்லிய நவநீதம்** என்ற நூலைக் கற்றவர்கள் மற்ற பல சாஸ்திர ஞான நூல்களை படித்த மகா பண்டிதர்களான ஞானிகளுக்கு நிகராக ஈடு இணையின்றி, உயர்ந்த ஞானிகளாக வாழ்வார்கள்.

**சந்தேகம் தெளிதல் படலம்** நிறைவுற்றது.

# நிறைவுரை:–

இத்துடன் **கைவல்ய நவநீதம்** என்ற நூலின் இரண்டு படலங்களான **தத்துவ விளக்கப்படலம், சந்தேகம் தெளிதல் படலம்** மூலமும் - உரையும் நிறைவுற்றது.

இதில், இதுவரை பயின்ற முதல் பாடலான பாயிரங்கள் என்ற பகுதியில், கடவுள் வாழ்த்துப் பாடல்களில் தொடங்கி, ஏழாவது பாடலான இரண்டு படலங்களாக வகுத்துக் கூறுகின்றேன் என, இந்த நூலாசிரியர் எழுதியுள்ள "**ஏழு பாயிரங்கள்**", அத்துடன் **தத்துவ விளக்கப்படலம்** பாடல்களாகிய 101 பாடல்களும் சேர்ந்து, மொத்தம் 108 பாடல்களையும், மேலும், சந்தேகம் தெளிதல்படலத்தில் உள்ள 180 பாடல்கள் என எல்லாவற்றையும் நன்கு விளக்கமாகப் புரிந்துக் கொண்டோம்.

இதில், நாம் இதுவரை அறிந்துக்கொண்ட **கைவல்ய நவநீதம்** என்ற நூலின் விளக்க உரைப்பகுதிகளை ஒருமுறை மிகச் சுருக்கமாகச் சிந்தித்துப் பார்க்கலாம்.

**பெண், பொன், மண்** என்ற மூன்று ஆசைகள் கொண்ட சாதாரண பாமரர்களான அஞ்ஞானிகளிடத்திலும், எந்த ஆசைகளும் அற்ற ஞானிகளிடத்திலும் அந்த அறிவாகவே பரப்பிரம்மம் நிறைந்திருக்கின்றது என்று கூறப்பட்டது.

அப்படிப்பட்ட பரப்பிரம்மம் எல்லையற்ற பரந்த ஆகாயம் போன்று, இந்த உலகமாக பிரதிபிம்பித்துக் கொண்டு விஸ்தாரமாக விரிந்திருக்கின்றது.

அதன் முக்குணங்களான சுத்த சத்துவகுணத்தில் பரப்பிரம்மத்தின் பிரதிபிம்பித்த சேதனமே "**ஈஸ்வரன்**" என்றும், "**மாயை**" என்றும் அழைக்கப்படுகின்றது.

அடுத்து, பரப்பிரம்மத்தின் ரஜோகுணத்தில் பிரதி பிம்பித்த சேதனமே ஜீவர்கள் என்றும், இதில் சூக்ஷும, ஸ்தூல சரீரங்களை எடுப்பதற்கு முன்பு ஆதியில் இருந்த காரண சரீரம் கொண்ட ஜீவர்களுக்கு "**பிராக்ஞன்**" என்றும் கூறப்பட்டது.

பிரம்மத்தின் தமோ குணமானது இரண்டு சக்தியாகப் பிரிந்து, அதில் ஒன்று "**விக்ஷேபம்**" என்ற தோன்றும் சக்தியாகவும், மற்றொன்று "**ஆவரணம்**" என்ற மறைக்கும் சக்தியாகவும் வெளிப்பட்டது.

இதில் விக்ஷேப சக்தியானது பிரம்மத்தின் சக்தியாக உள்ள ஐந்து புலன்களான சப்தம் (வாக்கு), ஸ்பரிசம் (தொடு உணர்வு), ரூபம் (பார்வை), ரசம் (சுவை), மற்றும் கந்தம் (வாசனை நுகர்வு) என்ற இவைகளைக் கொண்டு அதில் ஒலி அம்சமான வாக்கு ஆகாயம் ஆயிற்று என்றும், அதன்பிறகு மற்ற புலன்களில் இருந்து நான்கு பூதங்கள் உண்டாயின என்றும் கூறப்பட்டது.

இவ்வாறு உண்டான பஞ்சபூதங்களும் பஞ்சீகரணம் (அபஞ்சீகரணம்) செய்யப்படாத நிலையில், ஜீவர்களின் "**சூக்ஷும சரீரம்**" என்றானது.

இதில் பஞ்சீகரணம் செய்யப்படாத இந்த ஐந்து பூதங்களில் இருந்து, ஒரு பூதத்தை எடுத்து, மற்ற நான்கு பூதங்களுடன் சேர்த்து, **பஞ்சீகரணம்** செய்யப்பட்டு ஜீவர்களின் "**ஸ்தூல சரீரம்**" உண்டாயின.

அதில் ஐந்து பிராணன்களும், ஐந்து அந்தக் கரணங்களும், ஐந்து புறக்கரணங்களும் அடக்கம்.

இதில் மனம் என்ற தனித்த ஒரு சூக்ஷும சரீரத்தை, எனது என்று அபிமானிக்கின்ற ஜீவர்களை "**தைஜஸன்**" என்றும், அனைத்து ஜீவர்களின் மனதை தனதாக அபிமானிக்கின்ற ஈஸ்வர்னை "**ஹிரண்யகர்பன்**" என்றும் அழைக்கப்பட்டது.

அதுப்போலவே, ஒரு ஸ்தூல சரீரத்தை எனது என்று அபிமானிக்கின்ற ஜீவர்களை, "**விசுவன்**" என்றும், அனைத்து ஜீவர்களின் ஸ்தூல சரீரங்களை எனது என்று அபிமானிக்கின்ற, ஈஸ்வரனை "**விராட் புருஷன்**" என்றும் அழைக்கப்பட்டது.

இப்படித் தோன்றிய சரீரங்கள் ஜீவர்களுக்கும், ஈஸ்வரனுக்கும் உண்டாகியது என்று பார்க்கின்ற பொழுது, இதில் தனித்த சரீரங்களை உடையவைகளை ஜீவர்கள் என்றும்,

அனைத்து ஜீவர்களையும் தன்னுள் கொண்ட ஒரே உடலாக இருக்கும் ஈஸ்வரனை இந்த பிரபஞ்சம் என்றும் அழைக்கின்றோம்.

இவ்வாறு உண்டான இந்த ஜீவர்களின் உடலும், ஈஸ்வரனின் ஒட்டுமொத்த உடலான இந்த பிரபஞ்சமும் பரப்பிரம்மத்தின் மாயா பிரதிபிம்பம் என்பதினால், அந்த பரப்பிரம்மத்தில் இருந்து தோன்றிய ஜீவர்களும், ஈஸ்வரர்களும் (பிரம்மா, விஷ்ணு, ருத்ரன்) கூட, அந்த பரப்பிரம்மத்திற்கு வேறானவர்கள் அல்ல என்பதை அறிவுறுத்தவே சாஸ்திரமும், சத்குருவும் வந்தனர்.

இதில், எது நிலையானது? எது நிலையற்றது? என்ற அறிவை உபதேசிக்க வந்த சாஸ்திரமும், சத்குருநாதரும் சாக்ஷாத் அந்த பரப்பிரம்மத்திலிருந்து வேறானவர்கள் அல்ல என்று சாஸ்திரத்தின் பெருமையும், சத்குருவின் பெருமையும் கூறப்பட்டது.

அப்படி உபதேசிக்க வந்த சாஸ்திரத்தை படித்து புரிந்துக் கொள்ளக்கூடிய தகுதி உடைய அதிகாரிகள் எப்படி இருப்பார்கள் என்று சுட்டிக் காட்டப்பட்டது.

சம்சார துன்பத்தை நீக்க வழி கேட்டு வருகின்ற முமுக்ஷுவான தகுதியுடைய அதிகாரிக்கு நீயே அந்த பரப்பிரம்மம் என்று உபதேசிக்கப்பட்டது.

இதில், அற்பமான நானும், அற்புதமான பிரம்மமும் எப்படி ஒன்றாக முடியும்? என்ற சந்தேகம் கொண்ட அந்த சிஷ்யனுக்கு, சத்குருநாதர் விளக்கமாக உபதேசிக்கும் பொருட்டு, அவனுக்கு அந்த பரப்பிரம்மத்தைப் பற்றிய பல திருஷ்டாந்தங்களை எடுத்துக் கூறி, **ஜீவன், ஈஸ்வரன், ஜகத்** என்ற இந்த மூன்றுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் எப்படி அஞ்ஞானிகளின் மனதை மயக்குகின்றது என்று விளக்கப்பட்டது.

இதில், இருக்கின்ற ஒன்றேயான பரப்பிரம்மத்தை இல்லாத இந்த உலகத்தின் மீது ஏற்றி வைத்து, அதிலிருந்து உண்டான பஞ்ச பூதங்கள், பஞ்சீகரணம், மூன்று சரீரங்கள், மூன்று அவஸ்தைகள் மற்றும் மூன்று குணங்கள் என தத்துவங்களை அறிமுகப்படுத்தி, அந்த தத்துவங்கள் அனைத்தையும் விளக்கி, இவைகளை நீக்கிப் பார்த்தால், ஒன்றேயான அந்த பிரம்மத்திற்கு வேறாக ஒன்றுமில்லை என்ற கருத்தை வலியுறுத்தி, இந்த உலகத்தை உண்மை என்று நம்புகின்ற அறியாமையை நீக்கி, அந்த ஒன்றேயான ஆத்மாவைத் தவிர ஒன்றுமில்லை என்று கூறப்பட்டது.

இதற்கு உதாரணங்களாக மண்ணும், பானையும், ஆடையும், நூலும், தங்கமும், நகைகளும் என பலவற்றை உதாரணமாக எடுத்துக் கொண்டு, அதன் மூலம் எதுவோ, அதில் இருந்து வந்ததே பானையும், நகைகளும், உடைகளும் என்று போதிக்கப்பட்டது.

அதுப்போலவே, மூலமான பரப்பிரம்மத்தில் இருந்தே இந்த பிரபஞ்சம் உண்டானது, என்றும் அதில் உள்ள அனைத்தும் அதைத்தவிர வேறல்ல என்று புரிய வைக்கப்பட்டது.

அடுத்து, தோற்றம், மறைவு என்ற இரண்டு சக்திகளைக்கூறி, அதில் இந்த உலகமும் எப்படி உண்மை போன்று தோன்றுகின்றது என்பதையும், இந்த தோற்றத்திற்கு காரணமான அறியாமைக்கு என்ன காரணம் என்றும், அதை அறிய விடாமல், அறிவை மறைக்கும் மாயா சக்தியைப் பற்றி விளக்கமாகக் கூறி ஆத்ம அறிவு ஒன்றே அறியாமையை நீக்கும் என்று விளக்கப்பட்டது.

இந்த ஆத்மாவை அறிவதற்கு தடையாக ஏழு அவஸ்தைகளைக் கூறி, அதற்காக பத்து நபர்கள் ஆற்றைக் கடந்த கதையின் வாயிலாக அந்த அவஸ்தைகள் விளக்கப்பட்டது.

அதன்பிறகு, மூன்று குண விகாரங்களும், பஞ்ச கோசங்களும் கடந்து அந்த அறிவை அறியக்கூடிய வழிமுறைகள் உபதேசிக்கப்பட்டன.

தத் த்வம் அசி என்ற மகாவாக்கியத்தைக் கூறி, அதில் வாக்கிய அர்த்தத்தையும், இலட்சிய அர்த்தத்தையும், அவைகளின் இலக்கண விதிகளும் கூறப்பட்டு, எங்கும் நிறைந்த ஆகாசம் அறியாமையினால் எப்படி, கடாகாசம்,

மகாகாசம் என்று வேறுபடுத்தி பார்க்கப்படுகின்றது என்பதை விளக்கப்பட்டது.

இதுவரை சத்குருவின் உபதேசத்தால் தெளிவை அடைந்த சிஷ்யன், இதற்காக குருவுக்கு என்ன கைம்மாறு செய்ய முடியும் என்று கேட்க, குருவும் நீ எப்பொழுதும் அறிந்த ஞானத்தில் நிலைப்பெற்று இருப்பதே குருவுக்கு செய்யும் கைம்மாறு என்று கூறுவதாக இருந்தது.

அத்துடன் மூன்று தடைகளையும் எடுத்துக் கூறி, அந்த தடைகளான அறியாமை, சந்தேகம், மற்றும் விபரீதம் போன்றவைகளை நீக்க வேண்டிய வழிமுறைகளாக சாஸ்திரங்களை சத்குருநாதரின் வாக்கால் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்ற முறையில் நீக்கிக் கொள்ள வேண்டும் என்றும், அதை ஆத்ம அனுபவம் உண்டாகின்ற காலம் வரை விடாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

அடுத்து, ஜீவன் முக்தர்கள் எப்படி இருப்பார்கள் என்பது பற்றி எடுத்துக் கூறி, அந்த ஜீவன் முக்தர்களில் வரன், வரிட்டன், மற்றும் வரியான் என்ற மூன்று வகையான ஜீவன் முக்தர்களின் வேறுபாடான வாழ்க்கை முறையை சுட்டிக் காட்டி, இவர்கள் அடைந்த ஞானத்தில் வேறுபாடுகள் கிடையாது எனக்கூறப்பட்டது.

ஜீவன் முக்தர்கள் நிலைக்கு பிரம்ம வித்து என்ற முமுக்ஷு உயர முடியாமல் இருப்பதற்கு அவன் அறிந்துக் கொண்ட சாஸ்திர விசாரத்தில் உண்டாகாத தெளிவை சுட்டிக்

காட்டி, ஜீவன் முக்தர்களுக்கு சேவை செய்வதினால் உண்டாகும் பலன்களையும் எடுத்துக் கூறி, அதன் வாயிலாக அடையக்கூடிய மிகப்பெரிய பலனாக ஆத்ம ஞானத்தைப் பற்றியும், அதன் வாயிலாக உண்டாகும் விதேக முக்தியைப் பற்றியும் கூறப்பட்டது.

அடைந்த ஆத்ம ஞானத்தில் ஜீவன் முக்தர்கள் வாழும் போதே தங்கள் உடல்களைத் துறந்து, விதேக முக்தியில் அனுபவப்பட்டு இருப்பதை எடுத்துக் கூறி, இவர்களது கர்மாக்களை எவ்வாறு தீர்த்துவிட்டு செல்கின்றார்கள் என்றால், இவர்களது பாவக் கர்மாக்களை இவர்களை தூற்றுபவர்களுக்கும், புண்ணிய கர்மாக்களை இவர்களைப் போற்றுபவர்களுக்கும்பிரித்து கொடுத்து விட்டு, அந்த பரப்பிரம்மத்துடன் இரண்டறக் கலந்து விடுகின்றார்கள் என்று கூறப்பட்டது.

இறுதியில், பல்வேறு அறியாமைக்குக் காரணமான மனம், தன்னை அந்த பரப்பிரம்மத்தில் இருந்து வேறுபடுத்திக் கொண்டு, இந்த உலகத்தை உண்மை என்று நம்பி ஏமாறுகின்றது என்பதை எடுத்துக் கூறி, எங்கும் நிறைந்த ஆகாயம் எவ்வாறு கடாகசமாக இருந்த பானை உடைந்தவுடன் ஒன்றேயான ஆகாசமாக ஒன்றாக கலந்து விடுகின்றதோ, அதுப்போல, பல்வேறு உபாதிகளில் பிரதிபிமித்துக் கொண்டிருக்கின்ற அந்த ஒன்றேயான சைதன்யம் மனம் என்ற உடல் அழிந்ததும் தன்னுடைய சொரூபமான ஆத்மாவில் இரண்டறக் கலந்து விடுகின்றது என்று கூறுகின்றது.

இது ஜீவன் முக்தர்களுக்கு மட்டுமே சாத்தியம் என்றும் மற்ற அஞ்ஞானிகள் மீண்டும் அவர்களது எண்ணப் பதிவுகளுக்கு ஏற்ப பிறவியை எடுப்பார்கள் என்றும் கூறப்பட்டது.

இவ்வாறு அடைந்த உண்மையான உயர் ஆத்ம ஞானத்தில் தெளிவாக இருந்துக்கொண்டு, அடிக்கடி மனதை விசாரித்து, இந்த மனம் பல எண்ணங்களின் தொகுப்பு என்பதையும், இதை அழிக்க ஜீவன் முக்த நிலைக்கு ஒருவன் உயர்ந்து, விதேக முக்தியில் முழுமையாக அவைகளை அழித்துவிட முடியும் என்று கூறப்பட்டது.

ஆகவே, என்றும், எக்காலத்திலும் அழியாத ஒன்றேயான ஆத்மாவே உன்னுடைய உண்மையான சொரூபம் என்றும், அதை இயல்பாக அனுபவத்திற்கு கொண்டு வரவேண்டும் என்றும் சத்குருநாதர் ஆணையிட்டு கூறுவதாக இந்த **கைவல்ய நவநீதம்** என்ற நூலின் **தத்துவ விளக்கப்படலம்** மற்றும் **சந்தேகம் தெளிதல் படலம்** என்ற இரண்டு பகுதிகளும் நிறைவுற்றது.

**ஓம் தத் சத்!**

# ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள்

இயற்றிய

# கைவல்ய நவநீதம்



கைவல்ய நவநீதம் என்பது ஒரு வேதாந்த மெய்யியல் தமிழ் நூல் ஆகும். தமிழ் அத்வைத வேதாந்த நூல்களில் தலை சிறந்தது "**கைவல்ய நவநீதம்**" எனப்படுகிறது.

இந்த நூல் 1500 - களில் எழுதப்பட்டது. இந்த நூலை நன்னிலம் **ஸ்ரீ நாராயண தேசிகரின்** மாணவர் **ஸ்ரீ மத் தாண்டவராய சுவாமிகள்** அவர்களால் இயற்றப்பட்டது.

இந்நூலில் ஆசிரியருக்கும், மாணவனுக்கும் இடையே நிகழுகின்ற உரையாடல் போலவும், ஒரு தந்தை தன் மகனுக்கு கூறும் அறிவுரைகள் போல, இந்த நூலில் **தத்துவ விளக்கப்படலம், சந்தேகம் தெளிதல் படலம்** என்ற இரு பெரும் பகுதிகள் உள்ளன.